

கல்கி
KALKI
29.3.1959
30 நயா பைசா




ACC.59.3-F TM

EVEREST

கல்கி பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.


பின்னியின் ஷர்டிங் அணிந்து
ராஜாவைப் போல விளங்குங்கள்
எங்களிடமிருந்து வாங்குங்கள்
வெங்கடேஷ் வஸ்திராலயா
ரீடெய்ல் ஷோரூம்கள்—
ஹைகோர்ட் எதிரில் & 2 தம்புசெட்டித் தெரு, மதராஸ் 1
ஷோ ரூம் நெ. 1
இங்கு நாங்கள் பெங்களூர் உல்லன், காட்டன் & ஸில்க் மில்லின் உற்பத்தியான துணிகளை மட்டுமே விற்கிறோம்.
ஷோ ரூம் நெ. 2
இங்கு நாங்கள் பக்கிங்ஹாம் & கர்நாடிக் மில்லின் உற்பத்தியான துணிகளைமட்டுமே விற்கிறோம்.
ஷோ ரூம் நெ. 3
இங்கு நாங்கள் பின்னி மில்லின் உற்பத்தியான துணிகளையும் மற்றும் இதர உயர்ந்த ரக ஜவுளிகளையும் விற்கிறோம்.



மலர் 18
இதழ் 35

தமிழ்த்திரு நாடுதன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

விளம்பி ௵
பங்குனி ௴ 16

இயக்கம் ஒன்று வேண்டும்!

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

ஆட்சி நடத்தும் அரசாங்கம் நல்லதாகவும் அந்த அரசாங்கத்துக்குப் பக்தியுடன் அடங்கிய மக்களும் இருந்தால் அதைப் போன்ற பாக்கியம் நாட்டுக்கு வேறு கிடையாது. இதற்குச் சந்தேகமில்லை. ஆனால் செவிட்டுச் சர்க்காரும் ஊமை மக்களும் கொண்டது நாடாகாது; ஜனநாயகமுமாகாது. ஜனநாயகம் என்பது அரசியல் சட்டத்தில் இல்லை. மக்களின் இதயமும் அரசியல் நிர்வாகமும் சுகமான முறையில் பிணைந்த அமைப்பே ஜனநாயகம். பிணைபடும் இதயங்கள் செம்மறியாட்டு இதயமாக இருந்து பயனில்லை. மானிட இதயமாக இருக்கவேண்டும்.

எனக்குக் காந்திமகானுடன் நாற்பது வருஷத்திய தொடர்பு என்பதை அனைவரும் அறிவார்கள். அவர் ஒரு புது வாழ்க்கை முறையைக் காண்பித்தார்; கொடுமையை எதிர்க்க ஒரு அற்புத வழியைக் கண்டுபிடித்துக் கொடுத்தார். அந்த மகானுடன் கொண்ட தொடர்பின் காரணமாக எத்தனையோ சம்பவங்கள், எத்தனையோ அபிப்பிராயங்கள், எத்தனை யோ கருத்துக்கள் என் உள்ளத்தில் பதிந்தன. ஆனால் காலம் என்பது ஒரு சல்லடையைப் போன்றது. அந்தச் சல்லடைக் கண் வழியே அந்த நீண்ட நாளையத் தொடர்பில் ஏற்பட்ட நிகழ்ச்சிகளின் பல நினைவுகள் கீழே இறங்கி மறைந்து விட்டன. ஆனால் காலச் சல்லடையில் நின்ற சில கருத்துக்கள் உறுதியாக நின்றன. மற்றவை வெளியேறியதன் காரணமாகவே அவை நன்றாக நிலைத்து உறுதிப்பட்டு விட்டன. அந்த விஷயங்களின் சிறப்பையும் உண்மையையும் இப்பொழுது மிகத் தெளிவாகவும் உறுதியாகவும் உணர்கிறேன்.

தனி மனிதனுடைய சுக வாழ்வாயினும், ஒரு நாட்டின் சுக வாழ்வாயினும் மக்களுடைய சீலத்தை அஸ்திவாரமாகக் கொண்டுதான் எழுப்ப முடியுமே தவிர, வருவாயை அதிகப்படுத்தி விட்டதனாலேயே அது நிறைவேறாது என்பது காந்திஜியின் கருத்து. இந்த உண்மை எனக்கு நாளுக்கு நாள் உறுதிப்பட்டு வருகிறது.

இரண்டாவதாக பலாத்காரத்தாலும் வற்புறுத்தலாலும் செய்யப்படும் சீர்திருத்தம் சீர்திருத்தமாகாது. சீர்திருத்தம் உள்ளத்திலிருந்து எழவேண்டும். சட்டசபைகளில் மசோதாக்கள் நிறைவேற்றுவதாலோ அரசாங்க உத்தரவுகளாலோ விளைவித்துவிட முடியாது. மக்களின் சீலத்திலிருந்தே சீர்திருத்தம் தோன்ற வேண்டும். அந்தச் சீல உணர்ச்சியைத் தூண்டி விடுவது மக்கள் தெய்வத்திடம் கொண்டுள்ள பக்திதான். பக்தி உணர்ச்சி இல்லையேல் நாட்டில் பெருவாரியான மக்களுக்கு நலம் விளைவிக்கும் நல்ல சீர்திருத்தங்கள் செய்ய முடியாது என்று காந்தி மகான் நம்பினார். அது மிகவும் உண்மை என்று எனக்கு நாட்கள் செல்லச் செல்ல இன்னும் நன்றாக உறுதிப்படுகிறது.

தேச மக்களின் சந்தோஷம், இதய மாற்றத்தில்தான் இருக்கிறது. இப் பெரும் பணியே திட்டமாக வகுக்கப்பட வேண்டும். ஐந்தாண்டுத் திட்டமோ, பத்தாண்டுத் திட்டமோ இதற்குத்தான் வேண்டும். இந்தத் திட்டத்துக்கு அங்கீகாரம் பெற, மக்கட் சபையிடம் போக வேண்டியதில்லை.

இதய மாற்றம் என்னும் இந்தப் பெரும்பணி நிறைவேறுவதற்குத் தேசம் முழுதும் பரவிய இயக்கம் ஒன்று நடைபெற வேண்டும். இந்த இயக்கம், மனித உள்ளத்தில் நிரந்தரமாகக் குடிகொண்டுள்ள தார்மிக உணர்ச்சியைத் தட்டி எழுப்புவதேயாகும்.

இது தேர்தல் பிரசாரப் பணி போன்றதல்ல. வோட்டுப் பெறும் வேலையுமல்ல. ஒவ்வொரு மனிதனின் உள்ளத்தையும் தொடும்படியான இயக்கம் தோன்ற வேண்டும்.

உண்மையில் இன்பம் எங்கே இருக்கிறது? வாழ்க்கை வசதிக்கு வேண்டிய சாமான்களை உற்பத்தி செய்வதில் இல்லை. இவற்றைச் செய்து பணம் சம்பாதிப்பதிலோ ஒருவருடன் ஒருவர் போட்டியிடுவதிலோ பிற நாடுகளுடன் நம் நாடு போட்டியிடுவதிலோ நாட்டின் சுகம் வளராது. இயந்திரத் தொழில் துறையில் நாம் மேனாடுகளைவிடப் பல நூற்றாண்டுகள் பின்தங்கி விட்டோம்! அவர்கள் அந்தத் துறையில் அடைந்துள்ளதும் இனி மேல் அடையப் போவதுமான முன்னேற்றத்தை நம்மால் எட்டிப் பிடிக்கமுடியாது. பின் ஏன் அவர்களுடன் போட்டி போட வேண்டும்? நாமும் மேனாட்டினரைப் போல் இயந்திரங்கள் செய்ய முடியும் என்று காண்பித்து மார் தட்டிக் கொள்வதற்காகவா? அதுவல்ல நமது லட்சியம். நமது லட்சியமெல்லாம் மக்கள் சந்தோஷமாக வாழ வேண்டும் என்பதுதானே! அதிலும் மேனாட்டுத் தொழில்முன்னேற்றத்தை எட்டிப்பிடிக்க நமக்கு மேனாட்டு நிதியே அவசியமானால் அந்த நிதி வேண்டாம் என்றுதான் சொல்ல வேண்டும். ஏனெனில், நிதி உதவி என்பது நமக்கு ஆசை காட்டி மோசம் செய்யும் மோகினியாகும். அதன் வலையில் சிக்கலாகாது. ராணுவப் படையெடுத்து நம்மை அடிமைப்படுத்துவதை விடக் கொடிய அடிமைத் தளையில் நாமாகவே சிக்கிக் கொள்வோம். கடன்களுக்கும் தாட்சிண்யத்துக்கும் உட்பட்டுச் சுயமரியாதை இழந்த அடிமைகளாகிப் போவோம்!

*　　　*　　　*

மக்களின் சீலத்தைக் காக்க வேண்டுமானால் நம்முடைய சிறந்த பண்புகள் எவை யுண்டோ, அவற்றைப் பேணிப் பாதுகாக்க வேண்டும். புது மோகங்களுக்கு ஆளாகக் கூடாது. அவற்றினால் நமது பண்பு வளர்வதில்லை. அவை நம்முடைய பண்பாட்டைச் சுரங்கமிட்டு அழித்து விடும்.

சட்ட திட்டங்களினால் விரட்டப்பட்டுச் செய்யும் செயல்களைவிட, உள்ளத்தில் உள்ள தார்மிகப் பண்பினாலும், தெய்வ பக்தியினாலும் உந்தப்பட்டுச் செய்யும் செயல்கள் மக்கள் சமுதாயத்துக்கு நல்ல பயனை நிரந்தரமாக அளிக்கும். ஆகவே, மக்களுடைய நற்பண்பும், தெய்வ உணர்ச்சியும் நாட்டில் வளர வேண்டும். நாட்டின் சுகவாழ்வுக்கு அவை அடிப்படையாகும். தெய்வபக்தியும் பண்பாடும் நம் நாட்டில் இன்று நேற்று ஏற்பட்டதல்ல. பல்லாயிர ஆண்டுகளாக நாட்டில் நிலவும் சூழ்நிலைகளையுணர்த்தும் பலப்பல அனுபவங்களின் விளைவாகவும், 'இதுவே சிறந்தது' "என்று மக்கள் மனம் தேர்ந்தெடுத்துக்]கொண்டதாகும்.

சங்கீதத்தில் நாதங்கள் எப்படி இசைந்து செல்ல வேண்டுமோ அவ்வாறே அரசாட்சியும் நாட்டு மக்களின் இதய இசையாகிய பண்பாட்டுடன் ஒன்றி நின்று இயங்க வேண்டும். அப்பொழுதுதான் நல்ல பணிகள் புரிய முடியும். கலைஞனுடைய வேலையைப் போலவே ஆட்சி நடத்தும் தலைவனுடைய நிர்வாகமும் லயப்பட வேண்டும்.

*　　　*　　　*

ஆனால் இன்று என்ன நடக்கிறது? இந்த லட்சியத்தை நம்மை ஆள்வோர் மறந்து விட்டு வெகுதூரம் விலகிப் போய் விட்டார்கள். தாங்கள் ஏதோ உயர் இனத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், தங்கள் கருத்துக்களை மக்கள் மீது திணித்தேயாக வேண்டிய பெரிய லட்சியத்தோடு அவதரித்திருப்பது போலவும் எண்ணியும் பேசவும் செய்கிறார்களே தவிர, நாட்டு மக்களில் தாங்களும் சேர்ந்தவர்களாகக் கருதவில்லை. அவர்களின் பேச்சும் நடையும் முன் நம் நாட்டிலிருந்த அன்னிய ஆட்சியாளரின் ஆதிக்க ஆணவப் பேச்சையும் நடையையும் நினைவுறுத்துவதாகவே இருக்கின்றன!


நம் சங்கீத வித்வான்கள் பரம்பரை பரம்பரையாக வந்த பண்பிலேயே பாடுகிறார்கள். மக்கள் இதயத்தோடு ஒட்டிய வகையிலேயே பாடுகிறார்கள். அதனால் மக்கள் ஏராளமாகக் கேட்கின்றனர். அவர்கள் சங்கீதம் இன்றும் மக்களுக்கு மகிழ்வூட்டி வருகிறது. இத்துடன் ஆட்சி முறையை ஒப்பிடும்போது அரசாங்கத்தின் அபஸ்வரம் நாராசமாகத் துன்பப் படுத்துகிறது! கம்யூனிஸ்டு முறையின் பிரதிபிம்பமாக அவர்கள் செய்வதையெல்லாம் தாமும் செய்யக் கருதி அரசியல் நாடகம் நடைபெற்று வருகிறது. மக்களுடைய உணர்ச்சியோடு ஒட்டாதபடி அரசாங்கத்தின் செயல்கள் இருப்பதால், மக்கள் உள்ளத்தில் பயமும் பீதியும் ஏற்பட்டிருக்கின்றன. நாளை என்ன நடக்குமோ என்ற கவலை ஏற்பட்டுள்ளது.

இவையெல்லாம் மனோபாவம் சீரழியச் செய்திருக்கின்றன. மக்களிடையே உழைக்க வேண்டும் என்கிற உணர்ச்சியையும் சிந்தனைச் சக்தியையும் அடியோடு அழித்து விட்டன. மக்கள் உழைப்பில் காட்டும் ஆர்வமும், சிந்தனையும்தானே ஒரு நாட்டின் உண்மையான செல்வம். அது அழிக்கப்பட்டு வருகிறது!


*　　　*　　　*

ஜோதிஷனைக் கேட்டு, 'கிரகக் கோளாறு; நம்மால் விதியை மாற்ற முடியுமா?' என்று சொல்லிக்கொண்டு சும்மா இருப்பதுபோல் மக்கள் இன்று சர்க்காரையும் கிரகங்களோடும் நட்சத்திரங்களோடும் சேர்த்து விட்டு நம்மால் சர்க்

போதும் இந்த மிரட்டல்!



பாகிஸ்தானின் மிரட்டலுக்கு இந்தியா பயந்துவிடாது; சமயம் நேர்ந்தால் இந்தியா கடுமையான நடவடிக்கை எடுக்கும் என்று சேனாதிபதி திரு திம்மய்யாவும், பாதுகாப்பு மந்திரி திரு கிருஷ்ண மேனனும் எச்சரிக்கை செய்திருக்கிறார்கள்.



திலச்சேரி திருத்தத்தில் பலாத்காரம் இராது" என்று" திரு பந்த் பேசியிருக்கிறார்.

காரின் போக்கை மாற்ற முடியாது என்று சும்மா இருக்கிறார்கள்.

ஆகவே, இந்த நிலையை மாற்ற ஒரு பெரு இயக்கம் நடந்தாக வேண்டும். எந்தப் பதவியிலிருந்தாலும் எந்தத் தொழிலிலிருந்தாலும் உழைத்துப் பாடுபடவேண்டும் என்ற கடமையுணர்ச்சியைத் தோற்றுவித்துப் பரவச் செய்ய வேண்டும். இதுவே செல்வப் பெருக்கிற்கு வழி. செல்வம் படைத்தவர்களை வறிஞர்களாக்குவது நாட்டின் செல்வத்தின் வளர்ச்சிக்கு வழியல்ல. இந்த உணர்ச்சியைத் தோற்றுவிக்கவும் பரப்பவும் இயக்கம் வேண்டும்.

பணக்காரர்கள் தாங்கள் பெற்றுள்ள செல்வத்தில், தங்கள் தங்கள் தேவைக்குப் போக மிகுதியாக உள்ளதை ஏழைகளுக்காகச் செலவழிப்பதே கடமை; அதற்காகவே அந்தச் செல்வத்தை வைத்திருப்பது என்கிற ஒப்புரவு மனப்பான்மையை அடைய வேண்டும். இதற்கும் ஒரு தார்மிக இயக்கம் தோன்ற வேண்டும். அதாவது பழைய தர்மத்துக்கும் பண்பாட்டுக்கும் புத்துயிர் தரவேண்டும்.

இதையெல்லாம் பலாத்கார முறையில் சாதிக்கலாம். ஆனால் மக்கள் முன்னேற்றத்துக்காகவும், சந்தோஷ வாழ்வுக்காகவும் இந்த இரு விஷயங்களைத் தாங்களாகவே அங்கீகரிக்கச் செய்வதுதான் சிறந்த முறை! இவை இரண்டும் அப்படியொன்றும் நிறைவேற்ற முடியாத பணி என்று பயப்பட வேண்டியதில்லை. உழைப்பும், தர்ம உணர்ச்சியும், நமது மக்களின் ரத்தத்தில் ஊறிப் போன விஷயங்கள். நமது பரம்பரைச் சொத்தாக வந்தவை. ஒரு சாத்துவீக இயக்கம் நடத்தினால் அவை புத்துயிர் பெற்று நமது வாழ்க்கை காப்பாற்றப்படும். பொருளாதார உயர்வினால் ஏற்படும் சந்தோஷத்தையும், ஆத்மீகச் செல்வம் ஏற்படுவதால் உண்டாகும் ஆனந்தத்தையும் மக்கள் அனுபவிப்பார்கள்.

ஜனநாயக சர்க்காராயிருந்தாலும் சரி, கம்யூனிஸ்ட் சர்க்காராயிருந்தாலும் சரி, எந்த நாட்டிலும் செல்வம் கொழித்து மக்கள் சந்தோஷத்தோடு வாழ இரண்டு விஷயங்கள் மிக அவசியம். ஒன்று உழைப்பு; மற்றொன்று அன்பு, இரக்கம்.

* * *

சமீபத்தில் பிரிட்டனில் சீனாவைப் பற்றி ஏராளமான செய்திகள் ஒலிபரப்பப்பட்டன. அதில் ஒரு விஷயம் மிகத் தெளிவாகத் தெரிகிறது.

"சீனாவில் 45,000—ஆண்களும் பெண்களும்—ஒரு புது அணை கட்ட சூரியோதயத்திலிருந்து சூரியாஸ்தமனம் வரை வேலை செய்கிறார்கள். பெரிய இயந்திரங்கள் ஒன்றுமின்றி அவ்வளவு பேரும் வெறும் கைகளினாலேயே வேலை செய்கிறார்கள்" என்று ரிச்சர்டு டிம்பிள்பி என்பவர் பி. பி. ஸி. யில் பேசினார்.

"இப்படி ஓர் இடத்தில் அல்ல, சீனா முழுவதும் ஆண்களும் பெண்களும் வேலை செய்கிறார்கள்" என்று லண்டனிலுள்ள ஒரு பத்திரிகை ஆசிரியர் அதே பி. பி. ஸி. யில் டிம்பிள்பி கூறியதை ஆமோதித்தார்.

"இந்த இருபதாம் நூற்றாண்டில், இயந்திரத் தொழில் நுட்பம் தெரியாத, பல்லாயிரக்கணக்கான சீன மக்கள், எல்லாத் தொழில் துறைகளிலும் வேலை செய்கிறார்கள்" என்கிறார் டிம்பிள்பி.

ஆனால், நம் நாட்டில் என்ன நடைபெறுகிறது? அந்நியக் கடன் உதவி கிடைக்காதா என்று ஏங்குகிறோம்! எதற்கு? இயந்திரங்களை மேனாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய.

பசு தர்மம் பொங்கும் இளைஞர்களைச் சந்திக்க வேண்டிய அவசியம் ஏற்படும் பெண்களுக்குக் கருத்தடுக்கும் சாதனங்களை வழங்கச் செய்கிறோம்!

இப்படிச் செய்தால் நாட்டுக்குப் பெரும் பாரமான ஜனத்தொகை குறையும் என்று ஆசைப்படுகிறோம்.

ஆமைக்கும் முயலுக்கும் நடந்த போட்டிக் கதை தெரியுமே. மனித உழைப்பைக் கொண்டு வேலை நடத்தும் தேசமாகிய சீனா வெற்றிபெற்று விட்டது. மேனாட்டு இயந்திரங்களை இந்தியா கட்டிக்கொண்டு அழுது தோல்வியடைந்து வருகிறது.

"ஒவ்வொரு வீட்டுப் புழக்கடையிலும் ஒரு உலைக்கூடம். இது இன்றையச் சீனாவின் தோற்றம். இதுதான் இருபதாவது நூற்றாண்டில் சீனா சாதித்த தொழிற்புரட்சி" என்கிறார் கிராஸ்ட் கிளார்க் என்ற ஆசிரியர் பி. பி. ஸி. யில்.

இந்தியாவிலோ கணக்கெண்ணி முடியாத பணத்தைக் கொட்டி அணுசக்தி உற்பத்திச்சாலை செய்யத் திட்டமிட்டு வருகிறோம்.

"'பெரிய தொழிற்சாலைகள் ஏற்பட வேண்டும் என்று காத்திராதீர்கள். லட்சக்கணக்கான மக்கட் சமுதாயத்தை உபயோகப் படுத்துங்கள். ஒவ்வொரு குடிசையும் ஒரு தொழிற்கூடமாக வேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும் இது நடைபெறவேண்டும்.' இதுதான் சீனக் கம்யூனிஸ்ட் கோஷமும் சித்தாந்தமும்" என்று ஒலிபரப்புகிறார் டிம்பிள்பி.

"சீனாவில் லட்சக்கணக்கான 'கொல்லைப்புறத் தொழிற்கூட'ங்கள் இருக்கின்றன!" என்று கிளார்க் கூறிப் புள்ளி விவரமும் கொடுத்தார்.

"முப்பது ஆண்டுகளுக்கு முன், வாழ்க்கைக்குத் தேவையான சாமான்களை மிக மிக எளிய விலையில் உலகத்துக்கு ஜப்பான் விற்றது. அதைவிடக் குறைந்த விலையில் இப்பொழுது சீனா தென்கிழக்கு ஆசிய நாடுகளில் விற்று வருகிறது" என்று 'லண்டன் டைம்ஸ்' பத்திரிகை ஆசிரியர் குழுவைச் சேர்ந்த ஒருவர் பி. பி. ஸி. யில் சொன்னார்.

இதுவெல்லாம் பலாத்கார முறையின் சிறப்பல்ல. லட்சக்கணக்கான மக்களின்

தேக உழைப்பு பலத்தைப் பயன்படுத்திய தின் சிறப்பு.

'நாம் அணுயுகத்தில் இருக்கிறோம்' என்று அடிக்கடி நினைவுறுத்தப்படுகிறோம்! நமது தொழில் துறை முன்னேற்றத்துக்கும் அணுயுகத்துக்கும் என்ன சம்பந்தம்? ஒன்றுமில்லை.

ஆனால் நமக்கு நெருங்கிய சம்பந்தமுள்ள விஷயம், நம் நாட்டிலுள்ள முப்பது கோடி மக்களின் தொகை. அதைப் பயன்படுத்திக் கொள்ளாமல் அதுவே நமது முன்னேற்றத்துக்கு இடையூறு என்று எண்ணி வருகிறோம். சீனவிலோ அந்த நாட்டின் மாபெரும் ஜனத்தொகையையே முக்கிய மூலதனமாகக் கொண்டு வேலை செய்கிறார்கள். உழைப்புக்கு உதவும் தேகபலத்தை உபயோகப்படுத்தி நாட்டில் சுபிட்சத்தை ஏற்படுத்துகிறார்கள்.

நம் நாட்டின் வாழ்க்கை கம்யூனிஸ்ட் முறையல்ல. ஆயினும் நம் நாட்டு மக்களை உழைப்பில் ஊக்கமுள்ளவர்களாகச் செய்யலாம்.

இதற்கு, நம்மை ஆளுவோரைப் பிடித்திருக்கும் 'இயந்திரப் பிசாசை' ஓட்ட வேண்டும்!

உழைப்புணர்ச்சியுடன், அன்பு, இரக்கம் என்னும் தர்மத்துக்கும் புத்துயிர் தந்து, பொய் மான்களை வேட்டையாடுவதை விட்டு விட்டு, பிரத்தியட்ச நிலையை அனுசரித்து வேலை செய்தால் பாரததேசம் சுவர்க்க பூமியாகும்.

உள்ளத்தில் உள்ளானடி!


இவ்விதழ் அட்டையிலே ஓர் ஆரணங்கு கோவிலுக்குப் போய்விட்டு, பூஜை நிவேதனத் தட்டுடன் இல்லத்துக்குத் திரும்பி வருகிறாள். அவள் கோவிலுக்குப் போய்விட்டு வந்ததிலிருந்து அவள் உள்ளத்தில் ஒரு ஐயம் எழுந்து குடைகிறது. இது இன்றைய நவநாகரிக வாழ்க்கையில் ஈடுபட்டுள்ள பெண்களுக்கு ஏற்படும் ஐயம்தான். அந்த ஐயத்துடனேயே வீட்டிலுள்ள தீபஜோதியைத் தூண்டி விட்டாள். திரி சுடர்விட்டுப் பிரகாசிக்கத் தொடங்கியது. அவள் உள்ளத்தில் தோன்றிய ஐயம் என்னும் இருள் நீங்கி ஒளி ஏற்பட்டது. அதற்கு ஏற்றாற்போல் எங்கிருந்தோ கவிமணியின் கீழ்வரும் வரிகள் அவள் காதில் விழுந்தன. அவற்றை உற்றுக் கேட்டாள்.

உள்ளத்தில் உள்ளானடி—அதுநீ
உணர வேண்டுமடி.

உள்ளத்தில் காண்பாயானல்—கோவில்
உள்ளேயும் காண்பாயடி.

— கவிமணி

'எங்கிருந்தோ வருகிறது என்று நினைத்தோமே! நம் உள்ளத்திலிருந்தே யல்லவா ஒலிக்கிறது' என்பதைக் கண்டபோது, அவள் முகத்தில் தனியான இன்ப ஒளி படர்ந்தது. அந்த அரிய காட்சியை இவ்வார அட்டைச் சித்திரமாக ஓவியர் லதா வழங்கியிருக்கிறார்.





ஆகாசவெடி

"மின்சார ரயில் வண்டியை வேகமாக ஏன் ஓட்டவில்லை?" என்று கேட்டு, டிரைவரைத் தாக்கிவிட்டு, பிரயாணிகளில் சிலர் ஓடி விட்டார்கள். — கல்கத்தா செய்தி

தாக்கியவர்கள் ஓடியதிலிருந்து அவர்களது அவசரத் தன்மையும் வெளிப்படுகிறது.

★

அமெரிக்கத் தலைவர் ஐஸன் ஹோவரும் பிரிட்டிஷ் பிரதமர் மாக்மில்லனும் இரண்டு மூன்று தினங்கள் தனிமையாயிருந்து பேசுவார்கள். — செய்தி

இரண்டு பேருக்கும் குறைவாக இருந்தால் தலைவர்கள் மகாநாடுதான் எவ்வாறு சாத்தியம்?

★

அணுகுண்டுகளின் அபாயத்தை விட உலகில் ஜனத்தொகை பெருகி வருவதுதான் மிக அபாயமாகும்.

—அமெரிக்காவிலுள்ள இந்திய தூதர்.

"அணுகுண்டுகளை வைப்பதற்கு இடமில்லாமல் ஜனத்தொகை பெருகுமானால், அது எப்படி அபாயமாகும்?" என்று கேட்கப் படுகிறது.

★

"நோயாளிகளிடம் பணம் வாங்கிக் கொள்ளாமல் வைத்தியம் பாருங்கள் என்று எங்களுக்கு வக்கீல்கள் உபதேசம் செய்கிறார்கள். அவர்கள் மட்டும் கட்சிக்காரர்களிடம் பீஸ் வாங்கிக் கொள்ளலாமா?"–டாக்டர் லட்சுமணசாமி முதலியார்

"இவ்விஷயத்தில் யோசனை கூற எனக்கு எவ்வளவு பீஸ் தருகிறீர்கள்?" என்று கேட்கிறார் ஒருவர்.

★

கோடம்பாக்கம் ரயில் நிலையத்தில் தமது பர்ஸைப் பறிகொடுத்த பிரயாணி திருடனைப் பிடிக்கச் சொல்லிக் கூச்சலிட்டார். ஆனால், அருகிலிருந்த பிரயாணிகள் பயத்தால் பிரமித்து நின்றனர்.

— சென்னைச் செய்தி

நல்லவேளை, அருகே நின்றவர்கள், கூச்சலிட்டவரைப் பயந்து போய்க் கட்டிக் கொள்ளாமலிருந்தது ஆச்சரியம்தான்!

"கனவு காணாத மனிதர்களே கிடையாது. சில கனவுகள் உண்மையாவதும் உண்டு" என்று சர்வதேச உடற்கூறு விஞ்ஞானக் குழுவில் ஒருவர் கூறினார்.

— செய்தி

சட்டசபையில் தாம் வீற்றிருப்பது போல் கனவு கண்டு, விழித்துப் பார்த்தபோது உண்மையாயிருப்பதை உணர்ந்தேன் என்கிறார் ஒரு எம். எல். ஏ.

★

"சென்னை ராஜ்யத்தில் செய்திருப்பது போல் கேரளாவில், தேசியச் சின்னங்கள் அவமதிப்புத் தடைச் சட்டம் செய்ய வேண்டிய அவசியமில்லை. ஏனெனில் திராவிடக் கழகம் கிடையாது."

—கேரள முதன் மந்திரி.

"இதெல்லாம் தெரிந்துதானே, திராவிடப் படத்திலிருந்து கேரளாவை நாங்கள் ஒதுக்கிவிட்டோம்!" என்கிறார் ஒரு கழகத் தோழர்.

★

இந்தியா வந்துள்ள ஐ. நா. காரியதரிசி திரு ஹாமர்ஷீல்டு மலை ஏறுவதில் விருப்பமுள்ளவர். — செய்தி

ஐ. நா. முன்னுள்ள மலைபோன்ற பிரச்னைகளைக் கடப்பதில் இந்த ஆர்வத்தை அவர் நன்கு காட்டுவாரா?

★

மந்திரிகளில் ஒருவருமே வராததால் பம்பாய் சட்டசபையைத் தலைவர் ஒத்தி வைத்தார். — செய்தி

சட்டசபையில் மாலை மரியாதைகள் அளிக்கப்படும் என்றால் ஒருவேளை மந்திரிகள் தவறாமல் ஆஜராவார்களோ?

★

"தமக்குச் சிறு குழந்தைகள் அளித்த பூச்செண்டுகளை நேருஜி அந்தக் குழந்தைகளிடமே திருப்பிக் கொடுத்துவிட்டார்."

— லட்சுமணபுரிச் செய்தி



"இதேமாதிரி வாழைப் பழம், பிஸ்கோத்து இவற்றைக் கொடுத்தாலும் நேரு மாமா திருப்பிக் கொடுத்து விடுவாரா?" என்று கேட்கிறான் ஒரு வாண்டு.

நேருஜி என்ன வேண்டுகிறார்?

கொழும்பு, மார்ச் 17உ

இலங்கை இந்தியர்களுக்குப் பார்லிமெண்டில் குறைந்த பட்சம் நான்கு ஸ்தானங்களாவது கிடைக்கக்கூடிய முறையில் தனித்தொகுதி அடிப்படையிலே தேர்தல் நடத்த டில்லி ஒப்பந்தம் செய்திருந்த ஏற்பாட்டை இலங்கை அரசாங்கம் ஒருதலைப்பட்சமாக ரத்து செய்தது. இந்தியர்களின் நிலைமையை அபிவிருத்தி செய்யவுமில்லை, மோசமாக்கவுமில்லையென்று சென்ற வாரம் லோக சபையில் நேருஜி அறிவித்திருப்பது இங்குள்ள இந்திய வட்டாரங்களுக்கு ஆச்சரியத்தையும் திகைப்பையும் கொடுத்திருக்கிறது. பிரஜாவுரிமைச் சட்டமும் பார்லிமெண்டரித் தேர்தல் திருத்தச் சட்டமும் நிறைவேற்றப்படுவதற்கு முன்னால் வயது வந்த இந்திய வம்சாவளியினர்களுக்கெல்லாம் வோட்டுரிமையிருந்ததுடன் பார்லிமெண்டில் அவர்களுக்கு எட்டுப் பிரதிநிதிகளும் இருந்தார்கள். நாடு பெற்ற சுதந்திரம் எல்லோருக்கும் சமமாகக் கிடைக்காமல் இந்திய வம்சாவளியினர் சம்பந்தப்பட்டமட்டில் ஏற்கனவே அவர்களுக்கு இருந்து வந்த சுதந்திரத்தையும் ஓட்டுரிமையையும் பார்லிமெண்டரிப் பிரதிநிதித்துவத்தையும் பறித்து அவர்களை அரசியல் அனுதைகளாக்குவதாக முடிந்தது. டில்லி ஒப்பந்தம் கையெழுத்திடப் பட்டபோது இங்குள்ள பத்து லட்சம் இந்தியர்களிலே குறைந்தது ஆறு லட்சம்பேர்களுக்காவது பிரஜாவுரிமை கிடைக்குமென்று எதிர்பார்க்கப்பட்டது. இந்த ஆறு லட்சம் பேர்களும் தொடர்பான ஒரு பிரதேசத்தில் வசிக்காமல் சிதறி வசிப்பதால் பிரதேச அடிப்படையில் தேர்தல் நடக்கும் பட்சத்தில் அவர்களுக்குப் பார்லிமெண்டரிப் பிரதிநிதித்துவம் கிடைப்பது துர்லபமென்று நினைத்தே தனித் தொகுதி முறையை ஏற்படுத்தி அவர்களுக்குக் குறைந்த பட்சம் நான்கு ஸ்தானங்களாவது கிடைப்பதை உறுதிப்படுத்தினார்கள்.

தனித் தொகுதி முறையை இலங்கை அரசாங்கம் ஒரு தலைப்பட்சமாக ரத்து செய்ததானது இந்திய வம்சாவளியினர்களுக்குக் கிடைப்பதாயிருந்த நான்கு ஸ்தானங்களையும் பறித்துக் கொண்டு விட்டது. இந்த நிலைமையை மோசமில்லையென்று நேருஜி வர்ணித்திருப்பது இங்கு எல்லோருக்கும் ஆச்சரியத்தை விளைவித்திருக்கிறது.

இலங்கையை விட்டுக் குறிப்பிட்ட காலத்துக்குள் வெளியேறிவிட வேண்டுமென்று "பைனல்" விஸா கொடுக்கப்பட்ட இந்தியர்கள் அந்தத் தேதி முடிவதற்குள் நாட்டை விட்டு வெளியேறிவிட வேண்டுமென்பது சட்டம். ஆனால் சிலர் அவ்விதம் செய்ய முடிவதில்லை. உதாரணமாகப் பெரிய தொழில்களிலுள்ளவர்கள் அந்தத் தொழிலை விற்பனை செய்ய வேண்டும். வருமான வரி இலாகாவிடமிருந்து செலுத்த வேண்டிய வரி பாக்கியில்லையென்பதற்கு ஒரு சர்டிபிகேட்டு பெற வேண்டும். பிறகு தங்களது சொத்துக்களையும் எடுத்துச் செல்லச் செலாவணி கண்ட்ரோலரிடம் பர்மிட்டு வாங்கியாக வேண்டும். இந்த நடைமுறைகள் முடிவதற்குச் சில சமயம் சற்றே காலதாமதமாகலாம். இதற்கெல்லாம் போதிய அளவு அவகாசம் கொடுப்பதுதான் தர்மமும் நியாயமுமாகும். இதை விட்டு "பைனல்" விஸா முடிந்துவிட்டதென்பதற்காகப் பிரபல வியாபாரிகளைப் பலர் முன்னிலையில் கைது செய்து அவமானப் படுத்தி நாடு கடத்துவது மிகப் பெரிய அநியாயம். சென்ற வாரம் இவ்விதம் 'பைனல்' விஸா முடிந்த ஒருவரை இமிகிரேஷன் காரியாலயம் நேரில் வரச் சொல்லிக் கடிதம் எழுதியிருந்ததாம். விவரத்தைச் சொல்லி விஸாவை நீடித்துக் கொள்ளலாமென்று அந்த இந்திய வியாபாரி இமிகிரேஷன் காரியாலயத்துக்கு வந்தபோது அவரைப் பலர் முன்னிலையில் திடீரென்று போலீஸார் கைது செய்திருக்கிறார்கள். இது மிகப் பெரிய அநீதியென்று ஒரு சிங்கள எம்.பி.யான ஆர்.இ. ஜயதிலகா என்பவரே அரசாங்கத்திடம் ஆட்சேபனை செய்து கொண்டிருக்கிறார்.

சென்ற வருட வகுப்புக் கலகத்துக்கு முன்னால் தமிழர்கள் சிங்கள ஸ்ரீ எதிர்ப்பு சத்தியாக்கிரகம் நடத்தியதையும், இதைப் பின்பற்றிச் சிங்களவர்கள் தமிழ் எழுத்துக்களை அழிப்பதற்குத் தார்சட்டி இயக்கம் நடத்தியதையும் நேயர்கள் அறிவார்கள். இதன் விளைவாகவே நாட்டில் ஒரு பயங்கர வகுப்புக் கலகம் நடந்தது. கலகம் ஓய்ந்து நாட்டில் படிப்படியாகச் சமூக நிலைமை சிறிது சிறிதாகத் திரும்ப ஏற்பட்டு வருகிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் அரசாங்கம் பழைய கோர சம்பவங்களை மக்களுக்குத் திரும்பவும் ஞாபகப் படுத்தும் வகையில் பல மாதங்களுக்கு முன் தாக்கல் செய்த சிங்கள ஸ்ரீ எதிர்ப்புச் சத்தியாக்கிரக வழக்குகளை விடாப்பிடியாக கோர்ட்டுக்குக் கொண்டு வந்து நடத்தி வருகிறது. சென்ற வாரம் இதுமாதிரியான ஒருவழக்குயாழ்ப்பாணம் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் விசாரணைக்கு வந்தபோது நீதிபதியே அரசாங்கத்தின் மீது கண்டனக் குறிப்புக் கூறினார். "நாட்டில் வகுப்பு சௌஜன்யம் ஏற்பட்டு வரும் சமயத்தில் இம்மாதிரியான பழைய வழக்குகளுக்கு விதிக்கும் தண்டனையைப் புனராலோசனை செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது" என்று கூறி, எதிரிகளுக்கு அபராதம் விதிக்காமல் எச்சரிக்கையோடு விடுதலை செய்தார்.

கொழும்பு, மார்ச்சு 19உ

இலங்கைத் தமிழர்களின் தொன்மையை விளக்குவதற்காகவும் சரித்திரத் திரிபுகளை மறுத்து இலங்கையின் தேச சரித்திரத்தையும் முக்கியமாக, தமிழ்

பேசும் மக்களின் சரித்திரத்தையும் ஆராய்ந்து நூல் வடிவில் வெளியிடுவதற்காகவும் சரித்திரக் கழகமொன்றை யாழ்ப்பாணத்தில் நிறுவும் யோசனை வலுப்பெற்று வருகிறது. இதற்காக யாழ்ப்பாணம் விமானநிலையத்தில் சென்ற சனிக்கிழமை அதிமுக்கியமான பூர்வாங்க மகாநாடு ஒன்று நடைபெற்றது. தமிழ் ஆராய்ச்சியிலும் சரித்திர ஆராய்ச்சியிலும் அக்கறை கொண்ட கலைப் புலவர் திரு. க. நவரத்தினம். கொக்குவில் இந்துக் கல்லூரி தலைமை ஆசிரியர் திரு. ஹாண்டி பேரின்பநாயகம், வைத்தீஸ்வர வித்தியாலயத் தலைமை ஆசிரியர் திரு. அம்பிகைபாகன், "இலங்கையும் தமிழரும்" என்ற அரிய ஆராய்ச்சி நூலைச் சமீபத்தில் எழுதி வெளியிட்ட திரு. வி. எஸ். நவரத்தினம், வீரகேசரி பிரதம ஆசிரியர் திரு. கே. வி. எஸ். வாஸ் ஆகியவர்கள் இம்மகாநாட்டில் கலந்து கொண்டார்கள்.

தென்னிலங்கையில் சரித்திரமென்ற பெயருடன் சமீபத்தில் வெளிவந்த பல நூல்களும் சரித்திரத்தின் திரிபுகளாயிருப்பதையும் தமிழர்களின் தொன்மையைச் சிறுமைப் படுத்தி இந்நாட்டுக்குத் தமிழர்கள் சமீப காலத்தில் வந்தவர்களைப் போல் இந்தப் புத்தகங்களில் சித்திரிக்கப் படுவதையும் திரு வாஸ் எடுத்துக் காட்டி, இந்தச் சரித்திரத் திரிபுகளை மறுத்து உண்மையான சரித்திரத்தை வெளியிடத் தமிழறிஞர்கள் நடவடிக்கை எடுக்காவிடில் காலக் கிரமத்தில் தென்னிலங்கையர்களின் சரித்திரத் திரிபுகளே உண்மைச் சரித்திரம் போல் நிலைபெற்று விடக் கூடுமென்று எச்சரித்தார்.

பழமையான பல நூல்கள் தம்மிடம் இருப்பதையும் அவை எங்கும் கிடைப்பதாயில்லை யென்றும் அவற்றைப் புதுப்பித்து வெளியிட ஏற்கனவே தாம் நடவடிக்கையெடுத்து வருவதாயும் கலைப் புலவர் திரு நவரத்தினம் தெரிவித்தார். தாங்கள் ஆரம்பிக்கும் சரித்திர ஆராய்ச்சிக் கழகம் அரசியல் சமயப் பற்றற்றதாக இருக்க வேண்டுமென்றும் அப்போதுதான் கழகம் பாகுபாடின்றிச் சிறப்பாகப் பணியாற்ற முடியுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார். தமிழர் சரித்திரத்தை ஆராய்ந்து ஏற்கனவே பல அறிஞர்களும் வெளியிட்ட நூல்களைத் தமிழில் புதுப்பித்து வெளியிட வேண்டிய அவசியத்தையும் அவர் வற்புறுத்தினர். சமய அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டதாகக் கழகம் செயலாற்ற வேண்டிய அவசியத்தைத் திரு அம்பிகைபாகன் வலியுறுத்தினர். சரித்திர ஆராய்ச்சிக் கழகத்தை நிறுவ யாழ்ப்பாணத்திலுள்ள பள்ளிக்கூட சரித்திர ஆசிரியர்களையும் வேறு பல அறிஞர்களையும் கொண்ட ஒரு பூர்வாங்க மகாநாட்டை விரைவில் நடத்துவதென்று மகாநாட்டில் தீர்மானிக்கப் பட்டது.

'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, இன்றேல் அனைவருக்கும் தாழ்வு' என்பார்கள். அது ஆசிரியர்களின் விஷயத்



"தர்மராஜனே! ஆறுந் தேதி ஒரு நாள் லீவு வேணும்!"
"எதற்கு?"
"நகரசபைத் தேர்தலில் என் பேரர் வோட்டர்கள் ஜாபிதாவில் இருக்கிறதாம். நான் போய் 'வோட்' செய்து விட்டு வந்து விடுகிறேன்!"

தில் கைமேல் பலன் கொடுத்து விட்டது. இலங்கையிலுள்ள பள்ளிக்கூட ஆசிரியர்கள், தமிழ் ஆசிரியர்களென்றும் சிங்கள ஆசிரியர்களென்றும் ஆங்கில ஆசிரியர்களென்றும் இத்தனை காலமும் பிளவுபட்டிருந்தார்கள். அவர்களுக்கிடையில் சம்பள விஷயத்திலும் வேறு பல விஷயங்களிலும் கடுமையான போட்டியிருந்து வந்தது. இந்தப் போட்டியையும் பகை உணர்ச்சியையும் நீக்குவதற்குப் பதிலாக அவற்றுக்கு மேலும் தூபம் போடும் முறையில் அரசாங்கம் வகுப்புவாதத்தை ஆசிரியர்களுக்கிடையிலும் ஏவிவிட்டுச் சூறையாடி வந்தது. ஆனால் எல்லா ஆசிரியர்களுக்கும் ஒரு பொதுவான ஆபத்து உருவாகியபோது, அவர்கள் தங்களது பலவீனத்தின் காரணத்தை உணர்ந்து ஒற்றுமையுடன் அதை எதிர்க்கவே அரசாங்க முயற்சி தவிடுபொடியாகி விட்டது.

ஆசிரியர்களைப் பள்ளிக்கூட மானேஜர்கள் விரும்பியபோது டிஸ்மிஸ் செய்ய அதிகாரமளித்து, கல்வி இலாகா சமீபத்தில் ஒரு சுற்றறிக்கையை வெளியிட்டிருந்தது. இந்த அறிக்கையின்படி ஆசிரியர்களை எந்த நிமிடமும் பள்ளிக்கூட மானேஜர்கள் வேலை நீக்கம் செய்யலாம். இதைத் தமிழ், சிங்கள, ஆங்கில ஆசிரியர்கள் ஒற்றுமையுடனும் கட்டுப்பாட்டுடனும் எதிர்த்ததால் அரசாங்கம் தனது சுற்று நிருபத்தை வாபஸ் வாங்க வேண்டியதாயிற்று. இந்தச் சம்பவம் கூட்டு பலத்தை ஆசிரியர்களுக்கு எடுத்துக் காட்டுவதாக அமைந்தது. அவர்கள் மொழி வகுப்பு வேற்றுமைகளின்றித் தங்களுக்கென ஒரு பொதுவான ஸ்தாபனத்தை ஏற்படுத்திக் கொள்ளத் தீர்மானித்திருக்கிறார்கள். — ரஜனி



75

முயற்சியும் மடியும் அல்லவா பொருளாக்கத்துக்கும் பொருள் அழிவதற்கும் காரணம்? அறிவும் அறிவின்மையும் அல்லவா ஒருவனைப் பொருள் அடையச் செய்வதும் இழக்கச் செய்வதும்? எல்லாம் ஊழின் பயன் என்று சொல்லுவது சரியல்லவே? — இந்தக் கேள்விகளுக்குப் பதில் முனிவர் சொல்லுகிறார்.

முயற்சி தோன்றுவதும் மடி தோன்றுவதும் ஊழின் பயன் என்று முன் குறளில் சொல்லப்பட்டது. அவ்வாறே இப்போது எடுத்துக் கொள்ளும் குறளில் கெடுக்கும் ஊழ் தோன்றினால் அறியாமையை உண்டாக்கும். ஆக்கும் ஊழ் தோன்றினால் அறிவை விரிக்கும் என்கிறார். ஊழின் காரணமாகத் தோன்றிய அந்த அறியாமையாலும் அறிவாலும் பொருள் கரைந்து போவதும் விருத்தியாவதும் என்கிறார்.

ஒருவனுக்கு எல்லா அறிவும் இருந்த போதிலும் பொருள் இழப்பதற்கு ஏதுவாகிய ஊழ் தோன்றினவுடனே, அந்த அறிவெல்லாம் மறைந்துபோய்ப் பேதைமை வந்து சேர்ந்து விடுகிறது. ஒருவனுடைய அறிவு சுபாவமாகச் சுருங்கியிருப்பினும் நல்லூழ் வந்த இடத்து எதிர்பாராத வகையில் அவன் அறிவு விரிந்து ஆக்கத்தை உண்டாக்கும்.

பேதைப் படுக்கும்
இழவூழ் அறிவுஅகற்றும்
ஆகல்ஊழ் உற்றக்
கடை.

இழவூழ் உற்றக் கடை அறிவு பேதைப் படுக்கும். ஆகல் ஊழ் உற்றக் கடை அறிவு அகற்றும் — அகன்று விரியச் செய்யும்.

இழவூழ் அதாவது பொருள் இழப்பதற்கு ஏதுவாகிய ஊழானது ஒருவனுக்கு இருந்த அறிவை அழித்து விட்டுப் பேதைமை உண்டாக்கி விடும். [படுக்கும்—உண்டாக்கும்]

ஆகல் ஊழ் அதாவது பொருளை ஆக்கும் ஊழானது ஒருவனுடைய சுருங்கிய அறிவையும் அகற்றி விடும்—விரிவடையச் செய்யும்.

கெட்ட ஊழின் காரணம் அறிவு பேதைமையாகி விடுகிறது. நல்ல ஊழின் பயனாக ஒருவனுக்குள்ள அறிவு விரிந்து விடுகிறது. இரண்டுக்கும் ஊழே காரணம்.

நுண்ணிய நூல்பல
கற்பினும் மற்றும்தன்
உண்மை அறிவே
மிகும்.

எவ்வளவு உயர்ந்த நூல்கள் படித்தவனாயினும் ஒருவனுக்கு ஊழின் பயனாக அறியாமையே நிற்கும். ஞானம் அடைய மாட்டான்.

[நுண்ணிய நூல்-நுட்பமான பொருள்களைப் பற்றிய நூல்; உண்மை அறிவே மிகும்-ஊழின் காரணத்தால் அவனுக்கு எவ்வளவு அறிவு உண்டாக வேண்டியதோ அவ்வளவுதான் அடைவான்.]

அறிவு என்பது இங்கே அறிவின்மை.

இந்தக் குறள் உபதேசத்தின் பொருளைச் சரியாக உணர்ந்து கொள்ள வேண்டும். முயற்சி பயன்படாமல் போகாது. ஆயினும் பூர்வ ஜன்ம மர்மத்தின் வேகம் பெரிது. அதை மறந்து விடலாகாது. முயற்சியெல்லாம் வீணாயிற்றே என்று கலவரப் படலாகாது. ஊழின் வேலை என்று மனத்தைச் சமாதானப்படுத்திக் கொண்டு மேலும் முயற்சி செய்ய வேண்டும்.

ஊழின் பயனாக மக்களை இருவகையாகப் பிரித்துக் கொள்ளலாம். சிலர் பாக்கிய லக்ஷ்மி பெற்றவர்கள். வேறு சிலர் அறிவு உடையவர்கள். அறிவுடையார் வறுமையில் கஷ்டப்படலாம். தனவான்களுக்கு அறிவு சூன்யமாக இருக்கலாம். இதற்குக் காரணம் தேடி, அதைக் காணாமல் ஆண்டவனைக் குற்றம் சொல்லுவதில் பயனில்லை. ஊழின் பயன் என்று வைத்துக் கொள்ள வேண்டும்.

இருவேறு உலகத்து
இயற்கை திருவேறு
தெள்ளியர் ஆதலும்
வேறு.

[திரு - பாக்கிய லக்ஷ்மியின் அருள்.]

ஊழின் பயனாகச் செல்வம் உண்டாக வேண்டிய இடத்தில் தீயவையெல்லாம் நல்லதாகும். செல்வம் அழிய வேண்டிய இடத்தில் நன்றாயிருந்தனவெல்லாம் தீயனவாகும்.

நல்லவை எல்லாஅம்
    தீயவாம் தீயவும்
நல்லவாம் செல்வம்
    செயற்கு.

பொருள்களின் நிலையும் போக்கும் ஊழினால் நடைபெறும். வருந்திக் காப்பினும் பொருள்களை இழப்போம். வேண்டாம் என்று எறிந்து விட்டாலும் நம்மைவிட்டுப் போகாது. மறுபடியும் வந்து சேரும் ஊழின் பயனாக.

பரியினும் ஆகாவாம்
    பால்அல்ல உய்த்துச்
சொரியினும் போகா
    தம.

[பால்-ஊழ்; பால் அல்ல-கர்ம விதியின்படி தம்முடைய உடைமையாகாத பொருள்கள்; தம-ஊழின் வலியால் தமக்குச் சேர வேண்டிய பொருள்கள்; பரிதல்-வருந்திக் காத்தல்.]

பாகவதமாதிய

பக்தி வயல்

பௌராணிகர்

30. அம்பரீஷன் சரிதை

வைவஸ்வத மனுவின் புதல்வருள் நபகன் என்பவன் ஒருவன். அவன் மகன் நாபாகன். தன் தகப்பனுக்குக் கடைசி மகன். வெகு நாட்களாகக் குரு குல வாசம் செய்துவிட்டு நாபாகன் வீடு திரும்பியதும் அவனுக்கு அண்ணன் மார்கள் குடும்பச் சொத்தில் பங்கொன்றும் கொடுக்கவில்லை. "எனக்கென்று என்ன பங்கு வைத்திருக்கிறீர்கள்?" என்று அவரை நாபாகன் கேட்டதற்கு, அவர்கள் "நம்முடைய தந்தையை உனக்கென்று ஒதுக்கி வைத்திருக்கிறோம். அவரைக் காப்பது உன் பொறுப்பு" என்றனர். இதை நாபாகன் தன் தந்தையிடம் தெரிவித்தான். "அவர்கள் சொல்லை நீ பொருட்படுத்த வேண்டாம். அங்கிரஸ குலத்தில் பிறந்த அந்தணர்கள் ஒரு வேள்வி நடத்தி வருகிறார்கள். ஆறாவது தினத்தன்று உரைக்க வேண்டிய மந்திரங்களை அவர்கள் சரிவரச் சொல்வதில்லை. அதை அவர்களுக்கு எடுத்துரைப்பாய். அவர்கள் விண்ணுலகம் போகும் பொழுது பொருள் எல்லாம் உனக்கென்று தந்து விடுவார்கள்" என்றார் அவன் தந்தை. நாபாகனும் அவ்வாறே செய்து பெரும் பொருளை அடைந்தான். ஆனால் அச்சமயம் சிவபெருமான் அவன் முன் தோன்றி, "வேள்வியில் மிஞ்சியதெல்லாம் எனதென்று அறியாயோ!" என்று எதிர்த்தார். "அந்தணர் எனக்கென்று அளித்தனரே!" என்றான் நாபாகன். "சரி, உன் தந்தையிடம் கேள்" என்றார் சிவன். நாபாகன் தந்தையைக் கேட்டான்: "முன்னொருகால் தக்ஷன் செய்த யாகத்தில் மிஞ்சியதெல்லாம் சிவனுக்கு என்று பெரியோர் வகுத்திருக்கின்றனர். ஆகவே இப்பொருளும் சிவனுக்கே சொந்தம்" என்றார். சிவனிடம் திரும்பிச் சென்று "என் தந்தை பொருள் உங்களுடையது என்று கூறுகிறார். நீங்கள் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு என்னையும் மன்னித்து விடுங்கள்" என்றான் நாபாகன். இந்த மேலான நடத்தையைச் சிவன் மெச்சினார். மகா மந்திரத்தை உபதேசம் செய்தார். பொருளையும் பரிசாகப் பகர்ந்தார்.

இத்தகைய மகானுக்கு மகனாகப் பிறந்தவன் அம்பரீஷன்.

அம்பரீஷன் எழுகடல் சூழ்ந்த புவியை ஆட்சி செய்யும் பெருமையை அடைந்தும், அதிலுள்ள சிற்றின்பங்களையும் செல்வத்தையும் கனவென்று கருதிப் பற்றில்லாது வாழ்ந்து வந்தான். நாராயணனிடமும் அவரை அண்டின பக்தர்களிடமும் அளவில்லாத அன்பு பாராட்டி வந்த அரசனுக்குச் செல்வமெல்லாம் பிடி மண்ணுக்குச் சமானமாகத் தோன்றியது. தன்னுடைய மனத்தை மாதவனுடைய தாமரைத் தாள்களில் செலுத்தினான்; வாக்கை வைகுண்டநாதன் புகழ் பாடிப் பயன்படுத்திக் கொண்டான்; கைகளால் ஹரியின் கோவிலைக் கழுவினான்; கண்ணனின் கதைகளைக் காதுக்கு உணவாக அளித்தான்; பரமனின் உருவங்களைக் கண்டு கண்களைக் குளிர வைத்தான்; தொண்டரடியைத் தொட்டு உடல் மகிழ்ந்தான்; துளசியின் நறுமணத்தை நுகர்ந்து மூக்கைப் பிரயோசனப்படுத்தினான். காலால் ஹரியின் கோவிலிருக்கும் புண்ணிய ஸ்தலங்களுக்கு நடந்து சென்றான்: தலையால் திருமாலின் தாள்களை வணங்கினான். இவ்வாறு தன் வாழ்நாட்களை நாராயணன் சேவையில் செலவு செய்து வந்த அம்பரீஷன் ஒரு சமயம் சரஸ்வதீ நதிக் கரையில் பல அச்வமேத யாகங்களை நடத்தினான். வேள்வியின் அதிசயத் தோற்றத்தை வந்திருந்த அந்தணரும் மற்றோரும் கண்ணிமை கொட்டாது விண்ணவரோவென்று ஐயமுறுமாறு கண்டனர். அதற்கு விண்ணவர் நேராகவே வந்தார்கள். அரசனின் பக்தியால் மகிழ்ந்த மாதவன் அவனைப் பாதுகாக்கும் பொருட்டுத் தம்முடைய சுதர்சன சக்கரத்தை அவனுக்கு அளித்தார்.

அம்பரீஷன் ஹரியை ஆராதிக்க எண்ணம் கொண்டு ஒரு சமயம் துவாதசி விருதத்தை ஓராண்டு நடத்தினான். விருதத்தின் இறுதியில் கார்த்திகை மாத துவாதசியன்றி, மூன்று நாட்கள் உண்ணாவிரதம் இருந்து விட்டு, யமுனையில் நீராடி, ஆற்றின் கரையிலிருக்கும் மதுவனத்தில் ஹரியைப் பூஜை செய்

தான். அந்தணர்களுக்குப் பசு தானமும் அன்னதானமும் ஏராளமாகச் செய்தான். அதன் பிறகுதான் ஆகாரம் உட்கொள்ளச் சித்தமானான். அச்சமயம் அவனுக்கு விருந்தாளியாகத் துர்வாஸ முனிவர் வந்து சேர்ந்தார்.

அரசன் ஆகாரத்தை உண்ணாமல் எழுந்திருந்து முனிவரை வரவேற்றுத் தன்னுடன் உண்ணவேண்டு மென்று அவரை வேண்டிக் கொண்டான். அவரும் சரியென்று உரைத்து விட்டு நீராடுவதற்கு ஆற்றுக்குச் சென்றார். அப்பொழுது உச்சிவேளை நெருங்கி விட்டது. துவாதசி முடிவதற்கு அரை முகூர்த்தம் (அதாவது இருபத்திநான்கு நிமிஷம்) பாக்கியிருந்தது. அதற்குள் விரதத்தை முடித்து ஆகாரம் செய்ய வேண்டும்; முனிவரோ நீராடச் சென்று விட்டார். அவர் வரும் வரை சாப்பிடவும் முடியாது. அரசன் தன் ஆசிரியர்களிடம் இந்தத் தர்மசங்கடத்திலிருந்து மீளுவது எப்படி என்று வினவினான். அதற்கு அவர்கள் "நீரை மட்டும் அருந்தினால் ஆகாரம் உட்கொண்ட பலம் கிடைக்கும்; ஆனால் உண்மையில் உண்ணாமலே இருப்பீர்" என்றார்கள். அரசனும் அதற்கிணங்கி நீரை மட்டும் உட்கொண்டு முனிவர் வருகையை எதிர்பார்த்திருந்தான்.

நீராடித் திரும்பிய துர்வாஸர் தமது யோக மகிமையினால் அரசன் நீர் பருகியதைத் தெரிந்து கொண்டார். சினம் கொண்டு அரசனைச் சபித்தார். "தர்மத்தை விட்டு அகன்ற அரசன் இவன். செல்வத்தினால் மதம் ஏறி மாதவனை மறந்தவன். என்னை விருந்தாளியாக அழைத்து விட்டுத் தனிமையில் தானுகப் புசித்தவன்" என்று அலறினார். தமது சடையிலிருந்து ஓர் பிடியைப் பிடுங்கினார். அதினின்று ஒரு பெண் பேய் கிளம்பியது. ஆனால் அம்பரீஷன் நெருப்பைக் கக்கிக்கொண்டு வரும் அவ்வுருவத்தைக் கண்டு சிறிதும் அஞ்சவில்லை. அரசனிடம் இருந்த சுதர்சனம் அந்தக் கொடும் பிசாசைச் சுட்டுக் கொன்று விட்டது. பேயைக் கொன்று விட்டுச் சக்கரம் முனிவரைத் துரத்தியது. துர்வாஸர் தம் உயிருக்கே ஆபத்து வந்து விட்டதென்று அறிந்து இங்குமங்கும் ஓடினார். பாம்பைத் துரத்தும் தீயெனச் சக்கரம் அவரைப் பின்பற்றியது. மேரு மலைக் குகைக்குள் ஒளிந்து கொண்டார்; ஆகாயத்தில் மறைந்தார்; பாதாளத்தில் புகுந்தார்; கடலில் விழுந்தார்; ஆனால் எங்கு சென்றாலும் சுதர்சனம் அவரைத் துரத்திக் கொண்டே வந்தது. பயந்து மனம் கலங்கி பிரமனைச் சரண் புகுந்தார். தம்மால் இயலாது என்று பிரமன் மறுத்து விட்டார். முனிவர் சிவனை அண்டினார். சுதர்சனத்தைத் தாங்கி நிற்கும் தாமோதரனையே சரண் புகுவதைத் தவிர வேறு புகலிடம் இல்லை என்றார் சிவன். துர்வாஸர் விஷ்ணுவை அடைந்து அவர் தாளில் விழுந்து வணங்கித் தம்மைக் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

அவருக்கு மாதவன் பின்வருமாறு பதில் உரைத்தார். "அந்தணரே! என் பக்தர் என் மனத்தைக் கொள்ளை கொண்டவர்கள். அவர்களுக்கு நான் அதீனன். அவர்களுடைய இச்சையைப் புறக்கணிக்கும் வல்லமை எனக்குக் கிடையாது. ஆகவே நீங்கள் அம்பரீஷரையே சரணம் அடையுங்கள்" என்றார்.

இவ்வாறு ஹரி இட்ட கட்டளையை ஏற்றுக்கொண்டு துர்வாஸர் அம்பரீஷரை அடைந்து அவர் கால்களைப் பிடித்துக் கொண்டார். முனிவர் தம் தாள்களைத் தொடவும் அரசன் கருணை மிகுந்து துயரமுற்றான். நாராயணனுடைய சக்கரத்தைத் தோத்திரம் செய்தான். முனிவரைக் கொன்ற பாபம் தன்னை அணுகாதிருக்க அருளவேண்டும் என்று கோரினான். நெருப்பென ஜ்வலித்துக் கொண்டிருந்த சுதர்சனம் வேந்தனுடைய வேண்டுகோளுக்கு இணங்கித் தணிந்தது. முனிவர் அம்பரீஷனைத் துதித்தார். தமது குற்றத்தை மறந்து காப்பாற்றிய பெருந்தன்மையைப் பாராட்டினார்.

அதுவரையில் உணவு உட்கொள்ளாதிருந்த மன்னவன் முனிவருக்கு விருந்தளித்து விட்டுத் தானும் ஆகாரம் செய்தான். ஹரியின் மகிமையைக் கண்டு மெய்சிலிர்த்த அம்பரீஷன் சிலகாலமானதும் நாட்டைத் தன் புதல்வரிடம் கொடுத்து விட்டுக் கானகம் சென்று தவம் செய்து முக்தியை அடைந்தான்.

ஸௌபரி முனிவர் கதை

ஸௌபரி என்ற முனிவர் வெகு நாட்கள் யமுனநதியில் மூழ்கித் தவம் செய்து வந்தார். ஒருசமயம் நீரில் வசிக்கும் ஆண்மீன் ஒன்று பெண்ணுடன் விளையாடிச் சிற்றின்ப லீலைகள் செய்வதை அவர் கண்டார். உடனே அவருக்குத் தாமும் அவ்வாறே இன்பங்களை அனுபவிக்க வேண்டும் என்ற எண்ணம் மேலிட்டது. மாந்தாதா என்ற சூரிய வம்சத்து மன்னனை அணுகித் தமக்கு ஒரு கன்னிகையை மனைவியாக அளிக்க வேண்டும் என்று கேட்டார். அதற்கு மன்னவன் "எனது புதல்விகளுள் எவள் உம்மை வரித்து மணம் செய்து கொள்ள விரும்புகின்றனளோ, அவளை உங்களுக்

குத் தருவேன்'' என்றான். அப்பொழுது முனிவருக்குச் சிந்தை மேலிட்டது. ''அரசன் எனது வேண்டுகோளை மறுத்து விட்டான் என்றுதான் எண்ணவேண்டும். வயது முதிர்ந்து தோல் சுருங்கி மயிர் வெளுத்துத் தலை ஆடும் கிழவனை எந்த மங்கை விரும்புவாள்! ஆகவே எனது தவ மகிமையினால் விண்ணுலக மாதரும் கண்டு காமுறும் ரூபத்தை எய்துவேன்'' என்று தீர்மானித்தார். இந்தக் கட்டழகனைக் கண்ணுற்ற ஐம்பது அரசிளங்குமரியரும் மயங்கி எல்லோரும் அவரை மணம் செய்துகொள்ள விரும்பினார்கள். ஒருவருக்கொருவர் ''எனக்கு, உனக்கில்லை'' என்று சண்டை போடவே ஆரம்பித்து விட்டனர். முனிவர் அனைவரையும் மணந்து கொண்டார்.

தம்முடைய யோகத் திறமையால் எல்லா போக சாதனங்களையும் வரவழைத்தார். சேவகரும் சேடியரும் நிறைந்த மாளிகைகளைச் சேமித்தார். அங்கு கொஞ்சும் கிளிகளும் வட்டமிடும் வண்டுகளும் வந்து கூடின. பூ நிறைந்த பூங்காவும் அலர் மலிந்த தடாகங்களும் எண்ணற்றிருந்தன. உணவும் உடையும் மனத்துக்கு இசைந்திருந்தன. இந்த வைபவத்தைப் பார்த்த மாந்தாதா மன்னனே திகைத்துத் தம் செல்வத்தைக் குறைத்துக் கருதினார். ஆனால், இவ்வளவு இன்பங்கள் ஒன்று கூடி அனுபவித்தும் ஸௌபரி முனிவர் நிம்மதி அடையவில்லை. அவருடைய ஆசை அக்னியில் வார்த்த நெய்யென மூண்டு வளர்ந்தது.

ஸௌபரி முனிவர் ரிக்வேதத்தை நன்கு பயின்றவர். அதன் மர்மங்களை அறிந்தவர். ஒருநாள் தமது நிலையைப் பற்றித் திடீரென்று சிந்தித்துப் பார்த்தார். தம்முடைய மனம் மீன்மீது சென்றதால் வந்த வினையை நினைத்து வியந்தார். ''பாருங்கள் இந்த மறையோதும் முனிவரை! வெகுநாட்கள் வளர்த்த தவமெலாம் ஒரு கணம் மனத்தை நழுவ விட்டதினால் நசித்து விட்டதே! முக்தியை விரும்புபவன் இச்சையில் ஈடுபடுவது எவ்வளவுபேதைமை! தனிமையில் தியானம் செய்பவன் (தொண்டரைத் தவிர) எவரையும் அணுகிப் பழகலாகாது. மீனைக் கண்டு ஒருவன் ஐம்பதானேன்! மக்களைக் கணக்கெடுத்தால் பல்லாயிரமாகப் பெருகி விட்டேன். கணவனுக்கும் மனைவிக்கும் வளரும் நட்புக்கு எல்லை இல்லை'' என்று பலவாறு சிந்தனை செய்தார். இல்லறத்தை உதறி விட்டுக் காடு சென்றார். தவம் செய்து பரமனோடு ஒன்றெனக் கலந்தார்.

திரு ஸி. எஸ். ரங்கஸ்வாமியின் மறைவு

கல்கத்தா வாழ் தமிழ்ச் சமூகத்தின் திலகமாக விளங்கியவரும் ''இண்டியன் பைனான்ஸ்'' என்னும் பிரபல ஆங்கில வாரப் பத்திரிகையின் ஸ்தாபகரும் நிர்வாக ஆசிரியருமான திரு ஸி. எஸ். ரங்கஸ்வாமி தமது 65-வது வயதில் காலமானார் என்ற செய்தி கேட்டு வருந்துகிறோம். தொழில், நிதி, வர்த்தகம் முதலியவற்றைப் பிரதான விஷயங்களாகக் கொண்டு இப்பத்திரிகை சென்ற முப்பது ஆண்டுகளாக நமது நாட்டில் முன்னணியில் புகழுடன் விளங்குவதற்குத் திரு ரங்கஸ்வாமியின் ஆழ்ந்த அறிவும், சிந்தனைத் தெளிவும், அனுபவ ஞானமும்தான் காரணம். சாதாரணமாக எல்லோருக்கும் எளிதில் விளங்கக் கூடாத சிக்கல் நிறைந்த நிதி, நிர்வாகம் சம்பந்தமான பிரச்னைகளைச் சுலபமாக விளக்கி வைப்பதிலும், அவற்றில் சாதாரண மக்களுக்கும் ருசி ஏற்படும் வகையில் விமர்சனம் செய்வதிலும் அவர் நிகரற்று விளங்கினார். ''ஈவ்ஸ் ட்ராப்பர்'' என்னும் புனைபெயரில் அவர் வாரந்தோறும் எழுதுவதைப் படித்து மகிழ்ந்தவர்களும் பயன்பெற்றவர்களும் பலர். எழுதுவதைப் போலவே மேடையிலும் ரஞ்சகமாகப் பேசும் ஆற்றலும் திறமையும் படைத்தவர். சமூக சேவையில் ஈடுபட்டவர். சென்ற யுத்தகாலத்தில் பர்மா ஜப்பானியர் வசமானபோது அங்கிருந்து தரை மார்க்கமாகக் காடுமலைகளைக் கடந்து உணவின்றி நடந்து நடந்து சோர்வுற்றுத் தாயகம் திரும்பிய எண்ணற்ற தமிழர்களைக் கல்கத்தாவில் போஷித்தும் அவர்களுக்குத் தற்காலிக விடுதிகள் அமைத்தும் உணவுப் பஞ்சம் ஏற்பட்டபோது சமூக விடுதிகள் அமைத்து உணவு வழங்கியும் அவர் புரிந்த சேவை அவருடைய கனிந்த உள்ளத்துக்கும் பண்புக்கும் எடுத்துக்காட்டு. திரு ரங்கஸ்வாமியின் மறைவினால் பத்திரிகை உலகம் மட்டும் கஷ்டமடையவில்லை; தமிழ்ச் சமூகமே கஷ்டமடைந்துள்ளது. அவருடைய பிரிவால் துயரமுற்றிருக்கும் அவரது குடும்பத்ினருக்கு நமது மனமார்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.



முதல்வர் மீனாட்சி

பெண்கள் கல்லூரி ஸ்தாபகர் கருணாகரத்தின் அறைக்குள் மின்விசிறி சுழன்று கொண்டிருந்தது. அவரது அந்தரங்கக் காரியதரிசி பயபக்தியுடன் நின்று கொண்டிருந்தார்.

"பிரின்ஸ்பால் மீனாட்சி அவர்களை உடனே வரச் சொல்."

காரியதரிசி வெளியே வந்து பிரின்ஸிபாலுக்குச் சொல்லி அனுப்பினார். பிரின்ஸ்பால் மீனாட்சி அம்மாள், ஸ்தாபகர் அறைக்குள் நுழைந்து கைகுவித்தார்.

"உட்காருங்கள், அம்மா!"

எதிர் நாற்காலியில் பிரின்ஸ்பால் வந்து அமர்ந்து கொண்டார்.

"தாங்கள் அனுப்பிய விண்ணப்பங்கள் முழுவதும் பார்த்து விட்டேன். பதினைந்து மனுக்களில் இரண்டில் மட்டும் 'கவனிக்கவும்' என்று எழுதியிருக்கிறீர்கள். பார்வதி ரங்கநாதன் தங்களுக்கு என்ன உறவு?" என்று கேட்டார்.

முதல்வர் மீனாட்சியின் முகத்தில் சிறிது கலக்கம்; கொஞ்சம் ஏமாற்றம். சிவப்புப் பென்சிலால் 'கவனிக்கத்தக்க மனு' என்ற சொற்களைச் சுற்றி ஸ்தாபகர் கருணாகரம் பச்சை மசியில் வட்டம் போட்டிருந்தார். "பார்வதி ரங்கநாதம் சிறந்த ஆசிரியை; இந்த ஊருக்கு வரவேண்டுமென்பதற்காக மனுச் செய்துள்ளார்."

"சரியம்மா. இவர்கள் உங்களுக்கு என்ன உறவு?"

"உறவுதான்."

"கேளுங்கள், மீனாட்சி. நமது கல்லூரியைப்பற்றி நல்ல மதிப்பு ஊரிலும் கல்லூரி உலகத்திலும் இருக்கிறது."

"எல்லா ஆசிரியைகளும் சிறந்த உழைப்பாளிகள்."

"உழைப்பாளிகள்தாம். அதே சமயம் ஒவ்வொருவரும் உங்களுக்கு உறவினர்களாக இருக்கிறார்களே."

"சென்ற ஆண்டு சரித்திரத்தில் நாற்பது சதம் தேர்வு; இந்த ஆண்டில் எழுபத்தைந்து சதம் தேர்வு. ஆசிரியை விசாலாவின் உழைப்புக்கு நாம் நன்றி சொல்ல வேண்டும்."

"உண்மை. அந்த அம்மையார் உங்கள் நெருங்கிய சிநேகிதை என்று அண்மையில் தான் தெரிந்து கொண்டேன்."


ஸ்தாபகர் கருணாகரம் புன்முறுவல் பூத்த போது, அவர் நெற்றியில் உயர்ந்த சந்தனப் பொட்டுக் கீழே விழுந்தது.

"நான் எப்பொழுதும் திறமை நிறைந்தவர்களையும் தகுந்த குணமுடையவர்களையுமே சிபார்சு செய்கிறேன்."

"உண்மை. உங்கள் சிபாரிசுகளை நான் மறுக்கவே இல்லை."

"இப்பொழுது விஞ்ஞான ஆசிரியையாக.."

"நான் இந்த ஒரு முறை உங்கள் சிபாரிசுக்கு மறுப்புச



கோமதி சுப்பிரமணியம்

சொல்லப் போகிறேன். தாங்கள் கல்லூரியின் மதிப்புக்கும், மாணவிகளின் முழு வெற்றிக்கும் அல்லும் பகலும் பாடுபடுகிறீர்கள்.''

''மிக்க நன்றி. ஆசிரியைகளின் தரத்தைக் குறித்துச் சொல்வதும் பொறுக்குச் செய்வதும் என்னுடைய கடமை.''

''உங்கள் கடமையை நன்கு செய்கிறீர்கள்; ஆனால் அவர்கள் உங்களுக்கு உறவினர்களாகவே இருக்கிறார்கள் என்பது ஒரு சிலர் காட்டுகின்ற குற்றச்சாட்டு. இந்தக் கல்லூரியின் ஸ்தாபகர் என்ற முறையில் இதுவரை முடிபது ஆசிரியைகளைத் தங்கள் சொற்படியே நியமனம் செய்து வந்துள்ளேன்.''

''பார்வதி ரங்கநாதமும் என் இஷ்டப்படி உயர்ந்த ஆசிரியை; திறமைசாலி. விஞ்ஞானத்தை எளிமையாகப் போதிக்கும் நுட்பம் அறிவாளி.''

''இருக்கலாம். அவர் உங்கள் அண்ணாவின் மகளாமே. இதோ பாருங்கள், ஒரு மொட்டைக் கடிதம்!''

''என் அண்ணாவின் மகள் என்பதற்காக அவள் திறமையற்றவளாகிவிட முடியுமா?''

''பார்வதி ரங்கநாதத்தை நான் நியமனம் செய்ய முடியாது.''

''மிகுந்த அனுபவம் உள்ளவள். மாணவிகளிடம் உயிருக்குயிராய்ப் பழகுவாள்.''

பிரின்ஸிபால் மீனாட்சிக்கு இதுதான் முதல் தோல்வி; ஸ்தாபகர் கருணாகரம் பிடிவாதமாக மறுக்கவே, நயமாகவும் பயமாகவும் பல சான்றுகளை எடுத்துச் சொன்னார்.

''பார்வதி ரங்கநாதம் விஞ்ஞானம் மட்டுமன்றிப் பள்ளிக்கூடத்தில் சிறந்த நிர்வாகி; தமிழ் இலக்கிய ரஸிகை; வெளியூர்களுக்கு அழைத்துச் செல்லும் 'கைடு'களில் எமன். சித்திர வேலைப்பாடுகள் தெரிந்த சைத்திரிகை; சங்கீத ஞானத்தினால் கல்லூரியில் இசைக்குழு ஒன்றினை அமைக்கக் கூடிய இயக்குநர்.''

''தாங்கள் சொல்வதைப் பார்த்தால் முதல்வரைவிடத் திறமைசாலி என்று படுகிறதே'' என்று குத்தலாகக் கூறி விட்டுக் குலுங்க நகைத்தார் ஸ்தாபகர்.

''உண்மையும் அதுதான். பார்வதி ரங்கநாதம் என்னைப் பின்னே தள்ளி இந்தக்கல்லூரி முதல்வராக வந்தாலும் ஆச்சரியப்படமாட்டேன்; மகிழ்ச்சியடைவேன்.''

ஸ்தாபகர் கருணாகரம் பெண்களின் பிடிவாதம், காரிய சாதிக்கும்வன்மை இவற்றை உள்ளூற எண்ணி வியந்தார். முதல்வர் மீனாட்சி ராமகிருஷ்ணன் எம். ஏ. பேசப் பேச, நிச்சயமாகப் பார்வதி ரங்கநாதத்தை வேலைக்கு எடுப்பதில்லையென்று அவர் முடிவு கட்டி விட்டார்.

''உங்கள் நோக்கம், பொறுக்கு இவற்றுக்கு நன்றி. அவ்வளவு பெரிய திறமைசாலி நமக்கு வேண்டுமென எண்ணுவதைவிட இப்போது இருக்கும் கல்லூரியில் அவர் இருக்கட்டும். அந்தக் கல்லூரிக்குச் சிறப்பாகச் சகலகலாவல்லியாகப் பார்வதி ரங்கநாதம் இருப்பதுபோல் நமது கல்லூரியிலும் ஒருவரை நாம் உருவாக்குவோம்.''

''அப்படியானால் பார்வதி ரங்கநாதத்துக்கு நமது கல்லூரியில் வேலை இல்லையா?''

''அப்படித்தான் பொருள்.''

மீனாட்சி அம்மாள் தமது ஆவலை அடக்க முடியாமல் ''விஞ்ஞான ஆசிரியையாக யாரைத்தான் நியமனம் செய்யப் போகிறீர்கள்?'' என்று அடுத்த கேள்வியை மிகுந்த ஆவலோடு கேட்டார்.

''அடுத்துக் கற்பகம் என்ற ஆசிரியையைப் பொறுக்கு செய்துள்ளீர்கள்.''

''ஆமாம்!''

''அந்த அம்மணியும் தங்களுக்கு உறவு தானே?'' என்றார் கருணாகரம்.

''இனி தங்கள் பொறுப்பு. நான் பல துறைகளில் அனுபவப்பட்ட ஆசிரியர்களை நியமிக்கவும் கல்லூரி செழித்து வளரவும் விரும்பினேன். என்மேல் சந்தேகமாக இருந்தால் தங்கள் விருப்பப்படியே யாரையும் நியமியுங்கள். நியமனம் பெறுபவர்கள் தகுந்தவர்களாக இருக்க வேண்டும்.''

''நாம் முன்னுக்கு வந்தவர்களை இதுகாறும் ஆதரித்தோம். இனி புதியவர்களை நியமனம் செய்து அவர்களைப் பெரியவர்கள் ஆக்க வேண்டும். பெயர் பெற்றவர்களைச் சேர்ப்பதைவிடப் பெயர் பெற்றவர்களாக உருவாக்குவதுதான் நமது கல்லூரியின் சேவைகளில் ஒன்று''

''உம்!'' என்றார் முதல்வர் மீனாட்சி.



சகடபுரம் ஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகள் மகாசிவராத்திரிக்குச் சில தினங்களுக்கு முன்பே காசிக்கு விஜயம் செய்தார்கள். எண்ணற்ற பக்தர்கள் அவரது தரிசனம் பெற்று மகிழ்ந்தனர்; அவரது அருளுபதேசங்களைக் கேட்டு அறிவொளி பெற்றனர். ஸ்ரீ சுவாமிகளின் பஞ்சதீர்த்த ஸ்நானங்கள் அமோகமாக நடந்தேறியது. காசி விசுவநாதரும் விசாலாட்சியும் கொலுவிருக்கும் புண்ணிய காசி க்ஷேத்திரத்தில் மார்ச் 12ந் தேதி ஒரு வித்வத் சபை கூடியது. எழுபத்தைந்து வித்வான்களுக்குமேல் அதில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

"இந்த மனுக்களை யெல்லாம் ஆராய்ந்து பார்த்ததில் மிஸ் கீதாதேவி அவர்களை நியமனம் செய்யலாம்......"

ஸ்தாபகர் பேச்சு முடியவில்லை. முதல்வர் தமது கோபத்தை வெளிப்படையாகக் காட்ட முடியாமல் படபடப்பாக ஆட்சேப வார்த்தைகளை உதிர்த்தார்.

"உங்கள் ஆட்சேபம் என்ன? கல்லூரியை விட்டு ஓராண்டு ஆகின்றது. போதிய அனுபவமும் பயிற்றும் திறமையும் மிஸ் கீதாதேவிக்கு வந்திருக்காது என்பதுதானே?"

"மிகவும் பால்யம். மாணவிகள் மதிக்க மாட்டார்கள்."

"கீதாதேவிக்கு விஞ்ஞான ஆசிரியப் பதவி நியமனம் ஆகப் போகிறது. அந்த அம்மாள் திறமைசாலியாக வரவேண்டும். அதற்குரிய பொறுப்பு முழுவதும் உங்களுடையது. நான் திட்டவட்டமாக முடிவு செய்து விட்டேன்."

"நிச்சயமாகவா?"

"இதுதான் முடிவு. மிஸ் கீதாதேவிக்கு வேலை. உடனே புறப்பட்டுவந்து வேலையை ஒப்புக்கொள்ள வேண்டு மென்று நேற்றே கடிதம் எழுதி விட்டேன்."

முதல்வர் மீனாட்சி ராமகிருஷ்ணன் தமது தோல்வியை ஒப்புக்கொள்ள வேண்டும். அல்லது தமது அறைக்குள்ளே போய்த் தம் முடைய ஆசிரியர்கள் மீது கோபம் காட்டி எரிந்து விழவேண்டும். ஆனால் அவர் "மிக்க நன்றி" என்றார் சிரித்தபடியே.

"ஏது ஏது? மிஸ் கீதாதேவி உங்களுக்கு உறவு இல்லையே? அவர் உங்கள் இனத்தவர் கூட இல்லையே?"

"இல்லைதான். ஆனால்......"

"என்ன ஆனால்? நிச்சயமாக மிஸ் கீதாதேவியே ஆசிரியராக வரப் போகிறார். இது நிச்சயம்" என்ற ஸ்தாபகர் பேச்சில் அழுத்தம் இருந்தது.

"எனது மூத்த குமாரன் விவேகானந்தன் எம். ஏ. தெரியுமல்லவா?"

"அவரும் இந்த ஊரில் கல்லூரி ஆசிரியர் தானே?" என்று கேட்டார் ஸ்தாபகர்.

"ஆம். மிஸ். கீதாதேவியோடு படித்தவன். **அவர்களுக்குள் காதல். சீர்திருத்த மணம் செய்து கொள்ளப் போகிறார்கள்.** மிஸ். கீதாதேவி எனக்கு மருமகள் ஆகப்போவதால், அவளுக்கே நியமனம் கொடுத்தது என் குடும்பத்துக்கே உதவியாகப் போய்விட்டது. இம் மகிழ்ச்சியை என் பையனுக்குப் 'போன்' செய்துவிட்டு வருகிறேன்" என்று ஸ்தாபகரின் பதிலுக்குக் காத்திராமல் பரபரப்பாக வெளியேறினார் பிரின்ஸிபால்.

இந்தத் தடவையாவது பிரின்ஸிபாலுக்கு உறவில்லாத புது ஆளை நியமிக்க எண்ணிய ஸ்தாபகர் வெலவெலத்துப் போய்ச் சிலையாக உட்கார்ந்திருந்தார்!

வட்டமேஜை

தைரியம் உண்டா?

நிலச் சீர்திருத்தத்தையும், விவசாயக் கூட்டுறவுப் பண்ணைச் சாகுபடி முறைகளையும் ஏற்படுத்த சர்க்கார் வெகு தீவிரமான முயற்சி செய்து கொண்டிருப்பதைக் கண்டு பொதுமக்களும், விவசாயிகளும் பெரும் பீதி அடைந்து கொண்டிருக்கிறார்கள். இந்தச் சீர்திருத்தத்தினால் உணவு உற்பத்தி வெகுவாக அதிகரிக்கும் என்று சர்க்கார் நம்புகிறது. இந்தச் சீர்திருத்தத்துக்குப் பொதுமக்களின் ஆதரவு அமோகமாக இருப்பதாக நம் மதிப்புக்குரிய பிரதம மந்திரி நேரு அவர்களும் நம்பி, இந்தச் சீர்திருத்தத்தைக் கொண்டு வந்தே ஆகவேண்டும் என்று கண்டிப்பான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகிறார்கள்.

ஒரு நபரிடமுள்ள நிலத்துக்கு உச்ச வரம்பு கட்டிய பிறகு உபரி நிலத்துக்குத் தகுந்த நஷ்ட ஈடு கொடுத்து எடுத்துத் தகுதியுள்ள அதாவது நிலத்தின் கிரயத்தையும் விவசாயத்துக்கு முதலீடு செய்யக் கூடிய அந்தஸ்துமுள்ள விவசாயிகளிடம் நிலத்தை ஒப்படைப்பதில் பொது மக்களுக்கு ஆட்சேபணை இடையாது. இதனால் சர்க்காரின் தயவின்றியே விநியோகமாகும் உபரி நிலம் நல்ல முறையில் சாகுபடியாகும். இதைவிட்டு நிலச் சீர்திருத்தத்தினால் கிடைக்கும் உபரி நிலத்தைச் சமுதாய உடைமையாக்கி, கூட்டுறவுப் பண்ணை மூலம் சாகுபடி செய்யவேண்டும் என்ற நிபந்தனையையும், முடிவில் மற்ற நிலங்களை யெல்லாம் ஒன்று சேர்த்துக் கூட்டுறவு முறையில் சாகுபடி செய்ய வேண்டும் என்ற நாகபுரி காங்கிரஸ் தீர்மானத்தையும் மக்கள் கொஞ்சங்கூட ஆதரிக்க வில்லை.

இந்நிலை ஏற்பட்டு விடுமோ என்று பெரும் பீதியுடன் பொதுமக்களும், விவசாயிகளும் இருக்கிறார்கள். இதனால் விவசாயத்தில் சிரத்தை குறைந்து அபிவிருத்தி நடைபெறாமல் உணவு உற்பத்தி பெரிதும் பாதிக்கப்படும்.

சிறு துண்டு நிலங்களினால் உணவு உற்பத்திக்குத் தடை ஏற்பட்டுக் குறைந்து போவதாகக் கருதுவது சரியல்ல. பெரிய நிலச்சுவான்தார்களை விடச் சிறிய நிலம் வைத்திருக்கும் விவசாயிகள்தான் துரித விளைச்சல் செய்து கொண்டு வருகிறார்கள். சிறிய நில உடைமைக்காரர்கள் தங்கள் பெண்டு பிள்ளைகள் முயற்சி பூராவையும், இரவும் பகலும் அந்த நிலத்தில் செலுத்தி ஒரு அங்குலம் கூட வீண் போகாமல் உற்பத்தியைப் பெருக்கி வருகிறார்கள். கூட்டுறவுப் பண்ணை மூலம் இந்த உற்சாகமான தனி மனிதனின் உழைப்பை எதிர்பார்க்க முடியாது.

விவசாய கூட்டுறவுப்பண்ணைச் சாகுபடி முறையைக் கிராம மக்கள் விரும்புகிறார்களா என்பதை வேண்டுமானால் வோட்டின் மூலம் பரீட்சைசெய்து பார்க்கட்டும்; உண்மை புரியும்.

முடிவில் கூட்டுறவுப் பண்ணை நிலையில் தான் சாகுபடி நடைபெற வேண்டுமென்று ஏற்படுமானால் உணவு உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டு விடும் என்பதோடுமட்டுமல்ல; பலம் பொருந்திய காங்கிரஸ் ஸ்தாபனமும் வீழ்ச்சி அடைந்து விடும். இதனால் நாட்டில் பெரும் குழப்பமும், ரத்தக்களரியும் ஏற்பட்டால்கூட ஆச்சரியப்பட வேண்டியதில்லை.

கூட்டுறவுப் பண்ணை சாகுபடி முறையினால் நாளடைவில் தனி மனிதன் சொத்துரிமையும் இழக்க வேண்டிய நிலைமை ஏற்படும். இந்நிலை ஏற்படுமானால் நம் நாட்டின் துர் அதிர்ஷ்டம் என்றுதான் சொல்ல வேண்டும்.

கூட்டு உற்பத்திச் சாகுபடி முறையை விட விவசாயிகளுக்குக் கூட்டுறவு சேவா சங்கங்கள் மூலமும், மற்ற முறைகளின் மூலமும் பெரும் உதவியையும், உற்சாகத்தையும், நம்பிக்கையையும், சர்க்கார் அளித்து வந்தால் நிலச்சுவான்தார்கள் தங்கள் தனி முயற்சியால் பெரும் அளவு உணவு உற்பத்தியைப் பெருக்கிச் சமூகத்துக்கு உதவுவார்கள்.

சொத்துரிமையை எவ்வித உருவத்திலும் பறிக்க முயற்சி செய்யக் கூடாது. சொத்துரிமை இல்லை என்று ஏற்பட்டால் தனி மனிதன் முயற்சி வீழ்ச்சி யடைந்து விடும். இதனால் நாட்டுக்குப் பெருத்த நஷ்டம் ஏற்படும். ரஷ்யாவில், சீனாவில் நடப்பதுபோல் விவசாயிகள் அடிமை நிலைமையில் அடைபட்டுப் பணி செய்ய வேண்டி ஏற்படும். இது ஜனநாயகமாகாது.

காங்கிரஸில் உள்ள பல தலைவர்களுக்கு இந்த உண்மை தெரியும். தெரிந்தும் தங்கள் கருத்துக்களைத் தைரியமாக எடுத்துக் கூற முடியாத நிலையில் இருப்பதாகத் தெரிகிறது. இந்நிலை எப்படியோ நம் பாரத நாட்டில், அதுவும் மகாத்மா காந்தியடிகள் பிறந்த நாட்டில் ஏற்பட்டு விட்டதே என்ற பெரும் கவலை பல மேதைகளை வாட்டிக் கொண்டிருக்கிறது.

விவசாயத் துறையில் மட்டுமல்ல, பல தொழில்களிலும் சர்க்காரின் தெளிவில்லாத கொள்கையால் நம்பிக்கையற்ற நிலைமை ஏற்பட்டுக்கொண்டு வருகிறது.

தலைவர்களும், பொதுமக்களும் நாட்டின் நன்மையை முன்னிட்டு இந்த ஜீவாதார

மான இப் பிரச்னையின் பேரில் எது சரியோ அதைத் தைரியமாக எடுத்துக் கூறுவதற்கு முன்வரவேண்டும்.

நாமக்கல்
15-3-59 — வி. மாரப்ப கவுண்டர்

கருணை காட்டுவார்களா?

தென்னாற்காடு ஜில்லா திருக்கோவிலூர் தாலூக்காவில் பெண்ணையாற்றின் தென்கரையில் எரனூர் என்ற ஓர் சிறிய விவசாய கிராமம் உள்ளது. அக் கிராமத்துக்குச் சுற்றியுள்ள எல்லாக் கிராமங்களுக்கும் மின்சாரம் விநியோகிக்கப்பட்டிருக்கிறது. நாங்களும் எழுதிக் கேட்டுக் கொண்டதின் பேரில், ஒரு ஆண்டுக்கு முன்பே எங்கள் கிராமத்துக்கும் சாங்ஷன் செய்தார்கள். இதுவரையில் எந்தவித நடவடிக்கையும், மின்சார விநியோகம் செய்பவர்கள் எடுத்துக் கொள்ளவில்லை. பல தடவை மேலிடத்துக்கு எழுதிக் கேட்டதற்கும் பதிலில்லை. நேரில் அதிகாரிகளைக் கேட்டதற்கு பி. டபிள்யூ. டி. இலாகாவினர் ஆட்சேபணை செய்வதாகச் சொல்கிறார்கள். ஏற்கனவே எங்கள் கிராமத்தில் பெண்ணையாற்றில் ஊற்று வாய்க்கால் தோண்டி மூன்று போகம் தவறாமல் விவசாயம் செய்து பஞ்சமென்பதே இல்லாமல் இருந்து வந்தோம். பிறகு 1952ம் வருஷம் பெண்ணையாற்றில் எல்லி சத்திரத்தில் ஓர் உதவாக்கரை அணையைக் கட்டி எங்கள் ஊற்று வாய்க்காலையே முக்கிய வாய்க்காலாக எடுத்துக் கொண்டார்கள். அந்த வாய்க்காலில் ஆற்றில் வெள்ளம் வரும் காலத்தில் அளவுக்கு மீறிய தண்ணீர் வந்து இட்ட பயிர்களை அழித்து விடுகிறது. கோடைக் காலத்திலே ஒரே காய்ந்த மணல்மேடாக விட்டு விடுகிறது. நாங்கள் ஊற்று வாய்க்கால் தோண்டவே முடிவதில்லை. இந்த உதவாக்கரை வாய்க்காலை விட்டு மின்சாரம் மூலம் விவசாயம் செய்யலாமென்றால் பி. டபிள்யூ. டி. இலாகா புண்ணியம் கட்டிக் கொள்ளுகிறது. மேற்படி மின்சாரம் கோடைக் காலத்தில்தான் எங்களுக்குத் தேவை; அந்தக் காலத்தில் முதன்மையான வாய்க்காலில் வெறும் காய்ந்த மணல் மேடு தான் இருக்கிறது. அதில் எந்தத் தண்ணீரை மின்சாரம் இழுத்து விடும் என்பது தான் ஆச்சரியம். இந்தச் சிறிய கிராமம் அழியாமல் இருக்க அரசியலார் கருணை காட்டுவார்களா?

எரனூர்
27-2-'59 — ஓர் ஏழை விவசாயி

வேண்டாம் இந்த மோகினி

விவசாயம் நம் நாட்டின் உயிர் நாடி. இத்தொழில் நுணுக்கங்களை நன்கறிந்து உரிய பருவத்தில் தக்கபடி பாடுபடாவிட்டாலும் கவனிக்காதிருந்தாலும் விவசாயத் துறையில் எதிர்பார்க்குமளவுக்குப் பலன் கிட்டாது. ஏட்டுப் படிப்புத் தொழில் நுணுக்கம் மட்டும் பயனளிக்காது. செயல் முறை அனுபவமும் தேவை. இத்தகைய உயிர்நாடியான விவசாயத் துறையில் உணவு உற்பத்திப் பெருக்குக்குக் கூட்டுறவு விவசாய முறை பயனளிக்காது. தனியார் மேற்பார்வையிலும், பண்ணை முறையிலும் கிடைக்கும் உணவு உற்பத்திக்கு அதிகமாகக் கிடைக்குமென்று கூட்டுறவு விவசாய முறையில் எதிர்பார்க்கிறார்கள். ஆனால் இது கையிலிருக்கும் கனியை விட்டு, கிளையிலிருக்கும் கனிக்கு ஆசைப் படுதல் போலாகும். கூட்டுறவு இயக்கம் பொருளுதவி, தானிய உதவி அளிக்கலாம். அதை நல்ல முறையில் பயன்படுத்துகிறார்களா என்பதைக் கண்டறியலாம். இப்பொழுது இத்துறைக்கு அளித்து வரும் உதவிகளை விவசாயிகள் செவ்வனே பயன் படுத்துகிறார்களா என்பதைக் கவனித்து வந்தால், அதுவே உணவு உற்பத்திக்கு அரசாங்கத்தார் செய்யும் மாபெரும் உதவியாகும். அதை விட்டு, நிலச் சீரமைப்பு பற்றியும், கூட்டுறவு விவசாய முறை பற்றியும் நாகபுரி தீர்மானத்தில் செய்திருக்கிற முடிவு விவசாயத் துறைக்குச் சர்க்கார் இழைக்கும் பெருந் தீங்கு எனக் கருதுவதில் தவறில்லை. இத் தீர்மானத்தைக் கொணர்ந்தவர்கள் விவசாயத்துறையில் நேரடிச் செயல் முறை தொடர்பு அற்றவர்கள் என்பது கூறாமல் விளங்குகிறது. இது விஷயத்தில் அனுபவம் மிக்கவர்களைக் கலந்தாலோசித்து முடிவுக்கு வருதல் சிறந்தது. மனத்துக்குப் பிடித்தமில்லாத பெண்ணைக் கட்டாயமாக வாழ்க்கைத் துணைவியாக்குவது போல் உள்ளது இக்கூட்டுறவு முறை விவசாயம். நம் நாட்டுக்கும் செயல் முறைக்கும் ஒவ்வாத, உணவு உற்பத்தியை வெகுவாகப் பாதிக்கும் இக்கூட்டுறவு முறை என்கிற மோகினி வேண்டாம்.

நக்கவரம்
28-2-59 — சாமி ஸ்ரீநிவாஸன்

அருள் வாக்கு

ஒவ்வொரு ஜீவனும் உடலை விட்டுப் பிரிந்து செல்லும் காலத்தில் எந்த எண்ணத்துடன் செல்லுகின்றானோ அது நல்லதாயினும், கெட்டதாயினும் அந்த எண்ணமே அவனுக்கு மறு ஜென்மம் ஆகிவிடுகிறது. இறுதிக் காலத்தில் ஈசுவரனுடைய புனிதமான நாமத்தைக் காதினால் கேட்பவனுக்கு முக்தி என்னும் மேல் பதவி கிட்டும். ஒருவன் தன் ஜென்மத்தின் நடுவில் எத்தனை பாவியாக இருந்திருப்பினும் கடைசி வினாடியில் பகவானின் நாமத்தை உச்சரித்தால் பரம பரிசுத்தனாகி விடுகிறான். அவனுக்குப் புண்யமான நற்கதி சித்திக்கின்றது என்பதில் ஐயமில்லை.

—ஸ்ரீ சங்கராச்சாரியார், காஞ்சிகாமகோடி பீடம்

கால்பந்து கோலாகலம்

ஆங்கிலப் பத்திரிகையொன்றில் ஒரு ஹாஸ்யம் வெளியாகியிருந்தது.

கால்பந்துப் போட்டி நடந்துகொண்டிருந்தபோது ஒருவர் சிரசாசனம் செய்துகொண்டே காலால் பந்தை உதைத்தாராம். அதைக் கண்டு ஒருவர், "என்ன சார்! இவர் சர்க்கஸில் இருந்தவரோ? இப்படித் தலைகீழாக நின்று பந்தை உதைக்கிறாரே!" என்று வியந்தார்.

"இவருக்குத் தலையால் பந்தைத் தள்ளும் திறமை கிடையாது. தம் திறமைக் குறைவு வெளியில் தெரியக் கூடாதென்பதற்காக இவர் சிரசாசனம் செய்து இப்படிப் பந்தைக் காலால் உதைக்கிறார்!" என்று பதிலளித்தாராம் அருகிலிருந்தவர்.

ஆம்! கால்பந்தாட்டக் கலையில் காலால் உதைக்கும் திறமை பெற்றிருப்பவர்கள் தலையால் பந்தைத் தள்ளும் சக்தியும் பெற்றிருக்க வேண்டும். சென்னையில் ஸ்டேடியம் மைதானத்தில் மார்ச் 11-ந் தேதி நடைபெற்ற சந்தோஷ் கால்பந்தாட்டப் போட்டியைப் பார்த்தபோது மேற்கண்ட ஹாஸ்யம் நினைவுக்கு வந்தது. வங்காளக் கால் பந்துக் குழுவினரும், சர்வீஸஸ் கால் பந்தாட்டக் கோஷ்டியினரும் தலையால் பந்தைத் தள்ள முயன்றபோது ஒருசிலர் தரையில் உருண்டார்கள்; சிலர் முட்டி மோதிக் கொண்டார்கள். கூடியிருந்த மக்களுக்கு அது வேடிக்கைக் காட்சியாக இருந்தது.

கால் பந்தாட்டப் போட்டியிலேயே எந்த நாள் விளையாட்டை அவசியம் பார்க்க வேண்டும் என்று கேட்டால், "ஏன்! கடைசி நாள்தான் விளையாட்டைப் பார்க்கவேண்டும்!" என்று கூறுவார்கள். அன்றுதான் விளையாட்டு சுவாரசியமாக இருக்கும். ஆட்டக்காரர்கள் தங்கள் முழுத் திறமையையும் பிரயோகித்து உயிரைக் கொடுத்து ஆடுவார்கள்.

சர்வீஸஸ் கால்பந்தாட்டக் குழுவினர் ஹைதராபாத்துக்கெதிராக அழகாக ஆடி அவர்களைத் தோற்கடித்த போது, 'நிச்சயம் இந்த வருஷம் சந்தோஷ் கோப்பை ராணுவப் படையினர் குழுவினருக்குத்தான்' என்று சிலர் கூறிக்கொண்டிருந்தார்கள். விளையாட்டுப் பந்தயத்தில் சொன்னபடி நடந்து விட்டால் அதில் அதிசயமில்லையே?

வங்காளக் கால்பந்துக் குழுவினரிடம் கூட்டுத் திறமை இருந்தது; அதோடு ஆட்டத் திறமையிலும் அவர்கள் வல்லவர்கள் என்பதைக் கடைசி நாளன்று நடந்த ஆட்டத்தில் நிரூபித்து விட்டார்கள். வங்காளக் குழுவிலுள்ள தாமோதரன் பந்தை அழகாக எதிரிகளைக் கடந்து கொண்டு போய்த் தம் கட்சியாளர் பலராமனிடம் தள்ள, அவர் பந்தை அழகாகக் 'கோலு'க்குள் செலுத்தினர்.

விளையாட்டு விறுவிறுப்புடன் நடந்து கொண்டிருந்த போது, கூட்டத்தில் முண்டியடித்துக் கொண்டு நின்ற ஒருவர் அபார கரகோஷத்தைக் கண்டு, அருகிலிருந்தவரிடம், "ஸார்! ஸார்! யார் கோல் போட்டது? வங்காளமா, சர்விஸஸா?" என்று ஆவலுடன் கேட்டார்.

"ஓய்! தொந்தரவுபடுத்தாதேயும். ஆட்டத்தைப் பாரும். காலையில் பத்திரிகையைப் பார்த்தால் தெரிந்து விடுகிறது!" என்றுஒரு வெடிகுண்டைத் தூக்கிப் போட்டார் அவர். அன்று பல்லாயிரக் கணக்கான மக்கள் குழுமியிருந்தனர்.

எல்லா வருஷங்களும் சந்தோஷ் வெற்றிக் கோப்பைக்கு, ஒரு கட்சி தோற்று விட்டால் பிறகு அதற்கு மற்றக் கட்சிகளோடு போட்டியிடும் வாய்ப்பு கிடையாது. இந்த வருஷம் 'லீக்' முறையில் எல்லாக் கால் பந்துக் குழுவினரும் எல்லாக் கட்சியோடும் ஆடும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்திருந்தனர்.

இந்தியாவிலுள்ள பல அருமையான கால்பந்தாட்டக் குழுவினரின் விளையாட்டைச் சென்னை மக்கள் கண்டு களித்தனர். இந்த வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த சென்னை கால்பந்துக் கழகக் கௌரவ காரியதரிசி திரு என். விட்டல் அவர்களைப் பாராட்டுகிறோம். -குண்டுமணி



காட்சி 4


[கோமேக டியேகோவின் கத்தியைத் தட்டிக் கீழே தள்ளியதும் டியேகோ பெருங்கோபத்துடனும் நிராசையுடனும் தனக்குள் பேசிக் கொள்கிறான்.]

டியேகோ: என் கிழத்தனமே எனக்குப் பகையாய் விட்டது. இந்த அவமானத்தைப் பெறவா இவ்வளவு நாட்கள் வாழ்ந்தேன்? போர்ப் பயிற்சியிலே நரைத்துப் போன எனக்கு வெற்றி வெண் கண்ணிகளெல்லாம் கசங்கியவாறுள்ள இந்தக் காட்சியையும் பார்க்க நேரிட்டதே. ஸ்பெயின் தேசம் முழுவதும் பார்த்து அதிசயிக்கும் இந்தத் தோள்கள், அரசாங்கத்தைப் பலமுறையும் பாதுகாத்த இந்தத் தோள்கள் அரசரை அரியணையில் பலமுறையும் அமரச் செய்த இந்தத் தோள்கள், இன்றையக் கைகலப்பில் ஏமாற்றி விட்டனவே. என்னைப் பாதுகாக்கச் செயலற்றனவாய் விட்டனவே. [கத்தியை நோக்கி]

என் புகழ் மாண்டுபோனதைக் குறிக்கும் கொடிய சின்னமாகி விட்டாயே. எவ்வளவு நீண்டகாலமாகத் தேடிவைத்த புகழ் எப்படி ஒரு நொடிப்பொழுதில் மறைந்து விட்டது! எனக்கு வந்த புதுக் கௌரவமே என் சந்தோஷத்துக்கு எமனாயிற்று. அந்த உன்னத சிகரமே என் கௌரவத்தின் வீழ்ச்சியைப் பெரிதாக்



தனிப்பெருந்தலைவன்



கிற்று. அதைப் பார்த்துக் கோமேக கொக்கரித்து நிற்க, நான் பழி வாங்காமலே இறப்பதா? வெட்கத்துடன் உயிர் தரிப்பதா? கோமேக பிரபுவே! நீதான் இனி அரசகுமாரனுக்கு ஆசிரியராக வேண்டும். மானம் இழந்த எனக்கு இந்தப் பதவி இனி அடுக்காது. அரசர் நியமனம் இருந்தாலும் என் தகுதியின்மையை உன் திமிரால் நான் அடைந்த அவமானம் காட்டி விட்டது.

முன்னர் என் பராக்கிரமத்துக்குச் சாதனமாயிருந்தாய்; இப்பொழுது இந்தத் துர்ப்பலமான சரீரத்துக்கு வெறும் அணிகலமானாய்! முன்னர் உன்னைப் பார்த்துப் பகைவர் நடுங்கினர்; இன்று என்னைப் பாதுகாக்காமல் படாடோபமாகவே இருந்தாய்! போ! கேவலப்பட்டுப் போன என் கையை நீங்கி எனக்காகப் பழி வாங்கும் சக்திவாய்ந்த கையைப் போய் அடை.

காட்சி 5

[டியேகோ, ரோடரிகோ]

டி: ரோடரிகோ! நீ நெஞ்சில் உரம் உள்ளவன்தானா?

எம்.வி.சுப்பிரமணியம் ஐ.ஸி.எஸ் (ரிடையர்டு)

ரோ: என் தந்தையைத் தவிர வேறு யார் அந்தக் கேள்வியைக் கேட்டிருந்தாலும் இதன் விளைவு உடனே கிடைத்திருக்கும்.

தி: இப்படி உனக்குக் கோபம் பொங்குவதே எனக்குத் தேறுதல். என்னுடைய மனப்புண்ணுக்கு மருந்துபோல் ஆவது. இப்படித் துள்ளி எழும் ஆற்றல் என் இளமையை நினைப்பூட்டுகிறது. மைந்தா! என் அவமானத்துக்குப் பரிகாரம் தேடு. எனக்காகப் பழி வாங்கு.

ரோ: என்ன நடந்து விட்டது அப்பா?

தி: கொடுமையான அவமரியாதை; நம் இருவர் கௌரவத்தையும் அறவே துடைத்து நிற்கிறது. என்னைக் கன்னத்தில் அடித்து விட்டான்! அடித்தவன் அந்தக்கணமே இறந்திருக்க வேண்டும். ஆனால் என் சினத்துக்கு ஈடு கொடுக்க முடியாமல் என் முதுமை என்னைச் சதி செய்து விட்டது. என் கைக்குப் பயனற்றுப்போன இந்த வாளை, இதோ உன் கையில் ஒப்படைக்கிறேன். எனக்காகப் பழி வாங்குவதற்கும் அந்தக் கர்வியின்மீது சென்று உன் தீரத்தைச் செலுத்து. நம் அவமானத்தைத் தீர்க்க இரத்தத்திலே தான் கைகழுவ வேண்டும். இறக்கச் செய்! அல்லது இறந்து போ. எளிதென்று ஏமாறவும் வேண்டாம்; நான் சொல்லப் போகும் எதிரி பயங்கரமானவன். அவன் போர் செய்வதைப் பார்த்திருக்கிறேன்; உதிரம் தோய்ந்து, புழுதி படிந்து, ஒரு சேனை முழுவதையுமே தோற்றத்தினால் கலக்குவான், நூறு அணிகளைத் தன் வீரத்தினாலேயே முறியடிப்பான். போர்வீரன் மட்டுமல்லன், பெரிய சேனைத் தலைவன் மட்டுமல்லன் அவன்....

ரோ: தயங்க வேண்டாம்; சொல்லி முடியுங்கள்.

தி: ஷிமேனுவின் தந்தை!

ரோ: ஆ! ஷிமேனு!

தி: திரும்பச் சொல்ல வேண்டாம். உன் காதலைப் பற்றி எனக்குத் தெரியும். ஆனால் கௌரவ பங்கம் அடைந்தவர்கள் எப்படி வெளியில் தலைகாட்டி வாழ முடியும்? குற்றவாளி எவ்வளவுக்கெவ்வளவு அன்புக்குப் பாத்திரனோ அவ்வளவுக் கவ்வளவு குற்றத்துக்கும் பாத்திரனாவான். அவமான விவரத்தைச் சொல்லி விட்டேன்; பழி வாங்குவது இனி உன்னுடைய பொறுப்பு. எனக்காகவும் உனக்காகவும் பழி வாங்கு. எனக்குத் தகுதியான புதல்வன் என்பதை நிரூபி. விதி என்மேல் அழுத்திய துக்கத்தை நினைத்துப் பிரலாபிக்க நான் போகிறேன். நீ போ, ஓடு, பறந்து சென்று பழி வாங்கு.

காட்சி 6

[ரோடரிகோ]

ரோ: இப்படி ஓர் அம்பு எதிர்பாராத விதமாய் என் இதயத்தில் ஊடுருவிப் பாய்ந்ததே! நியாயமான போர்தான்; நான் பழி வாங்க வேண்டியதும் நியாயமே! ஆனால் என் அன்புக்கு எதிராய்ச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம், என்ன அநியாயம்! இவ்விரண்டினூடே செயலற்றவனாய் நிற்கிறேன். இதயத்தில் மர்மமான அடிபட்டு நிற்கிறேன். என் சுகம் கைகூடும் தருணத்தில், இறைவா இது என்ன தர்ம சங்கடம்! அவமானம் அடைந்தவர் என் தந்தை; இயற்றியவர் ஷிமேனுவின் தந்தை. என்ன போராட்டம் என் மனத்தில்! என் கண்ணியத்துக்கு எதிராய் என் காதல். தந்தைக்குப் பழி வாங்க வேண்டுமானால் அன்பின் அரசியை இழக்க வேண்டுமே! ஒன்று என் ஆவேசத்தை எழுப்புகிறது; மற்றொன்று என் கையைப் பிடித்து நிறுத்துகிறது. என் அன்புக்குத் துரோகம் செய்வதா, அல்லது அவமானத்துடன் உயிர் தரித்து நிற்பதா — எப்பக்கம் பார்த்தாலும் அளவிறந்த கஷ்டம். அவமானத்துக்குத் தண்டனையின்றி விடுவதா? ஷிமேனுவின் தந்தையைத் தண்டிப்பதா?



தந்தை, காதலி, கௌரவம், அன்பு—எல்லாம் ஒரு கலக்கம்! கட்டுப்பாட்டில் கொடுமை, ஆனால் கண்ணியம்! நிர்ப்பந்தத்தில் ஓர் அருமை! ஒன்று, என் அன்பாசைகளெல்லாம் மறையும். அல்லது என் புகழ் மாசடையும். ஒன்று எனக்குத் துன்பம் தருவது. ஆனால் மற்றொன்று அன்பைப் பகைத்து ஒழித்தாலும் அதற்குத் தகுதியான எதிரியாய்க் கௌரவத்தை நிலைகாட்டும் ஆற்றல்......

(வாளை நோக்கி)

இவ்வளவு மனத்தாங்கலைக் கொடுக்கும் வாளே! பழிவாங்கி என் கௌரவத்தைக் காப்பாற்ற வந்தாயா என் கைக்கு? என் ஷிமேனுவைப் பறி கொடுப்பதற்காக வந்தாயா? மரணத்தை நோக்கி ஓடியே எதிர்கொள்வது நலம். என் கடமை தந்தைக்கு உரியதானதே போல் காதலிக்கும் உரியது; பழி வாங்கினால் காதலியின் கோபமும், வெறுப்பும்; வாங்கா விட்டால் அவளுடைய ஏளனம். பழி வாங்கினால் என் அன்புக்குத் துரோகம், வாங்கா விட்டால் அவளுக்குத் தகுதி

யற்றுவனாவேன்." என் துன்பத்துக்கு மருந்து தேடுவதில் அது அதிகரிக்கவே செய்கிறது. யோசிக்க யோசிக்க என் கஷ்டம் இரட்டிக்கவே செய்கிறது! நல்லது, மனமே! இறப்பதே மேலானதால் ஷிமேனாவுக்கு வருத்தம் கொடுக்காமல் இறப்பதே சிறந்தது. ஆனால் என் மான பங்கத்துக்குப் பரிகாரம் தேடாமல் இறப்பதா? என் புகழுக்கும் முடிவாகும் அப்படி ஓர் முடிவைத் தேடுவதா? என் குலப் பெருமையை நிரூபிக்கத் தவறினேன் என்ற அவப்பெயரைத் தேசமெல்லாம் பரவ விடுவதா? என் கௌரவம் நிலை தவறினால் அதனாலேயும் இழப்பது அந்தக் காதலின் பெருமையல்லவா? துன்பத்தையே கொடுக்கும் அந்த இழிந்த நோக்கத்துக்கு இடம் கொடுத்தலே தகாது. எப்படியும் ஷிமேனாவை இழப்பது திண்ணமாகை



யால், கௌரவத்தை மட்டுமாவது பாதுகாப்போமாக.

ஆம்! சற்றுத் தடுமாற்றத்திலேயே இருந்து விட்டேன்; காதலியைக் காட்டிலும் என் தந்தைக்கல்லவா என் கடமை முற்றிலும் உரியது. சண்டையில் இறந்தாலும் சரி, வருத்தத்தால் வாடி இறந்தாலும் சரி, என் வம்ச வழியாய் வந்த இரத்தத்தின் புனிதத்தைக்காப்பாற்றியவனாவேன். இதுவரையில் தாமதித்ததே குற்றம். பழி வாங்குவதற்கு இப்பொழுதே குதித்தோட வேண்டும். இதுவரை தயங்கி நின்றதற்காக இப்பொழுது உதித்த வெட்கமே என் துயரத்தைத் தணித்ததாகும். அவமானம் இயற்றியவர் ஷிமேனாவின் தந்தையாய்த் தானிருந்தாலென்ன? அதை அடைந்தவர் என் தந்தையல்லவா?

அங்கம் 2

காட்சி 1

[அரியாலோ, கோமேசு]

கோ: நமக்குள் நான் ஒத்துக் கொள்கிறேன்; ஒரு சொல்லைப் பொறுக்க மாட்டாமல் கொஞ்சம் அளவுக்கு மீறியே என் இரத்தம் கொதித்து விட்டது; நடக்கக் கூடாத விதத்தில் நடந்துகொண்டு விட்டேன். ஆனால் காரியம் முடிந்து போயிற்று; அதற்கு இனிமேல் பரிகாரம் இல்லை.

அரி: உங்களுடைய உறுதி எவ்வளவு இருந்தாலும் அரசருடைய ஆக்ஞைக்கு நீங்கள் பணியவே வேண்டும். அரசருக்கு இந்த விஷயத்தில் மிக்க கவனம் ஏற்பட்டிருக்கிறது. அது அவர் மனத்தை உறுத்துகிறது. ஆகையால் உங்கள் மீது அவர் அதிகாரத்தைப் பூரணமாய்ச் செலுத்துவார். பார்க்கப்போனால் உங்கள் குற்றத்துக்குத் தகுந்த சமாதானம்தான் என்ன இருக்கிறது! அவமானம் அடைந்தவரின் பதவி, அவமானம் செய்த மாதிரி இவைகளை உத்தேசித்தால், சாதாரணத்துக்கு மிகவும் அதிகமாகவே பணிவு காட்ட வேண்டும். மன்னிப்புக் கோர வேண்டும்.

கோ: அரசருக்குச் சித்தமானால் என் உயிரையே வாங்கிக் கொள்ளட்டுமே!

அரி: முன் செய்த குற்றம் போதாதென்று இப்போது இவ்வளவு துடிதுடிப்பு எதற்கு உங்களுக்கு? அரசருக்கு உங்கள்மேல் இன்னும் அன்பு இருக்கிறது; அவர் கோபத்தைத் தணியுங்கள். "என் விருப்பம் இது" என்று அவர் தெரிவித்திருக்கிறார்; அதை நீங்கள் மீறப் போகிறீர்களா?

கோ: ஐயா! என்மீது மக்களுக்கு இருக்கும் அபிமானத்தைக் காப்பாற்றிக் கொள்ளக் கொஞ்சம் உத்தரவு மீறினாலும் அது பிரமாதமாய்க் குற்றம் ஒன்றும் ஆகிவிடாது. தவிரவும், எவ்வளவு பெருங் குற்றமாயிருந்தாலும் அரசருக்கு நான் புரிந்துவரும் சேவைகள் அதை மறைக்கப் போதுமானவை மட்டுமல்ல, அதிகமானவை.

அரி: அற்புதச் செயல்களாகட்டும், அவை எவ்வளவுதான் ஆகட்டும், அவைகளுக்காக ஒரு அரசர் மக்களிடத்தில் கடமைப்பட்டு நிற்க மாட்டார். அளவுக்கு மேல் உங்களை நீங்கள் மதித்துக் கொண்டிருக்கிறீர்கள். நல்ல அரச சேவை புரியும் ஒருவன், அரசருக்குரிய கடமையைச் செலுத்துகிறானேயல்லாமல் அதற்குமேல் ஒன்றும் செய்துவிடவில்லை என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும். உங்கள் சேவகத்தின் மீதே நம்பிக்கை வைத்திருக்கிறீர்கள் என்றால் மோசம் போவீர்கள்.

கோ: அப்படி அனுபவம் ஏற்பட்டால் அதற்குப் பின் நீங்கள் சொல்வதை நம்புகிறேன்.

அரி: அரசர் சக்திக்குப் பயப்பட வேண்டாமா?

கோ: என் போன்றவர்கள் ஒரு நாள் காரியத்தில் அழிந்து விடுவோமா என்ன? அரசர் சக்தி முற்றிலும் திரண்டு வரட்டும், என்னைத் தண்டிப்பதற்கு! நான் அழிவதானால் இந்தத் தேசம் பூராவும் அத்துடன் அழியும்!

அரி: அதென்ன, நீங்கள் சர்வ வல்லமை யுள்ள அரசரை அவ்வளவு அற்பமாய் மதிக்கிறீர்கள்?

கோ: நான் இல்லா விட்டால் அவர் கையிலிருந்து நழுவி விழக் கூடிய செங்கோலுக்கு அவ்வளவுதான் மதிப்பு. என் தலையறுந்து விழுந்தால் அவர் கிரீடத்துக்கே ஆட்டம்: அதையறிந்து தன்னலத்துக்காகவே என்மேல் அவருக்கு அக்கறை இருக்க வேண்டும்.

அரி: சற்றே சாவதானப்படுத்திக் கொள்ளுங்கள்; நல்ல புத்திமதியைத் தேடுங்கள்.

கோ: நான் தீர்மானம் செய்தாயிற்று.

அரி: பின் நான் அரசரிடம் என்னவென்று சொல்ல? அவரிடம் சென்று பதில் உரைக்க வேண்டுமே.

கோ: எனக்கு அவமானமாகும் வழியை ஒருபொழுதும் ஒப்புக் கொள்ள மாட்டேன் என்று சொல்லுங்கள்.

அரி: தாங்கள் இடுகிற ஆணையை மீறுவதை அரசர்கள் பொறுக்க மாட்டார்கள் என்பதை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள்.

கோ: என் உறுதியை மாற்ற முடியாது. பேச்சை விடுங்கள்.

அரி: உங்கள் புத்தியை மாற்ற நான் செய்த முயற்சியெல்லாம் வீண் என்று அறிந்தேன். போய் வருகிறேன். ஆனால் ஒன்று; உங்கள் முடி வெற்றிவாகையில் மறைந்ததா யிருக்கலாம். ஆனால் இடி வீழ்ச்சியைத் தடுக்க முடியாது.

கோ: சற்றும் தயக்கமின்றி அதை எதிர்பார்க்கிறேன்.

அரி: இருக்கலாம்; ஆனால் வீழ்ச்சியின் பலனை அது தடுக்காது.

கோ: அப்படியானால் அதன் மூலமாய்த் தான் டியேகோவுக்குத் திருப்தி ஏற்பட வேண்டும். (அரியசனோ போகிறார்)

மரணத்தை அஞ்சாதவனுக்கு மருட்டல்களில் அச்சமில்லை. அவமானத்தை இம்மியளவும் பொறுக்காது என் மனம். சுகம் இழந்து உயிர் தரித்தாலும் தரிப்பேன்; கௌரவம் அழிந்து ஒருபொழுதும் உயிர் தரிக்க மாட்டேன்.

காட்சி 2

[ரோடரிகோ, கோமேசு]

ரோ: இதோ, இரண்டொரு வார்த்தைகள், பிரபு!

கோ: சொல்லு.

ரோ: ஒரு சந்தேகம் தெளிய வேண்டும். டியேகோ பிரபுவை உனக்கு நன்றாய்த் தெரியுமா?

கோ: ஆம்.

ரோ: தாழ்ந்த குரலிலேயே பேசுவோம். கேள். அந்த வயோதிகர் அவர் காலத்தில், நேர்மை, தீரம், கௌரவம் இவையெல்லாம் ஒருங்கே உருவெடுத்தாற்போல் இருந்தவர் என்பது உனக்குத் தெரியுமா?

கோ: இருந்திருக்கலாம்.

ரோ: என் கண்களில் தோற்றும் இந்த ஆவேசம் அவர் உதிரத்தினால் என்பதும் உனக்குத் தெரியுமா?

பள்ளிக்கூடம் பிடிக்காத பையன் தகப்பனுக்குக் கடிதம் எழுதுகிறான்:

"அன்புள்ள அப்பாவுக்கு, என் வகுப்பில் 251 பையன்கள் இருக்கிறார்கள். 250 பையன்கள் இருந்தால் போதாதா, என்ன? 251வது பையன் வேண்டுமா என்பதை எனக்குத் தெரிவிக்கவும்!"

கோ: இதைப் பற்றி இம்மியும் அக்கறையில்லை.

ரோ: இங்கிருந்து ஒரு நாலடி விலகி வந்தாயானால் அதை உனக்குத் தெரியும்படி செய்வேன்.

கோ: அறிகப் பிரசங்கிப் பயலே!

ரோ: படபடக்காமல் பேசு. நான் சிறுவன் என்பது உண்மைதான். ஆனால் உயர்குடிப் பிறந்தோர்க்கு வீரம் வயதின் எண்ணிக்கைக்குக் காத்திருப்பதில்லை.

கோ: நீ என்னை எதிர்ப்பதா! ஆயுதத்தைக் கையில் ஏந்தி அறியாத உனக்கு இவ்வளவு திமிர் எப்படி வந்தது?

ரோ: என் போன்றவர்களுக்கு அதிக அவகாசம் அனாவசியம். சோதனைக்காகச் செய்து பார்ப்பதே வெற்றியளிக்கும் செயலாயிருக்கும்.

கோ: நான் யார் என்பது உனக்கு நன்றாகத் தெரியுமா?

ரோ: ஆகா, தெரியும். என்னைத் தவிர வேறு யாராயிருந்தாலும் உன் பேர் கேட்ட மாத்திரத்திலேயே நடுங்கக்கூடும். உன் முடியில் ஏறிய வெற்றிக்கண்ணிகள் நான் அழிவதைச் சுட்டிக் காட்டுவன போல் இருக்கலாம். எப்பொழுதும் வெற்றி கொள்ளும் உன் தோள்களை நான் தாக்குவது பெரிய சாமர்த்தியமா யிருக்கலாம். ஆனால் எனது ஆற்றலையும் எனக்கு வேண்டிய சக்தியையும் கொடுக்கும் என் தந்தையைப் பழி வாங்க எழுந்தவனுக்கு எதுவும் அசாத்தியமில்லை. நீ இதுவரையில் தோல்வி அடையாதவனாய் இருக்கலாம்; ஆனால் இந்த வினாடியிலிருந்து நீ வெற்றி வீரன் அல்ல.

கோ: உன் பேச்சில் தொனிக்கும் ஆற்றல் உன் கண்களில் ஒளிர்வதை இதற்குமுன் பிரதிதினமும் நான் பார்த்திருக்கிறேன். காஸ்டில் தேசத்தின் பெருமையே உன்னிடம் குடிகொண்டிருப்பதாய்ப் பார்த்து, உனக்கே என் புத்திரியைக்கொடுக்கவேண்டும் என்று மகிழ்ச்சியுடன் உத்தேசித்திருந்தேன். ஆம், நீ அவளை நேசித்திருந்தது எனக்குத் தெரியும். நீ அதை விலக்கி வைத்து உன் கடமையையே மேலாக மதித்தது பெரிது. அந்தக் கடமை யாற்றலை உன் அன்பு சற்றும் பாதிக்காமல் வைத்தது! உன் உயர்ந்த இலட்சியம் நான் உன்மீது வைத்த மதிப்புக்கு ஒத்திருப்பதே; மாசற்ற வீரன் எனக்கு மருமகனாக வேண்டும் என்று உத்தேசித்திருந்த நான் உன்னைத் தேர்ந்து வைத்தது தவறன்று என்ற நிரூபணம்—இவையெல்லாவற்றையும் நினைத்து எனக்கு அளவில்லாத மகிழ்ச்சிதான். ஆனால் முன் நிற்பது உன்

பேல் இரக்கம்தான். உன் தைரியத்தை மெச்சுகிறேன். ஆனால் உன் இளமைக்காக வருந்துகிறேன். நிச்சய மரணம் ஏற்படும் மார்க்கத்தைத் தேடாதே. என் பராக்கிரமத்துக்குத் தகுதி குறைந்த இந்தச் சண்டைக்கு என்னை இழுக்காதே. இதில் வெல்வது என்பது என்னளவும் பெரிதாகாது. ஆபத்தின்றி வெல்வது, புகழற்ற வெற்றியேயாகும். நான் அநாயாசமாய் உன்னை யழித்தேன் என்றே எல்லோரும் கருதுவார்கள். உன்னை மாய்த்ததற்குப் பச்சாத்தாபமே எனக்கு மிஞ்சும்.

ரோ: அடாத பழி இயற்றியபின் இந்த அநாவசியமான பரிதாபம் வேறு வேண்டுமா? என் கௌரவத்தைப் பற்றியே தயங்காதவனுக்கு என் உயிரைப் பற்றித் தயக்கமா?

கோ: நீ இங்கிருந்து உடனே திரும்பிப் போய் விடு.

ரோ: பேச்சை நிறுத்திக் கொண்டு காரியத்தில் இறங்குவோம்.

கோ: மறுபடியும் சொல்கிறேன், நீ இங்கிருந்து திரும்பிப் போய் விடு.

ரோ: உனக்கு வாழ்க்கையில் அவ்வளவு வெறுப்பா?

கோ: உனக்கு மரணத்தில் அவ்வளவு பயமா?

ரோ: சரி, நீ உன் கடமையையே செய்கிறாய். தந்தையின் அவமானத்தை ஒரு கணப்பொழுது பொறுத்துக் கொண்டிருந்தாலும் அவன் இழிந்தவனேயாவான். நடக்கட்டும், பார்க்கலாம்.

காட்சி 3

[அரசகுமாரி, ஷிமேனு, லேயனோரா]

அர: உன் வருத்தத்தை அடக்கிக் கொள், ஷிமேனு; மன உறுதியை வரவழைத்துக் கொள். இது ஏதோ ஒரு சிறு புயல். அமைதி சீக்கிரம் வரும். உன் மகிழ்ச்சியைக் கொஞ்சம் பனி மூடியிருக்கிறது. அது சற்றுத் தள்ளிப் போயிருக்கிறதே தவிர வேறொன்றும் இல்லை.

ஷி: என் மனம் என்னவோ கிலேசத்தினால் ஒடுங்கி நம்பிக்கை யற்றிருக்கிறது. நிம்மதியை அடுத்து வந்த இந்தப் புயல் கப்பலையே கவிழ்த்து விடுமோ என்ற பயம் எழுகிறது. துறைமுகத்திலேயே இறந்து விடுவேன், சந்தேகமில்லை. காதல் கொண்டேன். காதலைப் பெற்றேன், என் தந்தைக்கும் அதில் சம்மதம்; இதை மகிழ்ச்சியுடன் உங்களுக்குத் தெரிவித்துக் கொண்டிருக்கும் பொழுதுதான் இந்தச் சண்டையின் செய்தி வந்து சேர்ந்தது. என் ஆசையை யெல்லாம் முறியடித்தது. பாழாய்ப் போன பதவி ஆசை, நாசமாய்ப் போன கோப வெறி உத்தம புருஷர்களையும் இவைகளின் ஆதிக்கம் விடவில்லையே! என் ஆசைகளை அலட்சியம் செய்து நடமாடும் கௌரவமே! என்னைப் பெருமூச்சும் கண்ணீருமாகவே நீ நிறுத்தி வைக்கப் போகிறாய்.

அர: இந்தச் சண்டையைப் பற்றி நீ அவ்வளவு பயப்பட வேண்டிய அவசியம் இல்லை. இது ஒரு நிமிஷத்தில் எழுந்தது; ஒரு நிமிஷத்திலேயே மறையும். செய்தி மிகவும் பிரபலமடைந்து விட்டது; அரசரே இதில் முனைந்திருப்பதால் அவர்களுக்குள் சமரசம் ஏற்படும். உன் வருத்தத்தின் காரணத்தைத் தீர்ப்பதற்கு நானும் அசாத்தியமான காரியங்களைக் கூடச் செய்யத் தயாராக இருக்கிறேன்.

ஷி: இதுபோன்ற விஷயத்தில் சமரசம் என்பது எங்கே? பிரமாதமான கௌரவ பங்கத்துக்குப் பரிகாரம் ஏது? பலவந்தமோ, புத்திமதியோ, அதில் பிரயோசனமில்லை. மறைத்து வைத்தாலும் தற்காலத்துக்குத்தான், அவர்களுக்குள் ஏற்பட்ட பகைமை சாம்பல் பூத்த நெருப்புப் போலவே நிற்கும்.

அர: ரோடரிகோவுக்கும் ஷிமேனுவுக்கும் கல்யாணம் ஆகி விட்டால் அந்தப் பகைமை தீர்ந்தே போம். உங்கள் பரஸ்பர அன்பு அதை முற்றிலும் போக்கி விடும், பார்.

ஷி: அப்படி ஆகவேண்டும் என்ற ஆசையிருக்கிறதே யொழிய நம்பிக்கை ஏற்படவில்லையே. டியேகோ மிகவும் கர்வி; என் தந்தையையோ எனக்குத் தெரியும். கண்ணீரை அடக்கிப் பார்க்கிறேன்; பீறிக் கொண்டு வருகிறது. நடந்ததைப் பற்றித் துன்பம் வதைக்கிறது; நடக்கப் போவதைப் பற்றி அச்சம் நடுக்குகிறது.

அர: தள்ளாத கிழவனைப் பற்றிப் பயம் என்ன?

ஷி: ரோடரிகோவின் தைரியத்தை யல்லவா யோசிக்க வேண்டும்.

அர: அவன் சிறுவன்தானே?

ஷி: வீரர்களின் பராக்கிரமம் ஆரம்பத்திலேயே புலப்படும்.

அர: அப்படியும் அதைப் பற்றி நீ பயப்படுவானேன்? உன் அன்பை மீறி உனக்கு வருத்தம் வரும்படி அவன் நடந்து கொள்வானா? உன் வாயால் இரண்டு வார்த்தைகள் சொன்னால் அவன் கோபம் நின்று போகிறது!

ஷி: கேட்காவிட்டால் என் மனத்துக்கு இன்னும் எவ்வளவு கஷ்டம்? கேட்டு விட்டாலோ, மக்கள் அவனைப் பற்றி என்ன சொல்வார்கள்? அந்த வம்சத்தில் பிறந்து, அப்படி ஓர் அவமானத்தைத் தாங்குவதா? என் அன்புக்கு இணங்கிவிட்டால் அதற்கு எல்லை மீறிய மரியாதை வைத்தவனாவான், எனக்கே அது வெட்கமாகும்; இணங்காவிட்டால் அது நியாயமான மறுதலிப்பேயாகும். ஆனால் என் மனம் கலங்கி நிற்கும்.

அர: ஷிமேனு! காரணம் என்ன இருந்தாலும் இழிவான எண்ணங்களுக்கு இடம் கொடுக்காத உன் உயர்ந்த மனோபாவத்தை மெச்சினேன். ஆனால் சமாதானப்படும் சமயம் வரையில் உன் காதலனை என்னிடத்திலேயே கைதிபோல் அமர்த்தி, அவன் ஆற்றலைச் செலுத்த வழியில்லாமல் செய்து விட்டால் உனக்கு ஆட்சேபணை இராதே?

ஷி: அம்மணி! அப்படிச் செய்வதினால் எனக்கும் கவலையேயில்லை. (தொடரும்)


மார்ச்
27உ
முதல்
சென்னை
மற்றும்
தென்னாடெங்கும்
ஜயந்தியின்
வாழ்க்கை ஒப்பந்தம்
தயாரிப்பு & டைரக்ஷன்: K.V.ரெட்டி B.Sc.(Hons.)
உரிமையாளர்கள்: மஹாலக்ஷ்மி பிக்சர்ஸ். மதராஸ்.

புதிய தொடர்கதைகள்

மாயாவி எழுதுவது

கண்கள் உறங்காவோ?



வெள்ளித் திரை

அதிசயப் பெண்

கார்த்தன்

மேல்நாட்டுப் படங்கள் மேலாக இருப்பதற்குக் காரணம் அவர்கள் படங்களில் பல அதிசயங்கள் இருப்பதுதான். நம் நாட்டுப் படங்களில் அதிசயங்களைப் புகுத்த முடியாவிட்டாலும் படத்தின் தலைப்பிலாவது அதிசயத்தைப் புகுத்த முடிவது மகிழ்ச்சிக்குரிய விஷயம்தான்!

எளிதில் காணமுடியாத தொலைதூரக் காட்சிகளையும், அபூர்வக் காட்சிகளையும் கண்ணுக்கெதிரில் கொணர்ந்து நிறுத்தி மக்களை அதிசய உணர்ச்சியில் ஆழ்த்தும் சக்தி வாய்ந்த அரிய சாதனம் சினிமா. அந்தச் சாதனத்தை மேல் நாட்டுப் படாதிபதிகளும், நடிகர்களும் நன்கு பயன்படுத்திக் கொள்கின்றனர். மேல் நாட்டுப் படம் பார்க்கும்போது ஒரு சில நிமிஷங்களில் பாத்திரங்களும் காட்சிகளும் நம்மை ஈர்த்து விடுகின்றன; உணர்ச்சிப்பெருக்கில் கண்ணீர் உகுக்கச் செய்கின்றன. நம் படங்களும் நம்மைக் கண்ணீர்விடச் செய்கின்றன. உணர்ச்சிக் கண்ணீரல்ல — வேதனைக் கண்ணீர்!

நாடக மேடையில் காட்டமுடியாத காட்சிகளையும், உணர்ச்சிகளையும், நடிப்புத் திறமையையும் சினிமாவில் அநாயாசமாகக் காட்டலாம். ஆனால் நம் படாதிபதிகள் இது விஷயமாகச் சிறிதும் சிரமப்படுவதில்லை. நீண்ட நேரம் பாடப்படும் பாட்டுக்கள், மூச்சு விடாமல் பேசப்படும் வசனங்கள் எல்லாமாகச் சேர்ந்து சினிமாவையும் நாடகமேடைகளுக்கே கொண்டு செல்லுகின்றன. நாடக மேடையை விடச் சினிமா அதிகமாக அபிவிருத்தியடைந்து விடவில்லை என்பதை அவை எடுத்துக் காட்டுகின்றன.

ஹிந்திப் படங்களில் பல, கதை அம்சத்துக்காகவே பார்க்கப்படுகின்றன. உள்ளத்தை உருக்கும் உயர்ந்த பாட்டுக்களால் பல ஹிந்திப் படங்கள் ரஸிகர்களிடையே பிரசித்தியடைந்திருக்கின்றன; சிறந்த டைரக்டர்களின் பெயர் காரணமாகப் பிரசித்தியடைந்திருக்கின்றன; திரைக் கதை ஆசிரியரின் திறமை காரணமாகப் பிரசித்தியடைந்திருக்கின்றன. ஆனால் நம் தமிழ்ப் படங்கள் எதுவும் இம்முறையில் பொதுஜன ஆதரவைப் பெற்றதில்லை. டைரக்டரையோ, கதாசிரியரையோ நம் படாதிபதிகள் பொருட்படுத்துவதாகவே தெரியவில்லை.

எம். வி. ராமன் தயாரிப்பான 'அதிசயப் பெண்' படத்தில் விசேஷமான கதையம்சம் இல்லை என்றாலும் கண்ணையும் கருத்தையும் கவர்ந்துவிடும் காட்சிகள் நிறைய இருக்கின்றன.

பால் பாயசத்தில் மணக்கும் குங்குமப் பூவைப் போல் வைஜயந்திமாலா அதிசயப் பெண்ணாக வந்து படத்துக்கு மணம் ஊட்டுகிறார். அதிசயப் பெண்ணைச் சுற்றியே திரைக்கதை புனையப்பட்டிருப்பதால், வைஜயந்தியின் திறமை முழுவதும் படத்தில் சோபிப்பதில் அதிசயமில்லை.

தன் காதலனுக்கு உற்ற இடுக்கண்களை அகற்றி அவனைக் குற்றமற்றவனாக ருசுப்பிக்க அதிசயப் பெண் அதிசய நடனம் ஒன்று ஆடுகிறாள். அதன் மூலம் அவன் மீது அபாண்டமாகச் சுமத்தப்பட்டிருந்த கொலைக் குற்றம் நிவர்த்தியாகிறது. கொலைக்குற்றம் சுமத்தப்பட்ட மணிவண்ணன் ஜமீன்தார் மகன். உண்மையில் கொலை செய்தவன் ஜமீன்தாரின் சகோதரியினுடைய மகன ராஜு. கொலை செய்யப்பட்டவன் ஓர் ஏழைப் பெண்ணின் தந்தை. அந்த ஏழைப் பெண்ணை வஞ்சித்த ராஜு தான் செய்த கொலையை மணிவண்ணன் மீது வஞ்சகமாகச் சுமத்







விடுகிறான். மணிவண்ணனின் காதலியான அதிசயப் பெண் அதைத் தவிர்ப்பதற்கு முற்படுகிறாள்.

விஷயம் தெரிந்த அசடாக மணிவண்ணனைக் காட்டித் திரைக் கதைக்கு ஒரு புதுத் திருப்பம் தரப்பட்டிருக்கிறது. மணிவண்ணன் பாத்திரம் கடைசி வரையில் திரைக் கதையின் உயிர் நாடியாக அமைந்து நன்கு சோபிக்கிறது.

கண்ணைக் கவரும் வண்ணக் காட்சிகளாக மலரும் நடனங்கள் பிரமாதமாகப் படமாக்கப்பட்டிருக்கின்றன. வைஜயந்திமாலாவின் தோற்றம் தலைகீழாகத் தெரியும் கட்டம் போட்டோக் கலையின் சிறப்பைக் காட்டுகிறது. நடன நிகழ்ச்சியில் பாடப்படும் 'ஈனு மீனு டீகா' என்ற பாட்டு தமாஷாகவும் கவர்ச்சியாயும் இருக்கிறது. நந்தவனத்தில் பூத்துக் குலுங்கும் வர்ண ஜாலங்கள் நிறைந்த மலர்க் கொடிகளைப் போல் வைஜயந்திமாலா வளைந்து நெளிந்து வனப்பு வாய்ந்த வனதேவதையைப் போல் தோன்றி நடனமாடியிருக்கிறார்.

மணிவண்ணனாக வரும் ஏ. நாகேசுவரராவ் அசடாக நன்றாய் நடிக்கிறார். அதைவிட அவருக்கு அராபிக்காரன் வேஷம் மிகவும் பொருத்தமாயிருக்கிறது. வைஜயந்திமாலாவுடன் நடனமும் ஆடிச் சமாளிக்கிறார்.

ஜமீன்தார் வேஷத்தில் சாரங்கபாணி தோன்றிப் பல்லவி பாடி எல்லோரையும் சிரிக்க வைக்கிறார்.

"அதிசயப் பெண்"ணின் வில்லன் மனோகர். ராஜூவாக வருகிறார். தம்முடைய பாகத்தை உணர்ந்து நன்றாக நடித்திருக்கிறார்.

படத்தின் பாதி வரையில், அதாவது 'இடைவேளை' வரையில், ஓரளவு கதையோடு ஒட்டிச் செல்லும் படம் பிற்பகுதியில் தடம் புரண்டு சொல்லி வைத்தாற் போல் நிகழும் சம்பவங்களுடன் எங்கெல்லாமோ போகிறது. முடிவில் நடன நாடகம் நிகழுகிறது. அந்தச் சமயத்தில் ராஜூ கையில் துப்பாக்கியுடன் அரங்கில் ஏறி அமர்க்களம் பண்ணுகிறான். அப்பொழுது அவனுடைய தோழனும் கைத் துப்பாக்கியுடன் தோன்றுகிறான். பெரிய பிரசங்கங்கள் நிகழுகின்றன. இத்தகைய சம்பவங்கள் உண்மை வாழ்க்கைக்குச் சிறிதும் ஒவ்வாதவை. படத்தின் கவர்ச்சிக்காக இதையெல்லாம் சேர்க்க வேண்டியிருந்தது போலும். இந்தக் கட்டத்தைப் பரபரப்புடன் வேகமாகச் செல்லும்படி தயாரித்திருந்தால் மிக மிகச் சுவாரஸ்யமாயிருந்திருக்கும். நடன நிகழ்ச்சிகளிலெல்லாம் வெகு வேகமாகச் செல்லும் படம் பின்னால் முடியும் தருணத்தில் ஆடி அசைந்து நகர்ந்து செல்ல ஆரம்பித்ததன் காரணம் விளங்கவில்லை!

வைஜயந்திமாலா ஒரு நாடகக் கம்பெனிக்குப் போய் நடிகையாகச் சேர முயலும் காட்சி மிகவும் நன்றாயிருக்கிறது. வைஜயந்தி சினிமா வசனங்களைப் பரீட்சார்த்தமாகப் பேசுகிறார். அப்பொழுது நம்மையும் அறியாமல் 'ஒன்ஸ்மோர்' என்று சொல்லத் தோன்றுகிறது. ஒரு சிறு நடனமும் ஆடுகிறார்; அருமையாயிருக்கிறது. கடைசியில் கிழவியாகத் தோன்றிக் கம்பெனி முதலாளியைத் திணற அடிக்கிறார் வைஜயந்தி.

"அதிசயப் பெண்" படத்துக்குக் கதை, வசனம் எழுதியவர் சிறந்த நடிகரான ஜாவர் சீதாராமனாதலால், ஒரு சாதாரணக் கதையை நன்கு பரிமளிக்கச் செய்திருக்கிறார்.

ஒளிப்பதிவின் குறையைப் படத்தில் பல இடங்களில் காண முடிகிறது. பாட்டுக்கள் எதுவுமே கருத்தில் நிற்கவில்லை.

படத்தின் பெரும் பகுதி டெக்னிகலராகத் தயாரிக்கப்பட்டிருப்பதால் படத்தில் கவர்ச்சிக்குக் குறைவில்லை. இதை நல்ல கதைக்குப் பயன்படுத்தியிருந்தால் நன்றாயிருந்திருக்கும். வைஜயந்திமாலாவைப் போன்ற நடன நட்சத்திரத்தை நல்ல கதையோடு பிணைத்திருந்தால் அவர் ஒரு நடிக நட்சத்திரம் என்பதையும் படரசிகர்களுக்கு நன்கு அறிமுகப்படுத்தியிருக்கலாம். அது தவறி விட்டது.

படத்தில் அதிசயப்படுவதற்கு ஒன்றும் இல்லாவிட்டாலும் ஆத்திரப்படுவதற்கும் ஒன்றும் இல்லை.



[மனித உடலில் இரத்த ஓட்டம் எவ்வாறு நடைபெறுகிறது என்பதை முதன் முதலாக வைத்திய உலகுக்கு விளக்கி வைத்தவர் பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்த வில்லியம் ஹார்வி என்பவர். அவர் பிறந்த தினம் ஏப்ரல் முதல் தேதி. அவருடைய வாழ்க்கை வரலாற்றை விவரிக்கிறது இந்தக்கட்டுரை. ஆசிரியர்]

வில்லியம் ஹார்வி

டாக்டரிடம் போகாதவர் நம்மில் வெகு சிலரே. அவருடைய பரிசோதனைக்கு ஆளாகாதவரும் மிகச் சிலரே. நாட்டு வைத்தியரானால் கையைப் பிடித்து நாடியைப் பார்த்துக் கண்ணில் செவ்வரி படர்ந்திருப்பதைக் கவனித்து உடல் நிலையைத் தெரிந்து கொள்ளுவார். இங்கிலீஷ் முறையைப் பின்பற்றுபவராக இருந்தால் ஸ்டெதாஸ்கோப்பினால் மார்பிலும் விலாவிலும் முதுகிலும் அழுத்தி இருதயத் துடிப்பையும் ரத்த ஓட்டத்தின் தன்மையையும் உடல் நிலைமையையும் கண்டறிவார். 'ஸ்பெஷலிஸ்டு' என்பவரின் உதவியைக் கோரினால் ரத்த அழுத்தமானி, கார்டியோ கிராப், எக்ஸ்ரே, கத்திட்டர் பரிசோதனை என்று பல்வேறு நுட்பமான உபகரணங்களைக் கொண்டு விரிவாகப் பரிசோதனைகள் நடத்துவார். யார் எப்படிச் செய்தாலும் முக்கியமாக ஆராயப்படுவது இருதயமும் அதன் இயக்கமும் ரத்த ஓட்டமும். நவீன வைத்திய முன்னேற்றத்துக்கெல்லாம் ஆதாரமாக உள்ளது இருதயத்தின் தன்மை, அதன் வேலை, ரத்த ஓட்டம் ஆகியவற்றின் அடிப்படையான அறிவு. இந்த அறிவு வைத்திய உலகுக்கு எப்படிக் கிடைத்தது? முதன்முதலாக இதைப் பற்றி உலகுக்கு உணர்த்திய உத்தமர் யார்?

இன்றைக்கு 381 ஆண்டுகளுக்கு முன் 1578 ல் ஏப்ரல் முதல் தேதியன்று இங்கிலாந்தில் 'போக்ஸ்டன்' (Folkestone) என்னும் ஊரில் வில்லியம் ஹார்வி பிறந்தார். அவர் தந்தை ஒரு வியாபாரி. அவருக்கு ஏழு புதல்வர்கள். குடும்ப ஒற்றுமையில் அவருக்கு நம்பிக்கை அதிகம். எனவே புதல்வர்களையும் தான் நடத்தி வந்த வியாபாரத்திலேயே தான் ஈடுபடுத்தினார். செல்வந்தர்களாகவே தான் குடும்பமும் வாழ்ந்தது.

ஆனால் வில்லியம் ஹார்விக்கு மட்டும் வியாபாரத்தில் பற்றுதல் குறைவாக இருந்ததெனத் தெரிகிறது. வைத்தியத் துறையில் அவருக்கு ஆர்வம் அதிகமிருந்தது.



வில்லியம் ஹார்வி

அந்தக் காலத்தில் வைத்தியத் துறையின் ஆட்சி பீடத்திலிருந்து அரசு புரிந்து வந்தவர் "காலென்" (Galen) என்பவர். இவர் கி.பி நான்காவது நூற்றாண்டில் லத்தீன் மொழியில் ஒரு வைத்தியப் புத்தகம் எழுதினார். "ஹிப்போக்ரடீஸ்" என்ற கிரேக்க அறிஞர் எழுதிய வைத்தியத் துணுக்குகளுக்குப் பின், காலென் எழுதிய நூல்தான் வேதமாகத் திகழ்ந்தது. பதினாறாம் நூற்றாண்டு வரையில், சுமார் 1200 ஆண்டுகளுக்கு இந்த ஒரே புத்தகம்தான் வைத்தியத் தொழிலில் ஆட்சி புரிந்திருக்கிறது. ஆசிரியர்கள் வகுப்பில் இதிலிருந்து பகுதி பகுதியாகப் படிப்பாராம். மாணக்கர்கள் அப்படியே எழுதிக் கொள்ளுவார்களாம்.


வகுப்பு அறையில் மாணக்கர்களுக்கு காலென் சொன்னதையே சொல்லிக் கொண்டிருந்தாலும், ஒருவருக்குமே இருதயம் எப்படி வேலை செய்கிறது, ரத்த ஓட்டம் எப்படி நடைபெறுகிறது என்ற அடிப்படை விஷயங்களில் நிச்சயமான அறிவு இருந்ததில்லை. ஒரு சமயம் ஆசிரியர் பாப்ரீகஸ் மாணக்கன் வில்லியம் ஹார்வியுடன் பேசிக் கொண்டிருந்த போது, "ரத்தக் குழாயில் கபாடங்கள் (Valves) இருக்கின்றன; அவை எதற்காக என்று நினைக்கிறாய்?" என்று ஹார்வியைக் கேட்டார். இந்த விஷயத்திலும்கூட காலென் சொன்னதுதானே மேற்கோள்! சிரைகள் அசுத்த ரத்தத்தை இருதயத்திலிருந்து அப்பால் கொண்டு செல்லுகின்றன என்று காலென் தமது புத்தகத்தில் சொல்லியிருந்தார். அப்பால் கொண்டு செல்லுவதாக இருந்தால் கபாடங்கள் தேவை இல்லையே என்று ஆசிரியர் திகைப்படைந்தார். ஒருகால் வெகு வேகமாகச் செல்லுவதைத் தடுக்க இவை ஏற்பட்டிருக்கலாம் என்று தம்மையே சமாதானப் படுத்திக் கொண்டு விட்டார்.

ஆனால் உண்மையில் அவருக்குத் திருப்தி ஏற்படவில்லை. ஆசிரியரும் மாணக்கரும் ஒருவரை யொருவர் விட்டுப் பிரிந்த பின்னரும் கூட ஹார்விக்கு ரத்த

தானங்களில் கபாடங்களின் அவசியம், ரத்தத்தின் ஓட்டம் முதலியவை பற்றிச் சிந்தனைகள் மட்டும் ஓயவில்லை. 1602-ம் ஆண்டு தனது 24-ம வயதில் ஆரம்பித்த சிந்தனையும் ஆராய்ச்சியும் பதினான்கு வருஷங்கள் நடந்தன. 1616-ம் ஆண்டில் வைத்தியர்கள் சங்கக் கூட்டத்தில் நிகழ்த்திய மூன்று சொற்பொழிவுகளில் ரத்த ஓட்டம் பற்றித் தமது புதிய கருத்துக்களைக் கோவையாக விளக்கி வைத்தார். இருதயம் ஒரு பம்பு போல் இயங்குகிறது: அசுத்த ரத்தம் சிரைகள் என்ற ரத்தக் குழாய்கள் வழியாக இருதயத்தை நோக்கித்தான் செல்லுகின்றன; அவை சுத்திகரிக்கப்பட்டு இருதயத்திலிருந்து மறுபடியும் நல்ல ரத்தமாக தமனிகள் வழியாக உடலில் பரவுகின்றன: இவையனைத்தும் ஒரு சக்கரச் சுழல்போல் நிகழுகின்றன : இந் நிகழ்ச்சியைக் கட்டுப்பாட்டுடன் நடத்தக் கபாடங்கள் உதவுகின்றன ; இவ்வாறாக இப்போது நமக்குச் சர்வ சாதாரணமாகத் தெரிந்துள்ள ரத்த ஓட்டக் கிரமத்தைத்தான் அவர் அச்சமயம் விளக்கி வைத்தார்.

ஆனால் காலென் சம்பிரதாயத்தில் திளைத்த மற்ற வைத்திய நிபுணர்கள் இவையனைத்தும் ஆதாரமற்றவை; பயித்தியக்காரனின் உளறல் என்று புறக்கணித்தனர். அதுமட்டுமல்ல; இங்கிலாந்தை அந்தக்காலத்தில் ஆண்டுவந்த முதலாவது சார்லஸ் மன்னர் அரண்மனை வைத்தியராகப் பதவி வகித்த ஹார்வியை வரவழைத்து விஷயத்தை வினவத் தொடங்கினார். தாம் செய்த பரிசோதனைகளையும் தீர்மானங்களையும் விரிவாக விளக்கினார். மன்னர் முன்னிலையிலேயே அரண்மனைச் சிப்பந்தி ஒருவனை வரவழைத்து, நூல் கயிற்றால் அவனுடைய கையில் கட்டுப்போட்டு, நீல ரத்தம் ஓடுவதையும். கபாடங்கள் இயங்குவதையும், இருதயத்தை நோக்கி இது போவதையும் நிதரிசனமாகக் காட்டினார். ஒருவாறு திருப்தியடைந்த மன்னர், "சிரை என்னும் அசுத்த ரத்தக் குழாய்களிலிருந்து தமனி என்னும் சுத்த ரத்தக் குழாய்களுக்கு ரத்தம் எப்படி மாறுகிறது ; அப்போது தானே சக்கரவட்டமாக ரத்த ஓட்டம் நிகழுகிறது என்று சொல்ல முடியும்" என்று வினவினார். ஆம் ; அந்தக் காலத்தில் 'காபில்லரீஸ்' என்ற நுண்குழிக் குழாய்களைப் பற்றி அறிவு ஏற்படவில்லை. இம்மாதிரி ஏதாவது ஒரு இடைநிலை இருந்துதான் ஆகவேண்டும் என்ற அனுமானத்தின் பேரில்தான் அப்போதைய அறிவு நிலைத்திருந்தது. ஆனால் மன்னர் திருப்தியடைந்து விட்டார். புதுக் கருத்துக்கள் புத்தக வடிவத்தில் 1628-ம் ஆண்டில் "ஜீவன்களில் இருதயத் துடிப்பும் ரத்த ஓட்டமும்" என்ற நூலாக முதன்முதலில் வெளிவந்தது.

சம்பிரதாயத்துக்கு மாறான கருத்துக்கள் கொண்ட நூலாகையால் இது எவ்வித பரபரப்பையும் உண்டாக்கவில்லை. புதுக் கருத்துக்கள் எல்லாக் காலத்திலும் எல்லா நாடுகளிலும் இப்படித்தானே வரவேற்கப்படுகின்றன! உண்மையில் இந்த நூல் வைத்தியத் துறையில் வெளிவந்துள்ள புராதன நூல்களுக்குள் மிகவும் முக்கியமானது என்பது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. ஹார்வியின் ஜீவிய காலத்திலில்லாவிடினும் அவர் இறந்த பின்னராவது இதன் மேன்மையை அக்காலத்திலேயே உணர ஆரம்பித்துவிட்டனர். பைத்தியக்காரன் என்று பரிகசிக்கப்பட்டவனை 'மேதை' என்று பாராட்டத் தொடங்கி விட்டனர். 381 ஆண்டுகளுக்கு முன்பு பிறந்த அத்தகைய உத்தமருக்கு அவருடைய பிறந்த நாளாகிய ஏப்ரல் முதல் தேதியன்று வைத்திய உலகம் அஞ்சலி செய்யுமாக.



இரத்த ஓட்டத்தை விளக்கும் படம் 1. உடலின் மேற்பாகத்திலிருந்து வரும் சிரைகள்: 2. சுவாசக் குழாய்கள்; 3. நுரையீரல்; 4. நுரையீரலுக்குச் செல்லும் பெருந்தமனி; 5. நுரையீரலிலிருந்து வரும் பெருஞ்சிரை; 6. மேற்பெருஞ்சிரை; 7. வலது மேலறை; 8. இடது மேலறை: 9. மேற்பாகத்துக்குச் செல்லும் பெருந்தமனி; 10. வயிறு, குடல் பாகத்திலிருந்து வரும் சிரை; 11. இதயத்தின் வலது கீழறை; 12. இடது கீழறை; 13. பெருந்தமனி; 14. உடல் மத்திய' கீழ்பாகங்களுக்குச் செல்லும் தமனிகள்; 15. கல்லீரல்; 16. குடல்; 17. குடலிலிருந்து வரும் சிரை; 18, உடலின் கீழ்ப்பாகங்களிலிருந்துவரும்சிரை: அம்புக்குறி இரத்த ஓட்டத்தைக் குறிக்கும்.

தமிழ் கூறும் நல்லுலகம்

இந்தூர்வாழ் தென்னிந்திய பக்த கோடிகள் ''குமாரபவனில்'' மார்ச்சு மாதம் 7ந் தேதியன்று இரவு ஒன்று கூடி மகாசிவராத்திரி நன்னாளைச் சிறப்பாகக் கொண்டாடினார்கள். அது சமயம் பூஜைகள் வழிபாடுகளுடன் திரு கிருஷ்ணமூர்த்தி ஸ்ரீமதி சரோஜா சர்மா ஆகியோரின் இன்னிசை விருந்தும் நடைபெற்றன !

★

பம்பாய் மாதுங்கா ஸ்ரீ ராஜராஜேஸ்வரி பரதநாட்டிய கலாமந்திரின் மாணவியும், ஹிந்துஸ்தான் லீவரைச் சேர்ந்த திரு சிவராமன் அவர்களின் புதல்வியுமான செல்வி சியாமளாவின் பரதநாட்டிய அரங்கேற்றம் சங்கீத கலா சிகாமணி ஸ்ரீ கே. வாசுதேவ சாஸ்திரி தலைமையில் விமரிசையாக நடந்தேறியது. கூடியிருந்த சபையோர்கள் சிறுமியின் நடனத்தை ரசித்துப் பாராட்டினார்கள்.

★

ரூர்கேலா தக்ஷிண பாரத சமாஜத்தினர் மகா சிவராத்திரி தினத்தை மார்ச் 7-ந் தேதி சிறப்பாகக் கொண்டாடினர். காலையில் சிவன் கோயிலில் அனைவரும் கூடி ருத்ராபிஷேகம், அர்ச்சனை, ஆராதனைகளை நடத்தினர். மாலையில் எக்ஸிகியூடிவ் இன்ஜினியர் திரு வி. சாம்பசிவம் அவர்கள் இல்லத்தில் பஜனை, பூஜைகள் பிரமாதமாக நடந்தன. ஹிந்துஸ்தான் இரும்புத் தொழிற்சாலையின் உதவி நிதி ஆலோசகர் திரு எஸ். வெங்குஸ்வாமி அவர்கள் 'திருவாசகம்' என்னும் பொருள் பற்றிப் பேசினார்.

ஞாயிறு அன்று பிரஸிடெண்ட் பஞ்சாக்ஷரம் என்னும் நாடகத்தை அங்கத்தினர்கள் அழகாக நடித்துச் சபையோரின் பாராட்டுதலைப் பெற்றார்கள். திரு வி. சங்கரநாராயணன் பிரசிடெண்ட் பஞ்சாக்ஷரமாக நடித்தார்.

★

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகளின் பரிபூர்ண அனுக்கிரஹத்துடன், 7-3-59 சனிக்கிழமை காலை முதல் 8-3-59 ஞாயிறு காலை வரையில் இடைவிடாமல் மகாருத்ரஜபம் ருத்ர ஹோமம் முதலியவை மாம்பலத்தில் விமரிசையாக நடைபெற்றன. ஏராளமான ஆஸ்திகர்கள் இரவு பகல் இடைவிடாது தரிசனம் செய்த வண்ணம் இருந்தனர்.

★

இந்தோர் அபிநவ கலா சமாஜத்தின் ஆதரவில் நடந்த அகில இந்திய சங்கீத சம்மேளனத்தில் இந்திய சங்கீத மன்னர்களும், இசைக் கருவி மன்னர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

பிப்ரவரி 8ந்தேதி திருமதி வி. வி. எஸ். வசந்தாவின் பரதநாட்டியக் கச்சேரி வெகு சிறப்பாக அமைந்திருந்தது. அவரது நடனத்தில் பரதக் கலையின் பண்பு மிகுந்திருந்தது. திருமதி வசந்தாவின் இல்லை நடனத்தைக் கண்டு சங்கீத சம்மேளனத்துக்கு வந்திருந்த அனைவரும் வியந்தனர்.

★

சிகட்புரம் ஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகள் ஜபல்பூருக்கு பிப்ரவரி மாதம் 20ந் தேதி விஜயம் செய்தார்கள். ஜபல்பூருக்கு அடுத்துள்ள கமேரியாவுக்கு 21ந் தேதி விஜயம் செய்தார்கள். 22,23,24 25 தேதிகளில் ஜபல்பூரில் தங்கி இருந்தார்கள். அப்பொழுது அவர்களுக்கு பிக்ஷை, திரிகால பூஜை முதலியவைகளுக்கு ஏற்பாடுகள் செய்யப் பட்டன. நூற்றுக் கணக்கான மக்கள் வந்து சுவாமிகளைத் தரிசனம் செய்து அவர்களுடைய அருளுக்குப் பாத்திரர்கள் ஆனார்கள்.

22-2-59 ஞாயிற்றுக்கிழமை, பாம்பே காரேஜ் ஸ்ரீ குருஸாமி அய்யர் அவர்களும், எம். பீ. எலக்ட்ரிஸிடி போர்டு ஸ்ரீ சுவாமிநாத அய்யர் அவர்களும் தனித்தனியே பாதபூஜை செய்து ஆச்சாரியாரவர்களை உபசரித்துமகிழ்ந்தனர்.


எங்கள் தைலத்தை நல்ல முறையில் உபயோகித்தால் கூந்தல் நன்கு வளரும். இது உறுதி! அப்படி அது வளராது போனால் அவர்கள் அடியிற்கண்ட விலாசத்துக்கு ரூபாய் 5. அனுப்பி வைத்தால் அவர்கள் தலையிலுள்ள அந்த வழுக்கையை மறைக்க ஒரு பட்டு ஜரிகைக் குல்லாய் உடனே அனுப்பப்படும் !

— ஒரு தைல விளம்பரம்

வீட்டுக்கும் கைத்தொழிலுக்கும் சேவை செய்கின்றன....



பிரபாத் பிரஷர் குக்கிங் ஸ்டவ்கள் வீட்டில் மனைவியின் சமையல் வேலையை எளிதாக்குகின்றன. பிரபாத் லாந்தல்கள் மின்சாரமில்லாத வீடுகளைப் பிரகாசிக்கச் செய்கின்றன. பெரியதொழிற்சாலை, சிறியது ஆகிய இரண்டுக்கும் பிரபாத் புளோ லாம்புகள் இன்றியமையாத தேவையாக இருக்கின்றன. உண்மையில் "பிரபாத் பிராடக்ட்ஸ்" என்ற சொற்றொடர் வீட்டிலும் கைத்தொழிலிலும் பிடிபதமாக விளங்கி வருகிறது





இந்தியாவில் முதன்மையானவை - இன்றும் முதல்தரமானவை

பிரபாத் (ஸ்டவ் & லாம்ப்ஸ்) பிராடக்ட்ஸ் கம்பெனி பிரைவேட் லிமிடெட்

நோபிள் சேம்பர்ஸ், பார்ஸி பஜார் தெரு, போர்ட், பம்பாய்-1

பிரபாத் லைட் & ஸ்டவ் ஏஜன்ஸி, 82, நாராயண முதலித் தெரு, சென்னை-1

K. S. K.


புதுமை பெறுக!
இதம் பெறுக!
நளினமாய் இருங்கள்! நாள்முழுதும்!
மணமுள்ள சார்மிஸ் டால்கம் பௌடர் உபயோகித்த பின் நீங்கள் பெறும் உணர்ச்சிகள் இவை. சார்மிஸ் குளுமையும் புத்துணர்ச்சியும் அளிக்கிறது ... உன்னத மனோ ரம்மிய மணம் கொண்டது.
CHARMIS
சார்மிஸ்
டால்கம் பவுடர்
உன்னத. மனோரம்மிய மணத்துடன்.


கல்கெமிகோவின்
காஸ்டரால்
இனிமையான மணமுடைய விளக்கெண்ணெய்
கூந்தலைச் செழிப்பாக வளரச் செய்கிறது
தி கல்கத்தா கெமிகல் கம்பெனி லிமிடெட்,
கல்கத்தா-29
தென் இந்தியா ஆபீஸ்:
5/149, பிராட்வே, மதராஸ்-1
CAS-IA/58-59 TM

கடல் கறுப்பா நீலமா?

கூடலழகன்



கிழவன் சூசை நடந்து கொண்டிருந்தான். 'சரக்' 'சரக்' என்று நீண்ட காலமாக உழைத்து விட்ட அலுப்பை ஓலமிடுவதுபோல் அவனுடைய கால்களின் பழைய செருப்புக்கள் செம்மண் சாலையின் புழுதியைக் கிளப்பி விட்டன. அத்தனை வயதான பின்பும், வேகம் குறையாமல் துள்ளிப் பாய்கிறாற்போல் அவனுக்கென்று ஒரு நடை வாய்த்திருந்தது.

முழங்காலுக்கு மேல் வரிந்து கட்டிய செம் புழுதி படிந்த வேட்டி. அது இடுப்பிலிருந்து நழுவி விடாமல் பழைய காலத்துப் பாணியில் ஒரு தடிமனான பெல்ட்டு. மார்பில் அழுக்கடைந்த பனியன். கழுத்தில் ஒரு கறுப்புக் கயிற்றில் முடிந்த சிலுவை.

வலது கையில் மார்பளவு உயரத்தில் பூண்பிடித்த கிளுவைக் கம்பு. இடது கையில் ஒரு பெரிய மட்டிப் பழத் தாறு. (மட்டி-நாஞ்சில் நாட்டில் பிரசித்தமான ஒரு வகை வாழைப் பழம்). தலை மேல் துணியில் கட்டிய மூட்டை. ஆசாரிப் பள்ளம் சந்தைக்குப் போய்ச் சாமான் வாங்கிக் கொண்டு ஊர் திரும்பிக் கொண்டிருக்கிறான் அவன்.

குளச்சல் உப்பளத்திலிருந்து உப்பு மூட்டைகளை ஏற்றி வரும் லாரி ஒன்று பிசாசுபோல் பாய்ந்து புழுதியைக் கிளப்பிக் கொண்டு வந்தது. குறுகலான சாலையிலிருந்து கீழே இறங்கி ஒதுங்கிக் கொண்டான் சூசை. லாரி போனதும் அவன் நடை தொடர்ந்தது. நாகர்கோவிலையும் அதன் தென்மேற்குக் கோடியிலுள்ள துறைமுகப் பட்டினமான குளச்சலையும் இணைக்கும் சாலை அது. தென்மேற்கு மூலை தொடங்கிக் கிழக்கு முகமாக நாஞ்சில் நாட்டை வளைத்துக்கொண்டு கிடக்கும் கடற்கரை யோரத்து ஊர்களில் எண்ணற்ற மீனவர்கள் வாழ்ந்து வருகின்றனர். சூசையும் அவர்களில் ஒருவன். அவனுக்கு ஊர் மணவாளக் குறிச்சிக்கு அருகில் கடியபட்டினம்.

கிழவன் சூசை தனிக் கட்டை.. பட்ட காலிலேயே படும், கெட்ட குடியே கெடும் என்பது போல் அந்த ஐம்பத்தாறு வயதுக்குள் எத்தனையோ துன்பங்களுக்கு ஈடு கொடுத்துவிட்டது அவன் வாழ்க்கை.

சகரியாஸ் பாதிரியாரின் ஆறுதலான அறிவுரைகளும், ஆதரவும் பேரப்பிள்ளை யாண்டான் என்ற அந்த ஒரு கடைசிக் குலக் கொழுந்தும் இல்லையானால் சூசை இதற்குள் என்றைக்கோ உயிரை விட்டிருப்பான்.

சூசைக்கும் மரியாளுக்கும் திருமணம்நடந்தபோது அவனுக்கு இருபத்தெட்டு வயது. மூன்று வருடங்களில் மரியாள் ஒரு பெண் குழந்தையைப் பெற்று விட்டுப் போய்ச் சேர்ந்தான். அந்தப் பேரிடியைத் தாங்கிக் கொண்டும் வாழ முடிந்தது அவனால். எத்தனையோ பேர் பெண் கொடுக்க முன் வந்தார்கள். சகரியாஸ் பாதிரியார்கூட அவனை வற்புறுத்தினார். அவன் மீண்டும்

மணம் செய்துகொள்ளக் கண்டிப்பாக மறுத்து விட்டான். பெண் குழந்தையைக் கொஞ்ச நாள் தானே வைத்துக் கொண்டிருந்தான். பச்சைக் குழந்தையை வைத்துக் கொண்டு தனி ஆண்பிள்ளையால் பேணிக் காக்க முடியவில்லை. வீட்டிலேயே அடைத்துக் கிடந்தால் வயிற்றுப் பாட்டுக்குத் தொழிலைக் கவனிக்க வேண்டுமே. காலையில் கிழக்கு வெளுக்கும் போது கட்டு மரத்தில் கிளம்பினால் அந்தி மயங்கும் நேரத்துக்குத் திரும்புகிறவன் குழந்தைக்காக வீட்டிலேயே இருக்க முடியவில்லை.

ஆசை அழுது கொண்டே சகரியாஸ் பாதிரியாரிடம் முறையிட்டான். அவர் மதச் சலுகையை வைத்துக் குழந்தையைப் பாளையங்கோட்டையிலுள்ள அருள் மரியன்னை சிறுவர் விடுதியில் சேர்க்க ஏற்பாடு செய்தார். ஆசைக்குக் குழந்தையைப் பற்றிய கவலை விட்டது. அதன் பின் பதினைந்து வருடங்கள் குழந்தை பாளையங் கோட்டையிலேயே வளர்ந்து படித்துப் பெரியவளானாள். ஆசை இரண்டு மாதத்துக் கொருதரம், மூன்று மாதத்துக் கொருதரம் பாளையங்கோட்டை போய்ப் பெண்ணைப் பார்த்து விட்டுக் கடிய பட்டினம் திரும்புவான்.

எல்லாம் சகரியாஸ் பாதிரியாரின் கருணை. அவர் இல்லாவிட்டால் அவனால் தன் பெண் குழந்தையை இப்படி வளர்த்திருக்கமுடியாது. சீவரட்சகரான கர்த்தர் எத்தனையோ பேர்களுடைய துன்பங்களைத் தாங்கிக் கொண்டு சிலுவையில் அறைபட்டது போல் பலருடைய துன்பங்களைத் தாம் தாங்கி அவற்றில் தம்மைத் தாமாகவே அறைந்து கொண்டு வாழ்ந்து வரும் உபகாரி அவர்.

ரோஸி - அதுதான் ஆசை தன் பெண்ணுக்கு இட்டிருந்த பெயர் - அவளுக்குப் பதினைந்து வயதாகியபோது எஸ். எஸ். எல். ஸி. பாஸ் செய்திருந்தாள். அதற்கு மேலும் அவளைப் படிக்க விட விருப்பமில்லை ஆசைக்கு.

உள்ளூரில் உறவு முறைக்குள் யாராவது ஒரு மீனவப் பையனுக்குக் கட்டிக் கொடுத்துப் பெண்ணை வீட்டோடு வைத்துக் கொண்டால் வயதான காலத்தில் நிம்மதியாக இருக்குமென்று தோன்றியது.

சகரியாஸ் பாதிரியாரிடம் போய்த் தன் விருப்பத்தைக் கூறிக் கலந்தாலோசித்தான்.

பாதிரியார் சிரித்தார். ''ஆசை! படித்த பெண்ணை இங்கே கூட்டிக் கொண்டு வந்து இந்தப் பட்டிக்காட்டுக்குள் எவனாவது ஒரு கையெழுத்துப் போடத் தெரியாத பையனுக்குக் கட்டிக் கொடுத்துக் கெடுக்க வேண்டாம். நீ கவலைப்படாமல் இரு. பாளையங்கோட்டையிலேயே அவளுக்குத் தகுதியான கணவனை நான் தேர்ந்தெடுக்கிறேன்'' என்று கூறினார். அவருடைய வார்த்தையை ஆசையால் மீற முடியவில்லை. மறு மாதமே பாளையங் கோட்டையில் ஆசிரியர் வேலை பார்த்துக் கொண்டிருந்த ஒரு அழகிய வாலிபனை ரோஸிக்கு மணமகனாகப் பேசி முடிவு செய்தார் பாதிரியார். ஆசையும் சம்மதித்தான். திருமணம் கூடப் பாளையங்கோட்டைச் சர்ச்சிலே தான் நடைபெற்றது. ஆசை யாரோ மூன்றாவது மனிதன் போய்விட்டு வருவது போல் பாதிரியாரோடு பாளையங்கோட்டைக்குப் போய்விட்டு வந்தான்.

தன் பெண் நினைவு தெரிந்த பின் ஒரு தடவையாவது ஊருக்கு வந்து போகவில்லையே என்று நெடுநாளாக ஒரு ஏக்கம் ஆசைக்கு இருந்தது. திருமணம் ஆனபின்பாவது பெண்ணையும், மாப்பிள்ளையையும் சேர்த்து ஒரு தடவை மறு வீடு அழைத்துவிட வேண்டுமென்று அவன் தீர்மானித்திருந்தான். ஆனால் மாப்பிள்ளை அவனுடைய அந்தக் குக்கிராமத்துக்கு வர இணங்கவில்லை. தன் பெண் தனக்கு எட்டாத ஊரில் குடித்தனம் நடத்துகிறாள் என்று நினைக்கும்போது அவனுக்கு வேதனையாக இருந்தது. முன்பு சோற்றுக்கும், துணிக்கும், படிப்புக்கும், பேணுதலுக்குமாகப் பாளையங்கோட்டையில் இருந்தாள். இப்போது கணவனோடு கணவன் வீட்டில் இருக்கிறாள். ஆசையைப் பொறுத்த மட்டில் இரண்டுக்கும் அதிக வித்தியாசம் இருப்பதாகத் தெரியவில்லை.

எப்படியானால் என்ன? எங்கே இருந்தால் என்ன? ரோஸி அவனுடைய பெண். அந்த ஒரே பெருமையோடு அந்தக் கடற்கரையோரத்துப் பட்டிக்காட்டில் உயிரை வைத்துக் கொண்டிருந்தான் அவன்.

ஆசை சகரியாஸ் பாதிரியாரிடம் அடிக்கொருதரம் தன் மகளை ஊருக்கு 'மறுவீடு' அழைக்க வேண்டுமென்று உருக்கமாக வேண்டிக் கொள்வான். சகரியாஸ் பாதிரியார் அந்தப் பட்டிக்காட்டு மீனவனின் பேதைமை மிக்க பாச வுணர்வைக் கண்டு தமக்குள் சிரித்துக் கொள்வார்.

ஒருமுறை ரோஸி ஊர் போவது பற்றித் தன் கணவனிடம் பிரஸ்தாபித்தாள். ஆசையின் மாப்பிள்ளைக்கோ கிழவனைக் கண்டாலே அருவருப்பு.

''இந்தச் செம்படவக் கிழவனுக்காக உன்னை நான் கலியாணம் செய்து கொள்ளவில்லை, ரோஸி! ஏதோ சகரியாஸ் பாதிரியார் எனக்கு வேண்டியவர் என்பதற்காக இது நடந்தது. அடிக்கடி அந்தக் கிழவனை இங்கே வந்து ஊருக்குக் கூப்பிட்டுத் தொந்தரவு செய்யச் சொல்லாதே. அவன் இங்கே வந்து போவதே எனக்கு அவமானமாக இருக்கிறது. பாளையங்கோட்டையில் தெரு பெருக்குகிற தோட்டி கூட அந்தக் கிழவனை விட நன்றாகச் சுத்தமாக உடுத்திக் கொண்டிருப்பான்'' என்று ரோஸியிடம் கடுமையாகச் சினந்து கொண்டான் அவள் கணவன். ரோஸிக்கு அந்த வார்த்தைகளைக் கேட்கும்போது தாங்க முடியாத வருத்தம்தான் ஏற்பட்டது. வருந்தி என்ன செய்வது? அதற்காகக் கணவனைப் பகைத்துக் கொள்ள முடியுமா? ஊர் போவதைப் பற்றியும், தந்தையைப் பற்றியும் அன்றிலிருந்து தன் கணவனிடம் பேச்சு எடுப்பதையே விட்டுவிட்டாள் ரோஸி.

அவள் வயிறும், மாதமுமாகப் பேறு காலத்திற்குத் தயாரானாள். கடிதம் எழுத வேண்டிய முறைக்காகத் தந்தைக்கு ஒரு வரி எழுதிக் கணவனுக்குத் தெரியாமல் அதைத் தபாலில் சேர்த்தாள். ஆசைக்கு வருகிற கடிதத்தையெல்லாம் சகரியாஸ் பாதிரியார்தான் அவனுக்குப் படித்துக் காண்பிப்பார். ரோஸியின் கடிதத்தையும் அவர்தான் படித்துக் காண்பித்தார். ஆசைக்குத்தான் எழுதப் படிக்கத் தெரியாதே.

'' ஐயா ! இப்போதே புறப்படுங்கள். பாளையங்கோட்டைக்கு இரண்டு பேருமாகப் போவோம். நீங்களும் கூட வந்தால் மாப்பிள்ளை ரோஸியை அனுப்ப மறுக்க மாட்டார். கட்டாயம் பேறு காலத்துக்கு அவளைப் பிறந்த வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு வந்து விட வேண்டும்'' - அவன் பாதிரியாரைக் கெஞ்சினான். ரோஸியின் கணவனுடைய இயல்பை நன்கு அறிந்திருந்தார் சகரியாஸ் பாதிரியார். ஆனால் அதைச் சூசையிடம் சொல்லிக் கள்ளங் கபடமற்ற அவன் மனத்தைப் புண்படுத்த விரும்பவில்லை அவர்.

'சூசை ! நன்றாக யோசித்துப் பார். இந்தப் பட்டிக் காட்டில் உன் பெண்ணைப் பேறு காலத்துக்குக் கூட்டிக் கொண்டு வந்து வைத்துக் கொள்வதால் என்ன நன்மை? ஒரு மருந்தா? ஒரு டாக்டரா? உன் வீட்டில் உன்னைத் தவிர ஒத்தாசைக்கு வேறு பெண் பிள்ளைகூடக் கிடையாதே! பேசாமல் பாளையங் கோட்டையிலேயே இருந்து விட்டுப் போகட்டும். குழந்தை பிறந்து எல்லாம் நல்லபடியாக முடிந்தபின் இரண்டு மூன்று மாதங்கள் கழித்து ஒருதரம் எல்லாருமே குடும்பத்தோடு இங்கு வந்து விட்டுப் போக ஏற்பாடு செய்கின்றேன்.''

சகரியாஸ் பாதிரியார் அவனைச் சமாதானப்படுத்தினார். சூசை திருப்தியோடு அதை ஒப்புக் கொண்டான்.

மறுமுறை பாளையங்கோட்டைக்குப் போன போது சகரியாஸ் பாதிரியார் ரோஸியின் கணவனைச் சந்தித்து'' தம்பீ! விசுவாசம்...அந்தப் பக்கம் வா நான் இருக்கிற பக்கமெல்லாம் நீ வந்து பார்க்க வேண்டாமா? அழகிய கடற்கரையோரத்துப் பிரதேசம் அது. குளச்சல் துறைமுகம், உப்பளம் மணவாளக் குறிச்சியில் அணுமணல் தோரியம் உலோகத் தொழிற்சாலை இதெல்லாம் நீ அவசியம் சுற்றிப் பார்க்க வேண்டிய இடங்கள் அப்பா. அந்தக் கிழவன் சூசைக்காக வராவிட்டாலும் எனக்காகவாவது ஒரு முறை குடும்பத்தோடு வா'' என்று அழைத்தார். அவனும் ஒரு மாதிரி வர ஒப்புக் கொண்டான். குழந்தை பிறந்ததும் கடிதம் போடுமாறு சொல்லி விட்டுத் திரும்பினார் பாதிரியார்.

பத்துப் பன்னிரண்டு நாட்கள் கழிந்தன. பாளையங் கோட்டையிலிருந்து கடிதம் வரவில்லை. தந்தி பறந்து கொண்டு வந்தது. சகரியாஸ் பாதிரியார் தந்தியை வாங்கிப் படித்தார். கண்களை மூடித் தியானித்துச் சிலுவையை நெற்றிவரை கொண்டு போனார். அந்தச் செய்தியைச் சூசையிடம் எப்படிச் சொல்வதென்று தயங்கினார். அவன் ஏற்கனவே நொந்து போய்க் கிடக்கிறான்.

''ரோஸி இறந்துவிட்டாள். ஆண் குழந்தை பிறந்து சுகமாக இருக்கிறது.'' இதுதான் தந்தியின் வாசகம். நீண்ட ஆறுதலுரைக்குப் பின் சர்ச்சுக்கு அழைத்துப் போய்ப் பிரார்த்தனையும் முடித்துக் கொடுத்து அவனிடம் தந்தியை விளக்கினார். கிழவன் தலையிலடித்துக் கொண்டு கதறியழுதான். அவனைத் தேற்றிப் பாளையங்கோட்டைக்கு அழைத்துக் கொண்டு வந்தார் பாதிரியார். அவர்கள் வருவதற்கும் முன்பே ரோஸியின் சவ அடக்கம் முடிந்து விட்டது.



தான் மறுபடியும் வேறு திருமணம் செய்து கொள்ளப் போவதாகச் சகரியாஸ் பாதிரியாரிடம் வெளிப்படையாகவே கூறி விட்டான் மாப்பிள்ளைப் பையன். பாதிரியார் அவனிடமிருந்து குழந்தையை வாங்கிக் கொண்டார். குழந்தை சூசையின் பொறுப்பில் வந்தது.

பின்பென்ன? பழைய கதைதான். பாதிரியாருடைய தயவில் பாளையங்கோட்டை விடுதியில் பேரக் குழந்தையைச் சேர்த்தான் சூசை. பேரன் வளர்ந்து கொண்டு வந்தான். சூசையும் அடிக்கடி போய்ப் பார்த்துக் கொண்டிருந்தான். தன் பேரனை வளர்த்துப் பெரியவனாக்கித் தனது தொழிலின் வாரிசாகக் கொண்டு வந்து ஊரில் ஊன்றிவிட வேண்டும் என்று சூசையின் உள்ளத்தில் தணியாத ஆசை. பட்டுப் பட்டு நொந்து போன அவனுக்கு ஒரே நம்பிக்கை அந்தப் பேரன் உருவில் இருந்தது. தலைமுறை தலைமுறையாகக் கடலை ஆண்டு வாழும் தன் பரம்பரை தன்னோடு அற்றுப் போய்விடக் கூடாதே என்று அவனுக்குக் கவலை.

பத்துக் கட்டு மரங்கள். மூன்று பாய்மரத் தோணி. இரண்டு வள்ளம், ஏழு வலை. இவ்வளவும் சூசையின் சொத்து.

''பேரப் பிள்ளையை அதிகம் படிக்க வைக்கப்படாது. நிறையப் படித்துத் தெரிந்துகொண்டால் அப்புறம் பட்டிக்காட்டு ஊருக்கு வரமாட்டேன் என்று முரண்டு பிடிப்பான். நம் தொழிலுக்கும் மனம் இணங்காது. பத்துப் பன்னிரண்டு வயதுக்குள் படித்தது போதும் என்று பாதிரியாரிடம் சொல்லி ஊருக்குக் கூட்டிக் கொண்டு வந்து விடவேண்டும். அப்புறம் இரண்டு மூன்று மாதம் கூடவே கூட்டிக் கொண்டு போய்த் தொழில் பழக்கிவிட வேண்டும்.'' ஒரு நாள் நடுக்கடலில் வலையைச் சரியாக வீசாமல் தவற விட்டு விட்டதற்காகச் சூசையைச் சிறு வயதில் அவன் தந்தை முதுகை உரித்து விட்டார்.

'' சே ! சே ! பேரப்பிள்ளையை நான் அப்படியெல்லாம் அடிக்கக் கூடாது. தாயில்லாத பயல். அரட்டல் மிரட்டலிலேயே எல்லாம் சொல்லிக் கொடுத்து விட வேண்டும். பயல் பிறந்ததிலிருந்து சமுத்திரத்தையே பார்க்கவில்லை. பயத்தைப் போக்கிக் கடலுக்குள் கூட்டிக் கொண்டு போவதே மிகவும் கஷ்டமாயிருக்கும்.''

'' தாத்தா ! யோசனை பலமோ? பராக்குப் பார்த்துக் கொண்டே நடக்கிறீர்களே ?''

நடந்து கொண்டிருந்த கிழவன் சூசை சிந்தனையிலிருந்து விடுபட்டுத் திரும்பிப் பார்த்



'' அதோ போகிறாரே அவர் ஒன்றுமில்லாததற்கெல்லாம் ரொம்பப் பதட்டமடைந்து பேசி ஒரேயடியாக அலட்டிக் கொண்டு விடுவார்!''

'' யார் அவர்?''

'' கிரிக்கெட் கமெண்டேட்டர்!''

தான். பின்னால் ஆரோக்கியம் வேகமாக வந்து கொண்டிருந்தான்.

'' வா அப்பா, ஆரோக்கியம்! நீயும் ஊருக்குத்தானே வருகிறாய்?''

'' வேறெங்கே போக்கிடம்?'' என்று ஆரோக்கியம் அலுத்துக் கொள்வது போல் பதிலளித்தான்.

'' ஏதேது? மட்டிப் பழமெல்லாம் வாங்கிக் கொண்டு போவதைப் பார்த்தால் பேரப் பிள்ளையைப் பார்க்கப் போறீங்க போலத் தோணுது.''

'' ஆமாம் அப்பா! இந்த டானியல் பயல் வலை இரவல் வாங்கிக் கொண்டு போனான். நாலு நாளாச்சு. திருப்பித் தரலே. அதை வாங்கி வைத்து விட்டுச் சாயங்காலப் பஸ்ஸில் புறப்படணும்'' என்றான் ஆசை.

''டானியல் அண்ணாச்சி இரவல் வாங்காத ஆளு இந்த வட்டாரத்திலேயே கிடையாது, தாத்தா. இரண்டு வாரங்களுக்கு முன்னாலே என்கிட்டக் கட்டு மரம் கொடுன்னு இரவல் வாங்கிட்டுப் போனான். எங்கேயோ பாறையிலே மோதிச் சேரழிச்சுத் திருப்பிக் கொடுத்தான்.

'' உதவாக்கரைப் பயல்! இவனுக்கு இரவல் கொடுத்துக் கெட்டுப் போக நமக்கென்ன பிள்ளையில்லாச் சொத்தா பாழ் போகுது? நாளைக்குப் பேரப் பிள்ளையாண்டான் வந்து சேர்ந்திட்டால் வலையும், கட்டு மரமும் எங்கே என்று கேட்பானே?''

'' உங்க பேரனை ஊருக்குக் கூட்டிக் கொண்டு வரப் போறீங்களா தாத்தா?''

'' அட இன்னிக்கில்லாட்டாலும் என்றாவது ஒரு நாள் என் தொழில் நசித்துப் போகாமல் அவன்தானே ஏற்றுக் கொள்ளணும்? ஊரை மறந்து வமிசத் தொழிலை மறந்து பயலை வெள்ளை வேட்டிக்காரனாகச் சுத்த விடற எண்ணம் எனக்கில்லே. கொஞ்சம் படிச்சதும் நிறுத்திப்பிட்டு ஊருக்குக் கூட்டியாந்திடணும்னு இருக்கேன்.''

''சகரியாஸ் பாதிரியாரு அதுக்குச் சம்மதிப்பாரா தாத்தா?''

'' அவரு சம்மதிக்கிறாரு; சம்மதிக்கலே; அதைப் பார்த்தா முடியுமா? என் மனசிலே பட்டதைச் செய்யப் போறேன்.''

ஆரோக்கியம் பேசாமல் நடந்தான். ஊர் அருகில் வந்து விட்டார்கள் இருவரும்.

கடற்கரையில் யாரோ வற்புறுத்திக் கட்டித் தொங்க விட்டிருப்பது போல் அமைந்திருந்தது கடிய பட்டினம் ஊர். உயர்ந்தும் தாழ்ந்தும் கடலை ஒட்டினாற் போல் தென்பட்ட பாறைகளின் இடையே சிறுசிறு குடிசைகள், சில ஓட்டடுக்கு வீடுகள், ஒன்றிரண்டு காரைக் கட்டிடங்கள் தெரிந்தன. சாலைகளோ தெருவோ அமைக்க முடியாத ஊர். அரக்கனுக்குப் பல் முளைத்த மாதிரிப் பாறைகளில் எப்படிச் சாலை அமைப்பது?

போகிற வழியில் சகரியாஸ் பாதிரியாரைச் சர்ச்சில் சந்தித்தான் ஆசை.

'' ஆசை! உன் பேரப்பிள்ளை என் பெயருக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறான் அப்பா!''

'' என்ன எழுதியிருக்கிறான் ஐயா! படியுங்கள். கேட்கிறேன்.''

''வேறொன்றுமில்லை. அவனுக்குச் சமுத்திரத்தைப் பார்க்க ஆசையாக இருக்கிறதாம். சமுத்திரம் எவ்வளவு பெரிசாயிருக்கும்; எவ்வளவு ஆழமாயிருக்கும்; என்ன நிறமாயிருக்கும் என்றெல்லாம்கேட்டு எழுதியிருக்கிறான்.''

'' நானே இன்று மாலை பாளையங்கோட்டை போகலாம் என்றிருக்கிறேன் ஐயா!''

''ஏது? திடீரென்று புறப்பட்டு விட்டாய்?''

'' ஒன்றுமில்லை! பயலைப் பார்த்து வெகு நாட்களாயிற்று.''

'' போய் வா. ஆனால் படிப்பைக் கெடுத்து விட்டுச் சமுத்திரம் பார்க்க ஆசைப்பட்டான் என்று கையோடு இங்கே கூட்டிக் கொண்டு வந்து விடாதே. விடுமுறையின் போது வந்தால் போதும்.''

''இந்த வருட விடுமுறையின் போது பையனை இங்கே கூட்டி வந்தால் அப்படியே ஊரோடு வைத்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன் ஐயா! இனிமேல் அவனுக்குப் படிப்பு எதற்கு? தொழிலைப் பழக்கி விட்டால் எனக்குக் கவலை இல்லை.''


ஆசை பாதிரியாரிடம் தன் நோக்கத்தைக் கூறினான்.

''அதைப் பற்றிப் பின்னால் யோசித்துக் கொள்ளலாம். இப்போதைக்கு நீ போய்ப் பார்த்து விட்டு வா.''

சகரியாஸ் பாதிரியார் சிரித்துக் கொண்டே கூறினார். ஆசை பெருமூச்சு விட்டான்.

டானியலுக்கு இரவல் கொடுத்திருந்த வலையைத் திரும்ப வாங்கிப் பத்திரமாகக் குடிசைக்குள் வைத்துப் பூட்டி விட்டுச் ஆசை புறப்படும் போது மாலை மூன்று மணிக்கு மேல் ஆகி விட்டது. நாகர் கோவிலுக்கு வந்து வேறு பஸ் மாறிப் பாளையங்கோட்டையை அடைந்த போது இரவு ஒன்பது மணி.

விடுதியில் பேரப் பிள்ளையாண்டான் தூங்கிப் போயிருந்தான். அவன் தூக்கத்தைக் கெடுத்து எழுப்பித் தன் வரவைப் புலப்படுத்தச் ஆசைக்குவிருப்பமில்லை. மட்டிப்பழம்கொண்டு வந்திருக்கிறேனென்பது தெரிந்தால் பயல் இப்போதே எழுந்து விடுவான். அந்தவாழைப் பழத்தின் மேல் பையனுக்கு அத்தனை ஆசை!





சக்தி சில்குகளை உபயோகித்து
விசேஷ தினங்களை
கொண்டாடுங்கள்

சக்தி சில்குகள்

ஓர் போதார் தயாரிப்பு

ஜார்ஜட் . க்ரேப்ஸ் . ஸாட்டின் . டபேடா . நைலான்

முதலிய ரகங்கள் கிடைக்கும்.

ஸ்ரீ சக்தி மில்ஸ் லிமிடெட், பம்பாய்

சூசையும் அங்கேயே விடுதி யின் ஒரு பகுதியில் படுத்துக் கொண்டு இரவைக் கழித் தான்.

பொழுது விடிந்தது. பைய னுக்குத் தாத்தாவைப் பார்த் ததில் மகிழ்ச்சி பிடிபடவில்லை. மட்டிப் பழத்தை ஆவல் தீரச் சாப்பிட்டான்.

'' தாத்தா ! நான் எப்ப சமுத்திரம் பார்க்கிறது ? நீ என்னைக் கூட்டிக் கொண்டு போய்க் காட்ட மாட்டியா?'' என்று பையன் கேட்டபோது அப்போதே அவனைக் கூட்டிக் கொண்டு போய்ச் சமுத்திரத் தைக் காட்டிவிட வேண்டும் போல் ஆசை துடித்தது சூசைக்கு. சகரியாஸ் பாதிரி யார் என்ன சொல்வாரோ என்று பயந்து ஆசையை அடக் கிக் கொண்டான்.

'' தாத்தா சமுத்திரம் எவ் வளவு பெரிசா இருக்கும் ?''

'' ரொம்பப் பெரிசா இருக் கும் கண்ணு !''

'' தாமிரபருணி நதியைப் போலவா ?''

''இல்லேடா அதெல்லாம் விடப் பெரிசு''

''நயினுகுளம் போலவா ?''



திரு எஸ். சாம்பமூர்த்தி சாஸ் திரிகளின் சஷ்டியப்த பூர்த்தி சமீபத்தில் வெகு விமரிசை யாக நடைபெற்றது.

''படிப்பை நிறுத்திட்டால் சகரியாஸ் தாத்தா கோபிக்க மாட்டாங்களா ?''

''மாட்டாங்க...!''

'' அப்படியானால் சரி தாத்தா !''

''ஊருக்கு வரவரைக்கும் சமர்த்தாப் படிச்சிட்டிருக் கணும். கண்ணு!''

''அங்கே வந்தா தினந் தினம் சமுத்திரத்தைப்பார்க்க லாமில்லியா தாத்தா ?''

''நிறையப் பார்க்கலாம்.''

சூசை சிரித்துக் கொண் டான். ''ஏண்டா! நீ பாதிரி யாருக்குக் கடிதாக எழுதி னியா ?''

பையன் தலையைக் குனிந்து கொண்டு பதில் சொன்னான் : ''ஆமாம்! சமுத்திரம் பார்க்க ஆசையா யிருக்குதுன்னு கடி தாக எழுதினேன்.''

''எனக்கு எழுதப் படாதா நீ? அவருக்கு எதற்கு எழுதி னாய் ?''—

சிறுவன் மௌனம் சாதித் தான். அன்று மாலை சூசை ஊருக்குப் புறப்படும் போது பேரப் பிள்ளை தாத்தாவிடம் மறுபடியும் சமுத்திரத்தைப் பற்றிப் பேச்சை எடுத்தான்.

''ஊஹூம் ! எல்லாத்தையும் விடப் பெரிசு ?'' சிறுவன் தான் காணாத சமுத்திரத் தைத் தான் கண்ட ஆறு குளங்களை வைத்து அனுமானிக்க முயன்றான்.

''நீ சமுத்திரத்துலே ரொம்பதூரம் போய் மீன் பிடிப்பியாமே தாத்தா? உனக்குப் பயமா யிருக்காதா ?''

''பழகினப் பயமாயிருக்காது. உனக்குக் கூட வந்துவிடும். நீயும் நாளைக்கு அதெல்லாம் பழகிக்கணும்.''

''ஐயையோ! நான் மாட்டேன் தாத்தா. சுறா மீன், முதலை, திமிங்கிலம், எல்லாம் கடலில் இருக்கும்னு பாடப் புத்தகத்திலே போட்டிருக்கே ?''

''இருந்தா என்ன? அவை நம்மை ஒண் ணும் பண்ணாது.''

கடலைப் பூமியாக வைத்துக் கொண்டு பிழைக்க வேண்டிய சிறுவன் பிறந்த நாளி லிருந்து கடலையே பார்க்காமல் வளர்ந்து விட் டானே என்று ஏங்கினான் சூசை.

''இந்த வருசம் லீவிலே உன்னைக் கட்டாயம் ஊருக்குக் கூட்டிக்கிட்டுப் போறேன். அப்ப கடலைப் பார்க்கலாம். என்கூடக் கட்டு மரத்திலே உட்கார்ந்து கடலுக்குள்ளேயே நீ வரலாம். எல்லாம் பழக்கிக் கொடுத்திடு வேன் உனக்கு.''

''அப்புறம் இங்கே படிக்கவே வரவேண் டாமா தாத்தா ?''

''எதுக்கு வரணும் ராசா? நான்தான் உனக் காக நிறையக் கட்டுமரம், வலை, எல்லாம் சேர்த்து வைத்திருக்கிறேனே ?''

''தாத்தா ! சமுத்திரம் நீல நெறம்னு பாடத்திலெல்லாம் சொல்லிக் கொடுக்கிறாங்க. ஆனா ஜியாகரபி புத்தகத்தில் சமுத்திரத்தின் படம் பார்த்தா ஒரே கறுப்பா இருக்குது ?''

''போட்டோவிலே கறுப்பாத்தான் விழுந் திருக்கும். நேரிலே பார்த்தால் நீலமாக இருக்கும்.''

''அது ஏன் தாத்தா நீலமா இருக்கிற சமுத் திரம் போட்டோவிலே மாத்திரம் கறுப்பா விழணும்?'' சூசை பதில் கூறத் தெரியாமல் விழித்தான்.

''எனக்குத் தெரியாதுடா தங்கம் ! நான் அதெல்லாம் படிக்கலே. உங்க வாத்தியாரையே கேட்டுத் தெரிஞ்சுக்க'' என்று பதில் சொல்லித் தப்பித்துக் கொண்டான் சூசை.

''பயலுக்கு மூளைக்கூர் நிறைய இருக்குது. தொளைச்சுத் தொளைச்சில்ல கேள்வி கேட் கிறான்?'' என்று மனத்துக்குள் பேரப் பிள்ளை யின் அறிவை மெச்சிக் கொண்டான் சூசை. அடுத்த முறை வரும் போது சமுத்திரம் பார்க்க அழைத்துப் போவதாகப் பையனுக்கு உறுதிமொழி கொடுத்து விட்டுக் கிழவன் ஊர் திரும்பினான்.

திரும்பும்போதுதான் அந்தக் கிழவனின் மனத்தில் எத்தனை எதிர்காலக் கனவுகள் ? அவனுடைய பேரன் கடலில் கட்டுமரம் செலுத்திச் செல்வதாகவும், வலை வீசுவதாக வும், திரும்பத் திரும்ப எண்ணிப் பார்த்து மகிழ்ந்தது அவன் மனம்.

சில மாதங்கள் கழிந்தன. எந்த வருடமும் இல்லாத கோடை மழை அந்த வருடம் திருநெல்வேலியில் வெளுத்து வாங்கியது.

''இவரைத் தெரியுமோ உங்களுக்கு? புள்ளி விவரம் எடுக்கறதிலே இவர் ஒரு பெரிய புள்ளியாக்கும்!



இடியும், மின்னலும் தினம் ஒரு கட்டடத்தையோ, மரத்தையோ பலி வாங்கிக் கொண்டிருந்தன.

பாளையங்கோட்டையில் சிறுவர் விடுதி இருந்த பகுதியில் மாமரங்கள் அதிகம். சாயங்கால வேளையில் சிறுவர்கள் மாமரத்தடியில் விளையாடிப் பொழுது போக்குவது வழக்கம். மரக்குரங்கு, பச்சைக் குதிரை என்று அவரவர்களுக்குப் பிடித்தமான விளையாட்டுக்களை விளையாடுவார்கள். மாமரங்கள் தணிவாகப் படர்ந்து வளர்ந்திருந்தன. அவை விளையாட ஏற்ற நிலையிலிருந்தன.

அன்றொரு நாள் மாலை ஆசையின் பேரனும், இன்னும் நாலைந்து பையன்களுமாக ஒதுக்குப் புறத்தில் இருந்த ஒரு தணிவான மாமரத்தில் மரக்குரங்கு விளையாட்டு விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

விளையாட்டில் பிடிக்க வேண்டிய கட்சிப் பையன்கள் கீழே இருந்து பிடிக்க வேண்டும். பிடிபட வேண்டிய கட்சியார் மரக்கிளைகளில் ஒளிந்திருப்பார்கள். ஆசையின் பேரன் பிடிபட வேண்டிய கட்சி. மரத்தின் உச்சிக்கிளையொன்றில் ஏறி ஒளிந்து கொண்டிருந்தான் அவன். விளையாட்டு, கெடுபிடியாக நடந்து கொண்டிருந்தது.

அண்டமுகடு தகிடு பொடியாகி விடுவது போல் ஒரு பேரிடி. அடுத்த கணம் கோபம் கொண்ட வாத்தியார் கரும்பலகையில் சாக்பீஸால் கோடு கிழிப்பது போல் பளீரென்று வானில் ஒரு மின்னல் தெளிந்தது. மேலே பார்த்துக் கொண்டு மரக் கிளையில் உட்கார்ந்திருந்த ஆசையின் பேரனுடைய கண்களுக்குள் நெருப்புப் பாய்ந்த மாதிரி ஒரு அதிர்ச்சி பரவியது. 'வீல்' என்று அலறிக் கொண்டே மரக் கிளையிலிருந்து சுருண்டு கீழே விழுந்தான் பையன். கையிலும் காலிலும், உடம்பிலும் மரத்தில் சிராய்த்துக் காயங்கள் பட்டிருந்தன.

மற்றச் சிறுவர்கள் அரண்டு ஓடிப் போய் விடுதி வார்டனிடம் கூறினார்கள். வார்டனும், மற்றவர்களும் ஓடி வந்து ஆசையின் பேரனைத் தூக்கிக் கொண்டு போனார்கள்.

மூர்ச்சை தெளிவித்ததும் விடுதி டாக்டர் வந்தார். பையனைப் பரிசோதித்தார். வார்டனைத் தனியாக அழைத்துப் போய், ''பையனுக்கு மின்னலில் கண் பார்வை போய் விட்டது'' என்று கூறினார் டாக்டர். ஆசைக்கும், சகரியாஸ் பாதிரியாருக்கும், செய்தியை அனுப்பினார் வார்டன். அந்தச் சிறுவனுக்கு மட்டும் தனக்கு என்ன ஆயிற்று என்பதே விளங்கவில்லை. 'மரத்திலிருந்து கீழே விழுந்து விட்டோம்' என்பதை மட்டுமே அவன் உணர்ந்திருந்தான். சீக்கிரமே தனக்குக் கண் பார்வை வந்து விடும் என்ற நம்பிக்கையும் அவனுக்கு இருந்தது.

''எனக்கு எப்போது சார் கண் பார்க்க வரும்?'' என்று அவன் வார்டனிடம் கேட்ட போது கூட அவர், ''உனக்குக் கூடிய சீக்கிரம் கண் வந்து விடும் தம்பி! கவலைப் படாதே'' என்று உறுதியாகப் பதில் சொல்லியிருந்தார். பையன் ஏமாற்றமடைந்து விடாமல் அவனைக் காக்கவே அவர் அப்படிப் பொய் சொல்லியிருந்தார். ஆனால் சிறுபையன்...பாவம்! அதை உண்மைதான் என்றே நம்பிக் கொண்டிருந்தான்.

ஆசையும், சகரியாஸ் பாதிரியாரும், பாளையங்கோட்டைக்கு ஓடோடி வந்தார்கள். டாக்டரும், வார்டனும் முன்னெச்சரிக்கையாக அவர்கள் இருவரிடமும், ''சிறு பையனாக இருப்பதால் கூடிய வரையில் 'அவன் குருடனாகப் போய் விட்டானென்ற' உண்மையை அவனுக்குத் தெரிய விடாமல் கொஞ்ச நாளைக்கு மறைத்து வைத்துக் கொண்டே பழகுங்கள். அவனுக்கு முன்பே அழுதோ கதறியோ உண்மையைக் கூறி மனம் ஒடித்து போகும்படி செய்துவிடக் கூடாது''— என்று சொல்லியிருந்தார்கள்.

ஆசையும், பாதிரியாரும் அப்படியே நடந்து கொள்ள அவர்களிடம் ஒப்புக்கொண்டனர்.

பையனை விடுதியிலிருந்து ஆசையோடு அனுப்பி விட்டார்கள்.

ஆசை பையனைப் பாளையங் கோட்டையிலிருந்து ஊருக்கு அழைத்து வரும் போது பஸ்ஸில் அவன் தாத்தாவைக் கேட்டான்:

''தாத்தா! எனக்குக் கண் வந்ததும் சமுத்திரம் பார்க்கணும். ஜியாகரபி புத்தகக்காரன் கடலைக் கறுப்பாய்ப் போட்டிருக்கான். அசல் நீல நெறக் கடலை நான் பார்க்கணும்!''

கிழவன் ஆசை சிறுவனுக்கு என்ன பதில் கூறுவான்? வெடித்துப் பொங்கி வந்த அழுகையை அடக்கிக் கொண்டான். பாதிரியார் அவன் அழுது விடாமல் அவனைச் சமாதானப் படுத்தி ஆறுதல் கூறினார்.

மணவாளக் குறிச்சியில் வந்து இறங்கிய போது பஸ் நிற்குமிடத்தில் ஆசை டானியலைச் சந்தித்தான்.

''டானியல்! என்னுடைய பத்துக் கட்டுமரங்களையும், மூன்று பாய்மரத் தோணிகளையும், இரண்டு வள்ளங்களையும், ஏழு வலைகளையும், பழைய விலைக்கு விற்கப் போகிறேன். நீ வேண்டுமானால் வாங்கிக் கொள்.''

''ஏன்? உன் பேரப்பிள்ளை.....'' எதையோ கேட்க ஆரம்பித்தான் டானியல். அவனுடைய கேள்விக்குப் பதில் சொல்லிக் கொண்டு அங்கே நிற்காமல் கையில் பேரனைப் பிடித்துக் கொண்டு சகரியாஸ் பாதிரியாருடன் சர்ச்சை நோக்கி நடந்தான் ஆசை.

''தாத்தா! ஏதோ ஓசை பெரிசாக் கேட்குதே! சமுத்திரமா?''— என்று நடந்து கொண்டே காதிற் புலனாகிய ஓசையைப் பற்றி விசாரித்தான் பேரன். ஆசை பதில் சொல்லவில்லை. எதிரே எல்லையற்று விரிந்திருந்த நீலக்கடலை மிகுந்த வெறுப்போடு பார்த்தான் அந்தக் கிழவன்.

ஸாண்டோஸ்

காப் ஸிரப்


இருமலுக்கு இதமளிக்கிறது

இருமல்—ஜலதோஷ நிவாரணமாக, இயற்கையன்னை அளித்தருளிய வைத்திய மூலிகைகளுள் மிகவும் கைகண்ட மூன்று மூலிகைகளில் இருக்கும் அதே சத்துக்கள், விஞ்ஞான முறையில் ஒன்றுசேர்ந்த நவீன மருந்தே ஸாண்டோஸ் காப் ஸிரப்.

தொண்டையிலுள்ள இரணவீக்கத்தை சட்டென்று கண்டித்து இதமளிப்பதற்கான மூலிகை பாபாவேர ஸோம்னிவேரோம்; கட்டிப்போன கபத்தைக் கரைத்து, வெளியேற்றிவிட உதவுவதற்கான மூலிகை ஸெபைலிஸ் இபெகாகுவான்ஹா; மூச்சடைப்பு வேதனையை அதிவிரைவில் தணித்துவிடுவது எபேத்ரா என்ற 'இளைப்பாற்றும்' சக்தியுள்ள மூலிகை;—ஆகிய மூன்று சத்துக்களும் இதில் இணைந்துள்ளன.

அதனால்தான் ஸாண்டோஸ் காப் ஸிரப், டாக்டர்கள் குறித்துக் கொடுக்கும் மருந்தாக விளங்குகிறது. மேலும், செர்ரிப் பழம் போன்ற அதன் இனிப்பை குழந்தைகள் பெரிதும் விரும்புகின்றனர்.

ஸ்விஸர்லந்து நாட்டு ஸாண்டோஸ் ஆராய்ச்சி சாலையின் மருந்துச் சரக்கு.



SANDOZ

லைசென்ஸ் பெற்று, ஸாண்டோஸ்ப்ராடக்ட்ஸ்ப்ரைவேட்
லிமிடெட் கம்பெனியினால் இந்தியாவில் தயாரிக்கப்பட்டது.

SCS.P. 2-50 TM.

சோக்ரதர் ஸம்வாதங்கள்

க. சந்தானம்

11. வலியவர் ஆட்சி

(சோக்ரதர், களாக்கோன், ஆதிமந்தேசன் முதலியவர்கள்)

கள: சோக்ரதரே, இதர நான்குவித ஆட்சிகளையும் பற்றிக் கூற வேண்டும்.

சோக்: கிரீட், லாஸிடோமியாவில் இருக்கும் வலியவர் ஆட்சியை உத்தமர் ஆட்சிக்கு அடுத்ததாகக் கூறலாம். அதன் பின் பணக்காரர் ஆட்சி. மூன்றாவது பொது மக்கள் ஆட்சி. கடைசியாக கொடுங்கோல் சர்வாதிகாரியாட்சி, ராஜ்யத்தின் அந்திம வியாதியாகும். இவற்றைத் தவிர வேறு வித ஆட்சியுண்டாகில் கூறுவாய். மற்ற எல்லா ஆட்சிகளும் இவற்றின் கலப்புக்களாகவே எனக்குத் தோன்றுகிறது.

கள: எனக்கும் வேறொன்றும் இருப்பதாகத் தெரியவில்லை.

சோக்; ஆட்சியைப் போலவே மனித குணங்களும் மாறுபட்டிருக்க வேண்டுமல்லவா? அல்லது மனித குணங்களைச் சாராமல் அரசாட்சிகள் தாமாகவே தோன்றுகின்றனவா?

கள: பெரும்பாலரின் குணங்களை அனுசரித்தே ஆட்சியும் இருக்கும்.

சோக்: ஆட்சிகள் ஐவகையானால், பிரஜைகளின் ஆத்ம குணங்களும் ஐவகைப் பட்டிருக்குமன்றோ?

கள: அவசியம்.

சோச்: உத்தமர் ஆட்சிக்கு அனுகுணமான சற்குணமுள்ள நீதிமானை வர்ணித்தாகி விட்டதல்லவா?

கள: ஆமாம்.

சோக்: இப்பொழுது கீழ்த்தர மனிதரைப் பற்றி ஆராய வேண்டும். அதிகாரமதம் பிடித்துப் பிறரோடு போட்டி போடும்மனிதர் இரண்டாவது. அடுத்தாற்போல் பணத்தில் மோகம் கொண்டவன். மூன்றாவதாக, தனக்கு அறிவில்லாமலிருக்கும் அறிவாளிகளோடு சமம் என்று எண்ணும் மனிதன். பிறரை இம்சிப்பதில் திருப்தியடையும் கொடியவன் நான்காவது. இவர்களையும் இவர்களைச் சார்ந்தவர்களையும் நன்கு ஆராய்ந்தால் பரிசுத்தமான சற்குணத்தாலும், நீதியாலும் உண்மையான ஆனந்தமுண்டா வென்பதும் அதற்கெதிரான அக்கிரமத்தால் துன்பமுண்டாவென்பதும் தெளிவாகும்.

கள: அப்படியே செய்வோம்.

சோக்: முதலில் உத்தமர் ஆட்சி மாறி எவ்விதம் வலியவர் ஆட்சி ஏற்படும் என்பதைக் கவனிப்போம். எந்த ஆட்சியிலும், அதிகாரம் வகிப்போருக்குள் சச்சரவு ஏற்படுவதால் மாறுதல் உண்டாவது சகஜமன்றோ?

கள: அது எவ்விதம்?

சோக்: உத்தமர் ஆட்சியில் அது ஏற்படக்கூடும் என்று எண்ணுவது சிறிது வருத்தமாகத்தான் இருக்கும். ஆனால் இவ்வுலகில் தோன்றும் எதற்கும் அழிவு இயற்கையானது. உத்தமர் ஆட்சியும் சாசுவதமாக இராது. அவ்வித ஆட்சிக்காகத் தயார் செய்யப்பட்ட தலைவர்களின் சந்ததியார்களும் என்றும் நல்லவர்களாக இருப்பதற்கு நித்தியமான ஏற்பாடு செய்ய முடியாது. ஆதலால் அவர்களுக்குள் வித்தியாசங்களும், கலகங்களும் ஏற்படும்.

கள: அதன் பிறகு?

சோக்: அவர்கள் கட்சிகளாகப் பிரிந்து சண்டை செய்து முடிவில் சமாதானம் செய்துகொள்ளுவார்கள். வலிய கூட்டத்தார் மற்றவர்களைத் தமக்கு அடிமைகளாகவும், பணியாட்களாகவும் செய்துவிடுவர். பொதுவான நிலங்களையும் வீடுகளையும், தமது சொந்த சொத்தாக்கி, ஆடம்பர வாழ்க்கைக்குப் பயன்படுத்திக் கொள்ளுவர்.

கள: புரட்சியின் போக்கு அப்படித்தான் இருக்கும்.

சோக்: புரட்சிக்குப் பின், ஆட்சிமுறை எவ்வாறு இருக்கும்? சில அம்சங்களில் மூந்திய ஆட்சியைப் போலவும் இதர அம்சங்களில் மாறியும் இருக்குமல்லவா?

கள: ஆம்!

சோக்: ஆளுவோரிடம் பக்தி, ஆளுவோர் கீழ்த்தரத் தொழில்களில் ஈடுபடாமல் இருப்பது, தேகப் பயிற்சி, யுத்தத் தேர்ச்சி முதலிய அம்சங்களில் உத்தமர் ஆட்சியை ஒத்திருக்கும்.

கள: மாறி யிருக்கும் அம்சங்கள் என்ன?

சோக்: விவேகிகளை அதிகாரிகளாகச் செய்ய மாட்டார்கள். ஆவேசக்காரர்களையும் யுத்த வெறி பிடித்தவர்களையுமே பெரிய பதவிகளில் அமர்த்துவர். எப்பொழுதும் போரையே நாடி, அதன் சூட்சுமங்களுக்கும், சூழ்ச்சிகளுக்கும் பிராதான்யம் கொடுக்கப்படும்.

கள: பின்னர்?

சோக்: அவர்களுக்குத் தங்கம், வெள்ளி மீது ஆசை அதிகரிக்கும். செல்வத்தைக் காப்பாற்றத் தனிப் பொக்கிஷங்களை அமைத்துக் கொள்ளுவார்கள். தங்கள்

மனைவி மக்களை அலங்கரித்து அவர்களுக்காக ஏராளமாகச் செலவு செய்வார்கள்.

கள: மிகவும் உண்மை.

சோக்: போட்டியும் பேராசையும் ஆளுவோரின் முக்கியக் குணங்களாக இருக்கும்.

ஆதி: அப்படியானால், நமது களக்கோனைப் போலிருப்பார்கள்.

சோக்: இல்லை. அடிமைகளிடம் கொடுமையாக விருப்பர். மேலதிகாரிகளிடம் பயபக்தியுடனும், தம்மைப் போன்றவர்களிடம் மரியாதையுடனும் இருப்பர். வேட்டையிலும், உடல் பயிற்சியிலும் ஆவல் கொண்டிருப்பர்.

கள: உயர் குடும்பத்தின் வாலிபன் எப்படி இருப்பான்?

சோக்: தந்தை நல்லவனாக இருப்பான். அவனுக்கு ஆட்சியில் அருவருப்பு ஏற்பட்டு ஒதுங்கி யிருப்பான். அதனால் கிடைக்கும் கௌரவமும், அதிகாரமும் இல்லாமல் தனிமையில் தனது குணத்தைக் காப்பாற்றிக் கொண்டிருப்பான்.

கள: மகன் ஏன் மாறியிருக்க வேண்டும்?

சோக்: அவனுடைய அன்னை ஓயாமல் தந்தையின் மூடத்தனத்தைப் பற்றி வருந்திக் கொண்டிருப்பாள். மற்றவர்களைப் போல் பணம் சம்பாதிக்க வில்லையென்றும், பதவி பெறவில்லையென்றும், அதனால் தமக்கு எவ்வித கௌரவமும் இல்லாமல் போயிற்றென்றும் ஆத்திரப்பட்டு மகனிடம் குறை கூறுவாள்.

ஆதி: அது பெண்களுக்கு இயல்பே.

சோக்: வீட்டு வேலைக்காரர்களும் எஜமானனை மதிக்க மாட்டார்கள். பிறரோடு வழக்குத் தொடர்ந்து சொத்துக்களைக் காப்பாற்ற அவன் விரும்பாவிட்டால், மகனைத் தூண்டி விடுவார்கள். வாலிபன் எங்கும் சாதுக்கள் மூடர்களென்று அழைக்கப்படுவதைக் காண்பான். தந்தை ஓர்புறம் அவனுக்கு விவேகத்தை வளர்க்க முயற்சி செய்வார். மற்றவர்கள் அவனுடைய ஆவேசத்தைப் பெருக்குவார்கள். இவ்விரண்டு முயற்சிகளும் சேர்ந்து, அவன் பேராசை பிடித்துப் பிறருடன் போட்டி போட்டு வல்லவன் ஆவதற்குப் பாடுபடுவான்.

12. பணக்கார ஆட்சி

(சோக்ரதர்: ஆதிமந்தோசன், களக்கோன் முதலியவர்கள்)

சோக்: வலியவர் ஆட்சி பணக்காரர் ஆட்சியாக மாறுவது எவ்விதமென்று இப்பொழுது கவனிக்க வேண்டும்.

ஆதி: அப்படியே செய்வோம்.

சோக்: ஆனால் அது குருடர்களுக்குக் கூட வெளிச்சமாக இருக்கிறதே!

ஆதி: எப்படி?

சோக்: ஒவ்வொரு பிரபுவும் சேர்த்து வைக்கும் செல்வமே வலியவர் ஆட்சியின் நாசகாரணமாகின்றது. தமது செல்வத்தைச் செலவழிப்பதில் நாட்டின் சட்டங்களைப் புறக்கணிக்கின்றனர்.

ஆதி: அப்படிச் செய்வார்களென்று தோன்றுகிறது.

சோக்: ஒருவருக்கொருவர் போட்டி போட்டு, எல்லா மக்களும் அவர்களைப் போலவே சட்டங்களை அலட்சியம் செய்யும் நிலைமை ஏற்பட்டு விடுகிறது. பிறகு பண வேட்டையே பிரதானமாகி விடுகிறது. பணத்துக்கும் குணத்துக்கும் மாறுபாடு உளதன்றோ.

ஆதி: சந்தேகமில்லாமல்.

சோக்: நாளடைவில் வெற்றியையும், கீர்த்தியையும் நாடியிருந்தவரெல்லாம், பணத்தாசை பிடித்துப் பணக்காரனையே போற்றுகின்றனர். அவனையே ஆட்சிக்கு அதிபதியாக்குகின்றனர். ஏழையை அவமதிக்கின்றனர்.

ஆதி: அப்படியே செய்வார்கள்.

சோக்: ஒரு குறிப்பிட்ட அளவு சொத்திருப்பவர்களே உத்தியோகங்களுக்குத் தகுந்தவர்களென்று சட்டம்செய்வார்கள். இதுவே பணக்கார ஆட்சியின் அஸ்திவாரமாகிறது.

ஆதி: பணக்கார ஆட்சி இவ்விதமே ஸ்தாபிக்கப்படும் என்று ஒப்புக்கொள்ள வேண்டும். அதன் தீமைகள் என்ன?

சோக்: அதன் தனி நியமமே மிகவும் கெடுதலானது. ஒரு கப்பல் ஓட்டுவதற்குச் சொத்தையே யோக்கியதையாகச் செய்து, தொழில் அறிந்த ஏழையை அதிலிருந்து விலக்கிவிட்டால் என்ன ஆகும்!

ஆதி: கப்பல் பிரயாணம் விசித்திரமாகத்தான் இருக்கும்.

சோக்: இது அரசாட்சிக்கும் பொருந்துமல்லவோ?

ஆதி: பொருந்தும்.

சோக்: அந்த ராஜ்யம் இருபாகங்களாகப் பிளவுபட்டு விடும். பணக்காரர்கள் ஓர் புறம், ஏழைகள் அவர்களுக்கு எதிரான கட்சி. ஒரே கோட்டைக்குள் இரு சைன்யங்கள் ஒன்று மற்றொன்றுக்கு எதிராகச் சூழ்ச்சி செய்து கொண்டிருப்பது போலாகும்.

ஆதி: வேறு எப்படி இருக்கும்?

சோக்: இதனால் பல தீமைகள் ஏற்படும். வெளியிலிருந்து எதிரிகள் படை எடுக்கையில், சாதாரண மக்களைப் போருக்குத் தயார் செய்தால் அபாயம். அப்படிச் செய்யாவிட்டால் தோல்வி. மேலும், பணத்தாசை பிடித்தவர் போருக்குக்கூட வரி செலுத்த விரும்ப மாட்டார்கள்.

ஆதி: ஆம். இது மோசமான நிலைதான்.

சோக்: இவைகளைவிட மற்றுமோர் பெரிய தீமை இந்த ஆட்சியில் தோன்றுகிறது. பணக்காரன் தன் சொத்துக்களை இழந்து ஆண்டியாகக்கூடும். அப்பொழுது அவனுக்கு எவ்விதத் தொழிலும் செய்ய முடியாது.

ஆதி: இந்த ஆட்சியின் தனிப் பெருமை இது.

சோக்: பணக்காரனாக இருந்தபொழுதும் அவனுடைய செலவுகளால் ராஜ்யத்துக்கு எவ்வித நன்மையும் உண்டாகாது. ஒரு தேன் கூட்டில் சோம்பேறிகளான தேனீக்களுக்குச் சமானமாகிறான். அவைகளில் இருவிதம். பிறருக்கு இம்சையில்லாத சோம்பேறிகள், பிறரைக் கொட்டும்

துஷ்ட சோம்பேறிகள். பிச்சை வாங்கும் ஆண்டிகள், சாது சோம்பேறிகள், திருடிக் கொலை செய்து ஜீவிக்க முயலுவோர் துஷ்ட சோம்பேறிகள். எந்த ராஜ்யத்தில் ஜீவனோபாய மில்லாத சோம்பேறிகள் மலிந்து கிடக்கின்றனரோ, அங்கே இவ்விரு வகையார்களையும் காணலாம்.

ஆதி: சந்தேகமில்லை.

சாக்: நல்ல கல்வி யில்லாமலும், தீய பழக்கங்களாலும், கெட்ட அரசாட்சியாலும் இந்த நிலைமை ஏற்படுகிறது. இதற்கு அனுகுணமான புருஷனைப்பற்றிக் கவனிப்போம்.

ஆதி: அவசியம்.

சோக்: ஓர் பிரபு பெரியபதவியில் இருக்கிறான். திடீரென்று கப்பல் கவிழ்ந்து விடுவதுபோல அவன் வீழ்ந்து விடுகிறான். அவனுக்கு எதிராகக் குற்றச்சாட்டுக்கள் ஏற்பட்டு ராஜ்யத்தை விட்டுத் துரத்தப் படுகிறான், அல்லது தூக்கிலிடப்படுகிறான். அவனுடைய சொத்துக்களைச் சர்க்கார் அபகரித்துக் கொள்ளுகிறது. அவனுடைய மகன் என்ன செய்வான்? அச்சம் அவன் மனத்தில் குடிகொண்டு விடுகிறது. வறுமையால் வாடி, செல்வம் திரட்டுவதில் முனைந்து, பணக்காரனாகிறான். அப்பொழுது அவன் பணக்காரர்களையே பெரியவர்களாக்கி, அவர்களிடம் ஆட்சியைச் சமர்ப்பிக்க விரும்புவானல்லவா?

13. பொது மக்கள் ஆட்சி

(சோக்ரதர், களக்கோன், ஆதிமந்தோன் முதலியோர்)

சோக்: பணக்காரர் ஆட்சியிலிருந்து பொது மக்கள் ஆட்சி தோன்றுவதும் அந்தப் பணத்தாசையாலேதான்.

ஆதி: அது எப்படி?

சோக்: பணத்தைத் தவிர இதர காரியங்களில் அலட்சியமாக விருப்பதாலும், பல திறமைகளைச் சாதித்துக் கொண்டிருப்பதாலும், பல மேதாவிகள் வறுமையில் ஆழ்ந்து விடுகின்றனர்.

ஆதி: ஆமாம்.

சோக்: அவர்களில் சிலர் கடன்பட்டுத் தவிக்கின்றனர், சிலர் தங்கள் உத்தியோகங்களை இழந்தவர்கள். பொது மக்களைத் தூண்டிவிட்டுப் புரட்சி செய்ய முன் வருகின்றனர்.

ஆதி: வருவார்கள்.

சோக்: பணக்காரர்களோ, அவர்களைப் பொருட்படுத்தாதது போல் பாசாங்கு செய்து கொண்டு, தமது பண வேட்டையில் மூழ்கியிருப்பர். கடன் கொடுத்த முதலுக்குப் பின் முறை வட்டி வசூலித்துத் தம்மிடம் சிக்கிக் கொண்டவர்களை ஆண்டிகளாக்கி விடுவர்.

ஆதி: ஆம்! ஆண்டிகளின் தொகை பெருகி விடும்.

சோக்: இத்தீமை மிதமிஞ்சிய பொழுதும், பண விவகாரங்களைக் கட்டுப்படுத்தச் சட்டம் செய்ய மாட்டார்கள். இவ்விதம் மக்கள் கொதித்து [எழும்படி செய்து, தங்களுடைய உல்லாச வாழ்க்

ஒரு மேதாவி!

கேசவமேனனுக்குப் படித்துப் பட்டம் பெற வேண்டுமென்று ஆவா ஏற்பட்டு 'டபுள் எம். ஏ.'வாக இருந்தவன் 'டிரிபுள் எம். ஏ.' ஆனான். எல்லோரையும் தனது பட்டங்களைக் கொண்டு பிரமிக்க வைத்துவிட வேண்டும் என்று கேசவமேனன் மிகவும் பிரயாசைப் பட்டான்.

ஒரு நாள் பத்திரிகையில் பட்டாளத்துக்கு ஆள் சேர்க்கும் ஆபிஸில் கிள்ளைறை வேலைக்கு ஆட்கள் எடுப்பதாக ஒரு விளம்பரத்தைப் பார்த்தான். அங்கே கட்டாயம் தன்னுடைய படிப்புக்குப் பிரமிப்பு ஏற்படுமென்று தீர்மானித்து விட்டான் கேசவமேனன். இரண்டொரு தினங்களில் பட்டாளத்துக்கு ஆள் சேர்க்கும் ஆபிஸில் வேலை தேடி வந்தவர்கள் 'க்யூ' வரிசையில் கேசவமேனன் நின்று கொண்டிருந்தான். கேசவமேனன் முறை வந்தது. வழக்கப்படி அவனைப் பற்



றிய விவரங்களை அதிகாரி கேட்டு ஒரு தாளில் குறித்துக்கொண்டே வந்தார். கடைசியில் 'நீர் பள்ளிக்கூடம் போயிருக்கிறீரா?' என்று கேட்டார் சார்ஜண்ட்.

"நான் டிரிபுள் எம்.ஏ. வாக்கும்!" என்றான் கேசவமேனன்.

ஆனால் அந்த அதிகாரியின் முகத்தில் பரபரப்பு ஏற்படவில்லை. அலட்சியமாக அங்கிருந்த ஒரு ரப்பர் ஸ்டாம்பை எடுத்து ஒரு அச்சடித்த தாளில் 'பட்'டென்று பலமாய் ஒரு அழுத்து அழுத்தி எடுத்தார். அப்பொழுதே அந்தப் பாரத்தைக் கேசவமேனனிடம் நீட்டி, 'இதை அடுத்த அறையில் கொண்டுபோய்க் கொடு. உனக்கு வைத்தியப்பரீட்சை நடக்கும்!' என்றார். கேசவமேனன் அதை வாங்கி அதிக ஆவலாய் அந்த முத்திரையைப் பார்த்தான். அதில் தெளிவாக 'எழுதப் படிக்கத் தெரிந்தவன்' என்ற வாசகம் விழுந்திருந்தது! அதைக் கண்ட கேசவமேனன் அப்படியே சிலையானான். —சம்பந்தம்.

கையால் பலஹீனர்களா வதையும் தடுக்க மாட்டார்கள்.

ஆதி: அப்படியே.

சோக்: ஆதலால், ஏழைகளும் அவர்களை ஆளும்பணக்காரர்களும் சந்திக்கும் பொழுதெல்லாம் அவர்களுக்குள் பகை பெருகும். முடிவில் தமது கோழைத்தனத்தாலேயே பணக்காரர்களின் அக்கிரமம் செய்வது சாத்தியமாகிறது என்று ஏழைகள் எண்ணத் தொடங்குவார்கள்.

ஆதி: சந்தேகமில்லை.

சோக்: ஆரோக்கியமில்லாத உடல் மிகச் சிறிய காரணத்தால் படுக்கையில் வீழ்ந்துவிடுகிறது. அவ்வாறே ஓர் அல்ப காரணத்தால் உள்நாட்டுக் கலகம் உண்டாகிறது.

ஆதி: அப்படித்தான் நடக்கும். பலாத்காரப் புரட்சியால் பொது மக்கள் ஆட்சி ஏற்படலாம். பணக்காரர்கள் எதிர்க்க முடியாமல் அச்சமுற்றுப் பணிந்து விடக் கூடும்.

சோக்: அப்பொழுது ஆட்சி முறை என்னவாகும்? அதன் பிரதிநிதிகளான மனிதரின் வாழ்க்கை எவ்வாறு இருக்கும்?

ஆதி: ஆட்சிக்குத் தகுந்தாற்போல்தானிருக்கும்.

சோக்: முதன் முதலாக அனைவருக்கும் விருப்பம் போல் பேசுவதற்கும், விரும்பியபடி செய்வதற்கும் கட்டுப்பாடில்லாத சுதந்திரம் இருக்கும். ஆதலால் இந்த ஆட்சியில் மனிதர்கள் பலவிதமான வாழ்க்கை நடத்துவர்.

ஆதி: ஆம்.

சோக்: இந்த ஆட்சி முதலில் மிகவும் சிறந்ததாகத் தோன்றும். பல வர்ணங்கள் பொருந்திய பட்டாடை போல், பிரஜைகளும் தங்கள் ஆட்சியில் மகிழ்ச்சியடைவார்கள்.

ஆதி: அதற்கென்ன சந்தேகம்?

சோக்: ஆனால் இந்த இராஜ்யத்தில் உண்மையில் எவ்வித ஆட்சியும் இராது. ஆளுவதற்கு வல்லமை உள்ளவன் பதுங்கிக் கிடப்பான். இல்லாதவன் ஆளுவான். இராஜ்யம் யுத்தத்தில்சடுபட்டிருக்கையில் மக்கள் வேண்டுமானால் சேரலாம், இல்லையேல் வீட்டில் இருக்கலாம். விருப்பம் போல் நீதிபதியாகவும், நிர்வாகியாகவும் இருக்கலாம். இது மிகவும் போற்றத் தக்கதல்லவா?

ஆதி: சிறிது காலத்துக்கு அப்படியிருக்கும்.



"ஏனுங்க! நீங்க நகரசபை தேர்தலிலே நிற்கவில்லே?"
"அடுத்த எம்.எல்.ஏ. தேர்தலிலே நின்று ஜெயிக்க வேண்டுமென்று திட்டம் போட்டிருக்கேன். இதிலே நின்னு எதுக்கு அநாவசியமாத் தோற்கணும்?"

சோக்: இந்த ஆட்சியில், குற்றவாளிகளின் அலட்சியமனப்பான்மை அதிசயிக்கத் தக்கது. நியாயாலயங்களில் மரண தண்டனை விதிக்கப்பட்டாலும், நாட்டிலிருந்து வெளியேற்ற வேண்டுமென்று உத்தரவிடப் பட்டாலும், சிறிதும் கவலையின்றித் தெருவில் திரிந்துகொண்டிருப்பார்கள்.

ஆதி: பலர் அப்படியிருப்பார்கள்.

சோக்: இந்த ஆட்சியில், நாம் முன் நினைத்தது போல் ஆளுவோருக்கு எவ்விதக் கல்வியும் தேர்ச்சியும் தேவையில்லை. எவனுக்கும் அரசியலில் பங்கெடுத்துக் கொள்ளப் பூர்ண உரிமை உண்டு. பொதுக் கூட்டத்தில் உணர்ச்சியுடன் பேசினால் போதும். மக்கள் அவனை மதிக்கத் தயாராக இருப்பார்கள்.

ஆதி: எவ்வளவு அற்புதமான நிலைமை!

சோக்: பொது மக்கள் ஆட்சிக்கு இவைகளே தனிச் சிறப்புக்கள். மிகவும் சுலபமான ஆட்சி முறை. அடக்குவோரில்லை, பலவித ஒழுக்கம், குணத்திலும், சக்தியிலும் என்ன தாரதம்மியம் இருந்தாலும் சமத்துவம்.

ஆதி: பெரிய] மோசமாக இருக்கிறதே!

சோக்: பொது மக்கள் ஆட்சியில், மனிதர் மனத்திலும் இவ்வாறே நன்மை தீமை, அவசியம் அவசியமில்லாதது, என்ற விவேகமில்லாமல் எல்லாவித ஆசைகளுக்கும், செயல்களுக்கும் சம இடம் அளிக்கப்படும். தன்னடக்கம் என்பதே சிறிதுமிராது.

ஆதி: அப்படியே.

சோக்: தனது பகுத்தறிவு சில சுகங்கள் நல்லவை, சில தீயவை என்று வற்புறுத்தினாலும், அவன் அலட்சியமாகத் தலை அசைத்துக் கொண்டிருப்பான். தினந்தோறும் அவ்வப்போது கிடைக்கும் சுகங்களை விவேகமின்றி அனுபவிப்பான். மது கிடைத்தால் குடிப்பான்; கிடைக்கா விட்டால் மதுவிலக்கு என்பான். அரசியலில் புகுந்து, முன்பின் யோசிக்காமல் திடீரென்று எழுந்து நின்று மனம் போனவாறு பேசுவான். வாழ்க்கையின் நீதி, நியமங்களைக் கவனிக்க மாட்டான்; தன்னை ஓர் தெய்வப் பிரகிருதியாக எண்ணிச் சுக வாழ்வையே நாடி நிற்பான்.

ஆதி: நீதியும் அநீதியும் சமமானால், உமது வர்ணனை முற்றிலும் உண்மையாகும். (அடுத்த இதழில் முடியும்)



அத்தியாயம் 38

தளபதி திடுக்கிட்டான்!

இடையாற்றுமங்கலத்து நிலவறையிலிருந்து ஆயுதங்களை யாரோ கடத்திக் கொண்டு போய் விட்டதாகச் செய்தி தெரிவிப்பதற்கு அரண்மனைக்கு வந்த அம்பலவன் வேளானை நிதானமாகத் தங்கச் செய்து மறுநாள் காலைவரை நிறுத்தி வைத்து விவரமாகச் சொல்லும்படி கேட்டார் மகாமண்டலேசுவரர். இத்தகைய சந்தர்ப்பங்களில் ஆழமாகச் சிந்திப்பவருக்கே இயல்பான நிதானம் அவருக்கு வந்து விடும்.

"அப்பா! மற்றவர்கள் அரைககால நாழிகையில் உண்டு முடித்து விடக்கூடிய ஒரு உணவுப்பொருளை, நீங்கள் சாப்பிட்டால் அரை நாழிகை உட்கார்ந்து நிதானமாக மென்று தின்கிறீர்களே?" என்று அவருக்கு உணவு பரிமாறும் போதெல்லாம் அவரது செல்வக் குமாரி குழல்மொழி அவரைக் கேட்பாள். அவர் அப்போது தம் புதல்வியை நிமிர்ந்து பார்த்துக்கொண்டே ஒருவிதமாகச் சிரித்தவாறு மறுமொழி கூறுவார்:

"குழல்மொழி! உணவைமட்டுமல்ல; காதிலும், கண்ணிலும், மனத்திலும் படுகிற விஷயங்களைக் கூட இப்படி மென்று தின்று உண்டால்தான் சீரணமாகிறது எனக்கு. அறிவும், சிந்தனையும் உள்ளவர்களுக்கு இந்த நிதானம் ஒரு பலவீனம்தான் அம்மா! ஆனால் எங்களுடைய ஒரே பலமும் இந்த நிதானத்தில்தான் அடங்கியிருக்கிறது."

அடுத்தடுத்துத் தொடர்ந்து இடையாற்றுமங்கலத்தில் கொள்ளையும், திருட்டும் நடப்பது பரபரப்பூட்டக்கூடிய ஒரு செய்தியானாலும் அவர் பரபரப்படைகிற மாதிரி வெளியில் காட்டிக் கொள்ளவில்லை.

"வேளான்! பதற்றப்படாதே; நடந்ததையெல்லாம் ஆர அமரச் சிந்தித்து நிதானமாக எனக்குச் சொல்" என்று அவனைக் கேட்டார் அவர்.

"சுவாமி! ஆயுதங்களைக் கடத்திக் கொண்டு போக வந்தவர்கள் யார்? அவர்கள் எப்போது தீவின் எல்லைக்குள் பிரவேசித்தார்கள் என்ற விவரங்களெல்லாம் எங்களுக்குத் தெரியாது. ஆயுதங்களையெல்லாம் படகில் ஏற்றிப் பறளியாற்றைக் கடந்து சென்று கொண்டிருந்தபோது தற்செயலாகக் கரைப் பக்கம் வந்த யவனக் காவல் வீரர்கள் பார்த்து விட்டனர். உடனே அவர்கள் ஓடி வந்து தோணித் துறைக்கு அருகில் குடிசையில் படுத்துக் கொண்டிருந்த என்னை எழுப்பி, 'ஆற்றில் போகும் படகு யாருடைய'தென்று விசாரித்தார்கள். நான் எனக்குத் தெரியாது என்றேன். உடனே எல்லோருமாக ஓடிப்போய்ப் பார்த்தோம். நிலவறை, விருந்து மாளிகை எல்லாம் திறந்து கிடந்தன. அவசரம் அவசரமாக உள்ளே நுழைந்து பார்த்தோம். என்ன நடந்திருக்க வேண்டு



மென்று எங்களுக்குப் புரிந்து விட்டது. விரைவாக இரண்டு படகுகளில் ஏறிக் கொண்டு சென்று அந்தப் படகு நடு ஆற்றைக் கடப்பதற்குள் அதை வளைத்துக் கொண்டோம். படகில் ஆயுதங்களை ஏற்றிக் கனம் உண்டாக்கிக் கொண்டிருந்ததால் அவர்களால் வேகமாகச் செலுத்தித் தப்பிக்கொண்டு போக முடியவில்லை. அந்தத் திருட்டுப் படகில் இரண்டே ஆட்கள்தான் இருப்பது போல் தெரிந்தது. நாங்கள் அருகில் நெருங்கிப் பிடிப்பதற்குள் ஆயுதங்களோடு படகை ஆற்றில் கவிழ்த்து விட்டுத் தாங்களும் குதித்து நீந்தித் தப்பி விட்டார்கள் அந்த ஆட்கள்.''

''வேளான்! அவர்கள் யாராயிருக்க முடியுமென்று உங்களுக்குத் தோன்றுகிறது? வந்து போனவர்களை இன்னாரென்று கண்டுகொள்வதற்கு ஏற்ற அடையாளங்கள் எவற்றையாவது அவர்கள் விட்டுச் சென்றிருக்கிறார்களா?'' இப்படிக் கேட்டுக்கொண்டே வேளானுடைய முகத்தை உற்றுப் பார்த்தார் மகாமண்டலேசுவரர்.

''சுவாமீ! ஆயுதங்களைத் திருடிக் கொண்டு போக வந்தவர்கள், மிகவும் சாமர்த்தியமுள்ளவர்களாக இருக்க வேண்டும். தங்களை இனம் தெரிந்து கொள்வதற்கேற்ற எந்த அடையாளங்களையும் அவர்கள் விட்டுச் செல்லவில்லை. வந்தவர்களில் யாரோ ஒருவர் இடுப்புக் கச்சையாக அணிந்த வெண்பட்டுத் துணி ஒன்று மட்டும் நீரிலும், சேற்றிலும் நனைந்து விருந்து மாளிகைப் பின்புறமுள்ள பறளியாற்றுப் படித்துறையில் கிடைத்தது. அதை அடையாளமாக வைத்துக் கொண்டு எதையும் கண்டுபிடிக்க முடியுமென்று தோன்றவில்லை.''

மகாமண்டலேசுவரர் மெல்லச் சிரித்தார். ''வேளான்! அந்த வெண்பட்டுத் துணியை இப்போது இங்கே கொண்டு வந்திருக்கிறாயா?'' என்று அவர் கேட்டவுடன் வேளான் தன் அங்கியில் மறைத்து வைத்துக்கொண்டிருந்த அந்த வெண்பட்டுத் துணியை எடுத்து அடக்கவொடுக்கமாக அளித்தான். அவர் அதை விரித்துப் பார்க்க முயன்றார். ஆற்று நீரோடு செம்மண் சேறும் படிந்து உலர்ந்து போயிருந்ததால் அதில் ஒன்றுமே தெளிவாகத் தெரிந்துகொள்ள முடியவில்லை.

''சிறிது நேரம் நீ இங்கேயே காத்துக் கொண்டிரு'' என்று வேளானிடம் கூறி விட்டு அந்தப் பட்டுத் துணியுடன் உள்ளே சென்றார் அவர்.

வேளான் வியப்பும், பயமும் போட்டியிடும் மன உணர்ச்சிகளோடு அங்கேயே காத்திருந்தான்.

அரை நாழிகைக்குப் பின் மகாமண்டலேசுவரர் மறுபடியும் சிரித்துக் கொண்டே அவன் முன் தோன்றினார்.

''வேளான்! யார், எவருடைய தூண்டுதலால் ஆயுதங்களைத் திருடு



வதற்கு வந்தார்கள் என்ற விவரம் எனக்குத் தெரிந்து விட்டது. இதில் கவலைப்படுவதற்கோ, பயப்படுவதற்கோ ஒன்றுமே இல்லை. நீ உடனே இடையாற்றுமங்கலத்துக்குத் திரும்பிப்போய் நான் சொல்கிறபடி செய். பறளியாற்றில் எந்த இடத்தில் படகு கவிழ்க்கப்பட்டதோ, அங்கே ஆட்களை மூழ்கச் செய்து ஆயுதங்களைக் கிடைத்தவரையில் வெளியே எடுத்துவிட வேண்டும். ஆற்றின் வேகத்தினால் இழுத்துக்கொண்டு போகிற அளவுக்கு இப்போது வெள்ளம் கடுமையாக இராது. ஆகவே கவிழ்ந்து மூழ்கிய ஆயுதங்களைப் பெரும்பாலும் குறைவின்றி எடுத்து விடலாம். அவ்வாறு எடுத்த ஆயுதங்களையும், இப்போது நான் உன்னிடம் எழுதிக் கொடுக்கப் போகும் ஓலையையும் கொண்டு போய் நேரே கோட்டாற்றுப் படைத்தளத்தில் இருக்கும் தளபதி வல்லாளதேவனிடம் சேர்த்து விட வேண்டும்."

"அப்படியே செய்து விடுகிறேன், சுவாமீ!"

"செய்வது பெரிதில்லை, வேளான்! நான் சொல்கிறபடி கவனமாக நடந்து கொள்ள வேண்டும். என் ஓலையையும், ஆயுதங்களையும் தளபதியிடம் கொடுத்தபின் அங்கே ஒரு நொடிப் போதுகூட அநாவசியமாக நீ தாமதிக்கக் கூடாது. தளபதி உன்னிடம் தூண்டித் துளைத்து ஏதாவது கேட்க முயன்றாலும் நீ அவற்றுக்கு மறுமொழி கூறாமல் உடனே நழுவி வந்து விட வேண்டும்."

வேளான் பயபக்தி நிறைந்த முகத்தில் மிரண்ட பார்வையோடு, 'ஆகட்டும்' என்பதற்கு அறிகுறியாக மகா மண்டலேசுவரருக்கு முன் தலையசைத்தான்.

"சரி; அப்படியானால் நீ இப்போதே புறப்பட வேண்டியதுதான்" என்று அவர் விடை கொடுத்தபின்பும் அவன் தயங்கி நின்றான். எதையோ அவரிடம் கேட்கலாமா, வேண்டாமா என்று தனக்குள்ளேயே எண்ணப் போராட்டத்துடன் அவன் தயங்கி நிற்பதாகத் தோன்றியது.

"வேளான்! ஏன் தயங்கி நிற்கிறாய்? மனத்தில் பட்டதைக் கேள்."

"சுவாமீ! அந்தப் பட்டுத் துணியிலிருந்து ஏதாவது அடையாளம் புரிந்ததா?" என்று மென்று விழுங்கும் வார்த்தைகளோடு பயந்துகொண்டே கேட்டான் அவன்.

"அடையாளமெல்லாம் நன்றாகத்தான் புரிந்திருக்கிறது. ஆனால் அதை நீ இப்போது தெரிந்து கொள்ள வேண்டுமென்கிற அவசியமில்லை" என்று புன்னகையோடு பதில் கூறினார் மகாமண்டலேசுவரர். வேளான் மறுபேச்சுப் பேசவாயின்றித் தளபதிக்காக அவர் எழுதிக் கொடுத்த ஓலையை வாங்கிக் கொண்டு சென்றான். அம்பலவன் வேளானை இடையாற்று மங்கலத்துக்கு அனுப்பிய



பின்பு வண்ண மகள் புவனமோகினியைத் தம்முடைய இருப்பிடத்துக்கு வரவழைத்தார் அவர்.

புவனமோகினி வந்து வணங்கினாள். "பெண்ணே! உன்னிடம் ஒரு செய்தி விசாரித்துத் தெரிந்து கொள்வதற்காகக் கூப்பிட்டேன். ஆபத்துதவிகள் தலைவன் மகர நெடுங்குழைக்காதன் இங்கே அரண்மனையில்தான் இருக்கிறானா? உனக்குத் தெரிந்திருக்குமே?" என்று அவர் அந்தப் பெண்ணிடம் கேட்டார். ஆபத்துதவிகள் தலைவனின் பெயரை அவருடைய வாயிலிருந்து கேள்விப்பட்ட உடனே அந்தப் பெண்ணின் முகத்தில் பயத்தின் உணர்ச்சி யலைகள் குமிழியிட்டுப் பரவுவது போன்றதோர் சாயல் பரவியது.

"பயப்படாமல் சொல், அம்மா!" மீண்டும் அவளைத் தூண்டினார் அவர்.

"சுவாமீ! சென்ற சில நாட்களாக அந்த முரட்டு மனிதரை அரண்மனை எல்லையிலேயே காணவில்லை நான். ஆனால் மறுபடியும் இன்று காலையில் இங்கு பார்த்தேன்" என்று மருண்ட பார்வையோடு முன்னும் பின்னும் திரும்பிப் பார்த்துக் கொண்டே மெல்ல அவருக்குப் பதில் சொன்னாள் வண்ண மகள்.

"இவ்வளவுதான் உன்னிடமிருந்து எனக்குத் தெரிய வேண்டும். இனி மேல் நீ போகலாம்."

புவனமோகினி மறுபடியும் அவரை வணங்கி விட்டு வந்தசுவடு தெரியாமல் திரும்பிச் சென்றாள். அவள் சென்ற பின் சிறிது நேரம் இரண்டு கைகளையும் பின்னால் கட்டிக் கொண்டு அளவாக அடிபெயர்த்து வைத்துக் குறுக்கும் நெடுக்குமாக நடந்தார் அவர். மனத்தில் அளவாகத் தெளிவாக வேகமாகச் சிந்தனைகள் ஓடும்போது இப்படி நடந்துகொண்டே இட்டமிடுவது அவர் வழக்கம். சிறிது நேரத்தில் ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவராக அங்கிருந்த காவலன் ஒருவனைக் கைதட்டி அழைத்தார். அவன் அருகில் வந்ததும், "இதோ பார்! நான் சொல்வதைத் தெளிவாகக் கேட்டுக் கொள். இன்னும் கால் நாழிகைக்குள் ஆபத்துதவிகள் தலைவன் இந்த அரண்மனையின் எந்த மூலையில் இருந்தாலும் தேடி அழைத்துக் கொண்டு வா. இதை உடனே செய்."

கருங்கல்லின் மேல் வரிசையாக நிறுத்தி, நிறுத்தித் தாளகதி பிழையாமல் உளியை அடித்தாற்போல் ஒலித்த அந்த வார்த்தைகளின் கம்பீரத்துக்குத் தலைவணங்கி நடந்தான் அவன். மீண்டும் அளவாக அடியெடுத்து வைத்துக் குறுக்கும் நெடுக்குமாக நடந்தார் அவர். ஆபத்துதவிகள் தலைவனைக் கூட்டிக் கொண்டு வர எவ்வளவு நேரமாகுமென்று அவர் எதிர்பார்த்தாரோ அவ்வளவு நேரம் ஆகவில்லை. அவரால் அனுப்பப்பட்ட காவலன் மிகச் சில விநாடிகளுக்குள்ளேயே மகரநெடுங் குழைக்காதனை அழைத்துக்கொண்டு வந்து அவர் முன் நிறுத்திவிட்டான். வேங்கைப் புலிபோல் வாட்டசாட்டமான தோற்றத்தையுடைய அந்த மாவீரன் துணிவு ஒய்ந்து ஒடுங்கித் தலைதாழ்த்தி நாணத்தோடு அவர்முன் வந்து நின்றான். தம் முன் வருகிற பெண்களையெல்லாம் நாணப் புன்னகை பூக்கச் செய்யும் ஆற்றல் அழகும், வீரமும் உள்ள சில ஆண்களுக்கு உண்டு. அதைப் போலவே அறிவும், அறமும், ஒழுக்கமும் உள்ள சில பெரியவர்கள் தமக்கு முன் நிற்கும் ஆண்களைக் கூட ஒடுங்கிப் பெண் தன்மையெய்தச் செய்து விடுவார்கள். கைகளைப் பின்புறம் கட்டிக்கொண்டு இமையா விழிப் பார்வையுடன் நிமிர்ந்து தன்னையே பார்த்துக் கொண்டு நிற்கும் அந்த மனிதருக்கு முன்னால் ஆபத்துதவிகள் தலைவன் பெண் தன்மையெய்தினாற் போலத் தான் நாணி நின்றான்.

காவலனை அங்கிருந்து வெளியேறுமாறு சைகை செய்தார் மகாமண்டலேசுவரர். அவன் வெளியேறினான்.

"குழைக்காதா! இதோ; என் கையிலிருக்கும் இந்தப் பொருளைக்கொஞ்சம் பார்" என்று சொல்லிக்கொண்டே பின்புறம் இருந்த கையை உயர்த்தி அவன் முகத்துக்கு நேர் எதிரே கொண்டு வந்து நீட்டினார் அவர். அவருடைய கையிலிருந்து விரிந்த வெண் பட்டுத் துணியைப் பார்த்த போது அவன் முகம் ஏன் அப்படிப் பயந்து வெளிறிப் போகிறது? அழுக்கும் சேறுமாக இருந்த அந்தத் துணி நீரில் நன்றாகக் கழுவப்பட்டிருந்தது. இப்போது ஆபத்துதவிகளின் அடையாளச் சின்னங்கள் அதில் தெளிவாகத் தெரிந்தன. அவருடைய கையில் அந்தத் துணி ஆடி அசைந்து நடுங்கினாற்போல் அவனுடைய உடல் விதிர் விதிர்ப்புற்று நடுங்கியது.

"இம்மாதிரிச் சின்னங்களோடு கூடிய வெண்பட்டுத் துணியை ஆபத்துதவிகள் தம் இடுப்புக் கச்சையில் அணிவது வழக்கமல்லவா?"

"ஆம், சுவாமி! வழக்கம்தான்."—

அவனுடைய பதிலைக் கேட்டு அவர் சிரித்தார். சிரித்துக் கொண்டே, "கொஞ்ச நாட்களாகவே ஆபத்துதவிகளுக்கெல்லாம் ஞாபகமறதி அதிகமாகி விட்டது போலிருக்கிறது! இடுப்பில் அணிந்து கொள்வதற்குப் பதிலாக எங்கெங்கோ நினைத்த இடங்களிலெல்லாம் இந்தத் துணியைப் போட்டு விட்டுப் போய் விடுகிறார்கள்."—என்று குத்தலாகச் சொன்னார். அவருடைய குத்தல் அவனுக்குப் புரிந்தது. முன்பு ஒரு முறை அந்தத் துணியைத் தவற விட்டு விட்டு அகப்பட்டுக் கொண்டது போல், இரண்டாவதாக மீண்டும் இடையாற்று மங்கலத்தில் தவறி விட்டு விட்டு அவர் கையில் அகப்பட நேரும்படி இடங்கொடுத்த தன் முட்டாள்தனத்தை நொந்து கொண்டு நின்றான் அவன். அவ்வளவு விரைவாக அது கண்டு பிடிக்கப்பட்டு அவருடைய இடத்தைத் தேடி எப்படி வந்து சேர்ந்தது என்பதுதான் அவனுக்கு விளங்கவில்லை. திகைப்போடு வெட்கி விழித்துக் கொண்டு நின்றான் அவன்.

"பரவாயில்லை! உனக்கு உரிமையான பொருள் என் கையில் கிடைத்தால் உடனே உன்னைக் கூப்பிட்டு அதை உன்னிடம் ஒப்படைத்து விட வேண்டியது என் கடமையல்லவா? அதனால்தான் உன்னை வரவழைத்தேன். வேறொன்றுமில்லை. இந்தா; இதைக் கொண்டு போ......இனிமேல் இப்படி நடக்காமல் பார்த்துக் கொள்!"—ஒன்றுமே நடக்காதது போல், எதையுமே தெரிந்து கொள்ளாமல் சர்வசாதாரணமாக அவனைக் கூப்பிட்டு அதைக் கொடுத்து எச்சரித்து அனுப்புபவர் போல் தான் பேசினார் அவர். அந்தச் சூழ்நிலையில் அப்படியொன்றும் தெரியாததுபோல் நடந்து கொள்வதுதான் நல்லதென்று அவருக்குப் பட்டது. 'அரசியல் வாழ்வில் ஒன்றும் தெரியாதவன் எல்லாம் தெரிந்ததுபோல் நடந்தால், ஈரம் புலராத பச்சை மண் குடத்தில் வைத்த தண்ணீர்போல் பலவீனங்கள் விரைவில் வெளிப்பட்டுத் தோற்றுவிடுவான். எல்லாம் தெரிந்தவன் ஒன்றும் தெரியாததுபோல் நடித்தால் இறுதி வரை வெற்றியை உறுதிப்படுத்திக் கொண்டு விடுவான்.' இந்தத் தத்துவத்தில் மகாமண்டலேசுவரருக்கு அசைக்க முடியாத நம்பிக்கை. எண்ணங்களையும், அனுபவங்களையும், காண்பவர்களிடமெல்லாம் அளந்து கொண்டு திரியும் சாமானிய மனித ஆசாபாசங்களுக்கு அப்பாற்பட்டவர்.

ஆபத்துதவிகள் தலைவன் கையில் அவர் அந்தப் பட்டுத்துணியைக் கொடுத்தபோது ஒன்றுமே தெரியாதவர்போல் சிரித்துக்கொண்டு கொடுத்தார். ஆனால் அவனோ அதிர்ச்சியடைந்து கூனிக் குறுகி நடுங்கி அதை வாங்கிக் கொண்டு விடைபெற்றுச் சென்றான். பகைவர்களிடமும் அநாகரிகமாகப் பகைத்துக் கொள்ளும் பழக்கம் அவருக்கு இல்லை. யார் யாரெல்லாம் தமக்கே பொருமையால்] குழி பறித்துக் கொண்டிருப்பதாக அவர் உணர்கிறாரோ, அவர்களிடம் கூட



நாகரிகமாக நடந்து கொள்ளும் பண்பை அறிவு அவருக்குக் கற்பித்திருந்தது. பொன்மனைக் கூற்றத்துக் குழற்கால் மாறனார் ஒப்புரவு மொழி மாறு ஓலையோடு வந்ததை அறிந்த போதுகூட நாகரிகமாகவே நடந்து கொண்டார் அவர். தன் கழுத்தை அறுக்க வாளை ஓங்கி வருபவனிடம் கூட, "போர் இலக்கணப்படி வாளை ஓங்கவேண்டிய முறை இது" என்று முறையைச் சொல்லிக் கொடுத்து விட்டு அதன்பின் எதிர்ப்பதற்குத் தயாராகும் அறிவின் நாகரிகம் அது! வாளின் கூர்மைக்கு இருப்பதைக் காட்டிலும் அதிக ஆற்றல் அந்த நாகரிகத்துக்கு உண்டு!

மகாமண்டலேசுவரரிடம் விடை பெற்றுக் கொண்டு இடையாற்று மங்கலம் திரும்பிய படகோட்டி அம்பலவன் வேளான் உடனே பறளியாற்றில் மூழ்கிய ஆயுதங்களை வெளியேற்ற ஏற்பாடு செய்தான். அவைகளை முறையாக வெளியேற்றி ஒழுங்கு படுத்த இரண்டு நாட்கள் ஆயின அவனுக்கு. மறுநாளே ஆயுதங்களையும், மகாமண்டலேசுவரர் தளபதிக்கென்று கொடுத்து அனுப்பிய ஓலையையும் கோட்டாற்றுப் படைத்தளத்தில் கொண்டு போய்ச் சேர்த்து விட்டான் அவன். அவருடைய கட்டளைப்படியே தளபதியிடம் அதிகம் பேசாமல் ஆயுதங்களை அளித்த கையோடு ஓலையையும் அளித்து விட்டுத் திரும்பினான் அம்பலவன் வேளான்.

‘குழைக்காதன் கடத்திக் கொண்டு வர முயன்று முடியாமற் போய்ப் பறளியாற்றில் கவிழ்க்கப்பட்ட ஆயுதங்களை மகாமண்டலேசுவரரே சிரத்தையாக எடுத்துத் தனக்கு அனுப்பிய நோக்கமென்ன?’—என்று புரியாமல் பயமும் திகைப்பும் கொண்டு அவர் தனக்குக் கொடுத்தனுப்பியிருந்த ஓலையைப் பிரித்தான் தளபதி.

“அன்புள்ள தளபதி வல்லாளதேவனுக்கு, இடையாற்றுமங்கலம் நம்பி எழுதும் திருமுகம். இடையாற்றுமங்கலம் நிலவறையிலிருந்து ஆயுதங்களை இரகசியமாகக் கடத்திக் கொண்டு போவதற்காகக் குழைக்காதன் மூலம் நீ இவ்வளவு பெரிய காரியங்கள் செய்திருக்க வேண்டாம். உனக்கு அவற்றில் விருப்பம் இருப்பதாக எனக்கு ஒரு வார்த்தை தெரிவித்திருந்தால் நானே மூட்டை கட்டி உனக்கு அனுப்பியிருப்பேன். என்னுடைய பலம் கேவலம் அந்த வாள்களின் நுனிகளில் அடங்கியிருப்பதாக நீ கணக்கிட்டிருந்தால் அது தப்புக் கணக்கு என்பதை இப்போதாவது உணர்ந்துகொள். வாளும், வேலும் எதிரிகளைத் தேடிச் சென்று தம் நுனியால் குத்த வேண்டும். ஆனால், தளபதி! அறிவின் நுனியில் எதிரிகள் தாமாகவே வந்து தங்களைக் குத்திக் கொண்டு மாய்கிறார்கள். இதை உனக்கு இப்போது கூறி வைக்கிறேன். கொள்ளைக் கூட்டத்தார் செய்வதுபோல் இப்படி ஒரு காரியத்தைத் தென்பாண்டி நாட்டுத் தளபதி செய்திருக்க வேண்டாம் என்பது என் கருத்து.”

திருமுகத்தைப் படித்தவுடன் தளபதி திடுக்கிட்டான். அதிலிருந்த வார்த்தைகளெல்லாம் தேள்களாக மாறி அவனை ஒரே சமயத்தில் கொட்டுவது போலிருந்தது.

அத்தியாயம் 39

போர்முரசு முழங்கியது!

கொற்கை, கரவந்தபுரம் பகுதிகளில் வடதிசை அரசர்களால் இரகசியமாக ஏவப்பட்ட ஆட்கள் என்னென்ன செயல்களைச் செய்தார்களோ, அதே வகையைச் சேர்ந்த செயல்களை மகாமண்டலேசுவரரால் தேர்ந்தெடுத்து அனுப்பப் பெற்ற ஆட்கள் வடக்கே செய்தனர். கோனாட்டு ஊர்ப் புறங்களிலும், இறைப் பழுவூரைச் சேர்ந்த இடங்களிலும், சோழமண்டலத்து எல்லைப் புறங்களிலும், பலப்பல மாறு வேடங்களில் சுற்றி வந்தனர் தென்பாண்டி நாட்டு ஆட்கள். தங்களைச் சேர்ந்த வீரன் ஒருவன் கொடும்பாளூர் அரண்மனையில் உளவறியும்போது பிடிபட்டு உயிர் இழக்க நேர்ந்த செய்தியைக் கேள்விப்பட்ட பின்பும் அவர்கள் தளர்ச்சியோ, பயமோ அடையவில்லை. அடிக்கடி மகாமண்டலேசுவரருக்குச் செய்தியனுப்பிக் கொண்டிருந்தனர் அவர்கள்.

இந்த நிலையில் கொடும்பாளூரில் ஒன்றுகூடித் தங்கியிருந்த வடதிசையரசர்கள் நன்றாக விழிப்படைந்து விட்டார்கள். தென்பாண்டி நாட்டின் மேற் படையெடுப்பது பற்றி உண்மையிலேயே அவர்களுக்கு இப்போது பயமும், மலைப்பும் ஏற்பட்டிருந்தன. இலங்கைப் படை உதவியும், சேரர் படை உதவியும், தென்பாண்டி நாட்டுக்குக் கிடைத்தால் தங்கள் படையின் கூட்டணி என்ன ஆவதென்ற அச்சம் அவர்களுக்கு மெல்ல மெல்ல உண்டாகியிருந்தது. தேவராட்டியின் கொற்றவைக் கூத்தைக் கண்டு களித்த மறுநாள் காலை தென்திசை ஒற்றனைக் கழுவேற்றிக் கொன்ற பின் அவர்கள் பலத்த சிந்தனையில் ஆழ்ந்தனர்.

மூன்றாம் முறையாகப் போர்த் திட்டங்களைப் பற்றிக் கலந்து பேச ஒன்று கூடியபோது முதல் இரண்டு கூட்டங்களிலும் இருந்த சுறுசுறுப்பும், ஆவலும் குன்றிச் சோர்ந்து தென்பட்டனர் அவர்கள். அந்த விதமான சோர்வையும், அதனால் உண்டாகும் தாழ்வு மனப்பான்மையையும், வளரவிடக் கூடாதென்று கவலைப்பட்டவன் சோழன் ஒருவன்தான். தென்திசைப் படையெடுப்புக்கு வசதியாக இருக்குமென்று முன்பு உறையூரில் நடந்த முதற் கூட்டத்தில்தான் கூறிய வழிகள் அறவே தோற்றுவிட்டதனால் கொடும்பாளூரான் கூடத் தளர்ந்து ஒடுங்கியிருந்தான். அந்த நிலையில் சோழன் அவர்களுக்கு ஊக்கமூட்டிப் பேசத் தொடங்கினான்:—

"நண்பர்களே! என் பாட்டனார் விஜயாலய சோழர் தொண்ணூற்றாறு விழுப்புண்களைத் தம் திருமேனியில் தாங்கிப் புகழ் பெற்றார். எந்தையார் ஆதித்த சோழர் பொன்னிவள நாட்டில் பாண்டியர்களையும், பல்லவர்களையும், களை நீக்கித் தனிப்பெருஞ் சோழமண்டலங் கண்டு மகிழ்ந்தார். என்னுடைய ஆட்சிக் காலத்துக்குள் 'மதுரை கொண்ட கோப்பரகேசரி' என்ற சிறப்புப் பெயரை அடைய விரும்பினேன். ஓரளவு அடைந்தும் விட்டேன். மதுரை நகரத்தை வென்றது மட்டும் போதாது. பாண்டி நாடு முழுவதும் வென்றால்தான் எனக்கும் பெருமை; என்னைச் சூழ்ந்துள்ள உங்களுக்கும் பெருமை. பின்னால் ஒருசமயம் நமது வலிமையும், சூழ்நிலையும், இடங் கொடுக்குமானால் ஈழநாடு வரை படையெடுத்துச் செல்ல வேண்டும் என்றுகூட எனக்கு ஆவல் இருக்கிறது. சில காரியங்களை நாம் எதிர்பார்த்தபடி நடத்தி வெற்றிபெற முடியவில்லை என்பதற்காக இப்படிச் சோர்ந்து போய்விடக் கூடாது. நாம் ஐந்து பேரும் யாருக்கு எந்த வகையில் குறைந்தவர்கள்? இளைப் பழுவூர்ச் சிற்றரசரிடமும், கொடும்பாளூர்க் குறுநில மன்னரிடமும், வலிமையும், திறமையும் வாய்ந்த படைகள் இருக்கின்றன. இவற்றுடன் எனது சோழமண்டலப் பெரும் படையும் சேர்ந்தால் நாம் பெருகி விடுகிறோம். அரசூருடையானும், பரதூருடையானும் படைத் தலைமை பூண்டு அருமையாகப் போர் புரிவதில் இணையற்றவர்கள். தென் பாண்டி நாட்டாருக்கு எவ்வளவுதான் படையுதவி கிடைக்கட்டுமே! நமக்கென்ன கவலை? நம்முடைய படைக் கூட்டுறவின் முன் அவர்கள் என்ன செய்ய முடியும்? மேலும் தென்பாண்டி நாட்டிலிருந்து நமக்குக் கிடைக்கும் செய்திகளால் அங்கும் நிலைமை அவ்வளவு தெளிவாக இருப்பதாகத் தெரியவில்லையே? 'இடையாற்றுமங்கலம் மகாமண்டலேசுவரர் மாளிகையிலிருந்து பாண்டியமரபின் அரசுரிமைச் சின்னங்கள் கொள்ளை போய்விட்டதாக'—நேற்றுக் கொற்றவைக் கூத்தைப் பார்த்துக் கொண்டிருந்தபோது கொடும்பாளூரார் வந்து ஒரு செய்தி சொன்னார். நேற்றைக்குப் பிடிபட்ட அந்த ஒற்றனிடமிருந்து எவ்வளவோ இரகசியங்களைத் தெரிந்துகொள்ளலாமென்று நினைத்திருந்தேன். அவனோ கழுமரத்தில் உயிரைப் பலி கொடுக்கிறவரை ஒரு வார்த்தைகூட நமக்குச் சொல்லவில்லை. இராசசிம்மன் இலங்கையிலும், தாய்வழி உறவுமூலம் சேரர்களிடமும், படை உதவி பெறலாமென்று நம் காதில் செய்திகள் விழுகின்றன. அது எப்படியானாலும் நம்முடைய படையெடுப்பை நாம் உறுதி செய்துகொண்டு விடவேண்டி

அருள் வாக்கு

விளக்கு இருக்கிறது. அது பொருள்களைப் பார்க்க உபயோகப்படுகிறது. அந்த விளக்குகளைப் பார்க்கிற கண் ஒன்று இல்லாவிட்டால் பயனில்லை. மயக்கம் அடைந்து விழும்போது கண்கள் திறந்து கொண்டிருந்தாலும் பார்க்க முடியாது. ஆகையினால் மனசு இருந்தால்தான் கண்களால் காண முடியும். அந்த மனம் தானாக இயங்காது. ஆத்ம ஒளி அதில் அடித்தால்தான் மனம் நினைக்கும் சக்தியைப் பெறுகின்றது. மனம் நினைத்தால் கண் பார்க்கும். கண்கள் பார்த்தால் விளக்கு வெளிச்சம் தெரியும். விளக்கின் ஒளியால் பொருள்கள் தெரியும். அந்த ஆத்மாவின் ஒளியைத்தான் அறிவென்று கூறுகிறார்கள். அறிவு ஒரே விதந்தான். மின்சார ஒளியில் வித்தியாசம் கிடையாது. ஒரு பொத்தானை அழுத்தினால் எல்லாம் எரிகின்றன. ஆனால் பல்புகளுக்கு ஏற்றவாறு ஒளி இருக்கிறது. அறிவு ஒரே விதமானாலும் பக்குவத்துக்கு ஏற்றபடி ஒவ்வொன்றிலும் பிரகாசிக்கிறது.

—ஸ்ரீ சங்கராச்சாரியார், காஞ்சீ காமகோடி பீடம்

யதுதான். உங்கள் கருத்துக்களையும் மனம் விட்டுச் சொல்லி விடுங்கள்."

சோழன் முகத்தையே பார்த்தவாறு பேச்சை உற்றுக் கேட்டுக் கொண்டிருந்த நால்வரும் பேச்சு நின்றதும் தங்களுக்குள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

"நேற்று நடந்த சம்பவத்திலிருந்து நம்முடைய ஆட்சிக்குட்பட்ட பகுதிகளிலும் பாண்டி நாட்டு ஒற்றர்கள் போதுமான அளவு நடமாடிக் கொண்டிருக்கிறார்கள் என்றே என்னால் அனுமானிக்க முடிகிறது" என்றான் கண்டன் அமுதன்.

"அதில் என்ன சந்தேகம்? நமது வசதிக்காக நாம் நம்முடைய ஒற்றர்களைத் தெற்கே அனுப்பியிருக்கவில்லையா? அவர்களும் அதே வசதிக்காக ஒற்றர்களை இங்கே அனுப்பத்தானே செய்வார்கள்?" என்று சோழன் பதில் கூறினான்.

"இளவரசன் இராசசிம்மன் படை உதவி கோரி இலங்கைக்குப் போயிருக்கிறானா? அல்லது வஞ்சிமாநகரத்துக்குப் போய் மலை நாட்டுச் சேரர் படையைக் கொண்டு வரச் சென்றிருக்கிறானா? இரண்டுமே இல்லாமல் தான் தங்கியிருப்பது வெளியே பரவிவிடாமல் தென்பாண்டி நாட்டிலேயே தங்கியிருக்கிறானா?" என்று அரசூருடையான் கேட்டான்.

"எப்படியும் குமார பாண்டியன் தென்பாண்டி நாட்டு எல்லைக்குள் இருக்க முடியாது! ஏனென்றால் நாம் அனுப்பிய ஆட்கள் இலங்கை போகும் வழியில் செம்பவழத் தீவில் அவனைச் சந்தித்துக் கொல்ல முயன்றிருக்கிறார்கள். ஒன்று அவன் இலங்கைக்குப் போய்க் கொண்டிருக்க வேண்டும். அல்லது இலங்கையிலிருந்து வந்து கொண்டிருக்க வேண்டும். இரண்டுமில்லா விட்டால் செம்பவழத் தீவிலேயே தங்கி மறைந்து வசிக்க வேண்டும்" என்று கொடும்பாளூரான் தன் அனுமானத்தைச் சொன்னான்.

"நாம் இன்னும் அனுமானங்களிலேயே உழன்று கொண்டிருப்பதில் பயனில்லை. சிந்தித்துக் கொண்டே இருக்கும் வரையில் அனுமானங்கள் பயன்படும், செயலில் இறங்கும்போது தீர்மானங்களுக்கு வந்து விட வேண்டும். இப்போது நாம் முடிவான திட்டத்துக்கு வந்து எண்ணங்களாலும், செயல்களாலும் ஒருமுகமாக ஒன்றுபடுகிற நேரம். எப்படியானாலும் படையெடுத்துச் சென்று பாண்டி நாட்டின் தென் கோடி வரை வென்றே தீருவது என்பது நம் நோக்கமாகி விட்டபின் தயங்குவதற்கு இடமில்லை. என் தீர்மானத்தை இப்போதே உங்களிடம் சொல்லி விடுகிறேன். தஞ்சையிலும், பழையாறையிலும், உறையூரிலுமாகப் பிரிந்திருக்கும் மூன்று பிரிவான சோழ நாட்டுப் படைகளும் இன்னும் சிறிது காலத்தில் கொடும்பாளூருக்கு வந்து சேர்ந்துவிட ஏற்பாடு செய்யப்போகிறேன். முடிந்தால் இந்தப் படைகளில் ஒரு பகுதியைக் கடல் வழியாக விழிஞத்துக்கு அனுப்பித் தெற்கேயிருந்தும் திடீர்த் தாக்குதலைச் செய்யலாம். அதைப் பற்றிப் பின்பு யோசிக்கலாம். கீழைப்பழூர்ச் சேனைகளையும் விரைவில் கொடும்பாளூருக்குக் கொண்டு வந்துவிட வேண்டும். நமது வடதிசைப் பெரும்படை முதலில் ஒன்றுகூடுமிடம் கொடும்பாளூராக இருப்பதில் உங்களில் யாருக்கும் ஆட்சேபனை இருக்க முடியாது. படைகளெல்லாம் கொடும்பாளூரில் வந்து கூடியபின் அவைகளை இரண்டு பெரும் பிரிவாகப் பிரிக்க வேண்டும். படையெடுப்பின்போது மொத்தமாக எல்லாப் படைகளையும் ஒரே வழியாகச் செலுத்திக் கொண்டு போய்ப் பாண்டி நாட்டில் நுழையக் கூடாது. கிழக்கு வழியாக ஒரு படையும், மேற்கு வழியாக ஒரு படையுமாக ஒரே சமயத்தில் போய் வளைத்துக் கொள்ள வேண்டும்" என்று சோழ மன்னன் திட்டத்தை விவரித்தான்.

"அப்படியானால் பறம்பு நாட்டில் தொடங்கித் திருவாதவூர் வழியாக ஒரு பகுதிப் படையையும், சிறுமலை, திருமால்குன்றம் வழியாக மற்றொரு பகுதிப் படையையும் அனுப்பலாம். இரு பகுதிப் படைகளும் மதுரையில் சந்தித்துக் கலந்து பேசிக் கொண்டு மீண்டும் கிழக்கிலும், மேற்கிலுமாகப் பிரிந்து தென்பாண்டி நாட்டுள் பிரவேசிக்கலாம்" — என்று கண்டன் அமுதன் சோழனின் திட்டத்தையே மேலும் விளக்கினான்.

"செய்யலாம்! ஆனால் தென் பாண்டிப் படைகளும், நம் படைகளும் எந்த இடத்தில் சந்திக்குமென்று உறுதி சொல்வதற்கில்லை. எந்த இடத்திலும் திடீரென்று எதிர்ப்பட்டு நம்மைத் தாக்கலாம் அவர்கள்" — இப்படிக் கூறியவன் பரதூருடையான். "மதுரையை நாம் வென்றிருந்தாலும் சரியான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து அந்த நகரைக் காக்கவில்லை. ஆகவே அவர்கள் படை வலிமையால் மதுரையையும் கடந்து வந்து நம்மை எதிர்த்தாலும் அதைச் சமாளிக்க

நாம் தயாராகத்தான் இருக்க வேண்டும்" என்று சோழன் வற்புறுத்தினான்.

எல்லோரும் தம் படைகளைக் கொடும்பாளூருக்குக் கொண்டு வர ஒப்புக் கொண்டனர். உடனே அரண்மனை நிமித்தக்காரரை வரவழைத்துப் படை கொண்டு வருவதற்கு நல்ல நாளும், கோளும், வேளையும் குறித்துக் கொண்டனர் அவர்கள் ஐவரும். எல்லாப் படைகளும் வந்து தங்குவதற்கு வேண்டிய வசதிகளைச் செய்யுமாறு சோழன் கொடும்பாளூர் மன்னனை வேண்டிக் கொண்டான்.

எப்படியும் சில வாரங்கள் அல்லது சில திங்களுக்குள் படையெடுப்பை ஆரம்பித்துவிட வேண்டுமென்று உறுதி கொண்டனர். இரண்டு மண்டலக் காலம் என்று காலத்தை எல்லை கட்டி வரையறுத்தான் கண்டன் அமுதன். இரண்டு பிரிவாகப் பிரிந்துதென் திசை செல்லும் படைகளுக்கு அரசுருடையானும், பராந்தகனுடையானும், தளபதிகளாக இருக்க வேண்டுமென்று மற்ற மூவரும் வேண்டிக் கொண்டனர். அவர்களும் மறுக்காமல் ஒப்புக் கொண்டார்கள்.

"நம் படையெடுப்பில் வெற்றி கிடைக்கும் என்பதற்கு எடுத்த எடுப்பிலேயே நமக்கு நல்ல சகுனந்தான் கிடைத்திருக்கிறது. நம்முடைய கழுமரம் போர் தொடங்குமுன்பே தென பாண்டி நாட்டு வீரனொருவனைப் பலி வாங்கிவிட்டது" என்று சொல்லிச் சிரித்தான் கொடும்பாளூர் மன்னன்.

"இந்த ஒரு பலி மட்டும் போதாது. இன்னும் எத்தனை தென் பாண்டி நாட்டு ஒற்றர்கள் சிக்கினாலும் உங்கள் கழுமரத்துக்குப் பலி கொடுக்கலாமே!" என்றான் அரசுருடையான்.

"படையெடுப்புத் தொடங்குவதற்கு முன் தெற்கே திரியும் நம் ஆட்களில் ஒரு சிலரைத் தவிர மற்றவர்களை இங்கே வரவழைத்துவிட வேண்டும்" என்று சொல்லிக் கூட்டத்தைக் கலைத்தான் சோழ மன்னன்.

அன்று மாலை கொடும்பாளூர்க் கோட்டையின் முன் புறத்து வாயிலுக்கு மேலே மதிலின் மாடத்தில் போருக்கு வீரர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு அடையாளமான முரசம் இடிபோல் ஒலித்தது. 'சேர வாரும் போர்வீரர்களே!' என்று அந்த முரசொலி அறைகூவியபோது கொடும்பாளூர் நகரை வியப்பில் ஆழ்த்தியது. மக்கள் கூட்டமாக நின்று அந்த முரசு ஒலிப்பதை வேடிக்கை பார்த்தனர். (தொடரும்)

சிரிக்காதே!



"நான் ஒவ்வொரு வீடாகச் சென்று வம்பு பேசிக் கொண்டு அலையறதில்லே."

"என்னத்துக்கு அலையணும்? அதான் உங்க வீட்டிலே டெலிபோன் இருக்கே!"

★

"என் மனைவியிடம் நான் எதையும் சொல்லி விடுவேன். எனக்கு ஒளிவு மறைவே கிடையாது!"

"அவளிடம் பொய் சொல்வதுண்டா?"

"அதான் சொன்னேனே, எதையும் சொல்லி விடுவேன் என்று!"

★

நர்ஸ்: டாக்டர், சார்! என்னைப் பார்த்துக் கல்யாணம் செய்து கொள்வாயா என்று அந்த நோயாளி கேட்கிறார்?

டாக்டர்: உன்னைப் பார்த்தா? அவனுக்கு உடம்புக் கோளாறு அதிகமாகி விட்டாற்போலே இருக்கு!

★

மனைவி: ஏதோ கீழே சப்தம் கேட்கிறதே! திருடனாக இருக்கப் போகிறது!

கணவன்: திருடன் ஒன்றும் சத்தம் போட மாட்டான். நிசப்தமாகத்தான் திருடுவான், தூங்கு!

மனைவி: (சிறிது நேரம் கழித்து) ஐயோ! ஐயோ!...ஒரே நிசப்தமாக இருக்கே, போய்ப் பாருங்களேன்!

★

"அந்தச் சினிமாக்காரர் ரேடியோவிலே பாடுகிறதுனாலேயே ரேடியோ செட்டுகள் ஏராளமா வியாபாரம் ஆகி விடுகிறதாமே!"

"ஆமாம்! கேட்டு விட்டுப் பல பேர்கள் தங்கள் ரேடியோக்களை விற்றுக் கொண்டிருக்கிறார்களாம். அந்த செகண்ட் ஹாண்டு வியாபாரத்தைத்தான் சொல்லுகிறார்கள்."

★

வயது முதிர்ந்த நாட்டியக்காரி: செகரட்டரி சார்! எனக்கு உங்க சபையில் ஒரு 'சான்ஸ்' கொடுத்துப் பாருங்களேன்!

செகரட்டரி: ஓ! தாராளமாய்க் கொடுக்கறேன். ஆனால் பார்க்க முடியாது!

★

"நீங்கள் கடவுளிடம் நாளையச் சாப்பாட்டுக்கு வழி செய்து விடுங்கள் என்று வேண்டிக் கொள்கிறீர்களே, ஒரு வாரத்துக்குச் சேர்த்து வேண்டிக் கொள்ளக் கூடாதோ?"

"அத்தனை நாளைக்குச் சாப்பாடு பழசாகப் போயிடுமே!"


ஆரவாரம் அடங்கிறது.

கூடாரத்தின் உச்சியிலே கோபால் பட்டாம் பூச்சியைப் போலப் பறந்து கொண்டிருந்தான். பாய்ந்து வரும் கோபாலின் கைகளைப் பற்றிக் கொள்ள இமைக்காத விழிகளால் அவன் ஒவ்வொரு அசைவையும் கண்காணித்துக் கொண்டு தலைகீழாகப் பாரிலே ஊசலாடியபடி பற்றும் பாரிலே தொங்கிக் கொண்டிருந்தான் மாதவன்.

மறு பக்கத்துப் பாரிலிருந்து பாய்ந்து வரும் கோபாலின் கரங்களைப் பற்றுவதென்பது எப்போதுமே சிரமமான ஆபத்தான விஷயம். கோபால் பாரிலே பாய்ந்து விளையாடும் போதெல்லாம் மாதவனின் விரல்கள் சூனிய வெளியைத் துழாவியபடி துடிப்போடு காத்திருக்கும். விரிந்த தன் கரங்களிலே குறிப்பிட்ட கால அளவுப்படி அவன் விரல்கள் வந்து பதிய வேண்டுமே; அப்படிப் பதிந்த உடனே அவனைப் பற்றி ஊசலாடி உந்தி மறுபடி வீசவேண்டுமே என்ற தவிப்போடு தாளமிடும் உள்ளத்தோடு தலைகீழாக ஆடிக் கொண்டிருப்பான் மாதவன். பார் விளையாட்டின் ஜீவனான காலமென்னும் நேரப் பின்னலைச் சிடுக்காக்கிச் சிரிக்கும் பொறுப்பற்ற கோபாலின் செய்கையை நினைத்தாலே மாதவனின் நெஞ்சம் நடுங்கும்.

கோபாலைப் போல அந்தரத்திலே அநாயாசமாகப் பாய்ந்து பாய்ந்து விளையாடும் திறமை இருந்தும்கூட இன்று மாதவன் 'பார்'க் கயிற்றிலே முழங்கால்களைப் பின்னிப் பிணைத்துக் கொண்டு தலைகீழாகத் தொங்கிக் கொண்டிருப்பதற்குக் காரணம் கோபால்தான். கோபால் இருக்கும் வரை பாய்ந்து வரும் அவனைப் பற்றிக் கொள்ள மாதவன் இப்படி வௌவாலாகத் தொங்கியபடி இருக்க வேண்டியதுதான். பார் விளையாட்டுக்களின் நிர்வாகியான தனபால் - கோபாலின் தந்தை - இந்த முறையை மாற்றவே மாட்டார்.

அதோ, கோபால் அந்தரத்திலே பறந்து வருகிறான், விதிக்குப் புறம்பான நேரத்தையும் தூரத்தையும் கையாளும் துணி சுற்றிய கோபாலின் மணிக்கட்டுகளைப் பற்றத் தயாராகத் தவித்தபடி இருந்தன மாதவனின் விரல்கள். அடுத்த விநாடி கோபாலின் உடல் பளு மாதவனின் உடலினுள்ளே புகுந்து இழுக்கவே ஊஞ்சல் கயிற்றை முழங்கால்கள் இறுக்கிக் கொண்டன.



மாதவனுக்குக் கீழே அவன் கைகளைப் பற்றித் தொங்கியபடியே கோபால் கேட்டான்: "உன்னை நோக்கி வரும் என்னைப் பிடித்து வீச நீ விரும்பவில்லையல்லவா?"

"இந்தக் கூடாரத்தின் உச்சியிலே இங்கும் அங்கும் அந்தரத்திலே பாய்ந்து விளையாடும் உன்னைப் பற்றிப் பந்தாடுவதற்காகவே எனக்குச் சம்பளம் கொடுத்து வருகிறார்கள். ஆனால் பாய்ந்து வருபவர்களைப் பற்றிக் கொள்ளும் என் முறை உனக்குப் பிடிக்காவிட்டால் இந்த சர்க்கஸில் மூன்று 'ரிங்கு'கள் இருக்கின்றன. உனக்குப் பிடித்தமான விதானத்திலே போய் நீ விளையாடலாம்" என்றான் மாதவன் அமைதியாகத் தன் கைப்பிடியிலே உள்ள கோபாலை இங்குமங்குமாக அலைக் கழித்து ஆட்டிக் கொண்டே.

"உண்மைதான். ஆனால் இப்போது எங்களுக்கு வேண்டியது பற்றும் பாரிலே தொங்குவதற்கு ஒரு புதிய நபர். இதைப்பற்றி நான் என் அப்பாவிடம் பிரஸ்தாபிக்கப் போகிறேன்" என்றான் கோபால். அவன் முகத்தில் அகம்பாவம் அப்பிக் கிடந்தது.

"அப்படியே செய். விதிமுறை தவறி விளையாடும் உன்னைப் பிடிக்க நான் படும் அவஸ்தையிலிருந்து எனக்கு விடுதலையாவது கிடைக்கும்" என்று சொல்லி அவனை வேகமாக வீசிப் பிடியைத் தளர்த்தினான் மாதவன். கோபாலும் மறுகோடிக்குப் பறந்து சென்று போய்ப் படிகளிலே தொத்திக் கொண்டு நிமிர்ந்து நின்றான்.

அன்று பயிற்சி நேரம் முழுவதும் மாதவனின் காதுகளில் கோபாலின் வார்த்தைகள் தான் ரீங்கார மிட்டுக் கொண்டிருந்தன.



பார் விளையாட்டுப் பயிற்சி முடிந்த பிறகு கூடமாதவன் கீழே வரவில்லை. 'பார்' ஊஞ்சலிலே உட்கார்ந்தபடி சிந்தனையிலாழ்ந்து போனான்.

எத்தனை நேரம் அப்படி உட்கார்ந்திருந்தானோ தெரியாது. மாதவனின் கவனம் மறுபடியும் சர்க்கஸ் கூடாரத்தின் தரையிலே திரும்பிய போது பார் விளையாட்டிலே வல்லவரான தனபால் கீழே நின்று கொண்டிருப்பதைக் கண்டான். 'டிரபீஸ்' என்று சொல்லப்படும் அந்தரத்திலே அற்புதங்கள் செய்து காட்டுவதிலே நிகரற்று விளங்கும் அவர்தான் அந்த சர்க்கஸிலே உள்ள அத்தனை பேருக்கும் குரு. கைதேர்ந்த சிற்பி ஒருவன் உருண்டு திரண்ட உடலமைப்புக் கொண்ட ஆண்மகனைச் செதுக்கி எடுத்தால் எப்படி இருக்குமோ அப்படி இருந்தது அறுபதை நெருங்கிக் கொண்டிருந்த உழைப்பினால் உரம் பெற்று இறுகிப் போன தனபாலின் கட்டுத்தளராத உடல்.

தகப்பனைப் போல் தனபாலிடம் மதிப்பும் மரியாதையும் அன்பும் பாராட்டி வந்தான் மாதவன். பார் விளையாட்டிலே அவரது மனப்பூர்வமான பாராட்டுக்களையும் பெற்றிருந்தான். அப்படி இருந்தும் அவர் தன்னைப் பற்றுபவனாகவும் கோபாலைப் பறப்பவனாகவும் வைத்திருப்பதைத்தான் அவனால் புரிந்து கொள்ளவே முடியவில்லை.


எத்தனையோ வேதனைகளிலும் மாதவனின் மனத்துக்கு இதமளிக்கும் ஒரு பொருளும் அந்த சர்க்கஸ் கூடாரத்திலிருந்தது. அந்த ஒரு பொருளுக்காக எத்தனை கஷ்டங்களை அனுபவித்தாலும் அங்கிருந்து போகக்கூடாது என்று தீர்மானித்திருந்தான். தன் சிங்காரப் பேச்சினாலும் சிரிப்பினாலும் உடல் வனப்பினாலும் அது மாதவனைப் பித்தனாக்கிக் கொண்டிருந்தது. மாதவனை மட்டும்தானா?

அந்த சர்க்கஸிலேயே நளினி ஒரு ஒளி விளக்கு. சிங்கார 'உடையணிந்து குதிரை மீது நின்று அவள் வரும் ஒயிலைக் காணவே தினம் தினம் கூடாரத்திலே கூட்டம் வந்து குவியும். இருளிலே ஒளி உமிழ்ந்து பறக்கும் மின்மினியைப்போல் நளினி ஆட்ட நேரத்தில் அவ்வப்போது தோன்றும் போதெல்லாம் கூட்டத்திடையே ஒரு சலசலப்பு ஏற்படும். அத்தனை அழகி அவள். அவள் தனக்கே உரியவளாகப் போகிறாள் என்ற நினைப்பிலே கர்வங் கொண்டிருந்தான் மாதவன். நளினி மாதவனிடம் தனி அன்புதான் வைத்திருந்தாள். நேரங்கிடைக்கும் போதெல்லாம் அவனுடன் சிரிக்கப் பேசி அவன் சிந்தையைக் கிறங்க வைத்துக் கொண்டிருந்தாள்.

கோபாலும் கூடத்தான், நளினியின்மீது ஒரு கண் வைத்திருந்தான். 'ரிங் மாஸ்டர்' தனபாலின் மகன் என்ற கர்வத்தோடு அவளை அவன் காதலித்தான். 'அந்த அகம்பாவக்காரனுக்குத் தன் அன்பை அவள் வழங்க மாட்டாள்; காதல் போட்டியிலே கோபாலைத்தான் வெற்றி கொண்டு விடலாம்' என்று கவலையின்றி இருந்து வந்தான் மாதவன்.

சர்க்கஸ் ஆட்டக்காரர்கள் எல்லோருமே பகல் வேளையில் ஒத்திகை செய்து பார்த்துக் கொள்ளுவது வழக்கம். மாதவனின் நண்பன் ராஜு வேறொரு ரிங்கில் விளையாடுபவன். பார் விளையாட்டிலே நல்ல திறமைசாலி. பயிற்சி நேரத்தின்போது ராஜுவைப் பற்றும் பாரிலே இருக்கச் சொல்லித் தான் பறக்கும் பாரிலே மனம் சலிக்கும் வரை கூடாரத்தின் உச்சியிலே இங்கும் அங்கும் தாவி விளையாடித் தன் ஏக்கத்தைத் தணித்துக் கொள்ளுவான் மாதவன்.

இம்மாதிரிப் பயிற்சி நேரத்தின் போதெல்லாம் நளினியும் அனேகமாக உடன் இருப்பாள். மாலையிலே ஜனக் கூட்டத்தின் ஆரவாரமான கைத்தட்டலைவிட இந்த அமைதி



யான வேளையிலே தன் காதலி கண் இமைக்காமல் வியப்பினால் விம்மிதமடைந்து போய்த் தன் விளையாட்டைப் பார்த்து ரசித்துக் கொண்டிருக்கிறாள் என்ற நினைப்பு ஒன்றே அவன் அலைபாயும் இதயத்துக்கு ஒரு ஆறுதல்.

அன்றும் வழக்கம்போல ஒத்திகைக்கு ராஜுவுடன் மாதவன் கூடாரத்துக்கு வந்தான். தற்காப்புக்காகக் கட்டப்பட்டுள்ள வலையை அவிழ்த்துக் கொண்டிருந்தார்கள். ''வலையை ஏன் அவிழ்க்கிறீர்கள், இப்போது நாங்கள் ஒத்திகை பழக வேண்டுமே'' என்றான் மாதவன்.

'' வலையிலே கயிறு அறுந்திருக்குதாம். 'மாஸ்டர்' அதைச் சரி பார்த்து வைக்கச் சொன்னாரு !'' என்றார்கள் அவிழ்த்துக் கொண்டிருந்தவர்கள். தனபாலை எல்லோரும் 'மாஸ்டர்' என்றுதான் கூப்பிடுவது வழக்கம்.

'' சரி, அப்படியானால் இன்றைக்கு நமக்கு பிராக்டீஸ் கிடையாது. கடற்கரைக்குப் போய்விட்டு வரலாம் வா!'' என்றான் ராஜு.

ஆடாமல் அசையாமல் அந்தரத்திலே தொங்கும் 'பார்'களைப் பார்த்துக் கொண்டே மாதவன் ''உஹூம், வேண்டாம் வலையில்லா விட்டால் என்ன?'' என்று சொல்லியபடியே நூலேணியைப் பற்றிச் சரசர வென்று மேலே ஏறலானான் மாதவன். ராஜுவின் கால்களும் தானாகவே அவனைப் பின்பற்றித் தொடரலாயின. உடனிருந்த நளினி ஏதோ சொல்ல எத்தனித்தாள். ஆனால் வார்த்தைகள் வாய்க்குள்ளேயே உடைபட்டுப் போக அப்படியே யானை நிற்கும் மரத்தொட்டியின் மீது உட்கார்ந்து விட்டாள்.

உச்சியை அடைந்த மாதவன் ஒரே தாவலில் மறு கோடிக்குப் பாய்ந்து சென்று நின்று கொண்டான். ஒரு விநாடி தரையை உற்றுநோக்கினான். வழக்கமான தூரத்தை விட அதிக உயரத்தில் இருப்பதாகத்தான் தோன்றியது. கீழே வலை கட்டி இருந்தால் தூரத்தில் பாதி குறைந்து விட்டதைப் போலத் தோன்றும். அது பிரமையைத் தவிர வேறில்லை. கூட்டமில்லாத கூடாரத்தில் வலையில்லாத வெறும் வெளியில் காலன் தன் கைகளை அகல விரித்துத் தனக்காகக் கீழே காத்திருப்பது போன்று தோன்றிய நினைவை உதறிவிட்டு நிமிர்ந்து நோக்கினான் மாதவன். காலை இளம் வெய்யிலில் பொன் முலாம் பூசிய கூடாரத்தின் விதானம் படபடத்துத் தன் உடலைச் சிலிர்த்துக் கொண்டது.

அன்று காலை மாதவன் பயிற்சிக்குக் கிளம்பிக் கொண்டிருந்த போது ராஜு ஒரு விசேஷமான செய்தியுடன் அவன் கூடாரத்துக்குள் வந்தான். சர்க்கஸ் கம்பெனியை இன்னொருவர் வாங்கப் போவதாக இரண்டு மூன்று நாட்களாகவே பிரஸ்தாபமிருந்து வந்தது. இது அவர்கள் வாழ்வில் சகஜம். முதலாளிகள் மாறினாலும் அதில் பணிபுரிபவரின் வாழ்வில் எவ்வித மாற்றமுமிருக்காது. ஆகவே இவ்வித மாற்றத்தைப் பற்றி அவர்கள் அதிகமாக அக்கறை காட்டுவதில்லை. ஆனால் அன்று ராஜு சொன்ன விஷயம் மாதவனைத் தூக்கி வாரிப் போடுவதாக இருந்தது.

'' மாதவா! அன்று நீ வலை இல்லாமல் பார் விளையாடும் போது ஒரு மனிதன் கூடாரத்தில் உட்கார்ந்து பார்த்துக் கொண்டிருந்தாரே நினைவிருக்கிறதா ?''

'' ஆமாம். நான்கூட அவரை வெளியே போகும்படி கேட்டுக் கொண்டேனே.''

'' அந்த மனிதர் யார் என்று தெரியுமா ? அவர்தான், இனி நம்முடைய முதலாளி. இந்த சர்க்கஸை வாங்கப் போகிறவர்.''

'' நிஜமாகவா ?'' என்று கேட்டான் மாதவன்.

'' பின் பொய்யா சொல்கிறேன்? அதைவிட முக்கியமான விஷயம் இன்று காலை அவர் நம்ம மாஸ்டரிடம் சொல்லிக் கொண்டிருந்த செய்திதான் '' என்றான் ராஜு.

'' என்ன சொல்லிக் கொண்டிருந்தார் ?''

'' நாளையிலிருந்து உன்னை நடு 'ரிங்'கிலே போடும்படி உத்தர விட்டார். பற்றுபவனாக இல்லை. பறப்பவனாக...''

மின்னல் வெட்டிச் சென்றது மாதவனின் உடலிலே. தன்கைகள் நடுங்குவதை மாதவன் உணர்ந்தான். மாதவனுக்கு நம்பிக்கைப்படவில்லை. '' ராஜு சும்மா கதை அளக்காதே'' என்றான் போலியாகச் சிரித்தபடி.

''நீ இப்போதே கிளம்பு. கூடாரத்தில்தான் அவர்கள் நின்றுபேசிக்கொண்டிருக்கிறார்கள்'' என்று சொல்லி அவனை இழுத்துக் கொண்டு வந்து கூடாரத்தினுள் தள்ளி விட்டு ''தைரியமாகப் போ. நல்ல சந்தர்ப்பத்தை நழுவ விடாதே'' என்று தெம்பூட்டி அனுப்பினான்.

மாதவன் கூடாரத்தினுள்ளே நுழைந்த போது அங்கு தனபால் மட்டும்தான் ஒரு சிறிய 'ஸ்டூல்' மீது இடிந்து போய் உட்கார்ந்திருந்தார். திடீரென்று இத்தனை முதுமையும் தளர்ச்சியும் அவரிடம் எப்படித் தோன்றியது என்று மாதவன் பிரமித்துப் போய் நிற்கும் போதே தனபால் இடிந்த குரலில் '' நாளையிலிருந்து நீ நடு ரிங்கில் - பிரதான பாரிலே விளையாட வேண்டும் மாதவா'' என்றார்.

'' அதற்கு நான் தகுதியானவனில்லை. தயாராகவும் இல்லை மாஸ்டர் ''—அவன் குரலில் உறுதியும் கடுமையும் கலந்திருந்தன.

''ஆனால்...'' என்று அவன் பக்கம் திரும்பினார் தனபால். அவர் சோர்ந்த முகத்தைப் போலவே குரலும் சுரத்தில்லாமல் இருந்தது. ''இதை நான் உனக்குக் கொடுத்துத்தானாக வேண்டும், அப்படி எனக்கு உத்தரவு.''

'' நான் அதை ஏற்க முடியாது. உங்களிடம் உத்தரவிட்டவரிடம் சொல்லி விடுங்கள்.'' வாடிய கொடியின் வேரிலே நீரை வார்த்தால் எப்படி அது தலை நிமிர்ந்து சிரிக்குமோ அப்படித் தனபாலின் முகத்திலே ஒளி ஏறியது. சற்று முன்பு தொய்ந்து கிடந்த அந்த முதியவரின் தோள்கள் நிமிர்ந்து விரிவதைக் கண்டான் மாதவன். அந்தக் கண்களிலே பழைய ஒளி திரும்பியது. எழுந்து அவன் தோள்களைப்பற்றியவாறே ''மாதவா...மாதவா'' என்றார். உணர்ச்சி மிகுதியால் அதற்குமேல் அவரால் பேச முடியவில்லை. கண்களில் நீர்

மல்கியது. தன் பலவீனத்தை மறைத்துக் கொள்ளச் சட்டென்று அந்த இடத்திலிருந்து வெளியேறினார்.

மறுநாள் காலை.

ஒத்திகை நடந்து கொண்டிருந்தது. அதிசயம் போல் கோபால் அன்று ஒத்திகைக்கு வந்திருந்தான். மாதவன் தலைகீழாகப் பாரிலே தொங்கியபடி ஆடிக் கொண்டிருந்தான். அவன் மனத்தில் ஏனோ ஒரு இனந் தெரியாத வெறுப்புக் குடிகொண்டிருந்தது. தன்னை நோக்கி வந்த கோபாலின் கரங்களைப் பற்றிக் கொண்டான். மாதவனின் பிடியிலே தொங்கிய கோபாலின் முகத்திலே ஆத்திரம் குமுறிக் கொண்டிருந்தது.

"டேய், மாதவா! வரவர உன் மண்டைக் கர்வம் அதிகமாகி விட்டது. புதிய முதலாளியைக் காக்காய் பிடித்து என்னை சர்க்கஸிலிருந்தே வெளியேற்றத் திட்டம் போட்டாயல்லவா. இருக்கட்டும். இன்று இப்போது உன்னைவிட நான் சிறந்த ஆட்டக்காரன் என்பதை நிரூபிக்கா விட்டால் நான் கோபாலல்ல." மாதவனின் பிடியிலிருந்து விடுபட்டு மறுகோடிக்குப் பாய்ந்து போய் நின்று கொண்டான்.

கோபாலின் குற்றச்சாட்டு மாதவனின் உள்ளத்திலே ஆத்திரத்தைக் கிளறி விட்டது. அதே சமயத்தில் உடலைக் குலுக்கும் ஒரு பீதியும் ஏற்பட்டது.

அவன் பயந்தது போலவே கோபால், தாவி வரப் பயன்படும் பாரிலே நின்று கொண்டு பெருங்கூட்டத்தைப் பார்த்துச் சொல்லுவது போல உரத்த குரலில் பேசினான். "மகா ஜனங்களே பொது மக்களே. உங்கள் அன்புக்குப் பாத்திரமான இணையற்ற பார் விளையாட்டுக்காரர் தனபாலின் மகன் கோபால் இன்று பார் விளையாட்டிலே யாரும் செய்யாத ஒரு அற்புதத்தைச் செய்து காட்டப் போகிறேன். 'டிரிப்பிள் ஸம்மர்ஸால்ட்' என்னும் அந்தரத்திலே மூன்று கரணம் போட்டு மறுகோடிக்குப் போய்த் திரும்பும் விந்தையைக் காணப் போகிறீர்கள் இப்போது."

மூன்று கரணம்...

மாதவனின் ஒவ்வொரு மயிர்க்காலும் "ஐயோ, வேண்டாம் வேண்டாம்" என்று ஓலமிட்டது.

"ஐயோ! மகனே கோபால் வேண்டாமடா" என்று அலறினார் தனபால்.

ஆனால் கோபால் எதையும் யாரையும் லட்சியம் செய்யவில்லை. பாரை வேகமாக உந்தி ஆடலானான். அவன் முகத்தைப் பார்க்கவே பயமாக இருந்தது. சர்க்கஸில் உள்ளவர்கள் அத்தனை பேரும் வந்து கூடி விட்டார்கள். எல்லோரது நெஞ்சமும் 'திக் திக்' என்று அடித்துக் கொண்டது. எல்லோரது பார்வையும் கோபால் மீதே பதிந்திருந்தது. செயலற்றுச் செய்வதறியாது நின்று கொண்டிருந்தார்கள்.

தன் உடலிலே ஆயிரமாயிரம் எறும்புகள் ஊர்ந்து கடிப்பது போன்ற உணர்ச்சியிலே சிக்குண்டு துடித்தான் மாதவன். பார் விளையாட்டிலேயே பயங்கரமானது மிகப் பெரியது இந்த மூன்று கரணம். எத்தனை பெரிய திறமைசாலிக்கும் நிதானம் தவறி விடும். என்றோ ஒருநாள் தனபாலிடம் கோபாலைத் தன் உடன் பிறந்தவனாகப் பாவிப்பதாகச் சொன்னது நினைவுக்கு வந்தது.

ஒன்று இரண்டு என்று நேரத்தைக் கணக்கிடலானான் மாதவன். கோபால் ஒரு வேளை அதிர்ஷ்டவசமாகக் கரணங்களை ஒழுங்காகப் போட்டு விட்டால் அவனை எப்படியும் பற்றிக் கொள்ளத் தன்னாலான முயற்சி, சக்தி, திறமை அவ்வளவையும் பயன்படுத்துவது என்ற உறுதியுடன் ஊசலாடலானான்.

கோபால் பாரிலிருந்து விடுபட்டு வெற்று வெளியிலே பாய்ந்து விட்டான். பந்து போன்று முடங்கிய அவன் உடல் ஒன்று, இரண்டு, மூன்றாவது கரணத்தையும் பூர்த்தி செய்துவிட்டது. ஐயோ, ஆனால்.. ஆனால் சட்டென்று அவன் தன் உடலைப் பிரிக்கவில்லை. கைகளை மாதவனின் பக்கமாக நீட்டவில்லை. நிதானம் தவறிவிட்டது அவனுக்கு. தலைகுப்புறக் கீழே கீழே வலைக்கும் அப்பால் அவன் உடல் வெகு வேகமாகப் போய்க் கொண்டிருந்தது. அடுத்த விநாடி மாதவன் தன்னைப் பாரிலிருந்து விடுவித்துக் கொண்டு குபீரென்று கோபாலை நோக்கிப் பாய்ந்தான்.

வலைக்கு அப்பால்போய், கட்டாந்தரையிலே விழ வேண்டிய கோபாலின் உடல் மீது மோதி அவனைப் பற்றி வலையின் பக்கமாகத் தள்ளினான். எப்படி வலையில் விழுந்தால் உடலில் அடிபடாதோ அந்த நிலையில் மல்லாந்து கால் கைகளை அகல விரித்தபடி வலையிலே விழுந்தான் கோபால். விழுந்த மறுகணமே, இழுத்துக் கட்டப்பட்டுள்ள வலை விண்ணென்று எழும்பி அவனைப் பந்தாடியது. கோபாலும் லாகவமாகத் தன்னைச் சமாளித்தபடி துள்ளிக் குதித்து வலையிலே நிமிர்ந்து நின்றான்.

ஆனால் மாதவனோ...?

எந்தக் கோணத்திலே பாய்ந்தால் கோபாலைக் காப்பாற்றலாம் என்று கணக்கிட்டுத் தன் பாரிலிருந்து நழுவினானோ அவன் - கோபாலுக்கு உடலில் ஒரு சிறு அடி கூடப் படாமல் காப்பாற்றியவன் - வலையின் ஓரத்திலே குப்புற விழுந்தான். மார்பிலே முரட்டுக்கயிர் பாறையாகத் தாக்கி அவனைப் பொறிகலங்க வைத்து விட்டது. உடல் முழுதும் அதிர்ச்சி. தாக்கிப்போடும் வலையோடு போராடி ஒரு விதமாகத் தன்னைச் சமாளித்து எழுந்த போதும் கூடக் கூடாரமே சுழன்றது. கண்முன்னே எல்லாம் தட்டாமாலையாடின. அந்தச் சுற்றலிலே கோபாலின் குரலும் கேட்டது. தன்னை நோக்கி அவன் கைகளை முஷ்டியாக்கிக் கொண்டு ஓடிவருவதையும் மங்கலாக உணர்ந்தான்.

ஆடும் வலையிலே எழுந்து நிற்க முயற்சி செய்த மாதவன் பொத்தென்று மல்லாந்து விழுந்தான். அவனால் எதையுமே உணர முடியவில்லை. தன்னை நோக்கி வந்த முஷ்டிகளை—குத்துக்களை — முகத்தில் படியாமல் தடுக்கக்கைகள் தானாகவே தலைக்கு மேல் உயர்ந்துவிட்டன. அவன் உள்ளுணர்வின் செயல்தான் அது.





வாழ்க்கையில் நீங்கள் பெறுவதென்ன?
விளங்கும் வீரியமா
அல்லது
களைப்பு
ஓய்ச்சல்
பசியின்மை
அமைதியின்மை
மனச் சோர்வு
பொதுவில் பலவீனம்
வாழ்க்கையின் சந்தோஷத்தை கவலை, தெம்பின்மை, சிரமம் முதலியன கெடுக்காமல் காத்துக்கொள்ளுங்கள். வாழ்க்கையில் உண்மை வெற்றி தெம்பினுல்தான் ஏற்படும்—ஸனடோஜன் புதுபலம் அளித்து, உடல்வலிமை மனசக்தி அதிகரிக்கச் செய்கிறது. 25,000 த்துக்கு மேற்பட்ட வைத்தியர்கள் அதன் அபூர்வ சக்தியளிக்கும் குணத்திற்கு அத்தாட்சி அளிக்கிறுர்கள்.
ஸனடோஜன்
-மிக்கஉயர்ந்த பால் டானிக்

என்ன நடந்தது என்பதைப் புரிந்து கொள்ளவே அங்கு கூடி இருந்தவர்களுக்குச் சில விநாடிகள் பிடித்தன. வலையிலே நிலைவிழுந்து கிடந்த மாதவனைக் கோபால் தாக்க ஆரம்பித்ததும் தான் அத்தனை பேரும் சுய உணர்வு பெற்றார்கள். குபீரென்று வலைமீது தாவி ஏறிக் கோபாலின் மூர்க்கச் செயலிலிருந்து மாதவனைச் சிலர் விடுவித்தனர். கோபாலை இழுத்துக் கொண்டு போனார்கள் வேறு சிலர்.



சிராய்ப்பிலே தடவிய 'டிங்க்சரின்' விறு விறுப்பைப் போலவே மாதவனின் உள்ளத்திலும் வெறுப்பும் கோபமும் குமுறிக் கொந்தளிக்கலாயிற்று. கோபாலின் செயலை நினைக்க நினைக்க அவன் நெஞ்சம் விண்டு போயிற்று. இதற்கு ஒரு முடிவு கட்டித்தான் தீர வேண்டுமென்று உறுதி செய்து கொண்டான். சட்டென்று எழுந்திருந்தான். அவனைச் சூழ்ந்திருந்த நண்பர்களின் திகைப்பையும் மறுப்பையும் பொருட்படுத்தாமல் கோபாலின் கூடாரத்தை நோக்கி நடந்தான். அவன் நடையிலே ஒரு வேகம், எண்ணத்திலே ஒரு உறுதி ஏற்பட்டு விட்டது. தகப்பனாராக எண்ணி வந்த தனபாலின் உள்ளத்தைத் தன்னுடைய இந்தச் செய்கை புண்படுத்தும்; அவர் இருதயத்தைப் பிளந்து விடும் என்பதை அவன் எண்ணிப் பார்க்காமல் இல்லை. ஆனால் அவன் வாழ இதைத் தவிரவும் வேறு வழியில்லை.

கோபால் இன்னும் ஒத்திகை உடைகளைக் களையாமல்தான் உட்கார்ந்திருந்தான். தன் கூடாரத்துக்கு வந்த மாதவனைக் கண்டதும் ஓரளவு திகைத்துத்தான் போனான்.

"உடனே எழும்பு, ரிங்குக்கு. வா கூடாரத்துக்கு" என்று கர்ஜித்தான் மாதவன்.

"ஓ, சவால் விடுகிறாயோ?"

"ஆமாம். இன்று ஒரு முடிவுக்கு வந்தாக வேண்டும்....ம்...."

கோபால் மறுக்கவில்லை. முன்னால் செல்லும் மாதவனைப் பின் தொடர்ந்து வந்தான். மௌனமாக இருவரும் கூடாரத்தை நோக்கி நடக்கலானார்கள்.

மாதவன் பார் விளையாடும் இடத்துக்குக் கீழே கட்டப்பட்டிருந்த வலையின் முடிச்சுக்களை இழுத்து உருவிவிட்டான். வலை பொத்தென்று தரையில் விழுந்தது.

"இப்போது வலையே இல்லாமல் நீ சொன்னாயே அந்த 'டிரிப்பிள் சம்மர் ஸால்டை' நான் செய்து காட்டுகிறேன். உன்னால் முடியுமா?" என்றான் மாதவன்.

"முடியுமா என்று கேட்கிறாய்? முட்டாளே! எங்கே நான் அதில் வெற்றி பெற்று விடுவேனோ என்றுதான் அதை நீ பாழாக்கி விட்டாயே!" என்றான் கோபால். மாதவன் அதற்குப் பதில் சொல்லாமல் நூலேணி வழியே கூடாரத்தின் உச்சியை நோக்கி ஏறலானான்.

"அது நடந்துபோன விஷயம். இப்போது பற்றும் பாரிலே நீ இருக்க வேண்டும். பறந்து மூன்று கரணம் போட்டு வரும் என்னை நீ பிடிக்க வேண்டும். பிறகு உன்னை நான் பிடிக்கிறேன்" என்றான்.

மாதவனின் ஊஞ்சலாட்டத்தைப் பார்த்தபடியே கோபால் அவன் வரவை எதிர்நோக்கித் தயாராகத் தலைகீழாகத்தொங்கிக் கொண்டிருந்தான்.

பொன் கூரையாக மின்னிக் கொண்டிருந்தகூடாரம் விம்மித் தணிந்தது. 'ரெடி' என்று உரக்கக் கத்தி விட்டு மாதவன் பாரிலிருந்து தாவினான். கூடி இருந்தோர்உடல் சிலிர்க்க 'ஆகா!' என்று ஒலி எழுப்பினார்கள். ஒன்று இரண்டு...... மூன்று. மூன்றாவதுகரணத்தை முடித்துக் குறிப்பிட்ட கால அளவிலே உடலைப் பிரித்துக் கைகளைக் கோபாலின் பக்கமாக நீட்டினான். கோபாலும் மாதவனின் கரங்களைப் பற்றி விட்டான். ஒரே உற்சாக ஆரவாரம். கைத்தட்டல். கோபாலின் கைப்பிடியிலிருந்து மாதவன் எவ்விப் பற்றும் பாரைப் பிடித்துக் கொண்டு "திறமையாக என்னைப் பற்றியதற்குப் பாராட்டுகிறேன். இனி உன் முறை. எங்கே என்னைப்போலவே செய்து காட்டு, பார்க்கலாம்" என்றான்.

கோபால் மௌனமாக நூலேணி வழியே சரசரவென்று கீழே இறங்கி மறுகோடியிலுள்ள தாவும் பாரின் உச்சியை நோக்கி ஏறலானான். மறுபடியும் கூடாரத்தில் அமைதி குடிகொண்டது.

திடீரென்று மாதவனின் மனத்திலே ஒரு எண்ணக் கீற்று மின்னிச் சென்றது. 'கோபாலின் திறமையை ஒரு வேளை நான் தவறாகக் கணக்கிட்டு விட்டேனோ? நான் செய்தது போலவே அவனும் திறமையாகச் செய்து விட்டானானால்....? நான்தான் அவனைப் பிடிக்கத் தவறி விட்டேன் என்றல்லவா ஆகி விடும். குறையை என்னிடம் வைத்துக் கொண்டு மறுபடியும் அவனை மரண விளையாட்டிலே சிக்க வைத்து விட்டேனோ?' மாதவனின் உடல் நடுங்கியது.

'சே, என் மனம் ஏன் இப்படிப் படபடக்கிறது?' தன்னையே, தன் நினைவுகளையே வெறுத்துக் கொண்டான் மாதவன்.

கோபால் பாய்வதற்குத் தயாரானான்.

"வெற்றியோடு என் கைகளைப் பற்றிக் கொள்ள வா" என்று கூவினான் மாதவன், வௌவாலாகத் தொங்கிய நிலையிலிருந்தபடியே. முன்னும் பின்னுமாக ஊஞ்சலாடிக் கொண்டிருந்த மாதவனுக்கு முன்னால் வரும் போதெல்லாம் கோபாலின் உருவம்—அவன்

செய்கை—நன்றாகக் கண்களில் படும். 'இடீ ரென்று கோபால் ஏன் அப்படி? ஐயோ! அது என்ன அவனுக்கு?' சுழன்று நிமிர்ந்து தன் பாரிலே உட்கார்ந்து கொண்டான் மாதவன்.

''வயிற்றை இழுத்துப் பிடித்துக் கொண்டு விட்டது.''—முனகியபடியே இணைநிறுத்தினான் கோபால். மறுவிநாடி சரசரவென்று கயிற்றின் வழியே கீழே இறங்கி அடி வயிற்றைப் பிடித்தபடியே கூடாரத்தை விட்டு ஓடினான்.

சுமை குறைந்த மாதவனின் மனம் ஒரு நீண்ட பெருமூச்சை இழுத்துவிட்டது. கீழே இறங்கிய அவனை நோக்கித் தனபால் வந்து கொண்டிருந்தார். மாதவனின் இரு தோள் களையும் தன் இரு கரங்களால் பற்றிக் கொண்டு அவன் முகத்தை ஒரு விநாடி உற்றுப் பார்த்தார். அவரது ஒளிரும் விழி களில் நீர் துளிர்த்துப் பளபளத்தது.

''மாதவா! உன் திறமையை - தகுதியை - இன்றுதான் பூரணமாகக் கண்டேன். கோபா லுக்கு அவன் சொன்னதுபோல வயிற்றுக் கோளாறு இல்லை. பீதிதான் அவனை இங் கிருந்து ஓட்டிவிட்டது. உள்ளத்திலே பயத் தைச் சுமந்து கொண்டு கூடாரத்தின் உச்சிக் குப் போகவே கூடாது. நான் என்றுமே - எத்தனையோ ஆபத்துக்களுக்கு ஆளாகி யிருந் தாலும், உள்ளத்திலே பயத்துக்கும் பீதிக்கும் இடமளித்ததே இல்லை'' என்றார்.

''மாஸ்டர்! கோபாலை நீங்கள் உங்கள் உயிரைப்போல் மதிக்கிறீர்கள். உங்கள் கனவு பாழாகக் கூடாதே, மனம் புண்படக் கூடாதே என்றுதான் அவன் பார் விளையாட் டில் ஈடுபடுகிறானே தவிர உண்மையில் இந்த மரண விளையாட்டிலே அவனுக்குப் பற்றுதல் இல்லை'' என்றான் மாதவன்.

''நான் ஒரு சுயநலக்காரன் மாதவா. அதை இன்றுதான் உணர்ந்தேன். என் விருப்பத்தின் வெறியைப் பூர்த்தி செய்து கொள்ள முயன் றேனே தவிர அவன் விருப்பத்தைப் பற்றி நான் எண்ணிப் பார்க்கவே இல்லை.

''இத்தனை நாளும் செய்த தவற்றை இனி யும் செய்யமாட்டேன் மாதவா. இனி கோபா லுக்குப் பாரிலே இடமில்லை. அவனை மேலே அனுப்பவே மாட்டேன்.'' மெல்ல மெல்லத் தனபாலின் முகத்திலே படிந்திருந்த கலவரம் சுழன்று ஒளி பெறலாயிற்று.

''ஒரு சர்க்கஸை எப்படித் திறம்பட நடத்த வேண்டும் என்பதற்கு அவனிடம் நல்ல நல்ல திட்டங்களெல்லாம் இருக்கின்றன மாதவா. ஆகவே நம் பழைய முதலாளியிடம் பேசி இந்த சர்க்கஸையே அவனுக்காக வாங்கி விடத் தீர்மானித்திருக்கிறேன்'' என்றார்.

''ஒரு நல்ல முதலாளியாவதற்குத் தகுதி யானவன்தான் கோபால்'' என்றான் மாதவன் உற்சாகம் பொங்க.

சட்டென்று திரும்பிய தனபால் மாதவனின் தோளிலே தம் கையைப் போட்டுக் கொண்டு அணைத்தபடி, ''மாதவா! அந்தச் சர்க்கஸிலே நீயும் நானும்தான் பார்விளையாட்டு வீரர்கள். பற்றும் பாரிலே நான், பறந்து வரும் வீரனாக நீ மறுக்க மாட்டாயே?'' என்றார்.

''மறுக்கவா, அது என் பாக்கியமல்லவா?'' என்றான் மாதவன்.

அவன் உள்ளம் மகிழ்ச்சியால் பொங்கித் தான் போயிற்று. அதற்கு இணையானதொரு ஆனந்தத்தை அவன் அதுவரை அனுபவித்த தில்லை. துள்ளும் உள்ளத்துடன் தன் கூடா ரத்தை நோக்கி நடந்து கொண்டிருந்தான். கோபாலின் கூடாரத்தைத் தாண்டித்தான் அவன் கூடாரத்துக்குப் போக வேண்டும். ஏதோ ஒரு எண்ணம், பரிவு. மாதவனைப் பார்க்க வேண்டுமென்று தோன்றியது. கூடா ரத்துள் நுழையப் போனவனை உள்ளே பேச்சுக் குரல் தடுத்துநிறுத்தியது. பேசியது ஒருபெண். குரல் கம்மப்பேசிக் கொண்டிருந்தாள் நளினி.

''கோபால்...நான் எப்படி நடுங்கிப் போனேன் தெரியுமா? உங்களை மறுபடியும் மாதவன் சவால் விட்டு அழைத்ததும் என் உயிர்த் துடிப்பே நின்று விட்டது.''

''நிஜமாகவா நளினி...நீ..நீ...அவனையல் லவா காதலிக்கிறாய் என்று நினைத்தேன்.''

''உங்களுக்காகத்தான் உங்களைக் காப்பாற் றத்தான் அப்படி நடித்தேன்.''

''என்னைக் காப்பாற்ற நடித்தாயா?''

''ஆமாம். ஒவ்வொரு நாளும் உங்களைத் தவற விடாமல் அவர் பிடிக்க வேண்டுமே என்பதற்காகத்தான் அப்படிப் பழகினேனே தவிர என் உள்ளத்திலே உங்களுக்குத்தான் இடமளித்திருந்தேன்.''

''உண்மையாகவா, நளினி?''

''இதைவிட ஒரு பெண் எப்படி உண்மை யைச் சொல்ல முடியும்?''

''அப்படியானால் நான் பாக்கியசாலிதான் நளினி!''

மாதவனின் இதயம் கல்லடிபட்ட கண் ணாடியைப்போலப் பளீரென்று நொறுங்கியது. மனிதன் எதைத் தன்னிடமிருந்து யாராலும் பறிக்க முடியாது என்று உறுதி கொண்டிருக் கிறானோ அது அவனிடமிருந்து பறந்து போய் விடுகிறது. எது கிடைக்காது என்று எண்ணிக் கொண்டிருக்கிறானோ, அது அவனைத் தானாகத் தேடி வந்தடைகிறது.

''ஆனால் எனக்கு நீங்களும் ஒரு வாக்களிக்க வேண்டும். இனி பார் விளையாடுவதில்லை என்று அடித்துக் கொடுங்கள்.''—தொடர்ந் தாள் நளினி.

''அது....அது....''

''எனக்குத் தெரியும். இந்தப் பார் விளை யாட்டை நீங்கள் உள்ளூற வெறுக்கி றீர்கள். தகப்பனாரின் கனவை நினைவாக்கு வதற்காக உங்களுக்கே ஈடுபாடு இல்லாத ஒன்றில் ஏன் இந்தப் பிடிவாதம்? என்னால் இனி கவலைப்பட முடியாது, கோபால்!''

''பாவம், மாதவன் உன்மீது உயிரையே வைத்திருந்தான்.''


''இல்லை. என்னைவிட அவர் பார் விளை யாட்டைத்தான் அதிகமாகக் காதலித்தார். கரணம் தப்பினால் மரணம் என்பார்கள். தினம் தினம் மரணத்தோடு விளையாடும் ஒருவரை நான் எப்படிக் காதலிக்க முடியும்?''

''ஆனால் நளினி, என் கரணம் தப்பியது. கன்னி, நீ கிடைத்து விட்டாய்!''

இரண்டுபேரின் சிரிப்பொலியும் மாதவனை அங்கிருந்து விரட்டியது.


அவ்வளவு சிக்கனம்! ஒரு முறை தேய்த்தால்
கால்கேட் டெண்டல் கிரீம்
85% கிருமிகளை ஒழிக்கிறது!
சொத்தையும் மற்றும் துர்நாற்றமும் ஏற்படுத்தும் கிருமிகள் அவை
COLGATE
COLGATE
DENTAL CREAM
மிகச் சிறந்த பலனுக்கு எப்பொழுதும் உபயோகியுங்கள்:
கால்கேட் டூத் பிரஷ்


மிக அழகிய...
அடர்ந்த நீண்ட ஒளியுள்ள கூந்தல்!
பிரதிதினமும் கால்கேட் பெர்ப்யூம்டு காஸ்டர் ஹேர் ஆயில் தடவி வந்தால், கூந்தலானது அடர்த்தியாகவும், நீளமாகவும் வளருவதுடன் இளமையின் ஒளியுடனும், அற்புத ஜ்வலிப்புடன் விளங்குவதைக் கண்டு நீங்கள் பரவசமடைவீர்கள். அது உங்கள் கூந்தலின் இயற்கை அழகை எடுத்துக்காட்டி எல்லோரையும் பிரமிக்கச்செய்யும்.
மகிழ்ச்சியூட்டும் நறுமணம்—
உங்கள் குடும்பம்
முழுவதும் விரும்புவது!
COLGATE
HAIR OIL
கால்கேட்
பெர்ப்யூம்டு
காஸ்டர்
ஹேர் ஆயில்
எக்கானமி சைஸை வாங்
ணத்தை மிச்சப்படுத்துங்கள்!



ஆனைத் தலையளவு பெரிய பூச்செண்டுடன் இன்று மிஸ் ஹெர்மாயின் மேரிகோல்டு பார்க்க வந்தாள். வருவாள் என்று எனக்குத் தெரியும். இன்று தவற மாட்டாள். "குட்மார்னிங் மிஸ்டர் ராம்!" (என் முழுப் பெயரை உச்சரிக்க அவளுக்கு என்றும் நாக்குப் புரள்வதில்லை) "நீங்கள் சிரஞ்சீவியாக இருக்கவேண்டும். இந் நன்னாள் திரும்பத் திரும்ப வரவேண்டும்."

"ஓ தாங்க்யூ. தாங்க்யூ. எவ்வளவு நேர்த்தியான செண்டு!"

மிஸ் ஹெர்மாயினின் கன்னங்கள் சிவப்புப் பூத்தன. அவள் புன்னகையில் மூக்குத் தண்டு கருங்கிற்று. பழுத்த நெற் கதிர்களின் நிறத்தில் கேசம் கருளாது பட்டையாய் வாள் வீச்சுப் போல் வேகமாய் நெற்றியிலிருந்து கிளம்பிப் பின்னுக்குப் பிடரியிலிருந்து முதுகில் தோள்பட்டை வரை வளைந்து திடீரெனக் கத்திரிப்பில் முடிந்தது. ஒடிய ஒடியச் சுறுசுறுப்பாய் அவள் வரும் நடையில் அவள் முகமே, நீண்ட காம்பின் மேல் காற்றில் அசைந்தாடும் பூப்போல்தான் இருந்தது.

ஐந்து வருடங்களாய் இப்படித்தான் வருகிறாள். நித்ய யௌவனியாய் ஒருவித மாறுதலுமின்றி இப்படியேதான் இருக்கிறாள். ஒவ்வொரு தடவையும் இதே பல்லவிதான்.

"மிஸ்டர் ராம்! இப்போது எப்படி யிருக்கிறீர்கள்? ஒன்றுமில்லையே! நல்லது, நல்லது. ஓய்வு, ஓய்வு, நிறைய ஓய்வு, ஓய்வுதான் மருந்து. ஜலதோஷம் கண்டால் அசட்டையாயிருந்து விடாதீர்கள். உடனே கவனிக்கணும். சரி, சரி, நான் போகணும். ஓ சிரமப்படாதீர்கள். எழுந்திருக்க வேண்டாம், நான் வருகிறேன்!"

ஐந்து வருடங்களின் ஐந்து முறைகளிலும் இதே திடும்பிரவேசம். இதே பஞ்சாதி. இதே மூச்சில் இதே அவசரமான மறைவுதான்.

கதவைத் தன் பின்னால் மூடிக் கொண்டு தடதடவெனப் படிக்கட்டுக்களில் இறங்கிச் செல்லுகையில் அறையே சற்று இருண்டாற் போலிருக்கிறது. தன்னொளியுடன், என் தெம்பிலும் கொஞ்சம் பிடுங்கிக் கொண்டு செல்கிறாள். சோர்வுடன் தலையணைமேல் மீண்டும் சாய்கிறேன். செண்டில் என் முகத்தைப் புதைத்துக் கொள்கிறேன். அதன் மணத்தில் தலை சுற்றுகிறது.

இப்படிப் போவதற்கு இவள் இங்கே வருவானேன்?

நான் பசித்தவன். ரொம்பவும் பசித்தவன். எதிலும் எனக்கு எவ்வளவு இருந்தாலும் போதவில்லை. எல்லோரையும் விழுங்கி விட்டுக் காயும், பூவும், இலையும் உதிர்ந்து நான் மாத்திரம் நடுத் தண்டாய் நிற்கிறேன். இந்தத் தனிமை யாருக்கு வேண்டும் என்றால் யாரை விடுகிறது? உன் தனிமை, உன் சுமை. என் பழங் கணக்குகள் என்னவை.

பசித்தவனின் பழங் கணக்குகள்.

* * *

அம்மா!

அம்மா!!

மூல மூச்சின் ஜீவாவில் உருவான முதல் ஓசை. இதன் எதிரொலிக்கு மிஞ்சியது எது?

அம்மா! அம்மா!! அம்மா!!!

குபுக் குபுக் குபுக் என்று மூச்சடைக்கிறது. கழுதை வயதாயும் குழந்தையின் வெட்கமற்ற கண்ணீர் கன்னங்களின் வாய்க்காலில் கரை புரள்கிறது.

நான் தளையவிழ்கிறேன்.

இவ் வெள்ளத்தில் இதழ்கள் ஒவ்வொன்றாய்க் கழன்றும், பிய்ந்தும், அலைந்தும், கழன்றும் அதனதன் வழியே செல்கின்றன. உன் நினைவின் ஒரே இதழ்மேல் படுத்து அது போனபடி மிதந்து செல்கிறேன்.

இந் நிலையில் நான் நினைவுகளில் எடுபடுகிறேன். அந்தந்த நினைவுகளின் எந்தெந்த வேளையோ அந்தந்த வேளையின் அந்தந்த உருவில் இருக்கிறேன்.


இருப்பதைக் காண்கிறேன்.

* * *

சிவப்பு, மஞ்சள், ஊதா, வெள்ளை, நீலம்; எல்லா வர்ணங்களும் மிஸ் ஹெர்மாயினின் பூச் செண்டில் அடங்கி யிருக்கின்றன. செண்டில் என் முகத்தைப் புதைத்துக் கொண்டிருக்கிறேன். என் கண்ணீர், பூக்களின் மேல், பனித்துளிகள் போல் நிற்கின்றன. உன் பிரக்ஞையெனும் ஒரே இதழில் படுத்து மிதக்கும் வெள்ளத்தில், செண்டும் என்னை விட்டுப் பிரிந்து, தன் யானைத் தலையை ஆட்டிக் கொண்டு மிதந்து செல்கிறது. என்னிடம் அது இருக்கிறது. கூடவே இல்லவும் இல்லை. உடலின்று உயிரின் பிரிவும் இதுதானோ?

* * *

இப்பொழுது நான் கட்டிலில் படுத்திருக்கும் நிலையில் ஜன்னலின் வழியாகப் பக்கத்து வீட்டின் அகன்ற நடு முற்றம் தெரிகிறது. அதன் எதிர்த் தாழ்வாரத்தை ஒட்டினாற் போலிருக்கும் சமையலறையின் இருட்டிலிருந்து அடுப்புத் தீ தெரிகிறது.



இருந்தாற் போலிருந்து எங்கள் வீட்டுச் சமையலறையைக் காண்கிறேன்.

அடுப்பெதிரில் அம்மா உட்கார்ந்திருக்கிறாள். குழந்தையாய் அவள் மடியில் நான் படுத்திருக்கிறேன்.

என் முகத்தை மூடிய மேலாக்கைத் தள்ளி விட்டுத் திரும்பி அடுப்பிலாடுந் தீயை வியப்புடன் நோக்குகிறேன். என் உதட்டோரத்தில் பால் வழிகின்றது.

அடுப்பிலிருந்து அக்கினி தன் எண்ணிறைந்த கைகளை நீட்டி என்னை அழைக்கிறது. நீலமும் சிவப்பும் அரக்குமாய்ச் சாயங்கள், தீயின் விளிம்பிலும் நடுவிலுமாய்ப் பிறந்து வழிந்து ஒன்றோடொன்று இழைந்து விதவிதமான முகங்களையும் உருவங்களையும் தீட்டி, அழித்துச் சலிக்காமல் மறுபடியும் இழைக்கின்றன.

பார்த்த முகங்கள். பாராத முகங்கள்.

இவ் வேழு மாதங்களுள் நான் எவ்வளவு முகங்கள் பார்த்திருக்க முடியும்? ஆனால் இவ் வேழு மாதங்களுள் நேர்ந்த முகங்கள் அல்ல இவை. ஏழாயிர வருடங்களின் முகங்கள்.

பின்னால் கையைக் கட்டிக் கொண்டு அப்பா உள்ளே வருகிறார். "என்ன, இன்னிக்காவது வேளைக்கு அகப்படுமா? இல்லே, இன்னிக்கும் எங்கள் மாமனார் வீட்டில்தானா?"

"என்னைக் கேட்டால்? இதோ இதைக் கேளுங்கோ. இதுக்கு இப்பவேவேடிக்கை. எக்சிபிஷன் எல்லாம் வேண்டா யிருக்கிறது. குடியேண்டா, எனக்குக்கொள்ளை வேலேகிடக்கு! குண்டு பெருச்சாளி, கஷ்கு முஷ்கு!"

சந்தோஷத்தில் அம்மா "பட்பட்"டென என் பின்புறத்தில் அறைகிறாள். அப்பா கிட்ட வந்து குனிந்து என்னை நோக்குகிறார்.


"என்ன ஸ்ரீமதி! இதுக்கு என்ன மூக்கு முழி கால் கையென்று புரியுமா? இது என்னவோ பூசணிக்காய்மேல் எழுதினாற் போல் —"

"சரிதான் போங்கோ, இந்த இடத்தை விட்டு!" அம்மா சீறி விழுந்து அவசரமாய் என் மேல் மேலாக்கைப் போர்த்தி, என்னை இன்னும் இறுக அணைத்துக் கொள்கிறாள். "உங்கள் கண் ஒண்ணே போதும் போல இருக்கே!"

மறுபடியும் துணியைத் தள்ளி விட்டுச் சுற்றுமுற்றும் பார்க்கிறேன். சுவர்களில் நிழல்கள் வெறிக் கூத்தாடுகின்றன. என் மேல் அம்மா குனிகிறாள். அவள் மூக்குத்தியில் நட்சத்திரங்கள் கூடார்விடுகின்றன.

இம் முகம் - இந்த ஒரு முகம் மாத்திரம் எனக்கு இப்போது ஏழு மாதங்களானாலும், இதற்கு முந்திய ஏழாயிர வருடங்களாய்த் தெரிந்த முகம். என்றும் மறவாத முகம்.

அம்மா!



"அடுப்பு வீணாகப் போகிறது. குடி வேண்டா குடி, குண்டு பெருச்சாளி, கொழுக்கட்டை, கஞ்சு மூஞ்சு!"

மறுபடியும் சமையலறையில்தான் இருக்கிறேன். மறுபடியும் அம்மா மடியில் குழந்தையைக் கொஞ்சிக் கொண்டிருக்கிறாள்.

"தம்பி!" பின்னால் கைகட்டிக் கொண்டு அப்பா உள்ளே வருகிறார்.

"என்ன சொல்கிறான் இந்த நாற்றுக் கிழவன்?"

"திருப்பித் திருப்பி என்ன அவனுக்கு? இது வரைக்கும் மூணு கிண்டி காப்பி, நாலு பிஸ்கோத்து ஒரு முறுக்கு ஆச்சு. நீங்கள் ரஸத்துக்கு வாங்கிண்டு வந்தேளே மொக்கான் மொக்காணும் அந்த மூணு தக்காளிலே ரெண்டு குளோஸ். கண் மூடற வரைக்கும் வாய் மூடாப் பட்டினி. இன்னும் மம்மு எப்போ ஆகும்னு அரிச் செடுத்துண்டிருக்கான். பாருங்கோ குறவன் மாதிரி உறுத்து முழித்துக் கொண்டிருக்கிறதை!"

"குழந்தையை ஒண்ணும் சொல்லாதே. எப்படி இளைச்சுட்டான், மரப்பாச்சியா ஆகி விட்டான். வாடா கண்ணு நாம் 'ஓ' போகலாம்!"

நான் அப்பா கையை உதறுகிறேன்.

"போப்பா! உன்னை அடிப்பேன்!"

"சை! என்ன சொன்னே!" அம்மா என்னை முறைக்கிறாள். நான் உடனே என் [illegible]னத் திருத்திக் கொள்கிறேன்.

"போங்கோப்பா! அடிப்பேன் உங்களை!"

அப்பா சிரிக்கிறார். "ஓ! அம்மா இப்படித்தான் சொல்லச் சொன்னாளா!"

அம்மா பல்லைக் கடித்துக் கொண்டு என் மேல் கை ஓங்குகிறாள்.

"சரி சரி ஸ்ரீமதி கொஞ்சம் சமத்தாயிரு. அவனுக்குப் பசி. ஆனவரைக்கும் போட்டுடேன்."

"சனியனே, உக்காரு. உனக்கு அப்பா சிபாரிசு வேறே வந்துடுத்தோன்னோ?"

அம்மா கரண்டியை வெண்கலப் பானையுள் போடுவதற்குள் எனக்குத் தாங்கவில்லை. பசி வயிற்றுள் தேளாய்ப் பிடுங்குகிறது. அலறுகிறேன்.

"இன்னிக்கு உன்னைப் புளியைக்கட்டி இழுத்துப்பிடுவேன். படவா, காக்காய்க்குப் போடவேண்டாமா?"

"நான்தான் போடுவேன்" என்று அழுச்சாட்டியம் பண்ணுகிறேன்.

"தொலைச்சுக்கோ!"

அம்மா சின்னத் தட்டில் வைத்துக் கொடுக்கிறாள். நான் தட்டைத் தூக்கிக் கொண்டு முற்றத்துக்குத் தத்தித்தத்தி நடந்து செல்கிறேன்.

அப்பாவின் கிலேசம் தட்டிய குரல் என்னை எட்டுகிறது. "என்ன இப்படிச் சிவனற்றுப் போயிடுத்து! எப்படி யிருந்தான். எப்படி ஆகிவிட்டான்! சப்பை எப்படி ஒட்டிப் போய் விட்டது பார்த்தையா?"

"என்ன பண்ணுகிறது? சவலை என்றால் இந்த அவஸ்தைதான்!"

தோய்க்கிற கல்லடியில் புதைத்த கடப்பைக் கல்மேல் சாதத்தைக் கொட்டுகிறேன். அதில் பருப்பும் நெய்யும் காலை வெய்யிலில் பளபளக்கின்றன. நான் சுற்றும் முற்றும் பார்த்து விட்டுச் சாதத்தில் அந்தப் பாகத்தை மாத்திரம் விண்டு வாயில் போட்டுக் கொள்கிறேன்.

சிரிப்புப் பீறிடும் சப்தம் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்புகிறேன். என் முகத்தில் வழியும் திருட்டைப் பார்த்து அப்பா அம்மா இருவரும் சிரிக்கிறார்கள்.

* * *

பசி, பசி, அதென்ன பசியோ எனக்கே புரியவில்லை. தின்னத்தின்ன இளைக்கிறேன். வயிறு மாத்திரம் விகாரமாய்ப் புடைத்துக் கொள்கிறது. அப்பவும் பசி தீரவில்லை.

ஒரு பண்டிகை தினம். இலையைப் போட்டுத் தண்ணீர் தெளிப்பதற்குள் பசி தாளவில்லை. கைகால்களை உதைத்துக் கொண்டு கூடத்தில் புரண்டு புரண்டு அழுகிறேன். மாக்கோலங்களின் வடிவங்களும் செம்மண்ணும் என் வயிற்றிலும் முதுகிலும் ஒற்றிக் கொள்கின்றன. அம்மாவுக்குப் பொறுக்கமுடியவில்லை. உள்ளே போய் அப்படி அப்படியே வெண்கலப் பானையோடு சாதம், கற்சட்டியோடு குழம்பு, ஈயச் செம்போடு ரசம், தட்டோடு கறி, பால் உருளியோடு பாயசம் எல்லாவற்றையும் கொண்டு வந்து என் எதிரே வைக்கிறாள்.

"இந்தா தின்னு. தின்னு இப்படியே தின்னு."

என் வெறி 'கப்'பென அடங்கி விடுகிறது. நான் எழுந்து உட்காருகிறேன். ஏனங்களைத் தொட்டுத் தடவித் தவிக்கிறேன். இதெல்லாம் இப்படியே சாப்பிட்டு விட வழியில்லையா?

அப்பாவும் அம்மாவும் கொஞ்ச நாழி இந்தக் காட்சியை மௌனமாய் அனுபவிக்கிறார்கள். திடீரென அப்பாவின் முகம் மாறுகிறது.

"ஸ்ரீமதி உள்ளே கொண்டு போய் வை. உடனே வெச்சுடு! இதென்ன வேடிக்கை வேண்டியிருக்கிறது. சுவாமிக்கு நைவேத்யம் பண்ணுகிற மாதிரி! எடு எல்லாவற்றையும்!"

அப்பா வந்து என்னருகே உட்கார்ந்து என் கையில் ஒரு வடையைக் கொடுத்து விட்டு என் முதுகைத் தடவுகிறார். தன் மேல் துண்டால் என் மூக்கின் ஒழுகலைத் துடைக்கிறார்.

* * *

ஆனால் இது வயிற்றுப் பசி மாத்திரம் இல்லை. வயிறு மாத்திரம் இவ்வளவு பசிக்க முடியாது. கூட வேறு ஏதேதோ பசிகள், திண்ணமாய் இன்னெனப் புரியாத ஏதேதோ தாபங்கள், கோபங்கள், பொறுமைகள், ஏக்கங்கள் எல்லாம் இவ் வயிற்றுப் பசிமூலம் ஓரளவு தங்கள் தங்கள் நிறைவு காணவோ விடுதலை பெறவோ முயல்கின்றன. எனக்கே அப்பவே, கொஞ்சம் கொஞ்சம் தெரிகிறது.

குழந்தை தொட்டிலில் கண் அயர்கிறாள். அம்மா, தாலாட்ட முனகியபடி, இலேசாய்த் தொட்டிலை ஆட்டுகிறாள்.

அம்மா வாய் விட்டும் நன்றாய்ப் பாடுவாள். ஆயினும் எங்கோ நினைவாய் முனகுகையில், அதைவிட நன்றாயிருக்கும்.

சிந்தனையின் கீதம்.

கூடத்தில் விளையாடிக் கொண்டிருந்த நான் கனகாரியமாய் வந்து—ஏன், என்ன செய்



"அப்பவே சொன்னேனே, கேட்டீங்களா! நாம் பால் வியாபாரம் பண்றோம் குழாய்ச் சின்னம் நமக்கு ஆகாதுன்னு!"

கிறேன் என்று எனக்கே தெரியவில்லை. வெடுக்கெனக் குழந்தையின் தோளைக் கடித்து விடுகிறேன். குழந்தை வீல் என அலறுகிறது.

"அடே கொலைகாரா?"

ஒரு கையால் குழந்தையை வாரிக்கொண்டு, அம்மா என்னை முதுகில் இரண்டு அறை அறைகிருள். நான் அழுகிறேன். அவளுக்கு அப்பவும் ஆத்திரம் தீரவில்லை. குழந்தையைத் தூக்கிய படியே, என்னைத் துரத்தித் துரத்தி அடிக்கிருள். இந்த அமர்க்களம்கேட்டு அப்பா வாசலறையிலிருந்து வருகிருர்.

"என்ன ப்ரீமதி?"

"குழந்தையை எப்படிக் கடிச்சுட்டான் பாருங்கோ, ரத்தங்கூடப் பிடுங்கின்டுடுத்து."

அம்மா அழுகிருள். எனக்கும் அழுகை வருகிறது. அப்பா என்னை வெறித்துப் பார்க்கிருர். பயமாயிருக்கிறது.

"ஏண்டா இப்படிப் பண்ணலாமா?"

எனக்குப் பயமாயிருக்கிறது. ஆனால் வாயிலிருந்து புறப்பட்ட வார்த்தைகள் "அப்படித்தான் பண்ணனும்" என அமைகின்றன. இது எந்த ஜாலத்தைச் சேர்ந்தது?

அப்பாவுக்குக் கோப நரம்பு நடு நெற்றியில் புடைத்துக் கிளை பிரிந்து 'பட் பட்' என அடித்துக் கொள்கிறது.

"என்னோடே பேசாதே போ!"

வேகமாய் வாசலறைக்குப் போகிருர்.

அம்மா குழந்தைக்கு மருந்து கேட்கப் பக்கத்து வீட்டுப் பாட்டியிடம் போய்விடுகிருள்.

கூடத்தில் நான் மாத்திரம் தனியாய் உட்கார்ந்திருக்கிறேன். வீடு நிசப்தமாகிவிடுகிறது.

குழாய் ஜலம் 'ட்ரம்'மில் 'டங், டங், டங்' என்று விழுகிறது. திடீரென உலகத்தின் ஒண்டிப் பிறவியாய், எனக்கு நானே வேற்று மனிதனும் என்னைக் காண்கையில் எனக்குத் திகிலாயிருக்கிறது.

"டாங்! டாங்!! டாங்!?!"

எழுந்து தத்தித் தத்தி நடந்து வாசலறைக்குச் செல்கிறேன்.

அப்பா ஏதோ எழுதிக் கொண்டிருக்கிருர். என் அரவம் கேட்டு அவர் தலை நிமிர்ந்து மறுபடியும் குனிகிறது.

நிலை வாசற்படிமேல் சாய்ந்தபடி சுவரை நகத்தால் கீறிக் கொண்டிருக்கிறேன்.

"அப்பா!"

"அப்பால்!"

"அப்போல்!""

"அப்பா, நீ என்னோடு பேசணும்பா!"

அப்பா என் பக்கம் திரும்புகிருர். அவர் முகம் மலர்கிறது. "சரி வா இங்கே" ஒரு விரலைக் கொக்கிமாதிரி வளைத்துக் கொண்டு கூப்பிடுகிருர்.

"என்னை இங்கே வந்து தூக்கிக்கோப்பா!"

அப்பாவின் புன்னகை விரிகிறது. எனக்குத் துக்கம் தொண்டையை அடைக்கிறது.

"அப்பா, என்னைக்கண்மணியென்னு சொல்லுப்பா!"

அப்பா முகத்தில் ரத்தம் புழுங்குகிறது. அப்பா நல்லசிவப்பு. அவருக்கு மூச்சுத் திணறுகிறது. நாற்காலியைப் பின்னுக்குத் தள்ளிக்கொண்டு எழுந்து தடதடென வந்து என்னை வாரி அணைத்துக் கொள்கிருர். மூர்க்கமான முத்த மாரி என் மேல் பெய்கிறது.

"என் கண்மணியே! என் ராஜா! என் செல்வமே, என் தவமே!" அவர் தொண்டை கம்மி, வார்த்தைகள் குழறுகின்றன. அவர் கழுத்தை இறுகக் கட்டிக் கொள்கிறேன்.

அப்பாடி! எவ்வளவு இதமாயிருக்கிறது!

"அப்பா, நீ எனக்குக் கொடுத்தியே, நான் உனக்கு முத்தா கொடுக்கிறேன்!"

ஆனால் என் உதடுகளின் முத்திரை அவர் கன்னத்தில் அழுந்துவதற்குள் திடீரென என்னைத் தூக்கம் கவ்வுகிறது. அவர் தோள்மேல் என் தலை துவண்டு சாய்கிறது.

* * *

ஆனால் அம்மாவுக்கு இன்னொரு குழந்தை பிறந்ததும் என் ஏக்கங்கள் பொறுமைகள் எல்லாம் எங்கோ மறைந்து விடுகின்றன. மனம் எப்படி என்ன சமாதானத்தை அடைந்ததோ? அறியேன். என் உடம்பு சுருக்கத் தேறி, என்னைப் பள்ளிக்கூடத்தில் பையன்களெல்லாம் "டேய் உருந்து வடை" என்று அழைக்கிருர்கள்.

* * *

நான் விளையாடி விட்டு வீடு திரும்புகிறேன். அம்மா கொட்டாங்கச்சியில் எதையோ வைத்துக் கொண்டு எனக்காகக் காத்திருக்கிருள்.

"அம்மா, பசிச்சு தாயேன், பண்ணி வெச்சிருக்கையே!" என்று அம்பி அவள் காலைக் கட்டிக் கொண்டு நச்சரிக்கிருன்.

"ஓ பஜ்ஜியா, ஜாலி! ஜாலி!!" நான் குதிக்கிறேன். தொட்டிலில் பாப்பா என் குதிப்பைக் கண்டு சிரிக்கிருள்.


"டேய், பாப்பாவைத் தூக்கி மடியில் வெச்சுக்கோடா. அம்பி, நீயும் அண்ணு பக்கத்தில் உக்காரு. ஆ, அப்படித்தான்!" அம்மா கொட்டாங்கச்சியை எங்கள் எதிரில் அப்படியும் இப்படியுமாய்ச் சுற்றுகிருள். அவள் உதடுகள் அசைகின்றன.

"என்னம்மா அதுலே வெச்சிருக்கே? என்னம்மா அது? எனக்கு ஊ!"

உலகச் சாம்பியன்கள் தேர்ந்தெடுப்பது

பயர்ஸ்டோன்

....நீங்களும் அதையே தேர்ந்தெடுங்கள்



'இன்டியானா பொலீஸி'ல் நடைபெற்ற உலகப்பிரசித்தி பெற்ற 500 மைல் ஓட்டப் பந்தயத்தில், மோட்டார் ஓட்டிகளுக்குக் கடுஞ்சோதனையாக வாய்ந்த பந்தயப் பாதையிலே, கடுமையான அதிர்ச்சிகளுக்கும், அபாயகரமான நெளிவு சுளுவுகளுக்கும், உராய்தலுக்கும் ஈடு கொடுத்து மணிக்கு 180 மைல் வேகத்துடன் ஓடி வெற்றிபெற தனக்கு உதவிய பயர்ஸ்டோன் டயர்களை ஜிம்மி ப்ரையன் பெரிதும் பாராட்டினார்.

உங்களுக்கும் அத்தகைய பாதுகாப்பையும் நம்பிக்கையையும் அளிப்பது பயர்ஸ்டோன் டயர்கள். ஏனெனில், உங்கள் மோட்டாருக்கான டயர்களின் தயாரிப்பிலும், ஓட்டப் பந்தய டயர்களிலுள்ள அதே பாதுகாப்பு தரும் அம்சங்கள் பொருந்தியிருக்கின்றன. பயர்ஸ்டோன் அளிக்கும் சிறந்த பாதுகாப்பு செயலில் நிரூபிக்கப்பட்டது.



Firestone

பயர்ஸ்டோன்

நியூ டீலக்ஸ் சாம்பியன்

ட்யூப் இல்லாதது அல்லது ட்யூப் உள்ளது

W. 47

அம்பிக்கு எப்பவும் தின்பதில்தான் ஞாபகம்.

என் தம்பிதானே!

'' உஷ்! சும்மாயிரு!''

மறுபடியும் இருமுறை சுற்றிவிட்டு, குடு குடு வென அம்மா சமையலறைக்கு ஓடுகிறாள். அங்கிருந்து வெடிக்கும் சப்தங்களும், மிளகாய் நெடியும் கிளம்புகின்றன.

அப்பா இருமிக் கொண்டே வாசலறையிலிருந்து கத்துகிறார்.

'' இந்த வீட்டில் கேட்பார் யாருமில்லையே! கொலை நடக்கிறது.''

பாப்பா தும்முகிறாள்.

நான் '' தீர்க்காயுஸ் '' என்கிறேன்.

இன்னொரு தும்மல்.

'' சதாயுஸ்.''

அர்த்தம் தெரியாமலே அம்மாவைக் காப்பியடிக்கிறேன்.

* * *

ஆனால், வாரத்துக்கு வாரம் திருஷ்டி கழித்தும், தும்மலுக்குத் தும்மல் வாழ்த்தியும், பாப்பா தீர்க்காயுளாயில்லை. ஒரு நாள் அவளுக்கு மார்பில் சளி தாக்கிவிட்டது.

'' விலாவில் சுவாசம் கொல்லன் துருத்தி போல் அழுந்தி வாங்குகிறது. 'கொர்-கொர்' எனும் அதன் சப்தம் வெண்கலத்தாலான செம்மட்டி போல் இரவு முழுதும் எங்களை மண்டையிலடித்துக் கொண்டிருந்தது.

பொலபொல வெனப் பொழுது புலரும் வேளையில் சப்தம் அடங்கிற்று.

மூச்சும் அடங்கிற்று.

அந்த அதிகாலை நேரத்தில், அவள் வெளேரென்று, உதிர்ந்த பூவைப்போல் துவண்டு கிடந்தாள்.

* * *

என் தம்பி மத மத வென்று வளர்கிறான். அவன் பக்கத்தில் நான் ஓணான் மாதிரியிருக்கிறேன்.

நடையில், அவன் எடுத்துவைக்கும் ஒரு அடிக்கு நான் இரண்டு அடியாய் அவன் பக்கத்தில் மூச்சிரைக்க ஓடவேண்டியிருக்கிறது.

அண்ணா மேல் அவனுக்கு உயிர். ஏனோ? 'அண்ணா, அண்ணா' வெனப் பேச்சுக்கு முன்னால், பின்னால், நடுவில், நாலு அண்ணா சொல்லி விடுவான். குஞ்சைச் சிறகால் அணைக்கும் கோழிபோல, என்னைத் தன் அன்பால், வளர்ச்சியால், வலிமையால், என்மேல் வெய்யில் படாமல் போர்த்திக் கொண்டிருந்தான்.

எனக்கு அவன்மேல் ஆசை, பட்சம், அவன் பலத்துக்கு மரியாதை, உள்ளூற ஒரு பயம், எல்லாம் உண்டு.

பொறுமை?

இருக்கலாம். எல்லாவற்றையும் ஒப்புக் கொள்ளும்போது, ஏன் அதுவும் இருக்கக் கூடாது? இல்லாமல் எப்படித் தோன்றும்? ஏனென்று தெரியவில்லை.

நான் உத்தியோகம் ஏற்க, வண்டியேறுகையில், பச்சைக் குழந்தை மாதிரி '' அண்ணா! அண்ணா!!'' என விக்கி விக்கி அழுதான்.

'' ஏய்! நான் உயிரோடு தாண்டா யிருக்கிறேன்'' என்று கேலி பண்ணினேன். ஸ்டேஷனில் நாலுபேர் எங்களைத் திரும்பிப் பார்க்கும்படி அவன் நடந்து கொண்டதில், எனக்குக் கொஞ்சம் எரிச்சல்.

* * *

நாலு வருஷங்களுக்குப் பிறகு, அப்பாவுக்கு உடம்பு சரியாயில்லை என்று ஒரு மாத ரஜாவில், ஊருக்குத் திரும்பும்போது, தம்பியைப் பார்க்க அடையாளமே தெரியவில்லை. இப்படியும் ஒரு வளம் உண்டா என்ன? உடல் ஆலமரத்தின் அடிப்பாகம்போல் அகன்று, உரமும் கம்பீரமும் செறிந்திருந்தன.

''என்னண்ணா முழிக்கிறே? நான்தாண்ணா!''

'' நீ தானா அப்பா!'' என்னையே யறியாது என் குரலில் மரியாதை புகுந்து கொண்டது. அவன் ஊதினால், உமிக்குக் காண மாட்டேன் நான்:

வாசலெதிரில் நந்திமாதிரி ஒரு மொத்தை உருவத்தை உறைபோட்டு மூடி வைத்திருந்தது.

'' மோட்டார் ஸைக்கிள். என் சிநேகிதனிடமிருந்து கடன் வாங்கி வந்திருக்கிறேன். இன்னிக்கு மத்தியானம் ஒரு '' ட்ரிப் அடிக்கலாம் '' என்றான்.

* * *

நாங்கள் எங்கெங்கோ சுற்றிவிட்டு வீடு திரும்பலாமா என நினைக்கும் வேளைக்கு அந்தி வந்துவிட்டது.

திடீரென அம்பிக்கு வெறி வந்துவிட்டது. மேட்டிலும் பள்ளத்திலும் வண்டியை அடித்துக் கொண்டு போகும் அதிர்ச்சியில் எனக்குக் குடலே வெளியில் கொட்டிவிடும்போல் தூக்கிப் போடுகிறது.

''டேய்! டேய்!!'' நான் கத்தக்கத்த அவன் வேகம் அதிகரிக்கிறது. அவன் வெறி என்னுள்ளும் பாய்கையில் உயிர்ப் பட்சி என்னை விட்டுக் குதித்துவிடும்போல் உடலின் பரபரப்புத் தாங்க முடியவில்லை.

ஸைகிள், ஜலம் வறண்ட ஒரு மடுவில் அம்பு வேகத்தில் இறங்கி ஏறிற்று. அடி வயிறு சில்லெனச் சுருண்டது.

அப்பொழுதுதான் கண்டேன், மடுவின் கரையிலிருந்து, அகன்று உயர்ந்த மோத்தாகாரமானதோர் உருவம், தலையை விரித்துப் பேயாட்டம் ஆடியபடி முன் சாய்ந்து எங்களை நோக்கி விரைவதை.

'' மரம்...ம ர ம்...ம ர''

வண்டி மோதிய வேகத்தில், எறிந்த கல்போல் நான் மேலெழும்பிக் காற்றில் பறந்து போய் மரத்தின் கிளைகளினிடையில் தொத்திக் கொண்டேன். மல்லாந்த பூச்சிபோல், என் கை கால்கள் நெளிந்தன. ஒருவாறு விடுவித்துக் கொண்டு கீழே குதித்தேன்.

தம்பி வெட்டிய மரம்போல் கீழே சாய்ந்து கிடந்தான். மார்பு திமில்போல் உயர்ந்து, கால் கைகள் அகல விழுந்து கிடந்தன. மூக்கிலும் வாயிலும், காதுகளிலுமிருந்து ரத்த நூல்கள் வழிந்து கொண்டிருந்தன.

'' சந்துரு!''

என் காட்டுக்குரல் 'கிறீச்'சிட்டுக் கொண்டே மேலே போய் உச்சத்தில் உடைந்து ஒன்பதாயிரம் சுக்கல்களாய், முன் இருளில் என்னைச் சுற்றிலும் தெறித்தது.

அவனுக்கு வலிப்பதற்குக் கூட நேரம் இருந்திருக்காது.

* * *

ஆறு மாதங்களுக்கு எனக்குத் தோள்கள் ஊமையாய் வலித்துக் கொண்டிருந்தன. எந்தச் சிகிச்சைக்கும் பிடிபடவில்லை.

என்ன இருந்தாலும் உடன் பிறப்பில்லையா?

நாளாக ஆகப் பாம்பு படத்தைக் கீழே போடுவது போல் தானே மறைந்தது.

* * *

நாளாக ஆக......

மூன்று வருடங்களுக்குப் பிறகு ஒரு தை வருகிறது.

விடியற்காலையில் ஒரு சின்ன ரயில்வே ஸ்டேஷனில் பெருமூச்சு விட்டுக் கொண்டு நிற்கும் ஒரு வண்டித் தொடரிலிருந்து ஒரு சிறு கூட்டம் பெட்டியும் படுக்கையுமாய் இழி கின்றது. எங்களை வரவேற்பதற்குப் பெண் வீட்டார் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

" வரவேணும் வரவேணும்! பிரயாணம் சௌகரியமாயிருந்ததா? உட்கார, படுக்க, தூங்க இடம் கிடைத்ததா?"

" ஆகா, எல்லாம் ரொம்ப சௌகரியம் போங்கோ "

உண்மையில் நிற்கக்கூட இடமில்லை.

ஆனால், இம்மாதிரி ஒட்டைக் கேள்விகள், ஒட்டைக் கேள்விகளுக்கு ஒட்டைப் பதில்கள், பொய்ப்பரிமாறல் இல்லாத கல்யாணமே உலகில் கிடையாதோ?

எங்களுக்காக இரண்டு கார்கள் காத்திருக் கின்றன.

ஊருக்குள் நுழைகையில், வீட்டு வாசற் குறடுகளில், ஆண்களும், பெண்களும் நின்று எங்களை வேடிக்கை பார்க்கிறார்கள்.

அப்பொழுது, தெருவின் திருப்பத்தில், தாழ்ந்த வளைவில், வண்டி திரும்புகையில், வாசலுக்கெதிரில், பிரும்மாண்டமான ஒரு தாமரைப் பூக் கோலத்தின் நடுவில், ஒரு பெண் நின்று கொண்டு கோலத்தைச் செப்ப விட்டுக் கொண்டிருக்கிறாள். சப்தம் கேட்டு முகத்தில் வழியும் கூந்தலைத் தோள் பட்டை யால் தள்ளிக் கொண்டு நிமிர்கிறாள்.

அவள் நிமிரும் அதே சமயத்தில், எங்கள் கண்கள் சந்திக்கின்றன. சூரியனின் பொற் கதிர் அவள் முகத்தில் படுகையில், அவள் விழிகளில் நீலம் பளபளக்கின்றது.

என்னைப் பார்த்துப் புன்னகை புரிகிறாள்.

அடுத்த நிமிஷம் வண்டி இன்னொரு முடுக் கில் திரும்பி விடுகிறது. நாங்கள் எங்கள் விடுதி சேருகிறோம்.

" டிபன் எல்லாம் பின்னால் வந்துண்டே யிருக்கு. முன்னால் தாகசாந்தியா ஒரு 'டோஸ்' காப்பி சாப்பிடுங்கள். என்னதானிருந்தாலும் உங்கள் வீட்டுக் காப்பிமாதிரி இருக்குமா?"

நெடுநேரம், அந்த நிமிர்ந்த முகமும், விழி களிலிருந்து தெறித்த நீலமும், குறுநகையும், நெஞ்சப்பதிவிலிருந்து மறைய மாட்டேன் என்கின்றன.

* * *

ஆனால் அடுத்தநாள், நான் கலியாண வாசலில், பாகியின் கையைப் பற்றியதும், என் மை தீட்டிய விழிகள், அவள் மை தீட்டிய விழிகளைச் சந்தித்ததும், அந்த வேளைக்கு மற்றதெல்லாம் மறந்துவிட்டது.

இவள் பாகிரதி. பாகி என் மனைவி. இவளை நான் கைப்பிடித்துவிட்டேன். இனி எனக்கு இவள். இவளுக்கு நான். தன்னால் நேர விருக்கும் சடங்குகள் எல்லாம், இந்தத் தொடர், இந்தச் சங்கல்பத்தின் வெற்று நிழல்கள். இனி எங்களுக்கு ஒருவரையொரு வர் விட்டால் கதியில்லை விதியில்லை.

இவள் பாகிரதி. பாகி. என் மனைவி.

* * *

ஆடி. வெள்ளிக்கிழமை மாலை.

அம்மா எங்களைக் கூப்பிடுகிறாள்.

" என்னை ரெண்டுபேரும் பிடிச்சுண்டு சுவாமியலமாரியண்டை கொண்டு போய் விடுங்கள் " என்கிறாள்.

உடம்பு அலண்டு போகும் என்று எவ்வளவு சொல்லியும் கேட்கவில்லை. எங்கள் மேல் சாய்ந்து கொண்டு சுவாமி படத்தருகில் போனதும், பலத்தைக் கூட்டிக்கொண்டு, தானே சுயமாய் நின்று குத்துவிளக்கை ஏற்றுகிறாள். " பாகி! இப்படி வா—"

சிமிழிலிருந்து குங்குமத்தை எடுத்து மரு மகளுக்கு இட்டுக் குத்துவிளக்கை அவளிடம் கொடுக்கிறாள்.

" இந்த வீட்டு விளக்கை ஏற்றி உன் கையில் கொடுத்தாச்சு. என்னை என் படுக்கையில் கொண்டுபோய் விடுங்கள்."

நாங்கள் குழந்தைகளாய் விக்கி விக்கி அழுகிறோம். எங்கள் மார்பே உடைந்துவிடும் போல் இருக்கிறது. பாகியின் கையில், குத்து விளக்கின் சுடர் அசைவற்று, மௌனமாய், சாட்சியாய் நிற்கிறது.

'உஷ், இன்னிக்கு வெள்ளிக் கிழமை. இது அழற சமயமல்ல' அவளை நானே மெதுவாய்த் தூக்கிக் கொண்டு போய்க் கட்டிலண்டை விடுகிறேன். " அப்பாடி !" என்று பெரு மூச்சுடன் அம்மா சாய்கிறாள். அப்புறம் அவள் எழுந்திருக்கவேயில்லை.

சந்துருவின் சாவே அம்மாவுள் புரையோடி விட்டது. என்னவோ வளைய வளைய வந்தாளே ஒழிய, உயிரை மார்பில் பிடித்துக் கொண்டு, மருமகளிடம் ஏற்றிய குத்துவிளக்கைக் கொடுக்கத்தான் காத்திருந்தாள் என்று இப் போது தெரிகிறது.

சந்துருவின் எமனே அம்மாவின் எமன்.

* * *

அம்மாவின் எமனே அப்பாவின் எமன்.

அப்பாவுக்கு ஏற்கெனவே நாளோட்டின வியாதி. பிறகு சந்துரு. சந்துருவுக்குப் பின் அம்மா. அவர் தூங்கிக் கொண்டிருக்கிறார் என நினைத்துக் கொண்டிருந்தோம். அயர்ந்து தூங்குகிறவரை எழுப்பவேண்டாம் என்று கொண்டு வந்த காப்பியைக்கூடத் திரும்பக் கொண்டு போயாச்சு.

ஆனால் மூச்சே சுவாசக் குறடாய் மாறி விட்டது.

* * *

நானும் பாகியும் ஜோடிப்புறாக்களில்லை. ஆனால் எலியும் பூனையுமாயுமில்லை.

இப்போது பின்னோக்குகையில், உலகத்தி லிருக்கும் எல்லாத் தம்பதிகளையும் போல்தான்

இருந்தோம். ஒரு நாள் சண்டை, மறு நாள் இழையல். ஒருவரிடமிருந்து ஒருவர் என்னவோ எதிர்பார்க்கிறோம். எதிர்பார்த்ததுக்கு எல்லையே கிடையாது. ஆனால் இருப்பது தான் கிடைக்கும். இருக்கிற வரையில்தான் கிடைக்கும்.

எதை எதிர்பார்க்கிறோம் என்று கூடத் தெரியவில்லை. அதனாலேயே புரியாமலே எங்களிடையில் நேரும் தர்க்கங்களும் சச்சரவுகளும் நேர்ந்து, அவள் கண்ணீர் விட்டுக் கொண்டு சுவரோரம் படுத்துக் கொண்டிருக்க நான் இன்னொரு சுவரை முறைத்துக் கொண்டிருக்க, நிஜமாகச் சண்டை எதற்காக ஆரம்பித்தது என்று கூடப் புரியாமல் திகைப்பாயிருக்கும். உலகத்தில் நேரும் எல்லாச் சண்டைகளுமே அவலை நினைத்துக் கொண்டு உரலை இடிக்கும் சண்டைகள்தாம்.

ஆனால் சண்டைக்குப் பின் வரும் சமாதானப் பகுதிகளின் இதனை நினைக்கையில், அவைகளுக்காகவே சண்டைகளை வருவித்துக் கொண்டோமோ, கொண்டேனோ என்றுகூட இப்பொழுது தோன்றுகிறது.



* * *

இத்தனை சண்டைகளுக்கும் சமாதானங்களுக்குமிடையில், பாகிக்கு மூன்று குறைப் பிரசவங்கள் நேர்ந்து, உடல் சோர்ந்தாள். அவள் ஏற்கெனவே நோஞ்சான்தான். இனி அவள் கருத்தரித்தால், அவள் உயிருக்கே ஆபத்து என்று வைத்தியர்கள் கூறிவிட்டனர்.

* * *

சில சமயங்களில், நினைவில், முன் பின் தொடர்பில்லாது பிரும்மாண்டமான தாமரைக் கோலத்தின் நடுவில் நின்றபடி வழிந்த கூந்தலை தோள் பட்டையில் தள்ளிக் கொண்டு ஒரு முகம் நிமிர்ந்து, காலை வேளையின் பொற் கதிர்பட்டுக் கன்னங்களில் தெறிக்கும் நீலத்துடன் என்னைப் பார்த்து நகைக்கும்.

நான் சிந்தனையிலாழ்ந்து வியப்புறுவேன். அவள் இப்போது எங்கிருப்பாள்? அவளுக்கு இப்பொழுது குழந்தைகள் இருக்குமில்லையா? நான் அவளைப் பார்த்தபோதே ஏற்கெனவே அவள் ஒருவன் சொத்தோ என்னவோ?

இதெல்லாம் நான் இப்பொழுது எப்படிக் கண்டு பிடிக்க முடியும்?

கண்டுபிடித்துத்தான் என்ன ஆகவேண்டும்?

அவள் யாரோ நான் யாரோ? நாங்கள் மீண்டும் சந்திப்போமோ?

* * *

திடீரென எனக்கு ஒரு நாள் தெரிந்தது. அவளும் நானும் சந்திக்கப் போவதில்லை. என்னை அறியாமலும் அறிந்தும், உள் நினைவிலும் வெளி நினைவிலுமாய், அவளை எண்ணி எண்ணி அவள் ஒரு எண்ணத்தின் பதவியை அடைந்து விட்டாள். அவள் எண்ணமாகி விட்ட பிறகு, புலனின் உருவாக இனி எனக்குத் தென்பட மாட்டாள். பட்டாலும் என் எண்ணத்தில் அவள் வகிக்கும் லட்சிய, நித்ய உருவில் இருக்க முடியாது.

* * *

உடலில் புகுந்து புறப்படுவது உடலின் வேட்கை மாத்திரம் அல்ல. எண்ணத்தின் வேட்கை கூட. எண்ணத்தின் வேட்கைக்கு மாற்றுத் தேடவோ, அல்லது அதை மறக்கவோ அப்பவும் வழி, உடல் வழிதான்.

அதனால்தானோ என்னவோ, பாகி மீண்டும் கருத்தரித்தாள். இத்தடவை கரு தங்கியது.

திடீரென எங்களிடையில் இதுவரை இல்லாத ஒற்றுமை, அமைதி, ஒருவருக்கொருவர் ஆதரவு இழைந்தது. அதன் இன்பத்தைவிட ஆச்சரியமே ஓங்கியது. இது எந்த ஜாலத்தைச் சேர்ந்தது? தங்கி நிற்குமா? அல்லது சில சமயங்களில் கடும் கோடையில் துணுக்காய் ஒதுங்கி, நாலே தூறல்களில் பிசுபிசுத்து விடும் மேகத்தின் கதிதானா இதற்கும்?

* * *

ஒரு நாள் திடீரென எனக்குத் தும்மிற்று. மார்புள் நெருப்புப் பிழம்பு வழிந்தாற்போல ஒரு சூடு. கண்ணில் லேசான கரிப்பு. நான் அசட்டையாயிருந்து விட்டுப் பிறகு அகஸ்மாத்தாய் வைத்தியரிடம் காண்பித்தேன். என்னைப் பரிசோதித்ததும் அவர் முகம் கோணிற்று.

பரீக்ஷைகள் எல்லாம் நடந்தபின் எனக்குக் காசம் கண்டிருப்பதாய்த் தெரிந்தது. நோய் அவசரமாகவே சுவாசப் பையில் பரவிவிட்டதாம்; ஆஸ்பத்திரியில் தனி விடுதிக்கு அப்புறப்படுத்தப்பட்டேன்.

எனக்குச் சீக்கிரம் குணம் ஆகவில்லை.

பாகியும் நிறை கர்ப்பிணி. அவள் நிலைமையும் ஜாக்கிரதையாகக் கவனிக்க வேண்டியதாகிவிட்டது.

பிரசவத்துக்குப் பிறந்த வீட்டுக்குப் போகுமுன், பாகி என்னைப் பார்க்க வந்தாள். வயிற்றின் சுமையைத் தூக்கமாட்டாமல் தூக்கிக் கொண்டு வருகையில், அவளைப் பார்க்க ஒரு பக்கம் வேடிக்கை, ஒரு பக்கம் பரிதாபமாயிருந்தது.

* * *

அவள் ஊருக்குப் போனபின், இரண்டு மூன்று கடிதங்கள் அடுத்தடுத்து வந்தன. அப்புறம் நான் கழித்து ஒன்றிரண்டு கடிதங்கள்.

தூக்கத்துக்குப் பின்னும் கைகளைக் கோத்துக் கொண்டு தலையணை மேல் சாய்ந்திருக்கையில் குருட்டு யோசனையில் எண்ணங்கள் ஏதேதோ எழும்.

பிறந்து உழன்று, இதுவரை நான் வாழ்க்கையில் கண்டது என்ன? இல்லை, இந்தக் காணல், வேணலின் முடிவுதான் என்ன?

என் நோய்வாய் நான் இங்கு படுகிறேன். அவள் கனமைவாய் பாகி அங்கு படுகிறாள். நாங்கள் கண்ட மிச்சம் இதுதானா?

சந்துருவின் அகாலமான திடீர் மரணம் தேவலையா? அல்லது நாளுக்கு நாள் ஒரு கணக்கில், மூச்சுக்கு மூச்சு ஒரு துளியாய், என் சுய நினைவோடு என் பிராணனை நான் விட்டுக் கொண்டிருக்கும் இந் நிலை தேவலையா? இம் மரணத்தில் நோயில் அவஸ்தை ஒரு பக்கமிருக்கட்டும். இதில் எங்கோ ஒரு மூலையில் ஒரு விதமான அவமானம் ஒளிந்து கொண்டு ஊமையாய் உறுத்துகிறது.

நான் இப்பொழுது உயிரோடிருக்கிறேனா, அல்லது ஏற்கெனவே இறந்து விட்டேனா? அல்லது உயிரின் பழக்கத்தால் உயிரோடிருக்கிறதாய்ப் பாவித்துக் கொண்டு, அந்த உயிர் நிழலாடலில், உடல் இன்னும் செத்துக் கொண்டேயிருக்கிறதா?

இந்நிலையில் நான் வேண்டுவது என்ன?

பாகியா?

பாகியின் வயிற்றில் என் எண்ணத்தின் வேட்கைக்கு மாற்றாய் வளரும் என் குழந்தையா?

அல்லது பிரும்மாண்டமான தாமரைக் கோலத்தின் நடுவில் நின்றபடி, வழிந்த கூந்தலைத் தோள்பட்டையால் தள்ளிக்கொண்டு நிமிர்ந்த முகத்தில், காலை வேளையின் பொற்கதிர்பட்டு, நீலம் தெறிக்கும் கண்கள் என் கண்களைச் சந்தித்ததும், ஒளிவீசிக்கொண்டு படர்ந்த புன்னகையா?

* * *

ஒரு நாள் மாலை என் அறைக் கெதிரேயிருக்கும் புற்றரைக்கு, மிஸ் ஹெர்மாயின் ஹுமிரோல்டு, என்னைச் சக்கர நாற்காலியில் தள்ளிக் கொண்டு சென்றாள்.

அவள் கன்னத்தைத் தொடவேண்டுமென எனக்குத் திடீரென ஆசை பிறந்தது. விபரீத நோக்கமல்ல, அவள் கன்னத்தின் வழவழப்புக்காக.

திடீரென்று மிஸ் ஹெர்மாயின், "மிஸ்டர் ராம், நீங்கள் ரொம்பவும் தைரியசாலி!" என்றாள்.

"ஏன்?"

"ஏனா? மலைபோல வந்திருக்கும் வியாதியின் ஆபத்திலிருந்து மீண்டு விட்டீர்கள். நீங்கள் இங்கு வந்தபோது உங்கள்மேல் எங்களுக்கு நம்பிக்கையில்லை."

"ஓ!"

"ஆனால், இதுவரை இருந்தது பெரிதில்லை. இனிமேல்தான் இன்னும் தைரியமாயிருக்க வேண்டும்."

"அதைப்பற்றி என்ன, சமுத்திரம் எல்லாம் தாண்டியாகி விட்டது. வாய்க்கால் தாண்டுவதற்கு தனித் தைரியம் வேண்டுமா?" என்று சிரித்தேன்.

"ஓ, நான் குறித்தது அதுவல்ல!" அவள் விழிகள் திடீரென நிறைந்தன. "ஓ மிஸ்டர் ராம், நீங்கள் ரொம்ப ரொம்ப பாவம்!" திடீரெனத் தன் ஜேபியிலிருந்து எதையோ எடுத்து என் கையைப் பிடித்து விரித்து அதனுள்ளே வைத்து, விரல்களை அழுக்கி மூடிவிட்டுச் சரேலென்று சென்றுவிட்டாள்.

நான் கையைத் திறந்தேன். மஞ்சள் கயிறுடன் ஒரு மாங்கல்யம்.-பாகியின் மாங்கல்யம்.

வெகுநாழி அதையே பார்த்துக் கொண்டிருந்தேன். புற்றரையில் அணில்கள் ஒன்றையொன்று துரத்திக் கொண்டிருந்தன. சிட்டுக் குருவிகள் கல் பெஞ்சிகளின் மேல் உட்கார்ந்து வளவளத்தன.

* * *

குழந்தையும் தங்கவில்லை.

* * *

ஒரு முறையில் என் உள் பிரக்ஞையில் இது இப்படித்தான் நேரும் என்று முன்கூட்டியே அறிந்திருந்தேனோ என்னவோ?

ஒன்றரை வருடங்களுக்குப் பின் நான் ஆஸ்பத்திரியிலிருந்து விடுதலையடைந்தேன். என் உடைமைகள் 'டாக்ஸி'யில் வைக்கப்பட்டன. என் கையை யாரோ குலுக்கினார்கள்.

"குட்பை மிஸ்டர் ராம்! உடம்பை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளுங்கள்."

நான் வண்டியுள் உட்கார்ந்ததும், டிரைவர் "சார் எங்கே போகணும்?" என்று கேட்டான்.

திடீரென என் பார்வையைக் கண்ணீர் மறைத்தது. எங்கே போவது? உலகத்தின் ஒண்டிப் பிறவியாகிவிட்டேன். எனக்கு எங்கே என்ன இருக்கிறது?

"எங்கேயாவது போ...."

அவன் புத்திசாலி என்றே நினைக்கிறேன். பதில் பேசவில்லை. என் முகத்தைப் பார்க்காததுபோல் அந்தண்டை திரும்பிக் கொண்டான். வண்டி நகர்ந்தது.

* * *

வருகிற வருடமும் வழக்கம் போல், இதே தினத்தன்று காலை மிஸ் ஹெர்மாயின் யானைத் தலை பனைவு பூச் செண்டுடன் உள்ளே நுழைகிறாள்.

"ஹல்லோ மிஸ்டர் ராம்! குட்மார்னிங்! நீங்கள் சிரஞ்சீவியாயிருக்க வேண்டும். இந் நன்னாள் திரும்பத் திரும்ப வரவேண்டும்!" அவள் வார்த்தைகள் தடைபடுகின்றன. நான் எழுந்திருக்க வில்லை. என்னுடைய கண்கள் மூடியிருக்கின்றன.

என்னிடம் வந்து நாடியைப் பிடித்து இதயத்தில் செவிசாய்த்துக் கேட்கிறாள். என் கை துவண்டு விழுகிறது.

என் கைகளை எடுத்து மார்மேல் சேர்த்து வைத்துச் சிலுவையின் குறியில் தன் தோள்களையும் நெற்றியையும் தொட்டுக் கொள்கிறாள். அவள் உதடுகள் அசைகின்றன. போர்வையை என் தலைமேல் இழுத்து விட்டுப் பூச்செண்டை என் பக்கத்தில் வைத்து விட்டு அடிமேல் அடிவைத்து வெளியே செல்கிறாள்.

நான் உள் பிரக்ஞையின் ஒரே இதழில், உயிர் வெள்ளத்தில் மிதந்து செல்கிறேன்.

நாட்டு வைத்தியம்

ஸ்ரீஹரி

96. ச்லீபதம் ......

'இதென்ன ஐயா ஒரு புதிய பதம்? இதுவரையில் எழுதி வந்த வியாதிக்கு மருந்தைத் தெரிவிக்காமல், புது வியாதியைப் பற்றி எழுதத் தொடங்கியிருக்கிறேன்' என்கிறீர்களா?

புதிய பதமுமில்லை; புதிய வியாதியுமில்லை. இதுவரையில் எழுதி வந்த வியாதிக்குத் தான் வட மொழியில் இப்படியொரு பெயர். ச்லீபதம் (யானைக்கால்) என்ற வியாதியைப் பற்றியும் அதிலுள்ள அவாந்தர பேதங்களைப் பற்றியும் ஆயுர்வேத சாஸ்திரத்தில் ஸுச்ருதஸம்ஹிதை முதலான ஆதி நூல்களிலேயே விரிவாகச் சொல்லப்பட்டிருப்பதைக் காண்கிறோம்.

இந் நோய் ஒரு வருஷ காலத்துக் குட்பட்டதாயிருப்பினும், வீக்கம் அதிகமில்லாததாயும் இருக்குமானால் குணப்படுத்தலாம்! மாம்ஸம் முதலிய தாதுக்களும் சம்பந்தப்பட்டுக் கெட்டிப்பட்ட வீக்கமாயிருப்பினும், கை கால், பீஜகோசம் என்ற பல இடங்களில் பரவியதாயிருப்பினும் வீக்கமுள்ள பாகத்தின்மேல் கருணைக்கிழங்கின் முளைக்கும் முளைகள் போன்றவை வளர்ந்திருப்பினும், அந்த இடங்களில் விரணங்கள் ஏற்பட்டிருப்பினும் அடிக்கடி ஜுரம் முதலியவை வரும் இயல்பு பெற்றதாயிருப்பினும் குணமாகாது.

நோயாளி வயதின் காரணத்தாலோ, சரீரக் கூறு காரணத்தாலோ விரேசனம் முதலிய கடுமையான சிகிச்சைகளைத் தாங்கக் கூடாதவனா யிருப்பினும் சிகிச்சை செய்வது கடினம். இவ்வாறு வடமொழியில் உள்ள வைத்திய நூல்கள் தெரிவிக்கின்றன.

வியாதி எந்த நிலையில் இருப்பினும், சரி, மறுபடியும் ஜுரம் முதலானவை உண்டாவது, ஒவ்வொருதரம் ஜுரம் வரும்போதும் வீக்கம் அதிகரிப்பது, ஜுரம் விட்டபிறகு வீக்கம் அதற்கு முன்னிருந்ததை விட அதிகரித்ததாகி விடுவது என்பவை இல்லாமல் அதம பட்சம் அம்மட்டோடு நிறுத்தி அதிகரிக்காமலும் செய்து கொள்ள முடியுமென்பது அனுபவத்தில் கண்ட தெளிவு.

ஆகவே நாட்டு வைத்திய முறைப்படி இவ் வியாதிக்குள்ள சிகிச்சையை 1. வடமொழி நூல்களின் மூலம் கிடைக்கும் மருந்துகள். 2. (எனது) அனுபவத்தில் சிறந்தவை எனத் தெளிந்த மருந்துகள். 3. சித்தர்கள் தமிழில் சமைத்த நூல்கள் மூலமாகக் கிடைக்கும் மருந்துகள் என்னும் தலைப்புக்களின் கீழ் வகுத்துச் சொல்லி விடுகிறேன்.

முதலாவதாக, வடமொழி நூல்களின் மூலம் கிடைக்கும் மருந்துகளில், ஆமணக்கு, கடுக்காய், கோமூத்திரம் ஆகிய மூன்று பொருள்கள் மிகவும் பிரதானமானவைகளாகத் தென்படுகின்றன. இவற்றைத் தனித் தனியாகவும் இரண்டையோ அல்லது மூன்றையுமே சேர்த்தோ பலவிதங்களில் உபயோகிப்பதுண்டு. இவற்றில்,

1. கோமூத்ர ஹரீதகீ என்பது முக்கியமானது. முற்றின கடுக்காய் கொட்டை சிறியதாகவும் மேலே உள்ள சதைப் பற்று அதிக முள்ளதாயும் இருக்க வேணும். இந்தச் சதைப் பற்று இரசலாக இல்லாமல் கெட்டியாகவும், பூச்சிகளால் அரிக்கப்பட்ட சிறு துவாரங்கள் முதலானவை இல்லாததாயும் இருத்தல் அவசியம். இப்படித் தேர்ந்தெடுத்த (ஸாரத்துக்) கடுக்காயைத் தட்டி, மேல் தோல் சதைப்பற்றுகளை மட்டும் ஏற்கவேணும் - கொட்டையைக் களைந்துவிட வேணும். இவ்விதம் கிடைத்த கடுக்காய்த் தோலை வாய் அகலமான ஒரு பாத்திரத்திலிட்டு அது முழுதும் அமிழ்ந்து அதன்மேலே நான்கு விரற்கடை உபரியாகவும் நிற்குமளவுக்குக் கோமூத்திரத்தை ஊற்றி ஊறிக்கொண்டே வெய்யிலில் காயும்படியும் வைக்க வேணும். காயக்காய கடுக்காய்த் தோலைக் கீழ் மேலாகக் கிளறிக்கொண்டு



விகடக் கச்சேரியில் எல்லோரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள். ஒருவர் மட்டும் சிரிக்காமல் உட்கார்ந்திருந்தார்.

கச்சேரி செய்பவர்: நீங்கள் மட்டும் ஏன் சிரிக்கவில்லை?

மற்றவர்: எல்லோரும் கொடுத்த பணம் வீணாகக் கூடாதே என்று சிரித்தார்கள்; நான்தான் ஓசி டிக்கட்டாச்சே!

வரவேணும். கோமூத்திரமும் குறையக் குறைய ஊற்றிக்கொண்டே வரலாம். எவ்வளவுக்கெவ்வளவு அதிகம் சேர்க்கப் படுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு மருந்துக்கு வீர்யம் அதிகமாகும். கொண்ட மட்டும் கோமூத்திரத்தைக் கடுக்காயில் ஏற்றுவித்தல் நல்லது. நன்றாகக் காய்ந்த பிறகும் இன்னும் காயட்டுமென்று வெய்யிலில் கடுக்காய்த் தோலைத் தினந்தோறும் உலர்த்திக் கொண்டே இருத்தல் வேணும். பிறகு இந்தக்கடுக்காயை உரலிலிட்டு இடித்துத் தூளாக்கிச் சல்லடையால் நுண் தூளாக்கிப் பத்திரப்படுத்திக் கொள்ள வேண்டும். இதுதான் கோமூத்ர ஹரீதகி எனப் படுவது. இதில் வியாதியின் கடுமை, நோயாளியின் வயது, மருந்தின் வேகத்தைத் தாங்கும் சக்தி ஆகியவற்றை யொட்டி ஒரு சிட்டிகைமுதல் 1 டீஸ்பூன் அளவு வரையில் தினம் ஒன்று அல்லது இரண்டு வேளை வெந்நீர் அனுபானத்தில் சாப்பிட்டு வருவது நல்லது. சூர்ணத்தை வாயிலிட்டு மேலே வெந்நீரைக் குடிப்பது வழக்கம். ஒருதரம் அல்லது இரண்டுதரம் மலம் போகும். சிலரில் ஒன்றிரண்டு முறை சிறுநீர் தாராளமாகப் போகவும் செய்யும். வேறு ஒன்றும் ஏற்படாது. பத்தியமும் இல்லை.

2. வாயகலமான ஒரு மண் சட்டியில் கால்படி அல்லது அரைப்படி கோமூத்திரத்தை எடுத்துக் கொள்வது. இதில் 8 அல்லது 10 கடுக்காய்களை ஒன்றிரண்டாகத் தட்டி இட்டு ஒருநாள் ஊற வைப்பது; மறுநாள் காலையில் கடுக்காயை நன்றாய்க் கசக்கிப் பிழிந்துவிட்டுக் கோமூத்திரத்தைக் கை கொண்டு சிலுப்பினால் ஒருவகை நுரை வரும். இந்நுரையை எடுத்துக் களைந்து விட்டு, தெளிவாக இருக்கும் கோமூத்திரத்தை வடிகட்டி 2 அவுன்ஸ் முதல் 3, 4 அவுன்ஸ் வரையில் குடிப்பது. 3, 4 தரம் பேதியாகும், அன்று பகல் பொழுது அரைப் புளி சேர்த்து ரசமும் சோறும் உண்டு இரவு கிரமப்படி சாப்பிடவும். மறு நாள் மறுநாளும் இவ்விதமே செய்யவும். ஒரு நாள் ஏற்படும் அனுபவத்தை யொட்டிக் கோமூத்திரத்தின் அளவைச் சேர்த்தோ, குறைத்தோ மறுநாள் முதல் ஏற்க வேண்டும். இப்படி மூன்று அல்லது ஐந்து தினங்கள் சாப்பிட்டால் போதும்.

3. ஒரு அவுன்ஸ் ஆமணக்கெண்ணெயை 2, 4 அவுன்ஸ் கோமூத்திரத்துடன் கலந்து ஒரு மாசகாலம் வரையில் தினந்தோறும் குடித்து வந்தால் ச்லீபதமும், அதன்விளைவாக ஏற்படும் 'விருத்தி' என்னும் பீஜகோசத்தின் வீக்கமும் குணமாகுமென்று ஸுச்ருதன் தெரிவிக்கிறார்.

4. ஜ்வரம், அக்காலத்தில் காலில் ஏற்படும் அதிகரித்த வீக்கம், எரிச்சல் வலி ஆகியவை உள்ள போது காலின்மேல் சொட்டச் சொட்டப் பூச வேண்டும். அல்லது பிசுவாக உபயோகிக்கவும். பிண்ட தைலத்தை உபயோகிக்கலாம்.

5. மற்றுமுள்ளசமயங்களில் ஸுரதாருலேபம் என்ற சூர்ணத்தை வெந்நீரில் குழைத்து இரவு படுக்கப்போகும் முன்பு வீக்கமுள்ள இடங்களின்மேல் பற்றிட வேண்டும். உலர உலர மேன்மேலும் இதைப் பூசி அரைக்கால் அங்குல கனம் வரையில் இதை யிடுவது நல்லது. இது வீக்கத்தைக் கணிசமாகக் குறைப்பதற்கு உதவும்.

ஸுரதாருலேபம்: தேவதாரு, சுக்கு, நவாச்சாரம் இவற்றைத் தனித்தனியாக இடித்துச் சலித்த சூர்ணங்களைச் சம பாகத்தில் எடுத்து ஒன்றாகச் சேர்த்துக் கலந்து வைத்துக் கொள்வதுதான் ஸுரதாருலேபம் எனப்படுவது. யாவற்றையும் ஒரே அளவில் எடுத்துக் கொண்ட பிறகு ஒன்றாகச் சேர்த்து இடித்துச் சலித்த சூர்ணமானாலும் பரவாயில்லை.

அடுத்தபடியாக எனது அனுபவத்தில் மிகவும் பலனுள்ளதாய்க் கண்ட மருந்துகளைத் தெரிவிக்கிறேன். (தொடரும்)

இளமை திரும்புமா?

"வயதில் ஐம்பது ஆண்டுகள் குறைந்து, இளமை பெறுங்கள்!" இவ்விதம் உத்தரவாதமளிக்கும் சில மருந்துகள் உண்டு. உங்கள் வயது நாற்பதாக இருந்தால் என்ன ஆகும் என்பதைப்பற்றி மட்டும் இவை ஒன்றும் உரைப்பதில்லை!

மேற்கண்டபடி, நடைமுறையில் சாத்தியமில்லாதவற்றுக்கு உத்தரவாதமளிப்பது சகஜமாகி விட்டது. இவற்றை நம்புகிறவர்கள் ஒன்றன் பின் ஒன்றாகப் பல புட்டி மருந்தை வாங்கிப் பார்க்கிறார்கள். ஆயினும் இளமை திரும்பினால்தானே!

ஆனால் வயது அதிகரிப்பதன் காரணமாக உங்களுக்குப் பலஹீனம், சக்திக் குறைவு, வீரிய நஷ்டம், நரம்புத்தளர்ச்சி, ரத்த அழுத்தம் போன்றவை ஏற்பட்டால், பெருமளவுக்கு உதவக் கூடிய, சாஸ்திரீய முறையில் தயாரான மருந்து வகைகள் இருக்கத் தான் செய்கின்றன. இவற்றை முறையாக உபயோகிப்பது பற்றி உங்கள் வைத்தியரை விடச் சிறந்த வழிகாட்டி வேறு கிடையாது –

உங்கள் வைத்தியரைக் கலந்தாலோசியுங்கள்.



அலெம்பிக் கெமிகல் வொர்க்ஸ்
கம்பெனி லிமிடெட்
பரோடா-3

ACW 84.C TH

EVEREST


ஒரு புத்திசாலியான மனைவி தன் கணவனின்
துணிமணிகளை
தேர்ந்து வாங்குவதில் உதவி செய்கிறள்
நியூ ஷாராக் பாப்லின்கள்
வெண்மை, கலர் மற்றும் கோடிட்ட ரகங்கள்
பிளாடிக்னம் டச் • ஸில்வர் டச்
டெஸர்ட் • மதுகுஞ்ச்
குஞ்ஜாலின்
SANFORIZED

படித்துப் பாருங்கள்

இந்தளூர் இரட்டை மணிமாலை

மாயூரத்துக்கு அருகேயுள்ள இந்தளூரில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள ஸ்ரீ பரிமளரங்கநாதர் மீது கொண்ட பக்தியால் அகங் கனிந்து அருளிச் செய்யப்பட்ட பாமாலை இது.

"பாடல்களில் வாக்கு நயமும், கருத்துச் செறிவும், உணர்ச்சிக் குழைவும் பொதிந்திருக்கின்றன. பாடிய பக்த கவி குஞ்சரமோ அன்பும் சாந்தமுமே உருவானவர். அவருடைய பாடல்கள் எம்பெருமான் உவக்கும்படி தித்திக்கும் தீஞ்சுவையாய் அமைந்திருக்கின்றன" என்று இந்நூலின் முன்னுரையில் தலைசிறந்த எழுத்தாளர் தி.ஜ.ர. கூறுகிறார். அதைவிட நாம் சொல்ல என்ன இருக்கிறது?

ஆக்கியவர்: கவிக் கொண்டல் தி. நரசிம்மாச்சாரியார் 56, சாமி ரெட்டித் தெரு, எழும்பூர், சென்னை-8; விலை: 31 ந. பை.

சினிமா டைரி 1959

நம் நாட்டில் வேகமாக வளர்ந்து வரும் பெரிய தொழில்களில் சினிமா இப்பொழுது முன்னணியில் நிற்கிறது. ஏராளமான தமிழ்ப் படங்கள் வந்திருக்கின்றன. வர்ணப் படங்கள்கூட வரத் தொடங்கி விட்டன.

வளர்ந்துகொண்டே வரும் நம் சினிமாத் தொழிலின் வளர்ச்சியைக் குறிப்பது போல் இந்தத் தமிழ் சினிமா டைரி ஒவ்வொரு ஆண்டும் வெளிவருகிறது. முதல் இரண்டு ஆண்டுகளைவிட இந்த வருஷத்து டைரி மிகவும் சிறப்பாகவும் அழகாகவும் வெளி வந்திருக்கிறது.

1931-ம் ஆண்டில் தொடங்கி, பிரமிக்கத் தக்க முன்னேற்றம் அடைந்துள்ள தமிழ் பேசும் படத்தொழிலின் சாதனையை எடுத்துக் காட்டுகின்றன, "27 ஆண்டுகள்" என்னும் தலைப்பில் தரப்பட்டிருக்கும் விவரங்கள்.

"சினிமாவைப் பற்றி......" என்னும் தலைப்பில் வந்துள்ள விவரங்கள் ஒவ்வொருவருக்கும் தெரிந்திருக்க வேண்டிய முக்கியமான விஷயங்கள்.

பிரசுரம்: சுதர்ஸன் பப்ளிகேஷன்ஸ், 20, கல்லுக்காரன் தெரு, மயிலாப்பூர், சென்னை-4; விலை: ரூ. 3.

மிருதங்க ஸ்வர போதினி (மூன்றாம் பாகம்)

இந்தப் புத்தகத்தின் முதல் இரண்டு பாகங்களில் ஸ்வரங்கள், ஸ்வர வார்த்தைகள், டேகா, மீட்டு, சாப்பு, ஸ்வரங்களால் உண்டாகும் சொற்கள், சொற்றொடர்கள், தாளத் தத்தகாரங்கள் முதலியவைகளைப் பற்றி விரிவாகப் பயிற்சி அளிக்கப்பட்டிருக்கின்றன. இந்த மூன்றாம் பாகத்தில், நாத சுத்தத்தையும், கை அமைப்பையும், இடபேத உணர்ச்சிகளையும், தாளக் கோவைகளையும், ஆவர்த்தனத் தொகுப்புக்களையும் பற்றிய விவரங்கள் காணப்படுகின்றன. தாள விளக்கம் என்னும் கட்டுரை கருத்து நிறைந்து விளங்குகிறது. மிருதங்கவாத்தியம் பயிற்சியில் ஈடுபாடு கொண்டவர்களுக்கு இந்நூல் வரிசைகள் மூன்றும் பெரிதும் பயன் தருவனவாகும்.

ஆசிரியர்: சோமங்கலம் எதிராஜன், டைரக்டர், மிருதங்க வித்தியாலயம், 6, நாராயண ரெட்டித் தெரு, அகரம். சென்னை-11: விலை: ரூ. 2.

சகுந்தலா

சகுந்தலாவின் வாழ்க்கை சுவை நிறைந்ததல்ல; கசப்பும் கடுமையும் கலந்து நின்று அவளை ஆட்டிப் படைத்தன; கட்டின கணவனிடம் அவள் கண்ட அநுபவம் மிகவும் பயங்கரமானது அந்த வாழ்விலிருந்து தப்ப அவள் நினைத்த முடிவு—தற்கொலை. அடுத்த வீட்டுக்காரனை ரகுராமன்—அவளைச் சாக விடவில்லை. சரியோ, தப்போ மனித வாழ்க்கையில் என்னென்னவெல்லாமோ நிகழ்ந்து விடுகின்றன. எப்படியும் வாழ விரும்பும் விசித்திரமான மனித உள்ளம் வாழ்வை நாடுகிறது; வாழ வழியே இல்லை என்ற நிலையில் தான் அழிவை நாடுகிறது. வாழ வழியில்லையென்ற முடிவுக்கு வந்த சகுந்தலாவுக்கு ரகுராமன் வாழ வழி காட்டினான். அந்த வழி சரியா, தப்பா என்பனவெல்லாம் சிந்தனைக்குரிய விஷயம். ரகுராமனும் சகுந்தலாவும் அதைச் சிந்தித்துப் பார்க்கும் நிலையில் இல்லை.

பிரச்னைக்குரிய இந்தக் கதையை வல்லிக்கண்ணன் தமது கருத்துச் செறிந்த நடையில் திறம்படப் புனைந்திருக்கிறார். பழமையைக் கண்டித்துப் பிரசாரமாக ஏதும் சொல்லாமல் கதையைக் கூறியிருப்பது நன்றாயிருக்கிறது.

வெளியிட்டோர்: நாதன்ஸ், 24, ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு, மவுண்ட்ரோடு, சென்னை—2; விலை ரூ. 2.

சம்பளம் வாங்கியாச்சு

'பிரம்மம் சுப்பாராவ்' எழுதிய ஏழு நாடகங்கள் இத்தொகுதியில் அடங்கியுள்ளன. இவை ஏற்கனவே வானொலியில் ஒலிபரப்பானவை. தொழிலாளர்களுக்கெனப் பொழுதுபோக்காக எழுதப்பட்டவை. ஒரு சரித்திர நாடகமும், ஒரு இதிகாச நாடகமும் கூட இருக்கின்றன.

விற்பனை உரிமை: வாமன் வெல்த் பப்ளிஷிங் கம்பெனி 21. அப்பர்சாமி கோவில் தெரு, சென்னை-4. விலை ரூ. 1-25.



திருச்சி உலகநாதன்

11. போலீஸார் வேட்டை!

திருச்சி கண்டோன்மெண்டில் லக்ஷ்மி விலாசம் பெரிய பங்களா. அந்தப் பங்களாவின் முன்னால் கண்டோன்மெண்டு போலீஸ் இன்ஸ்பெக்டர் வந்திறங்கினார்.

அவருக்குப் பின்னால் இரண்டு ஜவான்கள் வந்தார்கள். அடுத்து ஒரு ஜீப் வந்தது. அந்த ஜீப்பில் இரண்டு மோப்பம் பிடிக்கும் துப்பறியும் நாய்கள் இருந்தன. நாய்கள் துடிதுடிப்பாக வெளியே குதிக்கக் காத்துக் கொண்டிருந்தன. ஜீப் வந்து நின்றதும், அதன் பின்னர் ஒரு சிலர் வண்டிக்குள் உட்கார்ந்திருப்பதும் தெரிந்தன. மாடி அறையிலிருந்து இதைக் கவனித்த வேலையாள் பயந்து போனான். அவனுக்குத் தமிழ் தெரியாது. ஹிந்தியில் ஏதோ கத்தினான். உடனடியாக டெலிபோன் எடுத்துப் பேசினான்.

அவன் மாடியில் பேசிக் கொண்டிருந்த போது, கண்டோன்மெண்டு இன்ஸ்பெக்டர், பங்களாவின் உள்ளே வந்து விட்டார். அவர் நேற்று வந்து துப்புப் பார்த்த இடம்தான். நேற்று அவர் வந்த உடை வேறு; இன்று வருகிற உடை வேறு. கடகடவென்று மாடிக்குப் போனார். அவரைப் பின்பற்றி இரண்டு போலீஸ்காரர்கள் ஏறினார்கள். பின்னால் வந்த ஜீப்பிலுள்ள நாய்கள் யாராவது ஓடினால் பிடிப்பதற்குத் தயாராகப் பாயவிருந்தன.

கீழே குடியிருந்தவர்கள், "யார்? யார்?" என்றார்கள்.

அவர்கள் பதில் அளிக்காமல் உள்ளே போனார்கள். மாடியிலே ஒரு கட்டில். அந்தக் கட்டிலில் இரும்புச் சங்கிலியோடு பிணைத்து, உலகநாதன் கட்டப்பட்டிருந்தான்.

"உன் பெயர்தான் உலகநாதனா?" என்றார் இன்ஸ்பெக்டர். இதற்குள்ளாக வேலையாள் கீழே ஓடிப் போய் வீட்டுக்கார அம்மாவை அழைத்து வந்தான்.



சுகி

அவள் சேட்டின் மனைவி. அவள் வந்து ஏதோ சொல்ல ஆரம்பித்தாள்.

"இன்ஸ்பெக்டர் சார்! என்னைக் காப்பாற்றுங்கள்" என்று பலமாகக் கதறினான் உலகநாதன்.

"இது நீ எழுதிய கடிதமா?"

கடிதத்தை வாங்கிப் பார்த்த உலகநாதன், "ஆமாம்! இது நான் நாலு தினங்களுக்கு முன் எழுதிய கடிதம்தான்" என்று கூறினான்.

இதற்குள்ளாகச் சேட் காரில் வந்து விட்டான். பங்களாவில் போலீஸ் நிற்பதைக் கண்டு அவன் பயப்படவில்லை. சாந்தமாகவே மாடிக்கு வந்தான்.

"உங்களைக் கைது செய்கிறோம். ஒரு பையனைச் சுட்டீர்கள். அது வெளியே தெரியாதிருப்பதற்காக அவனை ஒளித்தும் வைத்தீர்கள். இது சட்டப்படி குற்றமாகும்."

"செய்யுங்கள். அந்தப் பையனை நான் எவ்வளவு அருமையாக வளர்த்து வருகிறேன் என்பதை நீங்கள் கவனித்தீர்களா?" என்றான் சேட்.

"அதெல்லாம் கோர்ட்டில் நீங்கள் சொல்ல வேண்டும்."

இன்ஸ்பெக்டர் தமது பையிலிருந்து விலங்கை எடுத்துச் சேட்டின் கையில் மாட்டப் போனபோது, உலகநாதனுக்கு அழுகையே வந்து விட்டது. அவன் கண்கள் 'பொலபொல' வென்று கண்ணீர்த் துளிகளை உதிர்த்தன.

"ஐயோ! அவரை ஒன்றும் செய்ய வேண்டாம். அவர் என் மீது அன்பாக இருந்தார். எனக்குச் சோறு போட்டார். அவர் தின்றும் பண்டங்களை எனக்குத் தருவார். இந்தச் சட்டைகளும் அவர் தைத்துத் தந்தவைதான். அவரை நீங்கள் ஒன்றும் செய்யாதீர்கள்" என்றான் உலகநாதன்.

"தம்பி! அவர் ஏன் உன்னை ஒளித்து வைக்க வேண்டும்? அதுவும் மாதம் இரண்டுக்கு மேலாகிறது" என்றார் இன்ஸ்பெக்டர்.

அதற்குள், "நீங்கள் தனியாக வாருங்கள். உங்களிடம் ஒரு செய்தி சொல்ல வேண்டும். அதன் பின்னர் பையனை நீங்கள் கொண்டு போங்கள். நீங்கள் கொண்டு போகாவிட்டாலும் நானே கொண்டு விடுவதாக இருந்தேன்" என்றான் சேட். உலகநாதன் தன்னையும் அழைத்துப் போகும்படி மன்றாடினான்.

மூவரும் கீழே இறங்கிச் சென்றனர். சேட் விவரம் கூறலானான்:

"சுமார் இரண்டு மாதங்களுக்கு முன், ஒரு நாள் இரவு நேரம். மணி ஒன்று இருக்கும். நான் என்னுடைய சின்னக் கடைத்தெரு கிடங்கில் இருந்தேன். எனக்குக் கடை பெரிய கடைத்தெருவில் இருக்கிறது. கிட்டங்கி சின்னக் கடைத் தெருவில் இருக்கிறது. இது என்னுடைய பங்களா. கிட்டங்கியில்தான் பெரும்பாலும் நான் தங்குவேன். முக்கியமாக அங்கேதான் என்னுடைய ரொக்கம், நான் வியாபாரம் செய்யும் நகைகள், தங்கக் கட்டிகள் அனைத்தும் இரும்புப் பெட்டியில் இருக்கின்றன. என் தம்பி அல்லது நான் இருவரில் ஒருவர் அங்கே காவலாக இருப்போம். வெளியே கூர்க்கா இருப்பான். கிட்டத்தட்ட கண் விழித்துத் தான் நாங்கள் காவல்காப்பது. என தம்பி, குஜராத்துக்குப் போயிருப்பதால் நான் காவல் காத்து வருகிறேன். பிறரை நம்பினால் பல லட்சம் ரூபாய்கள் போய்விடும். பாதுகாப்புக்காகக் கிட்டங்கிக் கட்டடத்தில் மேல்மாடி வழியாக இரும்புக் கம்பிகள் போட்டிருந்தோம். ஒரு நாள் ஒரு கம்பி விலகி இருந்தது. இரவில் திருடன் வந்திருக்க வேண்டும். என்னதான் விலகினாலும், இன்னும் இரண்டு கம்பிகளை விலக்கினால்தான் ஆள் உள்ளே குதிக்க முடியும். விலக்கப்பட்ட கம்பியை நாங்கள்



புதுதில்லி கர்நாடக சங்கீத சபை ஆசிரியர் பத்மநாபன் அவர்களின் சிஷ்யை குமாரி பத்மினி மேனன் தியாகராஜ உத்ஸவத்தில் பாடி முதற்பரிசு பெற்றுள்.

ஒன்றும் செய்யவில்லை. வந்த திருடன் மேலும் ஆசைப்பட்டு வீட்டுக்குள்ளே வந்துதான் ஆகவேண்டும். அவன் வரட்டும் என்று எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கிறோம்......"

"எவ்வளவு காலத்துக்கு முன்னதாக கம்பி நகர்த்தப்பட்டது?"

"சுமார் ஆறு மாதங்களுக்கு முன் இருக்கலாம்."

"சரி, மேலே சொல்லுங்கள்!"

"இரவில் பந்தோபஸ்தாக இருக்க வேண்டும் என்பதற்காக நாலு மாதங்களுக்கு முன்னதாகத் துப்பாக்கி லைசென்ஸ் ஒன்று வாங்கினேன். லைசென்ஸ், துப்பாக்கி இரண்டும் சின்னக் கடைத்தெரு கிட்டங்கியி லிருக்கின்றன."

"கட்ட காரணத்தைச் சொல்லுங்கள்!"

"அதைத்தானே சொல்ல வந்தேன்! இரண்டு மாதங்களுக்கு முன்னதாக ஒரு நாள் என் வீட்டுக்குள் இடையே உள்ள சந்தின் வழியாக ஒரு உருவம் இறங்கியது. நான் திருடன் என்று தீர்மானம் செய்து சுட்டேன். எனக்குக் குறி பார்த்துச் சுடும் திறமை இருந்தாலும், பயத்தால் குறி தவறி விட்டது. தவறியது எவ்வளவு அதிர்ஷ்டம்! இவனோ சின்னப் பையன். ஒரு கம்பி நகர்த்தப்பட்டிருந்ததல்லவா? அதன் வழியாகத்தான் இவனை இறக்கி விட்டார்கள். இவனோடு வந்தவர்கள் வெளியே நின்று கொண்டு, சந்தின் கோடி வழியாகப் போகும் மூன்று கதவுகளையும் இவன் திறந்து விட்டால் வீட்டுக்குள் நுழையலாம் என்று திட்டம் போட்டிருக்கிறார்கள். துப்பாக்கிச் சத்தம் கேட்கவே அவர்கள் ஓடி விட்டார்கள்!"

"ஓடாமல் உட்கார்ந்தா இருப்பார்கள்?"

"கேளுங்கள், இன்ஸ்பெக்டர்! துப்பாக்கிச் சத்தத்தில் இந்தப் பயல் மூர்ச்சையாகி விட்டான். மூர்ச்சையைத் தெளிவிக்க வேண்டியது முக்கிய கடமை ஆகி விட்டது. அதே சமயம் கூர்க்கா தெருக் கதவைத் தட்டினான் அவனுக்குத் துப்பாக்கி ஓசை கேட்டிருக்க வேண்டும். அவன் வந்து 'என்ன ஆபத்து?' என்றான். நான் என் ஆளை நம்பலாம் அல்லவா? அவனிடம் எல்லா விவரங்களையும் சொல்லி, டாக்டரை அழைத்து வரச் சொன்னேன். 'இங்கே வேண்டாம். நீங்கள் உங்களுடைய கன்டோன்மென்டு பங்களாவுக்கே பையனை அழைத்துப் போங்கள். டாக்டரை அங்கேயே வரவழைத்துக் காட்டுங்கள்" என்று அவன் யுக்தி சொன்னான். 'முக்கியமாகத் திருடர்கள் இவன் பிழைத்தானா செத்தானா என்று அறியக் கூடாது. இவனைத் தேடி வரவேண்டும். என் வலையில் வந்து மாட்டவேண்டும்' என்பதற்காகவே அவன் யோசனை கூறினான். அதனால் நானே காரை ஓட்டிக்கொண்டு இங்கே வந்தேன். மாடிக்குக் கொண்டு வந்து இவன் ஓடிவிடக் கூடாது என்பதற்காகக் கட்டிலில் கட்டிப் போட்டேன்."

"இன்ஸ்பெக்டர் சார், இவர் சொல்வது அத்தனையும் உண்மை!" என்று குறுக்கிட்டுக் கூறினான் உலகநாதன்.

"இனிமேல் நடந்ததை இவனையே கேட்டுக் கொள்ளுங்கள். இவனைப் போல் நல்ல பிள்ளையை நான் பார்த்ததில்லை. இவனை மோசடியாகத் திருட்டுக் கூட்டம் பயன்படுத்திக் கொள்ளப் பார்த்திருக்கிறது. அதனால் பையனை வெளியே விடாமல், திருட்டுக் கூட்டத்தைப் பிடிக்க வழி பாருங்கள்" என்றான் சேட்.

"அவர்கள் பிடிபட்டு விடுவார்கள்" என்று கூறி இன்ஸ்பெக்டர் பையிலிருந்து தமிழ்ப் பத்திரிகை ஒன்றை எடுத்தார். அதிலே விளம்பரம் ஒன்று வந்திருந்தது. அதை உலகநாதனிடம் காட்டி, "டேய்! இந்த விளம்பரம் செய்தவர் உனக்கு என்ன உறவு?" என்று கேட்டார்.

"என்னுடைய சித்தப்பா. இவர் பெயர் சித்திவிநாயகம். மார்சிங் பேட்டையில் வீடு."

"வீட்டு நம்பர் என்ன?"

"நம்பர் தெரியாது. பட்டாளத்துச் சிப்பாய் சித்திவிநாயகம் என்றால் தபால் போய் விடும்."

"அவர் விலாசத்துக்குக் கடிதம் எழுதாமல் என் விலாசத்துக்கு ஏன் எழுதினாய்?"

"அதுவா? அவர் ஊரில் இல்லை, சித்திக்குத் தெரியக் கூடாது என்பதற்காக எழுதினேன். நாலைந்து தினங்களுக்கு முன்னர் இங்கே வேலைக்காரன் காடு கவர் வாங்கிக்கொண்டு வந்து வைத்தான். எனக்குப் பால் போளியும், மெது பகோடாவும் கொடுக்க வந்திருந்தான். அவனைக் கீழே போய் இன்னும் கொஞ்சம் நெய்ப் பகோடா கொண்டு வரச் சொன்னேன். அவன் வருவதற்குள் ஒரு கார்டை எடுத்துக் கொண்டேன். சேட் மத்தியானம் தபால் எழுதும்போது இங்கேதான் வந்து எழுதுவார். அதனால் அவர் எழுதி வைக்கும் கடிதங்களோடு இதையும் சேர்த்து விட்டால் போய் விடும் என்று எண்ணினேன். என் யுக்தி மறுநாளே பலித்து விட்டது."

இந்த அடையாளத்தைக் கவனித்து வாங்குங்கள்



சுத்தமான சந்தணத் தைலத்துக்கு

இதுவே உத்தரவாதம்

மைசூர்
சந்தணத் தைலம்

கவர்ன்மெண்ட் ஸாண்டல்வுட் ஆயில் பாக்டரி

மைசூர்

MG/60/101



இந்த மனோரம்யமான
பிரகாசமான பெயின்டை ஒரு முறை
வாங்கி உபயோகித்துப் பாருங்கள்!
ஷாலிமார் ஸுபர்லாக் ஸின்தடிக் எனமல்— உட்புறமோ, வெளிப்புறமோ, எந்தப் புறமானாலும் பூசலாம் அதி சீக்கிரத்தில் உலர்ந்து அதிக நாள் மிகப் பளபளப்புடன் இருக்கக் கூடியது. வீடுகளிலும், தொழிற்சாலைகளிலும், ப்ரஷ்ஷினாலாவது, ஸ்பரேயினாலாவது அல்லது டிப்பிங் முறையிலாவது, எல்லாவித இடத்திலும் பூசலாம்.
38 வித கலர்களில் இவை பைன்ட், காலன் டின்களிலும், 5 காலன் டிரம்களிலும் கிடைக்கின்றன. கலர்கள் ஒன்றோடொன்று கலக்கலாம்.
SHALIMAR
ஷாலிமார்
ஸுபர்லாக்
ஸின்தடிக் எனமல்
SPW 68 TAM
SHALIMAR PAINT, COLOUR & VARNISH CO., PRIVATE LTD.
Calcutta - Bombay - Madras - New Delhi - Kanpur
SHALIMAR PAINT

"அது சரி! உன்னைச் சங்கிலி போட்டு ஏன் கட்டியிருக்கிறார்கள்?"

"நான் தப்பித்துக் கொண்டு போய்த் திருடர்களிடம் சொல்லி விட்டால் என்ன செய்வது என்ற பயம் இவர்களுக்கு. ஆனால், நான் திருடர் கூட்டத்தைச் சேர்ந்தவனில்லை, இன்ஸ்பெக்டர் சார்!" என்றான் உலகநாதன்.

"எனக்குத் தெரியும். நீ பள்ளிக்கூடத்தில் படிக்கும் கெட்டிக்காரப் பையன். உனக்கும் உன்னுடைய சித்திக்கும் பிடிக்கவில்லை. அப்படித்தானே?"

"ஆமாம்! உங்களுக்கு எப்படித் தெரிந்தது?"

"உன்னுடைய சித்தப்பன் உன்னைக் காணவில்லையென்றும், நீ நல்லவன் என்றும் நீ எப்படிக் காணமற்போனாய் என்று தேட பிராது கொடுத்திருக்கிறார்."

"அப்படியா? சித்தப்பா பம்பாயிலிருந்து எப்பொழுது வந்தார்?"

"டேய், என்னையா குறுக்கு விசாரணை செய்கிறாய்? மேலே சொல்லடா!" என்று அதட்டினார் இன்ஸ்பெக்டர்.

"சொல்லுகிறேன். எனக்கு மூர்ச்சை தெளிந்தபோது, டாக்டர் ஒருவர் அருகில் இருந்தார். அப்போது சூரியன் உதித்து விட்டான். வேலைக்காரனும் பக்கத்தில் இருந்தான். தெய்வம் மாதிரி சேட்டின் மனைவி இருந்தார்கள்."

"அது சரி! நீ திருடத்தானே சின்னக் கடைக் கிட்டங்கிக்குள் இறங்கினாய்?"

"நானாக இறங்கவில்லை. இறக்கிவிடப் பட்டேன். குருட்டுப் பிச்சைக்காரன் ஒருவன்..." என்று ஆரம்பித்தான்.

"சேட்ஜி! நீங்கள் சொன்னது அவ்வளவும் உண்மை என்பதற்கு இதில் கையெழுத்துப் போடுங்கள். பையன் சொன்ன வாக்குமூலப்படி இவன் உங்கள் கடையில் திருட இறங்கினான் என்பதும் உண்மைதானா?"

"உண்மைதான். ஆனால் பையன் திருடும் எண்ணம் இல்லாதவன் என்றே எனக்குத் தோன்றுகிறது. அதனால் இவனை விடுதலை செய்து விடுங்கள்."

"விடுதலை செய்வது எங்கள் கையில் இல்லை. இவன் குற்றவாளியா இல்லையா என்பது கோர்ட்டில் ருசுவாக வேண்டும். எனவே இவனை நாங்கள் கைது செய்து கொண்டு போகிறோம். பார்க்கப் போனால் நீங்களுமே குற்றம் செய்தவர்கள்தான்.



"சம்பளத் தேதியன்று என்னை வழி மடக்கி ஒரு திருடன் பணத்தை அடித்துக் கொண்டு போனான். போகும் போது 'பாவம்! இந்தச் சம்பளத்தில் எப்படித்தான் குடித்தனம் நடத்துகிறீரோ!' என்றான்."

ஒரு கபரை அடைத்து வைத்து அது பற்றிய விவரம் போலீசுக்கும் தெரிவிக்காமல் இருந்திருக்கிறீர்கள். இதனால் இ. பி. கோ சட்டப்படி குற்றம் செய்தவர்களாகிறீர்கள். இருந்தாலும் உங்களுடைய கண்ணியத்தைக் கருதி நாங்கள் கைது செய்து இட்டுச் செல்ல விருப்பவில்லை. ஆனால் நீங்கள் எங்களோடு மாஜிஸ்திரேட் கோர்ட்டு வரையில் வந்தாக வேண்டும்" என்றார் இன்ஸ்பெக்டர்.

"வருகிறேன். கேஸ் வெளியே பரவினால் திருடர்கள் ஓடிப் போய் விடுவார்கள்."

"இனிமேல் திருடர்கள் ஓடிப் போக முடியாது. அவர்கள் இந்த ஊரில் எங்கே இருந்தாலும் எங்கள் நாய்கள் பிடித்து விடும்" என்றவர் ஜன்னல் பக்கம் காட்டினார். ஜீப் காரில் நின்று கொண்டிருந்த இரண்டு நாய்களையும் உலகநாதன் பார்த்தான்; சேட்டும் பார்த்தான். அவை நாக்கைத் தொங்க விட்டுப் பாய்வதற்குக் காத்திருந்தன.

அதே சமயம் கனத்த காலடி ஓசையுள்ள பூட்சின் சத்தம் மாடி வழியாக வந்தது. முன்னால் ஓடி வந்தவன், "எஜமான்! சூப்பிரண்டு ஐயா வருகிறாங்க" என்றான். அது வரையில் அழுத்தலாக நாற்காலியில் அமர்ந்திருந்த கண்டோன்மெண்டு இன்ஸ்பெக்டர் பதறி அடித்து எழுந்தார். விரைப்பாக நின்றார். சல்யூட் ஒன்றைப் போட்டார். வந்தவர் போலீஸ் ஜில்லா அதிகாரி. அவர் வரவே கம்பீரமாக இருந்தது.

"தங்கள் விசாரணை முடிந்ததா?"

"முடிந்தது. இதோ அவர்களுடைய வாக்குமூலம் வாங்கி வைத்திருக்கிறேன். கையெழுத்தாக வேண்டும்."

"இதோ போய் இருங்கள். நான் விசாரணை செய்ய வேண்டும். ஜீப்பைக் கொண்டு போய் 350, மார்செக்பேட்டையில் உள்ள சித்திவிநாயகத்தை இழுத்துக் கொண்டு வாரும். மற்றப்படி எவரும் இங்கே இருக்க வேண்டாம். மோப்ப நாய்களையும் போலீஸையும் திருப்பி அனுப்பி விடுங்கள்!"

"சரி, சார்!"

* * *

போலீஸ் காரில் ஜில்லா போலீஸ் அதிகாரி, கண்டோன்மெண்டு இன்ஸ்

பெக்டர், சித்திவிநாயகம் ஆகியவர் இருந்தனர். அவர்களோடு இரண்டு மோப்ப நாய்களும் இருந்தன. அவர்கள் புறப்படுவதற்கு முன்னதாகவே, திருப்பரங்குன்றத்துக்குப் 'போன்' செய்திருந்தார்கள், ஏணி என்ற குரங்காட்டி அகப்பட்டால் பிடித்து வைக்கச் சொல்லி.

திருப்பரங்குன்றம் போலீஸ்காரர் ஒருவர், ஊரையே சல்லடை போட்டுச் சலித்துப் பார்த்து விட்டார். ஏணி அகப்படவில்லை. எனவே, அவர் சலித்துப் போய்த் தாணாவுக்குத் திரும்பும்பொழுது ரயில்வே நிலையத்துக்குப் பக்கமான தோப்பு ஒன்றில் குரங்கு ஒன்று இரும்புச் சங்கிலியில் கட்டப்பட்டிருப்பதைக் கண்டார். ஆனால் ஏணியை அங்கே காணவில்லை. குரங்காட்டி ஏணி எப்படியும் தன் குரங்கை அவிழ்க்க வருவான் என்று அவர் மரத்தடியில் ஒளிந்து கொண்டிருந்தார். போனவர் திரும்பி வராமற் போகவே, அவரைத் தேடி ஏட்டய்யாவும், இன்ஸ்பெக்டரும் வந்தார்கள். கடைசியில் திருச்சியிலிருந்து புறப்பட்ட ஜீப் காரும் அங்கே வந்து நின்றது.

''எங்கே அந்த ஏணி?'' என்றார் போலீஸ் அதிகாரி.

குரங்கு மட்டும் ஒன்றும் தெரியாமல் 'லீல் லீல்' என்று கத்திக் கொண்டிருந்தது. ஜீப்புக்குள்ளிருந்த இரு நாய்களிடமும், அதற்கு உரிய அதிகாரி என்னவோ சொன்னார். குரங்கு நின்ற இடத்தில் வந்து அவை முகர்ந்து பார்த்தன. பிறகு சுற்றிச் சுற்றி ஓடின. தோப்புக்குள் ஓடி வெளியே போய் மீண்டும் தோப்புக்குள் வந்தன. முடிவிலே அடர்த்தியான பகுதிக்குள் ஓடி, ஒரு மரத்தின் அருகில் போய் நின்று குரைத்தன. நாய்க்கு அறிவு உண்டே தவிர மரம் ஏற முடியுமா? அதன் குறிப்பை அறிந்தவர் மரத்தின் மேலே ஏணி இருக்கிறான் என்பதை யறிந்தார். அடர்த்தியான மாமரம். ஆகையால் ஆள் இருப்பதாகத் தெரியவில்லை. ஏணி உச்சாணிக் கிளையில் கிளையோடு ஒட்டிக் கிடந்தான். தோப்புக்கு மோட்டார்கள் வருவதையும், அங்கே சோதனைகள் நடப்பதையும் அறிந்த அவன் அவர்கள் அலுத்துப் போய்த் திரும்பிப் போன பின்னர் இறங்கலாம் என்று நினைத்து அப்படி ஒண்டிக் கிடந்தான். ஆனால் இப்படி மோப்பம் பிடிக்கும் நாய்களும் அவர்களுடன் வரும் என்று எண்ணவில்லை.

சித்திவிநாயகம், ''டேய் ஏணி! உனக்கு ஒரு ஆபத்தும் இல்லை. இறங்கி வா. உலகநாதன் அகப்பட்டு விட்டான். நீ எனக்கு எழுதின கடிதம் புரியவில்லை. அதன் விவரம் கேட்கவே வந்தோம்!'' என்று கூறினார்.

ஏணிக்கு உயிர் வந்தது. என்றாலும் என்ன செய்வார்களோ என்ற அச்சத்துடன் மெதுவாக இறங்கினான். அவன் ஒல்லியான உருவத்தைக் கண்டு, சிரிப்பு என்பதையே அறியாத போலீஸ் அதிகாரி கூட நன்றாகச் சிரித்தார்.

''உன் பெயர் என்னடா?''

''ஏணிங்க!''

போலீஸ் அதிகாரி கேட்ட கேள்விக்கு, ஏணி தனக்குத் தெரிந்த விவரங்களையெல்லாம் சொன்னான். அவன் எழுதிய கார்டில் குறிப்பிட்ட நபர் யாரென்று கேட்டார்கள்.

குருட்டுப் பிச்சைக்காரனுக்கு அவன் சகா என்றும், திருச்சியில் ஜேப்படி செய்கிறவர்களில் அவனும் ஒருவன் என்றும் சொன்னான். கோபாலு இருக்குமிடத்துக்கு ஏணியை அழைத்துப் போக எண்ணினார்கள். அவன் குரங்கை அவிழ்ப்பதற்குப் போனான்.

நாய்க்கும் குரங்குக்கும் ஏழாம் பொருத்தம். அவை குரங்கை அருகில் வரவிடவில்லை. எனவே நாய்கள் ஒரு வண்டியிலும் குரங்கை வைத்துக் கொண்ட ஏணி இன்னொரு வண்டியிலும் புறப்பட்டார்கள். மதுரைக்கு வந்ததும் கலவரம் அதிகமாகாமல் இருப்பதற்காக ஏணியைக் குரங்கு வித்தை காட்டச் சொன்னார்கள். ஏணி, கோபாலு தங்கியிருந்த கடைக்கு அருகில் போய் வித்தை காட்ட ஆரம்பித்தான்.

ஏணியைக் கண்டதும் கடைக்காரன் ஆத்திரத்தோடு கையில் பெரிய கழியைத் தூக்கிக் கொண்டு அடிக்க வந்தான். தொலைவில் நின்ற ஜீப்பிலுள்ள மோப்ப நாய்கள் விரைந்துவந்து அடிக்க வந்தவனைப் பிடித்துக் கொண்டன. அவ்வளவுதான். ஏகக் களேபரம்; கூச்சல். அவன் கடைக்குள் பதுங்கிய ஒரு சிலர் வெளியே வந்தார்கள். போலீஸ்காரர்களின் மோப்ப நாய்களைக் கண்டதும் திக்குக்கு ஒருவராக ஓடினார்கள். (அடுத்த இதழில் முடியும்)

Printed and Published by R. Ananthanarayanan for the Proprietors Messrs. Bharathan Publications Private Limited at the Kalki Press, Kilpauk, Madras-10

Managing Editor: T. Sadasivam


இன்றுபோல்
என்றும்
கண்குளிரக்காணக்
கலைத் தெளிவோடு—
தீண்டிச் சிலிர்க்க
தேர்ந்த நெசவோடு—
வண்ணக் கலவைகளின்
வனப்போடு தயாரிக்கப்படும்
துணியானது உலகெலாம்
புகழ்பரப்பி எழில்பரப்பிப்
பவனி வருகிறது...
மந்தசோர்கல்வெட்டு கி. பி. 473
ALL INDIA HANDLOOM BOARD
கவின்மிகு வனப்பு
கைத்தறி
நெசவே
அகில இந்தியக் கைத்தறி போர்டு
ஷாலிபாக் அவுஸ், விட்டட்ரோடு, பம்பாய்
DA 58/462 TH

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

